# இயேசுவின்

# கடைசி வாரம்



# இயேசுவின் கடைசி வாரம்

பஸ்கா பண்டிகைக்கு முன்னே, இயேசு இவ்வுலகத்தைவிட்டுப்
பிதாவினிடத்திற்குப் போகும்படியான தம்முடைய வேளை
வந்ததென்று அறிந்து, தாம் இவ்வுலகத்திலிருக்கிற
தம்முடையவர்களிடத்தில் அன்புவைத்தபடியே,
முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில்
அன்புவைத்தார்.
யோவான் 13:1

**www.foodfornewcreature.com**

இதில் உள்ள ஒவ்வொரு பகுதியின் தலைப்பிலும் உள்ள வேதவசனங்கள் யாவும் நியூ கிங்ஸ் ஜேம்ஸ் (New King James Version) பதிப்பிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. இவை சீயோன் காவற்கோபுரம் (Zion's Watch Tower) மற்றும் பிற நூல்களின் ஆசிரியரான சி.டி. ரஸ்ஸல் அவர்களின் எழுத்துக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகள் ஆகும். ஒவ்வொரு பகுதியின் முடிவிலும் ரீப்பிரிண்ட் எண்கள் அல்லது மேற்கோள் குறிப்புகள் இணைக்கப்பட்டுள்ளன.

இந்த எழுத்துக்கள் வாசகரின் தனிப்பட்ட சிந்தனைக்கும் பக்தி வளர்ச்சிக்கும் ஒரு ஆதாரமாகவும், ஒரு நினைவூட்டலாகவும், ஊக்கமாகவும், உந்து சக்கியாகவும், பயன்படட்டும். இவை ஒரு நூற்றாண்டுக்கு முன்பு எழுதப் பட்டவையாக இருந்தாலும், கிறிஸ்துவின் இராஜ்ஜியம் நிறுவப்படும் நாள் மிக அருகில் வந்துள்ள இன்றைய காலகட்டத்தில் இவை எப்போதும் இல்லாத அளவுக்கு அதிக உண்மையானவையாக உள்ளன.

விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேருன்றி, நிலைபெற்றவர்களாகி, சகல பரிசுத்தவான் களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபு+ரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ண வேண்டும்......

எபேசியர் 3:17–19.

சிகாகோ வேத மாணவர்கள்
(Chicago Bible Students)

# முன்னுரை

தேவன் தனது எல்லையற்ற ஞானத்தில் இயேசு கிறிஸ்துவை மையமாகக் கொண்டு தனது தெய்வீக திட்டத்தை, அதாவது ”லோகோஸ் – அவர் மனிதனாக வருவதற்கு முந்தைய நிலை, பூமிக்குரிய ஊழியம், தியாக மரணம், உயிர்த் தெழுதல், மகிமைப்படுத்தப்படுதல் மற்றும் ஆயிரமாண்டு இராஜ்ஜியத்தில் அனைத்தையும் மீட்டெடுத்தல் ஆகியவற்றை வடிவமைத்தார் என்பதை பல தலைப்புகளின் கீழாக தொகுத்து, “**இயேசுகிறிஸ்து – ஒரே பேறான குமாரன்**” **(JESUS CHRIST – The Only Begotten Son)** என்ற புத்தகத்தை சிகாகோ வேத மாணவர்கள் **(Chicago Bible Students)**வெளியிட்டனர். இந்த ஒவ்வொரு தலைப்புகளுக்கும் உரிய விளக்கங்களை சகோதரர் ரஸ்ஸல் அவர்களின் எழுத்துக்களிலிருந்து தேர்ந்தெடுத்து அவற்றை ஒரு கலவையாக, அதாவது ஒரு பேச்சாளர் ஒரு தலைப்பின் கீழாக சத்தியத்தை பேசும் போது, எப்படி அநேக ரீப்பிரிண்ட்களிலிருந்து முக்கியமான சிறு சிறு பத்திகளை எடுத்து பேசுகிறார்களோ அதே போன்று முக்கியமான பத்திகளை பதிவு செய்திருக்கின்றனர். இதில் உள்ள ஒவ்வொரு அத்தியாயத்திலும் தேவனின் திவ்விய நோக்கத்தை நிறைவேற்று வதில் இயேசுகிறிஸ்துவின் பங்கை நன்கு புரிந்துகொள்ள முடிகிறது. நம்முடைய கர்த்தருடைய மரணத்தை நினைவுகூறும் நாளை நெருங்கும் இந்த நேரத்தில், இந்த புத்தகத்திலிருந்து “**இயேசுவின் கடைசி வாரம்**” என்ற தலைப்பை மாத்திரம் தேர்ந்தெடுத்து, அனைவரின் ஆவிக்குரிய நலன்களுக்காக பகிர்ந்த ளிக்கிறோம். இந்த பகுதியில் இயேசுகிறிஸ்துவின் பூமிக்குரிய வாழ்க்கையின் முக்கியமான மற்றும் புனிதமான தருணங்களும், அவருடைய ஊழியத்தின் இறுதி நாட்களில் அவருடைய துன்பங்களும், அதன் மத்தியிலும் அவர் தன்னுடைய பின்னடியார்கள் மீது காட்டின அன்பு, அவர்களுக்கு கொடுத்திட்ட வாக்குத்தத்தங்கள் மற்றும் அவர்களுக்கான ஜெபங்கள் ஆகியவை இடம் பெற்றுள்ளன. இவையாவும் நிச்சயமாக கர்த்தருடைய அன்பிலே நாம் முன்னேறி செல்லவும், அவருடைய அடிச்சுவட்டை இன்னும் அதிகமதிகமாக பின்பற்றவும் நமக்கு வழிவகையாக இருக்கும்.

பலியினாலே தேவனோடு உடன்படிக்கை செய்த பரிசுத்தவான்கள் ஒவ்வொருவருக்காகவும் இந்த பணி அர்ப்பணிக்கப்படுகிறது.

தேவநாமம் கர்த்தர் இயேசுகிறிஸ்துவின் மூலம் சதாகாலங்களிலும் மகிமைப்படுவதாக. ஆமென்!

வெளியீட்டாளர்.

**பெங்களூர் – மைசூர் ரோடு**

**வேதமாணவர்கள்**

# எருசலேம் வரைக்கும் செல்லுதல்

**பஸ்கா என்னப்பட்ட புளிப்பில்லாத அப்பப்பண்டிகை சமீபமாயிற்று. லூக்கா 22:1**

**“பின்பு அவர் பன்னிருவரையும் தம்மிடத்தில் அழைத்து: இதோ, எருசலேமுக்குப் போகிறோம், மனுஷகுமாரனைக் குறித்துத் தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டவைகளெல்லாம் நிறைவேறும். எப்படியெனில், அவர் புறஜாதியாரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, பரியாசமும் நிந்தையும் அடைந்து, துப்பப்படுவார். அவரை வாரினால் அடித்து, கொலை செய்வார்கள்; மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார் என்றார்.” லூக்கா 18:31-33**

இயேசு மீண்டும் தனக்கு வரப்போகும் அவமானம், துன்புறுத்தல் மற்றும் மரணத்தைப் பற்றிய விஷயத்தை கொண்டு வந்தார். இந்த முறை அவர் மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுப்பப் படுவதைப் பற்றிய சிந்தனையையும் சேர்த்துக் கொண்டார். இருப்பினும், இந்த விஷயம் சீஷர்களுக்கு புரிந்துகொள்ள முடியாததாக இருந்தது. எஜமானரின் வார்த்தைகளின் அர்த்தத்தை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை; இந்த எண்ணங்கள் அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக மிகவும் வித்தியாசமாகத் தோன்றின! அவர்கள் எப்படி பெற்றுக்கொள்ள முடியும்? பெந்தெகொஸ்தே நாள் வரும்வரை அவர்கள் தங்களுடைய நிலையையும் இயேசு அவர்களிடம் சொன்னவற்றையும் முழுமையாகப் புரிந்துகொள்ள வில்லை. ராஜ்யத்தின் மகிமைகள் வெளிப்படுத்தப் படுவதற்கும் உலகிற்கு ஆசீர்வாதம் தொடங்குவதற்கு முன்பும் முழு திருச்சபையும் முதலில் துன்பப்பட வேண்டும் என்ற தெய்வீக ஏற்பாட்டை அங்கே பரிசுத்த ஆவியானது தெளிவுபடுத்தத் தொடங்கியது.R5483

**இவைகளில் ஒன்றையும் அவர்கள் உணரவில்லை; அவைகளின் பொருள் அவர்களுக்கு மறைவாயிருந்தது, அவர் சொன்னவைகளை அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. லூக்கா 18:34**

**அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக்கொடுக்கவும் வந்தார் என்றார்.**
**- மத்தேயு 20:28**

நமது கர்த்தர் ஊழியம் கொள்ளும்படி வரவில்லை. ஊழியக்காரர்களை பெற்றிருக்கவும், தன்னுடைய சொந்த ஆற்றலின் சிறிய அளவை செலவழித்து, அதற்கீடாக எல்லாவற்றையும் திரும்பப்பெற அவர் இந்த பூமிக்கு வரவில்லை. அவர் எந்த சுயநல நோக்கத்திற்காகவும் வரவில்லை. மாறாக மற்றவர்களுக்கு ஊழியம் செய்யவும், நன்மை செய்யவுமே வந்தார். அவர் தன்னைக்குறித்து சாட்சியாக, “ஒருவன் தன் சிநேகிதருக்காக **தன் ஜீவனைக் கொடுக்கிற** அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை” என்கிறார். இதை அவர் பிதாவின் திட்டத்துக்கு இசைவாக செய்தார்.

இருப்பினும் யார் ஒருவரும் தனக்கு ஊழியம் செய்வதை நமது கர்த்தர் ஏற்றுக்கொள்ளாமல் மறுத்துவிட்டார் என நாம் புரிந்துகொள்ளக்கூடாது. அவர் மற்றவர்களிடமிருந்து வரும் ஊழியத்தை ஏற்றுக்கொண்டார். நமது ஆதார வசனத்தின் கருத்து என்னவெனில், அவர் வந்தது ஊழியம் செய்வதற்காகவே; ஊழியம் கொள்வதற்காக அல்ல என்பதாகும். மேலும் அவர் தன் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக ஒரு

ஊழியக்காரனாயிருப்பது அவருக்கு அவசியமாயிருந்தது. இந்த ஊழியம் செய்தவற்கான தேவை எதுவும் இல்லையெனில், நம் கர்த்தர் தன்னைத் தாழ்த்தி அடிமையின் ரூபமெடுத்திருப்பார் அல்லது தம்முடைய பூமிக்குரிய ஜீவியத்தின் கடுமையான சோதனைகளுக்குள் சென்றிருப்பார் என்று நாம் நினைக்க முடியாது. ஆனால், முழு மனித குடும்பத்தின் நல்வாழ்வுக்கும், மகிழ்ச்சிக்கும், ஆம், அவர்களுடைய ஜீவனுக்கும் தேவையான ஒரு சேவையை செய்யவே அவர் வந்தார். R5375

**பஸ்காபண்டிகை வர ஆறுநாளைக்கு முன்னே இயேசு தாம் மரணத்திலிருந்து எழுப்பின லாசரு இருந்த பெத்தானியாவுக்கு வந்தார். அங்கே அவருக்கு இராவிருந்து பண்ணினார்கள்; மார்த்தாள் பணிவிடை செய்தாள்; லாசருவும் அவருடனேகூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவனாயிருந்தான்.**

**யோவான் 12:1-2.**

**அவர் பெத்தானியாவில் குஷ்டரோகியாயிருந்த சீமோன் வீட்டிலே போஜனபந்தியிருக்கையில், ஒரு ஸ்திரீ விலையேறப்பெற்ற நளதம் என்னும் உத்தம தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியைக் கொண்டுவந்து, அதை உடைத்து, அந்தத் தைலத்தை அவர் சிரசின்மேல் ஊற்றினாள்.**

**-மாற்கு 14:3-**

நம்முடைய தைலமுள்ள வெள்ளைக்கல் பரணிகளை எடுத்துக்கொண்டு வருவதிலும், அவைகளைக் கிறிஸ்துவின் பாத அங்கங்களாகிய கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள நமது அருமையானவர்கள் மேல் ஊற்றுவதிலும், நாம் தாமதம் காட்டக்கூடாது என்ற ஞானம் இங்கு நமக்கு விளங்குகின்றது. ஒருவேளை நாம் தைலத்தை ஊற்றும் நபர்கள், நம்மைக் கவனிக்காமல் இருந்தாலும் அல்லது நம்மைக் குறித்து சிந்திக்காமல் இருந்தாலும் அல்லது நம்மை பாத அங்கங்களில் ஒருவராகக் கருதி நம்மேல் தைலத்தை அவர்கள் ஊற்றாமல் இருந்தாலும் சரி, நாம் நம்முடைய பங்கை செய்வோமாக நாம் மரியாள் வகுப்பாராக இருப்போமாக. சீஷர்களில் சிலர் நம்முடைய அன்பு மற்றும் பக்தியின் விஷயங்களில், நாம் வரம்புமீறி செயல்படுகின்றோம் என்று தவறாய் குற்றம் சாட்டினாலும் சரி, அவளைத் தனியே விட்டுவிடுங்கள், அவள் தன்னால் இயன்றதைச் செய்தாள் என்று மீண்டுமாக (அன்று எச்சரித்ததுபோல்) கர்த்தர் தங்களிடத்தில் கூறுவார் (எச்சரிப்பார்) என்பதைப் புரிந்துக் கொள்ளாமலேயே நம்மைக் குற்றம் சாட்டிக் கொண்டிருந்தாலும் சரி, நாம் மற்றவர்கள் மீது நமது இனிமையான நறுமணத் தைலங்களை ஊற்றிக்கொண்டிருப்போமாக. கர்த்தருடைய சபையாகிய விசுவாச வீட்டாரும், தைலத்தின் இனிமையான வாசனையினால் நிறைந்து இருப்பார்களாக. இந்த நளதத்தைலமும், அதினால் செய்யப்படும் அபிஷேகமும் நம்முடைய கர்த்தருடைய கணிப்பில், நம்மால் செய்ய இயன்ற காரியமாகவே கருதப்படுகின்றது. இதைக்காட்டிலும், வேறு எதுவும் அதிகமாகவோ அல்லது மேன்மையானதாகவோ அவருடைய பார்வையில் இருப்பதில்லை. இந்த நளதத்தைலமும், அதினால் பண்ணும் அபிஷேகமும், அன்பை அதாவது மாபெரும் அன்பை சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கிறது. மேலும், இந்த அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாய் இருக்கின்றது.

கர்த்தருடைய உண்மையான ஜனங்களில் ஒவ்வொருவரும், இக்காரியங்களைக் குறித்துப் படிக்கையில் தேவனுடைய கிருபையினால், தானும் மரியாள் வகுப்பாரில் சேர்ந்துகொண்டு, விலையேறப்பெற்ற நளதத்தைலத்தை வாங்கி, அதை சபையின் உண்மையான அங்கங்களாகிய கிறிஸ்துவினுடைய சரீரத்தின் பாதங்களின்மேல், தாராளமாய் ஊற்றவேண்டும் எனத் தீர்மானிப்பார்களாக. இங்கு தைலம் அன்பையும், அனுதாபத்தையும், இரக்கத்தையும், தயவையும், பொறுமையையும், உதவி அளித்தலையும், ஆறுதல் அளித்தலையும் குறிக்கின்றது. இன்னுமாக, இது சகலவிதமான ஆவியின் கிருபைகள் மற்றும் கனிகள் நமக்குள்

பெருகுவதையும், வளருவதையும், விருத்தியாகுவதையும் குறிக்கின்றது. இந்த ஆவியின் கனிகள் மற்றும் வரங்கள் ஒட்டுமொத்தமாக அன்பு என்னும் பெயருக்குள் அடங்குகின்றது.


அன்பான வாசகர்களே, மரியாள் இந்தப் பாடத்தில் செய்ததுபோல் நாம் செய்வது இயலாத காரியம் என்று நாம் அறிந்திருந்தாலும், இப்பொழுது உலகத்தில் காணப்படும் கிறிஸ்தவ சகோதர சகோதரிகளாகிய, அவருடைய சரீரத்தின் பாத அங்கங்களுக்கு, ஒருவருக்கொருவர் இதைக்காட்டிலும் மிக முக்கியமான காரியங்களைச் செய்வது ஒவ்வொருவருக்குமுரிய சிலாக்கியமாய் உள்ளது. அன்று மரியாள் சொல்லர்த்தமாகப் பயன்படுத்தின தைலத்தின் நறுமணம் கொஞ்ச நேரத்திற்குப் பின் இல்லாமற்போனது. ஆனால், நாம் ஒருவருக்கொருவர் செய்து கொள்ளும் அன்பின் அடிப்படையிலான சிறு வேலைகள் மற்றும் உதவிகள் கர்த்தருடைய பார்வையில் ஒருபோதும் மதிப்பை இழந்துப்போவதுமில்லை மற்றும் ஒவ்வொருவருடைய கணிப்பிலிருந்து நித்திய காலத்திற்கும் அதின் நறுமணங்கள் இழந்துப்போவதுமில்லை. வாழ்க்கையில் சிறிய காரியங்கள், சில வார்த்தைகள், சிறிய அன்பளிப்புகள், அன்பான பார்வைகள், அவ்வப்போது செய்யப்படும் உதவிகளாகிய இந்த சின்னச் சின்ன விஷயங்களே, மற்றவர்களுக்கான நம்முடைய நறுமணத்தைலமாகவும், வாய்ப்புகளாகவும் இருக்கின்றன. R3535

**அப்பொழுது மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டுவந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்; அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது.**
**யோவான் 12:3.**

**இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்; நான் அடக்கம்பண்ணப்படுவதற்கு எத்தனமாக, என் சரீரத்தில் தைலம்பூச முந்திக்கொண்டாள்.**
**–மாற்கு 14:8–**

இப்படிப்பட்ட விலையுயர்ந்த தைலங்கள் மிக அரிதாகப் பயன்படுத்தப்பட்டது. உண்மையைச் சொல்லப்போனால் சக்கரவர்த்திகளும் கூட, இதைச் சிக்கனமாகப் பயன்படுத்தினார்கள். அதுவுமல்லாமல், அது பயன்படுத்தப்படும் சமயங்களில் பொதுவாகத் தலையின் மீதே ஊற்றப்படுகிறது. மரியாள் கர்த்தருடைய தலையில் தைலத்தை ஊற்றினபோது, மேற்கூறப்பட்ட அவ்வழக்கத்தைப் பின்பற்றினவளாகக் காணப்பட்டாள் என்பது மத்தேயு மற்றும் மாற்குவின் பதிவுகளிலிருந்து தெரியவருகிறது. ஆனால், இதை செய்த பிற்பாடோ, அவள் அவர் பாதம் அருகே வந்து, தைலத்தினால் அபிஷேகம் பண்ணி, தன்னுடைய நீண்ட கூந்தலினால் அவர் பாதங்களைத் துடைத்தாள். அன்பு கலந்த பக்திக்குரிய எத்துணை அருமையான காட்சி இங்கு நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. பாதங்கள் மனிதனுடைய சரீரத்திலேயே தாழ்மையானதும், கீழான அங்கமுமாக, மதிப்புக்குறைந்த அங்கமாக எப்பொழுதும் கருதப்படுகிறது. ஆனால், தலையிலுள்ள மயிரானது, அதுவும் விசேஷமாக, ஸ்திரீகள் விஷயத்தில் விசேஷித்த பொக்கிஷமாகவும், அவளுக்கு மகிமையாகவும் எப்போதும் கருதப்படுகின்றது. இவ்விதமாக, மரியாள் தனது மகிமையான தலைமயிரைக்கொண்டு அவருடைய பாதங்களைத் துடைத்த காரியமானது, மரியாள் தனது, கர்த்தரும் ஆண்டவருமாகிய அவரைத் தன்னைக் காட்டிலும், முற்றிலும் மேலானவராக மதிப்புடன் கருதியதைச் சுட்டிக்காட்டுகின்றது. ஆரம்பத்தில், அவரை மனுஷர் மத்தியில் மிகவும் அருமை வாய்ந்த நபராகவும், ஒரு மனுஷனும் அதுவரைக்கும் பேசாதவைகளைப் பேசுகின்ற ஒரு மனுஷனாகவும் மரியாள் உணர்ந்துகொண்டாள்;. பின்னரே அவர் ஒரு மாபெரும் போதகர் என்றும், விசேஷித்த காலத்திற்காக விசேஷித்தவிதமாய் அனுப்பப்பட்டவர் என்றும் அறிந்திருந்தாள். ஆனால், அவர் லாசருவைக் கல்லறையிலிருந்து எழுப்பினதின் மூலம் இறுதியாக, சர்வ வல்லமையுள்ளவரின் வல்லமை அவருக்குள் இருக்கின்றது என்றும், அவர் தேவனுடைய குமாரன் என்றும் அறிந்துகொண்டாள். ஆகவே, அவருடைய மேன்மையான நிலையை உணர்ந்தவாறு அவருக்குப் பொருத்தமான மரியாதையைச் செலுத்தினாள்.

அவரை இந்த பூமியின் சிங்காசனத்தின்மேல் அவளால் அமர்த்த முடியாவிட்டாலும், தான் அவருக்கு என்றுமே பயபக்தியுடன் காணப்படும் ஓர் ஊழியக்காரி என்பதை அவளால் காட்ட முடிந்தது. இஸ்ரயேல் ஜனங்களுக்கு முன்பாக அவரை மகிமைப்படுத்த அவளால் இயலாதபோதிலும், தன்னுடைய சொந்த வீட்டிற்குள் அவரை மகிமையும், கனமும் செய்யமுடிந்தது. அவளால் அவருடையப் புகழை எடுத்துக்கூறவோ, அவருடைய மகத்துவங்களை எடுத்துக்கூறிப் பாட முடியாவிட்டாலும், அவளுடைய இருதயத்திற்குள் அவளால் அவரைக் குறித்துப் பாட முடிந்தது. இன்னுமாக, அவர்மேல் நறுமணத்தைலத்தையும் அவளால் ஊற்றவும் முடிந்தது.



இந்த நறுமணத்தைலமானது, அவளுடைய வீட்டை நறுமணத்தினால் நிரப்பியதோடல்லாமல், அவளுடைய நாள் துவங்கி தற்காலம் வரையிலும் காணப்படும் பெண் இனத்திற்குரிய கனத்திற்கு இனிமையான நறுமணத்தை வழங்குவதாகவும் இருக்கின்றது. இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள் என்று கர்த்தர் கூறினார். அதாவது, இவள் தன்னால் இயன்றமட்டும் தன்னுடைய பக்தியை/அன்பை வெளிப்படுத்தி உள்ளாள் என்ற விதத்தில் கர்த்தர் குறிப்பிட்டுள்ளார். இந்தச் சுவிசேஷம் எங்கெல்லாம் பிரசங்கிக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் இவள் செய்ததும் அறிவிக்கப்படும் என்று நம்முடைய ஆண்டவரால் கூறப்பட்ட தீர்க்கத்தரிசனம் எவ்வளவு உண்மையாக இந்நாள்வரைக்கும் நிறைவேறிவருகிறது. ·R3534

**இந்த சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். மாற்கு 14:9.**

**அப்பொழுது இயேசு: இவளை விட்டுவிடு, என்னை அடக்கம்பண்ணும் நாளுக்காக இதை வைத்திருந்தாள். தரித்திரர் எப்பொழுதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள்; நான் எப்பொழுதும் உங்களிடத்தில் இரேன் என்றார்.**
**– யோவான் 12:7–8**

ஆண்டவரை கனப்படுத்தக்கூடிய வாய்ப்புகள் கொஞ்சமாகவே இருந்தது. கொஞ்ச நாட்களுக்குப் பின்பு, அவருடைய உபத்திரவங்கள் முடிவடைந்து, எல்லா தீமைகளையும், மனிதருடைய வல்லமையையும் கடந்து, அவர் மகிமையை அடையப்போகிறவராய் இருந்தார். ஆகவே, மரியாளின் கண்ணோட்டத்திலிருந்து நாம் பார்க்கும்பொழுது, (எல்லாம் முடிவடையப்போகும்) குறுகிய காலத்திற்குள் இவ்வளவு விலையுயர்ந்த தைலத்தை அவருக்கு செலவழிப்பது ஏற்றதாய் இருந்தது. அதாவது, அந்நாளில்

காணப்பட்ட நியாயசாஸ்திரிகள் மற்றும் பிரதான ஆசாரியர்களின் பழிப்பேச்சுக்களும், தூஷணங்களும், விழப்போகிற அவருடைய தலையானது, அதாவது இன்னும் கொஞ்ச நாட்களில் முட்களினால் உண்டாக்கப்பட்ட கிரீடம் சூட்டப்படப்போகின்ற அவருடைய தலையானது, இப்பொழுதே அவருடைய உண்மையான மதிப்பையும், உண்மையான மகத்துவத்தையும், அவருடைய இராஜத்துவத்தையும், அவர் உண்மையில் தேவனுடைய குமாரன் என்று அறிந்த சொற்பமான ஜனங்கள் மத்தியில் ஒருவரால் (மரியாள்), கனப்படுத்தப்படுவது பொருத்தமானதாக இருக்கும். இன்னுமாக, பாலஸ்தீனாவின் மலைப்பகுதிகளிலும், பள்ளத்தாக்குகளிலும் நடந்துத்திரிந்த அவருடைய அந்தப் பாதங்களை, இன்னுமாக சில சமயம் களைப்புற்ற நிலையில் காணப்பட்ட அவருடைய அந்தப் பாதங்களை, இன்னுமாக இடுக்கமான மற்றும் கரடுமுரடான அர்ப்பணிப்பின் பாதையில் நடந்துக் கொண்டிருப்பவர்களின் பாதங்களுக்கு அடையாளமாய் இருக்கும் அவருடைய அந்தப் பாதங்களை, இன்னுமாக விரைவில் சிலுவையில் ஆணியினால் ஊடுருவப்படப்போகிற அவருடைய அந்தப் பாதங்களை, இப்பொழுதே போதகரின் அடிச்சுவட்டில் நடக்க நாடுகிறவர்களும், அவருடைய பாதங்களை விரும்புகிறவர்களும், அவருடைய பாதங்கள் மீது நம்பிக்கை வைக்கிறவர்களும், அவைகளைக் குறித்து உணர்ந்துக்கொண்டவர்களுமாயிருக்கிற ஜனங்களில் ஒருவர் மேன்மையாகக் கனப்படுத்துவது பொருத்தமானதாய் காணப்படும்.

அந்நாள் முதல் இந்நாள் வரைக்கும் மரியாள் ஒரு கிறிஸ்தவ குணநலனின் மிக அழகான அம்சங்களில் ஒன்றை அடையாளப்படுத்துகிறாள். இயேசுவும், அப்போஸ்தலர்களும் தெரிவித்திருக்கிறபடி, கிறிஸ்துவின் முழுசபையும் விரிவான கண்ணோட்டத்திலிருந்து பார்க்கப்படும்போது, கிறிஸ்துவின் சரீரமாக இருக்கின்றார்கள் என்பது நினைவில் கொள்ளப்பட வேண்டும். தங்களுடைய தனிப்பட்ட விஷயங்களுக்கு அதிக விலை கொடுத்து செலவு பண்ணுகிறதைக் காட்டிலும், கிறிஸ்துவின் சரீரமாகிய அபிஷேகம் பண்ணப்பட்ட சபையாருக்கு ஊழியம் புரியும்படி, மிகுந்த விலை கொடுத்து நறுமணத் தைலம் வாங்குபவர்களாகிய மரியாள் வகுப்பார் இன்றும் நம்மோடு காணப் படுகின்றார்கள். இன்னும் சொல்லப்போனால், கடந்த 18 நூற்றாண்டுகளாக, சபையார் மத்தியில் காணப்பட்டும் இருந்தார்கள். சரீரத்தின் தலைக்கு மாத்திரம் அபிஷேகமும், நறுமணமும், கனமும், ஆறுதலும், மகிழ்ச்சியும் அளிக்கப்படுவதோடு நிறுத்தப்படாமல், அன்று முதல் இதைப்போலவே அனைத்து அங்கங்களும், இந்த நளதத்தைலம் ஊற்றின மரியாள் வகுப்பாரிடமிருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டவர்களாகவே காணப்படுகின்றார்கள். இந்த மரியாள் வகுப்பார் ஆஸ்தி உடையவர்களாயும் அல்லது ஞானமுடையவர்களாயும், சொற்பொழிவாளர்களாயும் உள்ள வகுப்பாராய் எப்போதும் இருப்பதில்லை. மேலும், இவ்வகுப்பாரின் ஊழியம் ஆரவாரத்துடன் காணப் படுவதில்லை. ஆனால் அநேகருக்கு, அதிலும் விசேஷமாக உலகத்தாருக்கு இவர்களுடைய ஊழியம் முட்டாள்தனமாகவும், வீணான காரியமாகவும் தோன்றும். ஆனால், கர்த்தரோ இவ்வகுப்பாருடைய ஊழியத்தை அங்கீகரிக்கின்றார். அதுபோல, இவர்களுடைய ஊழியத்தினால், ஆறுதலும், புத்துணர்வும் அடைந்த சரீரத்தின் அங்கங்களும் அங்கீகரிக்கின்றார்கள். இந்த மரியாள் வகுப்பார் மீது ஆசீர்வாதம் தங்கியிருப்பதாக! R3535

**சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறிவருகிறவருமாயிருக்கிறார்.**

**–சகரியா 9:9–**

இந்தத் தீர்க்கதரிசனத்தை யூதர்கள் நன்கு அறிந்திருந்தனர். மேலும் பல நூற்றாண்டுகளாக இத்தீர்க்கதரிசனத்தை மேசியா நிறைவேற்றும்படிக்குக் காத்திருந்தனர். இஸ்ரயேலர்கள் இயேசுவைப் புறக்கணிக்கும் விஷயத்தில் சாக்குபோக்கு சொல்ல இடமில்லாமல் போகத்தக்கதாக, தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்டதை, தெய்வீகத் திட்டத்தின்படி நமது கர்த்தர் சொல்லர்த்தமாகவே உண்மையில் நிறைவேற்ற வேண்டுவது அவசியமாய் இருந்தது. ஆகவே எதிர்க்காலத்தில் இஸ்ரயேலர்களின் புரிந்துகொள்ளுதலின் கண்கள் திறக்கப்படும்போது, அவர்களுடைய குருட்டுத்தன்மை அப்புறப்படுத்தப்படும்போது, தாங்கள் குத்தினவரை அவர்கள் கண்டு, அவரைப் புறக்கணித்துப்போட்டதற்காக துக்கங்கொள்ளும்போது, அவர்கள் தங்களுக்கென சாக்குபோக்கு எதுவும் சொல்ல முடியாமல் இருப்பதைக் காண்பார்கள். தங்களுடைய இராஜாவை ஏற்றுக்கொள்வதற்குரிய இருதய நிலைமையில் தாங்கள் இல்லாமல் இருந்துள்ளார்கள்.

இப்பொழுதோ நேரம், அதாவது ஏற்றவேளை வந்துள்ளபடியால், முந்தின தருணங்களிலெல்லாம் ஆரவார அணிவகுப்பை அவர் தடைபண்ணினது போலல்லாமல், இப்பொழுது தமது ஆரவார அணிவகுப்பை நிதானித்து திட்டமிட்டவராய் காணப்பட்டார். கழுதையும், அதன் குட்டியும் எங்கு மற்றும் எப்படி காணப்படும் என்று தெளிவாய் குறிப்பிட்டதின் வாயிலாக, இயற்கைக்கு அப்பாற்பட்ட தம்முடைய வல்லமையை வெளிப்படுத்தினவராக, கழுதையையும், அதன் குட்டியையும் கொண்டுவரும்படிக்கு, சீஷர்களில் சிலரை அவர் அனுப்பி வைத்தார். குதிரைக்கு பதிலாக கழுதை பயன்படுத்தும் வழக்கம் இருந்தது. இஸ்ரயேலின் இராஜாக்கள் அனைவரும், தங்களது முடிசூட்டு விழாவின்போது கழுதையின்மேல் ஏறிச்செல்வது வழக்கமாயிருந்ததெனப் பாரம்பரியமானது தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது.

அநேகமாக அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலில் (curiosity) அல்லது அநேகமாக ஒற்றர்களாக செயல்படுவதற்கென பரிசேயர்களில் சிலர் அங்கு ஊர்வலத்தில் காணப்பட்டனர். அதாவது யூதாசுடன் கலந்து ஆலோசனை பண்ணிக்கொண்டிருப்பவர்களும், அவருடைய வேளை வராதது வரையிலும், தங்களுடைய வல்லமையைக்கொண்டு, தங்களால் எதுவும் செய்ய இயலாது என்பதை அறியாதவர்களாக, எப்பொழுது மற்றும் எப்படி கர்த்தரை கைது செய்யலாம் என்பதைத் தீர்மானிப்பதற்கு முயன்று கொண்டிருப்பவர்களுமாகிய பரிசேயர்களில் சிலர்கூட அங்கு ஊர்வலத்தில் காணப்பட்டனர். ஜனங்கள் கூறும் வார்த்தைகளை இயேசுவினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்கும், அவரை மேசியா மற்றும் இராஜாவென ஜனங்கள் பிரகடனம் பண்ணுவதற்கு அவர் அனுமதிப்பது என்பது, இயேசுவுக்கு தகுதியான காரியமல்ல என்று யோசனை கூறும்படிக்கும், இந்த பரிசேயர்கள் சீஷர்களிடத்தில் கேட்டுக்கொண்டார்கள். ஏமாற்றுக்காரர்கள் கொண்டிருக்கும் வழக்கத்தின்படி, இயேசு தம்மை மேசியாவென அறிவிப்பதற்கு, தம்முன் தாரை ஊதிக்கொண்டு செல்லவில்லை என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். மூன்று வருடங்களாக இயேசு சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக் கொண்டும், தம்முடைய சீஷர்களைக் கூட்டிச் சேர்த்தும், அற்புதங்களை நிகழ்த்தியும் கொண்டிருந்தார். ஆனால் தாம்தான் மேசியாவென்று அவர் எதுவும் சொல்லவில்லை. தம்முடைய சீஷர்கள் யோசித்துக்கொள்வதற்கும், பொது ஜனங்கள் யோசித்துக் கொள்வதற்கும் கர்த்தர் அனுமதித்திருந்தார்.

சீஷர்களை பொறுத்தமட்டில் அவரது மரணம் சம்பவிப்பது அருகாமையில் இருப்பதைக் காட்டிலும், அவர் உயர்த்தப்படும் காரியமே அருகாமையில் இருப்பதாகத் தோன்றியது. ஜனங்களில் சிலர் அவரது மகத்துவம், வல்லமை குறித்த அறிவிற்கு விழித்தெழுந்து கொண்டிருந்தார்கள் மற்றும் மற்றவர்களோ மேசியா உண்மையில் வந்துள்ளதாக அப்போதுதான் கண்டுபிடித்தவர்களாய் காணப்பட்டார்கள். ஆகையால் தங்களது எஜமான் சிலுவையில் அறையப்படுவதற்கு வாய்ப்பில்லை என்று சீஷர்கள் எண்ணினார்கள். இயேசு தம்முடைய மரணம்

குறித்து பேசும் வார்த்தைகளை, அவருடைய மறைபொருள்களில் ஒன்று என்றே சீஷர்கள் கருதினார்கள்.

ஆனால் இயேசு ஜனக்கூட்டத்தாரை அமைதிப்படுத்தும்படிக்கு உத்தரவிடப் போவதில்லை. ஜனங்களுடைய கெம்பீரிப்புகளானது, சகரியாவினால் பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக இருக்கின்றது. இன்னும் காரியத்திற்கு அழுத்தம் கொடுப்பதற்கும், தம்மைக் குறித்தே தீர்க்கதரிசி குறிப்பிட்டுள்ளார் என்பதை சீஷர்களுக்கு மெய்ப்பித்துக் காண்பிப்பதற்கும் என்று, ஒருவேளை ஜனங்கள் இப்படியாக கெம்பீரிக்கவில்லை என்றால், கல்லுகளே கூப்பிட்டிருக்கும். ஏனெனில் இப்படியாகவே கெம்பீரிக்கப்படும் என்று தேவன் தீர்க்கதரிசனம் எழுதி வைத்துள்ளார் மற்றும் தெய்வீக வார்த்தைகளில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோவதில்லை எனக் கர்த்தர் கூறினார். சிறிது நேரத்திற்குப்பின், நமது கர்த்தரும், அவருடைய பின்னடியார்களும் ஆலயத்தை அடைந்தவுடன், ஓசன்னா எனும் கெம்பீரிப்புகளானது இன்னும் உற்சாகமடைந்தது. இங்கு குழந்தைகளுடைய வாயினாலும், பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர் என்ற வேதவாக்கியத்திற்கு இசைவாக பிள்ளைகளும்கூட சேர்ந்து கெம்பீரித்தார்கள். (மத்தேயு 21:16; சங்கீதம் 8:2) ·R3850, R2745, R3537

**அப்பொழுது கூட்டத்திலிருந்த பரிசேயரில் சிலர் அவரை நோக்கி: போதகரே, உம்முடைய சீஷரை அதட்டும் என்றார்கள். அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: இவர்கள் பேசாமலிருந்தால் கல்லுகளே கூப்பிடும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.**
**– லூக்கா 19:39–40**

**திரளான ஜனங்கள் தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள்; வேறு சிலர் மரக்கிளைகளைத் தறித்து வழியிலே பரப்பினார்கள். முன்நடப்பாரும், பின்நடப்பாருமாகிய திரளான ஜனங்கள்: தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர், உன்னதத்திலே ஓசன்னா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள்.**
**மத்தேயு 21:8–9**

ஓசன்னா என்ற வார்த்தையானது துதியின், நம்பிக்கையின், எதிர்பார்ப்பின் ஆரவாரமாகவும், அல்லேலூயா எனும் வார்த்தையினுடைய கருத்திற்கு மிக ஒத்தக் கருத்தைகொண்டதாகவும் காணப்படுகின்றது. அனைத்து சுவிசேஷபுத்தகங்களிலிருந்தும் ஜனங்கள் உரைத்திட்ட பல்வேறு ஆரவாரங்களை நாம் சேகரித்துப்பார்க்கும் போது, பின்வருமாறு காணப்படுகின்றது. அவை, “ஓசன்னா,” “தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா,” “கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்,” “உன்னதத்திலே ஓசன்னா,” “கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரயேலின் இராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர்,” “கர்த்தரின் நாமத்தினாலே வருகிற நம்முடைய பிதாவாகிய தாவீதின் இராஜ்யம் ஆசீர்வதிக்கப்படுவதாக,” “கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர்,” “பரலோகத்திலே சமாதானமும், உன்னதத்திலே மகிமையும் உண்டாவதாக என்பவைகளாகும். நமது கர்த்தர் முழு சூழ்நிலையையும் புரிந்துகொண்டார்.; மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தார்.” (யோவான் 2:25) இந்த ஆரவாரங்களுக்கும், பயபக்தியான கிரியைகளுக்கும் பின்னான உண்மையின் ஆழத்தை கர்த்தர் அறிந்திருந்தார். தீமையின் சக்திகளையும், வெளிச்சத்தை இருளாகவும், இருளை வெளிச்சமாகவும் காட்டுவதற்குரிய தீய சக்திகளின் வல்லமையையுங்கூட கர்த்தர் அறிந்திருந்தார்.

தாம் பஸ்கா ஆட்டுக்குட்டியாக இருக்கப்போகின்றார் என்றும், இன்னும் ஐந்து நாட்களுக்குள்ளாக, மதத் தலைவர்களினால் வழிநடத்தப்படும் மற்றொரு ஜனக்கூட்டத்தார், அவரை சிலுவையில் அறையும் அவரை சிலுவையில் அறையும் என்று கூக்குரலிடுவார்கள் என்றும் கர்த்தர் அறிந்திருந்தார். தம்மை சுற்றி, தம்மை உடன்படிக்கையினுடைய தூதுவர் என்று மகிழ்ச்சியுடன் வாழ்த்தும் இந்த கெம்பீரிப்பு சத்தங்களானது

ஓநாய்களினால் குழப்பி, அலங்கோலப்படுத்தப்படும் என்றும், இப்படி கெம்பீரிப்புப்பண்ணுபவர்கள், அதிகாரிகளுடைய அதிகாரத்தையும், இவர்களுடைய கட்டுப்பாட்டின் கீழ்க் காணப்படும் கலகக் கும்பலையும் உணர்கையில், தங்களது ஜீவனுக்கும், காரியங்களுக்கும் ஆபத்துள்ளது என்று அச்சமடைவார்கள் என்றும் கர்த்தர் அறிந்திருந்தார். அவர்களின் குறைந்த அறிவால் அவர்கள் தங்கள் மத போதகர்களுக்கு எதிராக தங்கள் சொந்த தீர்ப்புகளை நம்பத் துணிய மாட்டார்கள் என்பதை கர்த்தர் அறிந்திருந்தார். மேய்ப்பன் வெட்டப்படப் போகின்றார் என்றும், ஆடுகள் பயந்து, சிதறடிக்கப்படப் போகின்றது என்றும் அவர் அறிந்திருந்தார். எனினும் அவர் எதுவும் கூறவில்லை. தெய்வீகத் திட்டம் நடந்தேறத்தக்கதாக கர்த்தர் அனுமதித்தார்; அவர் அடிக்கப் படும்படிக்குக் கொண்டு போகப்படும் ஆடு போன்று போய்க்கொண்டிருந்தார்; அவர் உதவிக்காகவோ, தம்மைத் தற்காத்துக்கொள்வதற்கோ, உண்மையான நிலவரத்தை விவரிப்பதற்கோ தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். தம்முடைய ஜீவனை நாடினவர்களின் கரங்களிலிருந்து, தம்மை விடுவித்துக்கொள்ள அவரால் முடியும், ஆனால் அவர் அப்படியாக செய்யவில்லை; ஏனெனில் மரிப்பதற்காகவே, அதாவது பாவங்களுக்காக பலி செலுத்தப்படுவதற்காகவே அவர் உலகத்திற்கு வந்தார். R3537

**திரளான ஜனங்கள் அவரை ஒரு ராஜாவாக கருதி, “தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினால் வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்” என்று ஆர்ப்பரித்தார்கள். சீஷர்கள் குழந்தைகளைப் போல எந்த ஒரு சந்தேகமும் அடையாமல் பூரணமாக ஒத்துக்கொண்டனர். மறுபுறம், “ஞானமுள்ள” வேதபாரகர்களும் பரிசேயர்களும் ஜனங்கள் கூச்சலிடுவதை நிறுத்திவிட்டு, இயேசு மேசியா அல்ல, அவர்கள் வஞ்சிக்கப் பட்டார்கள் என்று சொல்லும்படி சொன்னார்கள். அவர்கள் கண்டு சாட்சியிடுகிற இந்த விஷயம் – அதாவது இவ்வாறு கூக்குரல் இடவேண்டும் என்பது சகரியா தீர்க்கதரி சியினால் (9:9) முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது என்று இயேசு பதிலளித்தார். ஜனங்கள் ஆர்ப்பரிக்காவிட்டால், தீர்க்கதரிசனம் நிறைவேறும்படி கல்லுகளே கூப்பிடும் என்று கர்த்தர் அறிவித்தார். (லூக்கா 19:40) R5362**

**இயேசு தேவாலயத்தில் பிரவேசித்து, ஆலயத்திலே விற்கிறவர்களும் கொள்ளுகிறவர்களுமாகிய யாவரையும் வெளியே துரத்தி, காசுக்காரருடைய பலகைகளையும் புறா விற்கிறவர்களின் ஆசனங்களையும் கவிழ்த்து: என்னுடைய வீடு ஜெபவீடு என்னப்படும் என்று எழுதியிருக்கிறது; நீங்களோ அதை கள்ளர் குகையாக்கினீர்கள் என்றார்.**

**– மத்தேயு 21:12,13 –**

மாபெரும் போதகரின் வருகை எருசலேமுக்குள் கணிசமான சலசலப்பை ஏற்படுத்தியது. அவர் நேரடியாக தேவாலயத்திற்குள் சென்று, அதன் புனித வளாகத்திற்குள் உரிமை இல்லாத காசுக்காரர்களையும் புறா விற்பனையாளர்களையும் அகற்ற உத்தரவிட்டார். “உம்முடைய வீட்டைக் குறித்து உண்டான பக்தி வைராக்கியம் என்னை பட்சித்தது” என்ற தீர்க்க தரிசனம் இவ்வாறு நிறைவேறியது. பிறகு ஏழைகளும்,

குருடர்களும், முடவர்களும் மீண்டும் அவருடைய ஊழியங்களை பெற்றனர். அக்கால முக்கிய மதவாதிகள் மீண்டும் கோபமடைந்து, அவர் தேவையில்லாமல் தங்கள் ஏற்பாடுகளில் தலையிடுகிறார் என்று நினைத்தார்கள். மேலும் மக்கள் அவரை தாவீதின் குமாரன், மேசியா என்று போற்றியதால் அவர்கள் அதிருப்தி அடைந்தனர். அவர்கள் போதகரை கடிந்துகொண்டார்கள், அவரோ "குழந்தைகளுடைய வாயினாலும் பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர் என்பதை நீங்கள் ஒருக்காலும் வாசிக்கவில்லையா" என்று வேதப்பூர்வமாக பதிலளித்துவிட்டார். – மத் 21:16; சங். 8:2.

இந்த பாடத்தின் சம்பவம் சுவாரஸ்யமாகவும் படிப்பினையூட்டுவதாகவும் இருந்தாலும், மாம்சீக இஸ்ரவேலர்கள் ஆவிக்குரிய இஸ்ரவேலர்களுக்கு நிழலானவர்கள் என்பதையும், யூத யுகத்தின் முடிவில் நடந்த அந்த அம்சங்கள் இந்த சுவிசேஷ யுகத்தின் முடிவின் அம்சங்களோடு கணிசமான அளவிற்கு ஒத்ததாகவோ அல்லது இசைவாகவோ இருக்கும் என்பதை நாம் நினைவில் கொள்ளும்போது, அது இன்னும் அதிக முக்கியத்துவம் பெறுகிறது. இப்பொழுது நமது கர்த்தர், இஸ்ரவேலின் இரண்டாவது (ஆவிக்குரிய) வீட்டாரிடத்தில் வந்திருக்கிறார், இவர்களும் மாம்சீக வீட்டைப்போலவே இருப்பதை காண்கிறார். பெயரளவிலான பக்தி, அதாவது ஒருவனை அவர்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறார்கள் என்றும்; "**நிர்ப்பாக்கியமுள்ளவர்களும், பரிதபிக்கப்படத்தக்கவர்களும், தரித்திரர்களும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறார்கள்**" என்று அறியாதவர்களாயிருந்து குளிருமின்றி அனலுமின்றி, அவரது வாயில் இருந்து வாந்திபண்ணிப்போடுதற்கு தயாராக இருக்கிறார்கள் என்று அவரது சொந்த வார்த்தைகளிலேயே விவரித்திருக்கிறார்.(வெளி. 3:16,17.)

தெய்வீக கிருபையின் மெய்யான செல்வங்களையும், திவ்விய சுபாவத்தின் பொன்னையும், அதனுடன் தொடர்புடைய விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள் மற்றும் நம்பிக்கைகள் இல்லாததால் அவர்கள் **ஏழைகளாக** உள்ளனர். அவர்கள் **குருடர்களாக** இருக்கிறார்கள், ஏனென்றால் அவர்களால் தொலைவில் உள்ள விஷயங்களைக் காண முடியாது, தேவனுடைய வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்ட தெய்வீக திட்டத்தின் நீளம், அகலம், உயரம் மற்றும் ஆழத்தை அவர்களால் பார்க்க முடியாது, மேலும் சபைக்கான பரம – அழைப்புக்கான வாய்ப்பைக் காண முடியாது அதோடு பொதுவான மனுகுலக்கத்திற்கான திரும்பக்கொடுத்தலுக்கான ஆசீர்வாதமான திட்டங்களையும் காணமுடியாது. அவர்கள் **நிர்வாணிகளாக** இருக்கிறார்கள் எப்படியென்றால், அவர்களின் தலைவர்கள் ஏற்கனவே மீட்கும் பொருளில் நம்பிக்கையை இழந்துவிட்டிருந்தனர், மீட்கும் பொருளின் மீதான விசுவாசம் மட்டுமே நமது நிர்வாணத்தை மறைக்க முடியும் (நமது சுய நீதியின் அழுக்கான ஆடையினால் அதை மூடலாகாது).மேலும் அதேபோலவே ஜனங்களும் ஒரே "கல்யாண வஸ்திரமாகிய" விலையேறப்பெற்ற கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தை நிராகரிப்பதில் தங்கள் தலைவர்களின் உதாரணங்களையும் கட்டளைகளையும் பின்பற்றுகிறார்கள். நிச்சயமாக, இது ஒரு பரிதாபமான நிலை, அவர்களில் பலருக்கு பரிதாபகரமான ஒன்று.

ராஜாவாக அவர் இப்போது தனது ராஜ்யத்தை கைப்பற்றி கொண்டிருக்கிறார். முதலாவதாக, யூதர்களிடம் செய்ததுபோலவே, கிறிஸ்துவின் நாமத்தை கூறிக்கொள்ளும் மக்களுக்குத் தன்னையே அர்ப்பணித்தார். கடந்த காலத்தைப் போலவே, இப்போதும் அவர் தனது ராஜ்யத்தை உண்மையாக விரும்பி, அந்த ராஜ்யத்தையும் அவரையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்த ஒரு சிறிய கூட்டத்தை மட்டுமே கண்டார். இப்பொழுது அவர் சகல கபடற்ற உத்தம இஸ்ரயேலர்களை தேடுகிறார். மேலும் 'கோதுமை'யை அவர் நன்றாக புடைத்துக் கொண்டிருக்கிறார். மேலும் அவைகள் களஞ்சியத்தில் சேர்க்கப்படும்பொழுதோ, அது தேர்ந்தெடுக்கப்பட்ட சபையின் முன்குறிக்கப்பட்ட, முன்னரே தீர்மானிக்கப்பட்ட எண்ணிக்கையை முடிக்க போதுமானதாக இருக்கும். R4669 & R2297

**இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப்போடுவேன். நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை**

**அறியாமல், நான் ஐசுவரியவானென்றும், திரவியசம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும் சொல்லுகிறபடியால்; வெளி 3:16–17–**

**அப்பொழுது: உம்முடைய வீட்டைக்குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது என்று எழுதியிருக்கிறதை அவருடைய சீஷர்கள் நினைவுகூர்ந்தார்கள். யோவான் 2:17**

இயேசு கயிற்றினால் ஒரு சவுக்கை உண்டுபண்ணி, காசுக்காரர்களை துரத்தினார். அப்பொழுது சீஷர்கள் நினைவுகூர்ந்து இந்த வார்த்தைகளைக் கூறினார்கள். "உம்முடைய வீட்டைக் குறித்து உண்டான பக்தி வைராக்கியம் என்னை பட்சித்தது." (யோவான் 2:17) அந்த காரியத்தில் ஆலயமானது கர்த்தருடைய வீடாக இருந்தது. சகல வியாபாரிகளையும் துரத்தி ஆலயத்தை சுத்தம் பண்ணின போது கர்த்தரின் வைராக்கியம் சிலரால் மிகவும் சரியானது என்றும் மற்ற சிலரால் மிகக்கடுமையானது என்றும் கருதப்பட்டது.

இன்னும் ஆழ்ந்த பொருளில், சபைதான் அவரது வீடு, தேவனுடைய வீடு என்று குறிப்பிடப்படுகிறது. அப்போஸ்தலர்கள் சபையைப் பற்றி பேசும் போது, நாம் பரிசுத்த ஆவியின் ஆலயம் என்று கூறுகிறார். (1 கொரிந்தியர் 6:19) மேலும் நாம் ஜீவனுள்ள கற்களாக கூட்டி கட்டப்பட்டு வருகிறோம் என்று கூறப்பட்டது. (1 பேதுரு 2:4,5) ஆகையால் இயேசு பெற்றிருந்த வைராக்கியம் தேவனுடைய உண்மையான வீடாகிய, பிள்ளைகளின் வீட்டிற்காக என்று நாம் காண்கிறோம். யூதர்கள் மோசேயின் கீழாக ஊழியக்காரர்களின் வீடாக இருந்தார்கள். ஆனால் கிறிஸ்துவோ அவரது வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக இருந்தார். "நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மை பாராட்டலையும் முடிவு பரியந்தம் உறுதியாய் பற்றிக் கொண்டிருப்போமாகில் நாமே அவருடைய வீடாயிருப்போம்." ஏனெனில் "உங்களை அழைத்தவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்." (எபிரேயர் 3:5,6; 1 தெசலோனிக்கேயர் 5:24)

வீட்டைப் பற்றிய இந்த கண்ணோட்டத்தை நாம் நமது மனதிற்கு முன்னே வைத்துக்கொண்டு, எந்த வழியில் தேவனுடைய வீட்டைக் குறித்ததான இயேசுவின் பக்தி வைராக்கியம் அவரை எரித்தது என்பதை நாம் பார்க்கலாம். **எரித்தது, பட்சித்தது** போன்ற வார்த்தைகளை **இரும்பு துரு** பிடித்தது என்பதற்கு ஒப்பாக பயன்படுத்துகிறோம். ஆகையால் வைராக்கியம் என்பது சூடு, வெதுவெதுப்பு மற்றும் ஜ்வாலையை குறிக்கிறது. ஆண்டவர் மற்றும் அவர் அக்கறை கொண்டிருந்த அவரது வீடு பற்றிய இந்த கண்ணோட்டத்தை நமது மனதிற்கு முன்னே வைத்துக்கொண்டு சிந்திக்கும் போது, அநேகரை தேவனுடைய வீட்டிற்குரியவர்களாகவும், தேவனுடைய குமாரர்களாகவும், தேவனுடைய ஜனங்களாகவும் ஆகும்படியாக தமது ஜீவனைக் கொடுப்பதற்கு அதற்கான அவரது வைராக்கியம், அவரது சக்தி, அவரை ஞாபகப்படுத்தி வழி நடத்தியது என்று நாம் உணருகிறோம். கர்த்தருடைய வீட்டிற்கான, கர்த்தருடைய பிள்ளைகளுக்கான அவரது பக்தி வைராக்கியம், அவர்களுக்கு உதவி செய்வதில் அவரது நேரத்தையும் பலத்தையும் பட்சித்தது. R5250

**இந்த சுவிசேஷ யுகத்தில், தம்மோடுகூடப் பட்சிக்கப்படும் படியாக சபையை கர்த்தர் அழைக்கிறார். தேவனுடைய ஊழியத்திற்காக முழு வைராக்கியத்தையும் வெளிப்படுத்தும் இந்த வாய்ப்பு, இந்த சுவிசேஷ யுகம்வரை ஆதாமுக்கோ அல்லது எந்த மனித குடும்பத்திற்கோ கொடுக்கப்படவில்லை. இந்த வாய்ப்பு அடுத்த யுகத்தில் தேவனுடைய குமாரர்களுக்கு வராது. அப்பொழுது பலியானது முடிவடைந்திருக்கும். அங்கே பாவமோ, வருத்தமோ, வலியோ, தவிப்போ, அலறுதலோ அல்லது மரணமோ இராது! (ஏசாயா 35:10; 51:11 வெளி 21:4) R5250**

**கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார்; நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மைபாராட்டலையும் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், நாமே அவருடைய வீடாயிருப்போம். எபிரெயர் 3:6.**



**அவர் சமீபமாய் வந்தபோது நகரத்தைப்பார்த்து, அதற்காகக் கண்ணீர் விட்டழுது, உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும், இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது. உன்னை சந்திக்குங் காலத்தை நீ அறியாமற்போனபடியால், உன் சத்துருக்கள் உன்னை சூழ மதில்போட்டு, உன்னை வளைந்துகொண்டு, எப்பக்கத்திலும் உன்னை நெருக்கி, உன்னையும் உன்னிலுள்ள உன் பிள்ளைகளையும் தரையாக்கிப்போட்டு, உன்னிடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு செய்யும் நாட்கள் உனக்கு வரும் என்றார்.**

**– லூக்கா 19:41–44 –**

இந்த வார்த்தைகள் மாம்ச பண்புகளின் அடிப்படையில் தனது சொந்த நாட்டிற்காக சுயநல தேசபக்தியைக் காட்டுவதற்கான நிரூபணமாக இல்லை. மாறாக, தனது சிலாக்கியங்கள் மற்றும் அதன் சீரழிவு இரண்டையும் உணரத்தவறி, விரைவில் வரவிருக்கிற பயங்கரமான தெய்வீக கோபாக்கினையை பெற இருக்கிற ஒரு தேசத்திற்காக வருத்தப்பட்ட ஒரு உன்னத இதயத்தின் ஆழ்ந்த வேண்டுகோளே ஆகும். குருடர்கள் மற்றும் தவறு செய்பவர்கள் மீது கர்த்தரின் அனுதாபத்தின் இந்த வெளிப்பாட்டில் சில அழகான மனதைத் தொடும்

காரியங்கள் உள்ளது. பழிவாங்குதலையும் மற்றும் வெறுப்பையும் இவ்வளவாய் வெற்றி பெற்றிருக்கிறதே, என்னே ஒரு நற்பண்பின் மகத்துவம் இது! என்னே ஒரு கண்ணியம் மற்றும் கருணை மற்றும் மகிமை! கர்த்தாவே, "தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களை சகித்த அவரையே நினைத்துக்கொள்ள" உம்முடைய பிள்ளைகளுக்கு உதவி செய்யும். "அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புசெய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தாரே". தன்னைத் துன்புறுத்துபவர்களின் குருட்டுத்தன்மை மற்றும் அவர்களின் ஒழுக்க சீரழிவுக்கான தனது ஆழ்ந்த வருத்தத்திலும் பரிதாபத்திலும் அவர் தனக்கெதிரான துன்புறுத்தலின் தீவிர உணர்ச்சியையும் மறந்துவிட்டதாகத் தோன்றுகிறது. கர்த்தர் கிருபை காட்ட எவ்வளவு காலம் காத்திருந்தார்,, அவர் கோபம் கொள்வதற்கு எவ்வளவு தாமதமாக இருந்தார், இரக்கத்தில் எவ்வளவு தாராளமாக இருந்தார்! ஆயினும்கூட, கணக்குதீர்க்கும் நாள் வந்தே தீர வேண்டும் மற்றும் ஒரு தீய விதைப்பின் அறுவடை செய்யப்பட வேண்டும். R1847

**எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின்கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும்வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று. இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்.**

**–மத்தேயு 23:37–38–**

எருசலேமை தூரத்திலிருந்து பார்க்கமுடிகின்ற ஒலிவமலையின் உச்சியிலே, போதகரும், ஜனக்கூட்டத்தாரும் சற்று நின்றார்கள்; அவர்களது கவனம் பட்டணத்தின் மீதும், இராஜாவின் மீதும் திரும்பியது. அத்தருணத்தினுடைய முக்கியத்துவத்தை அவர்கள் அறியாதிருந்தார்கள்; ஒரு புதிய யுகமாற்றம் நடை பெறுகின்றது என்றும், இஸ்ரயேல் ஜனங்களுக்கு அருளப்பட்ட ஆசீர்வாதங்களையும், சிலாக்கியங்களையும் பெற்றுக்கொள்வதற்கான இருதய ஆயத்த நிலையில் அவர்கள் காணப்படாத காரணத்தினால், அவர்கள் மீது பல நூற்றாண்டுகளாகத் தங்கியிருந்த, தேவன் அருளின தயவானது, அவர்களிடமிருந்து கடந்து போகப்போகிறது என்றும் அண்டசராசரத்தின் மாபெரும் கடிகாரம் சுட்டிக்காட்டுவதை அவர்கள் உணர்ந்துகொள்ளாமல் இருந்தார்கள்.

ஆண்டவர் இவை அனைத்தையும் கண்ணோக்கி மேலும் இதுவே குறிக்கப்பட்ட தெய்வீகத் திட்டமாக இருப்பதினால், அவர் எந்த விஷயத்திலும் முறுமுறுக்கவில்லை; எனினும் அவர் பட்டணத்தைப் பார்த்தபோது, இஸ்ரயேல் ஜனங்களிடமிருந்து எடுக்கப்பட்டுப்போகும் சிலாக்கியங்கள் குறித்தும் மற்றும் அவர்கள் தங்களுக்கான வாய்ப்புகளைப் புறக்கணித்ததின் காரணமாக, ஆசீர்வாதத்திற்குப் பதிலாக, அவர்கள் மீது எவ்வாறு "மகா உபத்திரவம்," அதாவது பயங்கரமான உபத்திரவம் வரும் என்பது குறித்ததுமான காரியங்களை அவர் சிந்தித்தபோது, கண்ணீர்விட்டார். இறுதியில் அவர் கல்வாரிக்கு நேராக பிரயாணம் பண்ணிக் கொண்டிருக்கையில், அவருக்காக கண்ணீர் விட்டவர்களிடம் அவர், "எனக்காக அழாமல், உங்களுக்காக அழுங்கள்" என்று கூறினவைகளே, இத்தருணத்தின்போது, அவருடைய மனதில் காணப்பட்டது.

பரிசேயர்கள் தேவனுக்கு முழுமையான பிரதிஷ்டை செய்திருப்பதாகவும், மாபெரும் பரிசுத்தத்தைப் பெற்றிருப்பதாகவும் காட்டிக்கொண்டனர். அவர்கள் தங்கள் காப்பு நாடாக்களை அகலமாக்கியும், தங்கள் வஸ்திரங்களின் தொங்கல்களைப் பெரிதாக்கியும், ஜெபஆலயங்களில் முதன்மையான ஆசனங்களை விரும்பியும், பார்வைக்காக நீண்ட ஜெபம்பண்ணியும், ஒற்தலாமிலும் வெந்தயத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளை விட்டுவிட்டவர்களாயும், மேலும் அவர்களுடையதோ நியாயப்பிரமாணத்தின் வெளிப்புறமான, சிரத்தையற்ற அனுசரிப்பாக மாத்திரமே செய்து வந்தார்கள் என்று இயேசு அவர்களிடம் கூறினார் (மத்தேயு 23:5,6,14, 23–25), உன்னிடத்தில் நீ அன்புகூறுவது

போல் பிறனிடத்திலும் அன்புகூறுவாயாக என்றே நியாயப்பிரமாணம் கட்டளையிடுவதாக அவர் அறிவித்தார். மேலும் அவர்கள் "விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப் போடுகிறார்கள்" என்று அவர் குற்றஞ்சாட்டினார். அப்பெண்களுக்கென்று இயல்பான காப்பாளர்கள் இல்லை என்ற நிதர்சனத்தைத் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்த அவர்கள் தயாராக இருந்தனர். வீதிகளின் சந்திகளில் நின்று ஜெபம் செய்வதன்மூலம், அவர்கள் நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்கிறார்கள் என்று நினைப்பது முட்டாள்தனம் என்று அவர் அவர்களிடம் கூறினார்.

அக்காலத்தில் அவர்கள் வீட்டின் பணிவிடைக்காரர்களாக, விசேஷித்த தயவினைத் தொடர்ந்து பெற தகுதியற்றவர்களாகிப் போனார்கள். மூன்றரை ஆண்டுகளாக அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட வகையான தயவு காண்பிக்கப்பட்டுவந்தது. அவர்கள் மத்தியில் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது. ஆனால் அந்த சுவிசேஷமோ தேசத்தை ஈர்க்கும் வண்ணமாக இருக்கவில்லை. மாறாக அத்தேசத்தில் விசுவாசத்தில் உண்மையுள்ளோராய் **மீந்திருக்கிற** உத்தம இஸ்ரயேலரை மாத்திரமே ஈர்க்கும் வண்ணமாக இருந்தது. மூன்றரை ஆண்டுகளுக்குப் பிறகு, எழுபதாவது வாரம் முடிவடைந்த நிலையில், யூதர்களுக்கான கர்த்தரின் தயவு நிறுத்தப்பட்டது. அன்றிலிருந்து புறஜாதியாருக்கு கதவானது திறக்கப்பட்டது. அதுமுதல் யூதர்களுக்கு மற்றவர்களை விட எந்தவித முக்கியத்துவமும் இராமற்போனது.

அனைத்து உண்மையான இஸ்ரவேலர்களும் யுகங்களின் மாற்றத்தை அங்கீகரித்திருக்க/ உணர்ந்திருக்க வேண்டும்; அல்லது, வேதவசனங்கள் அறிவிக்கிறபடி, அவர்கள் குறைந்தபட்சம் 'திரும்ப கொடுத்தலின் காலத்தை'யாவது அறிந்திருக்க வேண்டும். சிரமம் என்னவென்றால், அவர்களில் பலர் இந்த வாழ்க்கையைப் பற்றின அக்கறை, ஐசுவரியத்தின் மயக்கம், மனிதர்களின் மத்தியில் கனம் மற்றும் அவர்களின் மதப்பிரிவின் செழிப்பு ஆகியவற்றால் மூழ்கடிக்கப்பட்டிருந்தார்கள். எனவே இப்பொழுது இருக்கும் இந்த அறுவடை காலத்திலும் உள்ளது: சோதனை அப்பொழுது வந்த அதே விதத்தில் தான் வருகிறது. வேதத்தின் மூலம் பரலோகத்திலிருந்து பேசும் அவருடைய சத்தத்திற்கான விசுவாசம் என்பது, நாம், நம் முன்னோர்கள் மற்றும் நம் நண்பர்கள் நீண்ட காலமாக உண்மையென போற்றிய தப்பறைகள் மற்றும் தவறான கோட்பாடுகளுக்கு, இப்போது நமக்கு வழங்கப்பட்டுள்ள தெளிவான வெளிச்சத்தில், நாம் காட்டும் எதிர்ப்பைக் குறிக்கிறது. இப்போதும் இந்த வெளிச்சத்தின் அதிகரிப்பு, கர்த்தருடைய சத்தத்திற்கு செவிகொடுப்போருக்கு, ஒரு சோதனையைக் கொண்டுவருகிறது – இதுவே இந்த மந்தையைச் சேராத மற்றவர்களிடமிருந்து உண்மையான ஆடுகளாக இருப்பவர்களை பிரிக்கிறது. "என் ஆடுகள் என் சத்தத்திற்கு செவிகொடுக்கிறது; அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது." R3538, R5470, R3883

**இது இஸ்ரேலின் வரலாற்றில் திருப்புமுனையாக அமைந்தது என சகரியா தீர்க்கதரிசி குறிப்பிட்டுள்ளார். இங்கே தேவ ஆட்டுக்குட்டி இஸ்ரயேல் தேசத்திற்கு அவர்களின் பாஸ்கா ஆட்டுக்குட்டியாகத் தன்னையே ஒப்புக்கொடுத்தார், ஆனால் அவர்களோ அவரை ஒரு தேசமாக அல்லது 'வீடாக' ஏற்றுக்கொள்ளவில்லை. R2296**

**எருசலேமுக்குள் கழுதையின் மீது வெற்றிகரமான பிரவேசத்திற்குப் பிறகு, நம் ஆண்டவர் தினமும் தேவாலயத்தில் தொடர்ந்து போதித்துக்கொண்டிருந்தார்; அதாவது அவர் கைது செய்யப்பட்டு, சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னதான அந்த சில நாட்களில், இரவில் பெத்தானியாவிற்குச் சென்று, ஒவ்வொரு நாள் காலையிலும் ஆலயத்திற்குத் திரும்பி வருபவராக காணப்பட்டார். அப்போதுதான், சில கிரேக்கர்கள் இயேசுவை சந்தித்துப் பேச முற்பட்டனர். கிரேக்கர்களுடனான உரையாடல் முடிவடைந்த பிறகு, இறுதியில் ஒருவழியாக உலகமானது தங்களுடைய ஆண்டவரை, அவருக்கே உரிய உண்மையான வெளிச்சத்தில் அடையாளம் கண்டுகொள்ளத்தக்கதாக விழித்தெழுந்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதினாலும், இன்னும் சீக்கிரத்திலேயே, உலகம் அவரை மேசியாவென உயர்வான ஸ்தானத்திற்கு உயர்த்தும் என்ற எதிர்ப்பார்ப்பினாலும் அடைந்த பரவசத்தினால், அப்போஸ்தலர்களுடைய இருதயங்கள் வேகமாய் அடித்துக் கொண்டிருக்கும் போது, அப்போஸ்தலர்கள் தாங்களும் இராஜ்யத்தில் அவருடன்கூட உடன் சுதந்தரர்களாக ஆகப்போகிறார்கள் என்ற நம்பிக்கையில் உயர பறந்து கொண்டிருந்த இந்த தருணத்தில்தான் இயேசு**

**யோவான் 12-ம் அதிகாரத்தில் உள்ள வார்த்தைகளை உச்சரித்தார். இது சீக்கிரத்தில் தாம் படப்போகின்ற பாடுகளே, எதிர்க்கால மகிமைக்கான அஸ்திபாரமாக இருக்கப்போகின்றது என்பதை அவர்களுக்கு கர்த்தர் வெளிப்படுத்துவதற்கான நல்லதொரு வாய்ப்பாய் இருந்தது. தம்முடைய மரணம் தொடர்பாக அவர்களிடம் தம்மால் ஏற்கெனவே சொல்லப்பட்ட காரியங்களை அவர்கள் உணர்ந்துக்கொள்ளும்போது, தம்முடைய உண்மையுள்ளவர்களாகிய சிலருக்கு அது எத்தகைய கசப்பான ஏமாற்றமாகவும், இருதயத்திற்கு வேதனை யளிக்கின்றதாகவும் இருக்குமெனக் கர்த்தர் நன்கு அறிந்திருந்தார்.** R2757

**அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: மனுஷகுமாரன் மகிமைப்படும் படியான வேளை வந்தது. இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது, நான் என்ன சொல்லுவேன். பிதாவே, இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ; ஆகிலும், இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன். பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும் என்றார். அப்பொழுது: மகிமைப்படுத்தினேன், இன்னமும் மகிமைப்படுத்துவேன் என்கிற சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று.**

**-யோவான் 12:23,27-28-**

“இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது” . . . என்னுடைய உணர்வுகள் கலங்குகிறது; நான் அமைதியற்று இருக்கிறேன். நான் என்ன சொல்லுவேன். பிதாவே இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ? விடுவியும் என்று கேட்பதற்குப் பதிலாக நான் இதற்காகவே, விரும்பி சகித்துக் கொள்ளத்தக்கதாகவே இந்த வேளைக்குள் வந்திருக்கிறேன் என்று நினைவுகூரவே செய்கின்றேன்; பிதாவினுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து என்னுடைய ஜீவனை ஒப்புக்கொடுப்பேன் என்பதாக நான் பண்ணின ஒப்பந்தத்தை வீணாக்கிப் போடாத விதத்தில், ஏதோ ஒருவகையான விடுவித்தலை என்னால் பிதாவிடம் கேட்க முடியும். நான் குற்றவாளியாக, அதாவது என்னுடைய பரம பிதாவுக்கு எதிராக தேவதூஷணம் கூறின மோசமான குற்றவாளியாக நான் அவமானப்படுத்தப்பட்டு, தீர்ப்பளிக்கப்படும் அனுபவங்களிலிருந்து என்னைத் தப்பு விக்கத்தக்கதாக, என் மீது வேறு ஏதோ ஒரு பெரும் துன்பத்தை விழப்பண்ணி, அதன் மூலம் என் மரணம் சம்பவிக்கத்தக்கதாக, என்னால் பிதாவிடம் கேட்க முடியும். மேலும் பிதாவுக்கு எல்லா விஷயங்களிலும் உண்மையையே காண்பித்து வந்த எனக்கு, இத்தகைய சலுகைகளைப் பிதா காண்பிப்பது எனக்கு நியாயமற்றதாகவும் தெரியவில்லை. எனினும் நான் இந்தச் சலுகைகளைக் கூடக் கேட்பதில்லை. மாறாக நான் என்னுடைய சித்தத்தை முற்றிலுமாக பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து, என்னுடைய உடன்படிக்கை யினுடைய ஆவி மற்றும் எழுத்துக்களின் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் விடுபடாத அளவுக்கு அனைத்தையும் செய்வேன். பிதாவின் சித்தம் அனைத்தும் நிறைவேறுவதாக; அதுவே ஞானமுள்ளதும் சிறந்ததுமாய் இருக்கின்றது; ஒருவேளை ஞானமற்றதாகவும், சிறப்பற்றதாகவும் இருக்குமானால், அது பிதாவினுடைய திட்டமாக இருக்காது. பிதாவுக்கு என்னுடைய முழுமையான அர்ப்பணிப்பையும், அவருடைய சித்தத்திற்கான என்னுடைய முற்றும் முழுமையான கீழ்ப்படிதலையும் வெளிப்படுத்துவதற்காக, நிரூபிப்பதற்காகவே நான் இந்த வேளைக்குள் வந்திருக்கின்றேன். பிதாவே நீர் தொடரும்! நான் எதை இழக்க வேண்டியிருப்பினும், பிதாவே உம்முடைய வழியில், உம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தும்! என்ற விதத்தில் இயேசு கூறினார்.

பின்பு ஒரு சத்தம் உண்டானது; தேவனுடைய சத்தத்தின் விஷயத்தில் எப்போதும் காணப்படுவது போன்று, சிலர் அதை புரிந்துகொண்டார்கள், ஆனால் மற்றவர்களோ தவறாய்ப் புரிந்துகொண்டனர். உலகத்தார் எந்த செய்தியையும் கேட்பதில்லை; விசுவாசிகள் அரைக்குறையாய் செய்தியைக் கேட்கின்றனர். ஆனால் பிதாவுக்குப் பூரணமான இசைவுடன் காணப்படும் ஜெநிப்பிக்கப்பட்ட புத்திரர்கள் மாத்திரமே, செய்தியை முழுமையாய்க் கேட்கவும் செய்கின்றனர் மற்றும் புரிந்துகொள்ளவும் செய்கின்றனர். பிதாவிடம் இருந்து வந்த இந்த செய்தியினால், நமது கர்த்தர் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை; எனினும் இச்செய்தியானது தமக்கென்று விசேஷமாய் அனுப்பப்படாமல், மாறாக கர்த்தருடைய

போதனைகளுக்கு தேவனும் உறுதியளிக்கின்றார் என்பதை சீஷர்கள் கவனித்து, நன்மையடைவதற்கே அளிக்கப்பட்டதாக, கர்த்தர் நமக்கு உறுதியளிக்கின்றார். R2758

**அங்கே நின்று கொண்டிருந்து, அதைக் கேட்ட ஜனங்கள்: இடிமுழக்கமுண்டாயிற்று என்றார்கள். வேறுசிலர்: தேவதூதன் அவருடனே பேசினான் என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி: இந்த சத்தம் என்னிமித்தம் உண்டாகாமல் உங்கள் நிமித்தமே உண்டாயிற்று. யோவான் 12:29-30.**

**பரிசேயர் கூடியிருக்கையில், இயேசு அவர்களை நோக்கி: கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், அவர் யாருடைய குமாரன்? என்று கேட்டார். அவர் தாவீதின் குமாரன் என்றார்கள். அதற்கு அவர்: அப்படியானால், தாவீது பரிசுத்த ஆவியினாலே அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்கிறது எப்படி? நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப்போடும்வரைக்கும் நீர் என்னுடைய வலது பாரிசத்தில் உட்காரும் என்று கர்த்தர் என் ஆண்டவரோடே சொன்னார் என்று சொல்லியிருக்கிறானே. தாவீது அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்க, அவனுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி என்றார். அதற்கு மாறுத்தரமாக ஒருவனும் அவருக்கு ஒரு வார்த்தையும் சொல்லக்கூடாதிருந்தது. அன்றுமுதல் ஒருவனும் அவரிடத்தில் கேள்விகேட்கத் துணியவில்லை.**

**-மத்தேயு 22:41-46-**

நம்மில் சிலர், முற்காலத்து பரிசேயர்களைப் போல, பதில்களை தேடுவதில் ஈடுபடுவதற்கு மிகவும் அலட்சியமாகவும் சோம்பலாகவும் இருந்து, மேலும் இந்த கேள்விக்கு பதிலளிக்க முடியாமல், இதுபோன்ற கேள்விகளை எதிர்கொள்ளும்போது, அவர்கள் ஆத்திரமடைந்து இந்த இவ்வகையான கேள்விகள் “சர்ச்சைக் குரியவை மற்றும் இலாபமற்றவை” என்று முத்திரை குத்துவதில் அவர்கள் ஒருபோதும் தாமதமாக இருப்பதில்லை. ஆனால் இந்தக் கேள்வியினை கர்த்தர்தாமே கேட்டார், மற்றும் இதுபோன்ற விஷயங்களை நாம் இந்த அளவிற்குப் புரிந்து கொள்ளும்போது தான், அதாவது, அவற்றிற்கு நம்மால் பதிலளிக்க முடிந்தால், அது கர்த்தரையும், அவருடைய பணியையும் தெளிவாக புரிந்துகொள்ள திறவுகோலாக அமைகிறது என்றும் அவர் மறைமுகமாக சுட்டிக்காட்டியதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

ஆராய்ச்சியின் கீழ் உள்ள உரையில் அவர் குறிப்பிடும் இயேசுவின் கர்த்தத்துவத்தைக் குறித்து நாம் ஆய்வு செய்ய முற்படும்போது, இந்த பரிந்துரைகள் எதற்கும் அப்பாற்பட்ட ஒரு கர்த்தத்துவத்தைப் பற்றிய குறிப்பு இருப்பதைக் காண்கிறோம். இது எந்த அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகிறது என்பதை வெளிப்படுத்தல் 22:16 தெளிவாக்குகிறது. “நான் தாவீதின் வேராயிருக்கிறேன்,” அதாவது தாவீதின் தந்தை அல்லது முன்னோடியாயிருக்கிறார். இயேசு ஒரு கன்னிகையிலிருந்து பிறந்தபோது தாவீதின் புதிய துளிர், தண்டு அல்லது **கிளையாக** ஆனார்; ஆனால் அவரது மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலின் போது அவர் ஒரு **வேராக** மாறினார். அதன் உயிர்சக்தியால் அவர் தாவீது மற்றும் ஆதாமின் வாடிய மற்றும் இறக்கும் முளைகளையும் **மீட்டெடுப்பார்.** அதாவது, முதல் ஆதாம் தனது சொந்த அழிவின் மூலம் அவர்களிடம் கொண்டு வரத்தவறிய ஜீவியத்தின் பரிபூரணத்தை இரண்டாவது ஆதாம் கொண்டுவருவார். எனவே, இயேசு ஜீவன் கொடுப்பவர், மீட்டெடுப்பவர் என்று அழைக்கப்படுகிறார்; அவருடைய மகத்தான பணி நிறைவேற்றப்படும் காலம், “**திரும்பக்கொடுத்தலின் காலம்**” என்று அழைக்கப்படுகிறது.

இவ்வாறு பார்க்கையில் கிறிஸ்து ஆயிரமாண்டு காலத்தில் மனித இனத்தின் தந்தையாகிறார், ஏனென்றால் உயிர் கொடுப்பவர் ஒரு தகப்பனாயிருக்கிறார், பின்னர் அவர் மீட்டெடுக்கப்பட்ட மனித இனத்தால் “நித்திய பிதா” என்று அழைக்கப்படுவார். இவ்வாறு, ஒரு மனிதனாக தாவீதின் மகனாகவோ அல்லது

சந்ததியாகவோ இருந்தவர் தாவீதின் வேராக, தந்தையாக, தாவீதின் ஆண்டவராகவும், மற்றவர்களுக்கு உண்மையாக, தாவீதினைப் போலவும் ஆகிறார்.

இயேசுவின் வார்த்தைகளைப் பார்க்கும்போது, அவர் எப்படி தாவீதின் குமாரனாக இருந்தார், இன்னும் தாவீதின் ஆண்டவராகவோ அல்லது தந்தையாகவோ இருக்கிறார் என்பதை நாம் பார்க்கலாம். மேலும் இது தொடர்பாக இயேசு குறிப்பிட்டது மற்றும் அப்போஸ்தலர்களால் குறிப்பிடப்பட்ட தீர்க்கதரிசனத்தைக் குறிப்பிடுகையில், (மத். 22:4; எபி. 1:13), உதாரணத்திற்கு “கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி: நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும், நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்றார்”. இவையனைத்தையும் கருத்தில் கொள்ளும்போது இயேசுவின் கர்த்தத்துவம் அவருடைய பாடுகளும் சோதனைகளும் முடித்த **பிற்பாடே** குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதை நாம் காண்கிறோம். அவர் உயர்த்தப்படுவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்ட பிறகு, அவர் உயர்த்தப்பட்டார், அதற்கு முன்புவரை அவர் தாவீதின் ஆண்டவர் என்று தீர்க்கதரிசனமாக மட்டுமே அழைக்கப்பட முடியும். மனிதகுலம் சாபத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, விலை கொடுத்து வாங்கப்படும் வரை, யெகோவா தேவன் இயேசுவுக்கு ஆட்சியைக் கொடுத்து, உலகத்தை அவருக்குக் கீழ்ப்படுத்த மாட்டார். அந்த நியாயமான விலையை அவர் செலுத்தினார், எனவே இப்போது யெகோவா தேவனின் நியமனத்தின் மூலம் அவர் **கர்த்தராக/ஆண்டவராக** இருக்கிறார். R808

### தாவீதின் சங்கீதம்

**கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி: நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும், நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்றார். – சங்கீதம் 110:1**

## அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, –எபிரெயர் 5:8–

ஒருவேளை நமது கர்த்தர் அவருடைய மரணத்தின் நேரத்தையும் விதத்தையும் தீர்மானித்திருந்தாரானால், அந்த பாத்திரத்தை அவர் ஊற்றக் கூடியவராக இருந்திருப்பார். ஒருவேளை யூதர்கள் இந்த காரியங்களை தீர்மானித்திருப்பார்களானால், அப்பொழுது அவர்கள் அந்த பாத்திரத்தை ஊற்றக் கூடியவர்களாக இருந்திருப்பார்கள். ஆனால் இவ்வாறு நமது கர்த்தரும் செய்யவில்லை யூதர்களும் செய்யவில்லை. ஏனென்றால் இந்தக் காலம்/வேளை மற்றும் விதம் இரண்டுமே தீர்க்கதரிசிகளால் முன்னறிவிக்கப்பட்டிருந்தது. நமது கர்த்தர் இந்தப் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு இதை **அவருக்கான பிதாவின் மேற்பார்வையாக**, அதாவது முன்னேற்பாடாக அல்லது வழிநடத்துதலாக ஏற்றுக்கொண்டார். ஒருவேளை பிதாவின் முன்னேற்பாட்டினால் கர்த்தருடைய மரணம் ஒரு வருடமோ அல்லது இரண்டு வருடங்களோ முன்னதாக வழிவகுக்கப்பட்டிருந்தாலும் கூட, ஒருவேளை பிதா நமது கர்த்தரை இன்னும் சற்று காலம் முன்னதாகவே சிலுவையில் அறையப்பட சித்தம் கொண்டிருந்தாலும் கூட, அப்பொழுதும் அது அவருக்கு நல்லதாகவே, அதாவது ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவே இருந்திருக்கும். ஆனால் “அவர் பட்ட பாடுகளினால் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார்.” எபி. 5:8; 2:10.

பரிசுத்த ஆவி இறங்குதலின் மூலமும் பிதாவின் சத்தத்தினாலும் யோர்தானில் நமது கர்த்தர் பரிபூரணமானவராகவும் ஒரு பரிபூரண அர்ப்பணிப்பை செய்தார் என்றும் காட்டப்பட்டது. அவருக்கு ஒரு பரிபூரண சரீரமும் இருந்தது – அது பூமிக்குரியதாக இருந்தாலும் – அதிலே புதிய சிருஷ்டி இயங்கியது. ஆனால் அவரது **கீழ்ப்படிதலும், மரணம் வரையிலான அவரது உண்மைத்தன்மையும் சோதிக்கப்பட** வேண்டியிருந்தது. நம்முடைய கர்த்தர் எந்த அளவு சோதனைக்கு உட்பட்டிருந்தாலும் அது பிதாவின் ஞானத்தின் படி **மிக சரியான அளவாகவே** இருந்தது. R5080

**நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள்நிமித்தம் தரித்திரரானாரே.**
**– 2 கொரிந்தியர் 8:9 –**

மிக உயர்வான ஸ்தானத்திலிருந்தும் சுபாவத்திலிருந்தும், நமது மண்ணான – பூமிக்குரிய மனித சுபாவத்திற்கு மாற்றப்பட்டார் மற்றும் அவருடைய அதிகாரங்களின் வரம்பு அதன்(சுபாவத்தின்) எல்லைக்குள் மட்டுமே இருந்தது. அவர் பரிபூரண மனிதனாக இருந்தபோதிலும், அவரது அவமானம் மிகவும் பெரியது என்பதை நாம் காண்கிறோம். பூமியும் அதின் நிறைவும் அவருடையதாயிருந்தும், அதில் ஒரு அடியையும் அவர் உரிமை கொண்டாடவில்லை. சகல வெள்ளியும் பொன்னும் அவருடையதாயினும், ஆயிரம் மலைகளின்மேலுள்ள மிருகஜீவன்கள் அவருடையதாயிருந்தும், அவர் ஒன்றையும் உரிமை கொண்டாடவில்லை. நரிகளுக்குக் குழிகளும், ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு. ஆனால் மனுஷகுமாரனுக்குத் தலை சாய்க்க இடமில்லை. அவர் தாழ்மையான, மனித பெற்றோரில் பிறந்தார் – சிறிய நகரமான பெத்லகேமில் விலங்குகள் மத்தியில் ஒரு தொழுவத்தில் பிறந்தார் மற்றும் இழிவான நகரமான நாசரேத்தில் வளர்க்கப்பட்டார். முப்பது வயதில் அவர் தனது பணியை அறிவிக்க வெளிப்பட்டபோது, அவர் மனிதர்களால் வெறுக்கப்பட்டார் மற்றும் நிராகரிக்கப்பட்டார். அவர் தனது சொந்த ஜனங்களிடம் (யூத தேசம்) வந்தார். ஆனால் அவருடைய ஜனங்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. இறுதியாக அவர்கள் அவரை ஒரு குற்றவாளியாக இழிவான மரணத்திற்கு உட்படுத்தினர்; இதுவரை இஸ்ரவேலை மீட்பவர் இவர்தான் என்று நம்பியவர்களும், இருதயத்தில் சாந்தமும், எளிமையும் கொண்டு அவருடைய போதனையைப் பெற்ற ஒரு சில எளிய மக்களைத் தவிர வேறு யாரும் அவருக்காக துயரப்படவில்லை. (லூக்கா 24:21.) R1246

பரலோகத் தகப்பனின் பரிபூரணமும் அதிகாரமும், நம்முடைய கர்த்தர் பிதாவுக்குக் கீழ்ப்படிவதற்கு முழுமையான காரணங்களாக இருந்ததைப் போலவே நம்முடைய மகா பிரதான ஆசாரியர் குணம் மற்றும் அதிகாரம் ஆகிய இரண்டிலும் முழுமையான பரிபூரணம் உடையவராக இருப்பதும், மேலும் இந்த அதிகாரத்திற்காக அவர் தேவனாலேயே நியமிக்கப்பட்டார் என்பதும், திருச்சபை அவருக்குக் கீழ்ப்படிவதற்கான வலுவான சாத்தியமான கோரிக்கை மற்றும் ஊக்கமாகும். நம்மை வழிநடத்த ஒரு அனுபவமற்ற நபரையோ அல்லது சுயநலம் அல்லது ஏதேனும் இழிவான நோக்கத்தால் தூண்டப்படுகிற ஒருவரையோ தேவன் நியமிக்கவில்லை. மாறாக, அவர் ஒரு மகா பிரதான ஆசாரியரை நியமித்துள்ளார், அவருடைய ஒவ்வொரு கட்டளையும் ஞானமானதும், நல்லதும், நன்மையானதும், நாம் அவரைப் போலவே ஸ்திரப்படுத்தப்பட்டு, பலப்படுத்தப்பட்டு, நிலைநிறுத்தப்படும் வரை கிருபையிலிருந்து கிருபைக்கு நம்மை வழிநடத்த வடிவமைக்கப்பட்டுள்ளது. R1808.

# கடைசி இராப்போஜனம்

**இரண்டு நாளைக்குப்பின்பு பஸ்காபண்டிகை வருமென்று அறிவீர்கள்; அப்பொழுது, மனுஷகுமாரன் சிலுவையில் அறையப்படுவதற்கு ஒப்புக்கொடுக்கப்படுவார் என்றார்.**
**– மத்தேயு 26:2 –**

பெத்தானியாவில் நடைபெற்ற விருந்தும், திரளான ஜனக்கூட்டத்தாருடைய ஆரவாரத்தின் மத்தியில், நமது கர்த்தர் கழுதையின் மீது ஏறிவந்து பட்டணத்திற்குள் பிரவேசித்ததும், திரளான ஜனக்கூட்டத்தாருக்கு அவர் அநேகம் நாட்கள் ஆலயத்தில் பிரசங்கித்து வந்ததும், அவரிடத்தில் விசாரிக்கும்படிக்கு, கிரேக்கர்கள் அவரிடத்தில் வந்ததுமான காரியங்கள் அனைத்தும், அவருடைய பிரபலம் அதிகரித்து வருவதை சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; இன்னுமாக தாம் சீக்கிரத்தில் பிரதான ஆசாரியர்களால் மரணத்திற்குள் ஒப்புக்கொடுக்கப்படுவார் என்று ஆண்டவரால் கூறப்பட்ட வார்த்தைகளை முழுவதும் புரிந்துகொள்ள இயலாத சீஷர்களோ, எதிர்காலத்தைக் குறித்த ஆசை பற்றின எண்ணங்களினால் நிறைந்து காணப்பட்டனர்; அதாவது கர்த்தரோடுகூட தாங்கள் அடையாளம் கண்டுகொள்ளப்படுவது குறித்தும், எவ்வாறு கர்த்தர் இராஜாவாக உயர்த்தப்படும் காரியமானது, தங்களையும் அவரோடுகூட கனத்திற்கும், முதன்மை நிலைக்கும் கொண்டுவரும் என்பது குறித்தும், இப்படியாக அதிகப்படியான ஜனங்களுக்கு ஆசீர்வாதம் வழங்குவதற்கும், நன்மை செய்வதற்குமான விரும்பத்தக்க வாய்ப்பு தங்களுக்குக் கிடைக்கும் என்பது குறித்ததுமான எதிர்காலம் குறித்த ஆசை பற்றின எண்ணங்களினால் நிறைந்து காணப்பட்டனர்.

நீசான் மாதம் 13–ஆம் தேதியானது, நமது கர்த்தரினால் அமைதியாக செலவழிக்கப்பட்டது மற்றும் அன்றைய நாளின் மாலை வேளையாகிய 14–ஆம் தேதியின் ஆரம்பமானது, பஸ்கா இராப்போஜனம் மேல்வீட்டறையில் அனுசரிக்கப்படுவதற்கென நியமிக்கப்பட்டிருந்தது. கர்த்தருடைய அறிவுரையின்படி, அப்போஸ்தலர்களில் சிலர், அனுசரிப்பிற்கான ஆயத்தங்களை முன்கூட்டியே செய்துவிட்டனர். மேலும் அவர்கள் அனைவரும் கூடிவந்திருக்கையில், இராப்போஜனத்தின்போது, அவர்கள் அமர வேண்டிய இடத்தை நியமிப்பதற்கு உபசரிப்பவர் எவரும் அங்கு இல்லாதபடியினால், தங்களது முதன்மை நிலைக் குறித்தும், ஆண்டவருக்கு அருகாமையில் உட்காருவதாகிய மிகுந்த கனமிக்க இடத்தின் விஷயத்தில், தங்களுக்கான உரிமைகள் குறித்தும் விவாதம் எழும்பினதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இம்மாதிரியான காரியங்கள் தொடர்புடைய விஷயத்தில் நமது கர்த்தர் இரண்டுமுறை ஏற்கெனவே சீஷர்களைக் கடிந்துகொண்டு, அவர்கள் சிறுபிள்ளைகளுக்கு இருப்பதுபோன்றதான சாந்தத்தின் ஆவியை வளர்த்துக்கொள்ளாதது வரையிலும், அவர்களால் இராஜ்யத்தில் பங்கடைய முடியாது என்று உறுதியும்படுத்தியுள்ளார். ஒரு வாரத்திற்கு முன்னதாகத் தான், எருசலேமுக்குப் போய்க்கொண்டிருக்கும்போது, இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகையில் ஆண்டவருக்கு மிக அருகாமையில், ஒருவர் ஆண்டவருக்கு வலது புறத்திலும், மற்றொருவர் இடதுபுறத்திலும் உட்காரும்படிக்கு செய்யப்பட வேண்டுமென யாக்கோபும், யோவானும் வேண்டிக்கொண்டார்கள். இதே ஆவியே, இப்பாடத்தின் சம்பவங்களிலும் அவர்களை ஆட்கொண்டிருந்து மற்றும் தாழ்மைப்பற்றியும், கனம் குறைந்த ஊழியங்களைக் கூட ஒருவருக்கொருவர் புரிந்திடுவதற்கான விருப்பம் பற்றியுமான படிப்பினையைப் புகட்டத்தக்கதாக, சீஷர்களுடைய பாதங்களைக் கழுவும்படிக்கு நமது கர்த்தரை வழி நடத்தினது. R3542



## வேளைவந்தபோது, அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். – லூக்கா 22 : 14–15 –

பஸ்கா இஸ்ரயேலர்களுடைய மிக முக்கியமான பயபக்திக்குரிய அனுசரிப்புகளில் ஒன்றாக இருந்தது மற்றும் இன்னமும் இருந்து வருகின்றது. இது நிழலான ஜனங்களென அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட “நியாயப்பிரமாணத்தினுடைய” முதலாம் அம்சமாகக் காணப்பட்டது. இவ்வனுசரிப்பு நிறுவப்பட்ட விவரங்கள் யாத்திராகமம் 12–ஆம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. பழுதற்ற ஓர் ஆட்டுக்குட்டி அடிக்கப்பட வேண்டும்; அதன் இரத்தமானது, வீட்டு வாசலினுடைய நிலைக்கால்களிலும், மேற்சட்டத்திலும் தெளிக்கப்படுகின்றது மற்றும் இப்படியாக தெளிக்கப்பட்டுள்ள வீடுகளுக்குள், குடும்பத்தினர்கள் அந்த ஆட்டுக்குட்டியினுடைய மாம்சத்தை, புளிப்பில்லாத அப்பத்துடனும், கசப்பான கீரையுடனும் புசித்தார்கள். (யூதர்களுடைய முதலாம் மாதத்தின் 14–ஆம் தேதியின்) அந்த இராத்திரியில், தெளிக்கப்பட்ட இரத்தத்தின் காரணமாகவும், ஆட்டுக்குட்டி புசிக்கப்பட்டதின் காரணமாகவும், இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் கடந்துபோகப்பட்டார்கள் அல்லது எகிப்தியர்களின் முதற்பேறானவர்கள் சந்தித்த மரணத்தின் வாதையினின்று தப்புவிக்கப்பட்டார்கள். இச்சம்பவத்தின் காரணமாகவும் மற்றும் அடுத்த நாளில் இஸ்ரயேலர்கள் எகிப்தின் அடிமைத்தனத்தினின்று, சுதந்திரமடைந்து வெளியேறினதின் காரணமாகவும், தேவனுடைய கட்டளையின் பேரில், இஸ்ரயேலர்கள் ஒவ்வொரு வருடமும், அதன் ஆண்டு நிறைவு நாளில் அதை நினைவுகூர்ந்து ஆசரித்தார்கள். (யாத்திராகமம் 12:14) இஸ்ரயேலர்கள் இந்த அனுசரிப்பினுடைய எழுத்துக்களை மாத்திரமே பார்த்தார்களே ஒழிய, நிழலாகிய அதன் அர்த்தத்தைப் பார்க்கவில்லை. அப்போஸ்தலரை 1 கொரிந்தியர் 5:7–ஆம் வசனத்தினுடைய வார்த்தைகளை எழுதும்படிக்கு ஏவி, அவ்வனுசரிப்பிற்குரிய அர்த்தத்திற்கான திறவுகோலை ஒருவேளை தேவனுடைய பரிசுத்த ஆவியானது, நமக்குக் கொடுக்கவில்லையெனில், நாமும் இஸ்ரயேலர்களைப்போலவே இருளில் காணப்பட்டிருப்போம். “**ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப் பட்டிருக்கிறாரே. ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்.**” (1 கொரிந்தியர் 5:7) இப்படியாக இக்காரியத்தின் மீது, பரிசுத்த ஆவியானது நமது கவனத்தைக் கொண்டுவந்த பிற்பாடு, மேலும் தேவனுடைய ஆட்டுக்குட்டியாகிய இயேசுதான், பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய நிஜம் என்பதையும், இஸ்ரயேலின் முதற்பேறானவர்களுக்கு, நிழலான ஆட்டுக்குட்டியினுடைய மரணம் அவசியமாய் இருந்ததுபோன்று, இயேசுவினுடைய மரணமானது, முதற்பேறானவர்களாகிய சபை மரணத்திலிருந்து இரட்சிக்கப்படுவதற்கு அவசியமாய் இருக்கின்றது என்பதையும் தெளிவாய்க் காண்பிக்கக்கூடிய மற்ற வேதவாக்கியங்களையும் நாம் கண்டுபிடித்தோம். இப்படியாகப் பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்டு, நாம் இப்பொழுது தம்முடைய சீஷர்களுடன், கடைசி பஸ்காவைப் புசித்திட்ட இயேசுவின் வார்த்தைகளினிடத்திற்கும், செயல்பாடுகளினிடத்திற்கும் கடந்து வருகின்றோம். R839

## அன்றியும் தங்களில் எவன் பெரியவனாயிருப்பான் என்று அவர்களுக்குள்ளே வாக்குவாதம் உண்டாயிற்று. – லூக்கா 22:24 –

யார் பெரியவன்? என்ற இந்தப் பிரச்சனை, மேல் வீட்டறையில் அவர்கள் விருந்தாளிகளாக அழைக்கப் படாமல், எல்லா வேலைகளையும் தாங்களாகவே செய்துகொள்ள வேண்டும் என்ற நிலையில் அவர்கள் காணப்பட்டதினிமித்தம் தோன்றியிருக்க வாய்ப்புகள் இருக்கலாம். அதாவது, இச்சம்பவத்தன்று மாடி அறை மாத்திரமே அவர்களுக்கு அளிக்கப்பட்டது. மேலும், அங்கு விருந்தளிப்பவர்கள் அவர்களுக்குள் இல்லாத படியினால், பாதங்கள் கழுவப்படும் வழக்கத்திற்கு எவ்விதமான ஏற்பாடுகளும் அவர்களுக்கு அங்குக் காணப் படவில்லை. மேலும், அப்பணி செய்யப்படவில்லை. பாதரட்சைகளை அணியும் வழக்கமுடைய கிழக்கத்திய

நாடுகளில் பாதங்கள் கழுவப்படும் காரியமானது, மரியாதைக் கொடுக்கும் விதமாக மாத்திரம் செய்யப்படாமல், அது அவசியமாய் செய்யப்பட வேண்டிய காரியமாக உள்ளது. ஏனெனில், அந்த நாடுகளின் வெப்பநிலை நிமித்தமும் மற்றும் பாதரட்சைகள் முழுவதும் பாதங்களை மூடியநிலையில் காணப்படாமல், திறந்தநிலையில் காணப்படுவதினிமித்தமும் சாலைகளின் தூசிகள் பாதங்களில் படிந்துகொண்டிருப்பதினாலும், பிரயாணத்திலிருந்து வீடு திரும்பியவர்களின் பாதங்கள் கழுவப்படுவதன் மூலம், பாதங்களுக்கு ஆறுதல் அளிப்பது மிகவும் இன்றியமையாததாகவும் உள்ளது. பன்னிரண்டு பேரில் யார் பெரியவன்? மற்றும் இவர்களில் யார் மற்றவர்களுடைய பாதங்களைக் கழுவும் மதிப்புக் குறைவான வேலையை செய்ய வேண்டும் என்று அவர்களுக்குள் எழும்பின கேள்வியானது, அவர்களில் எவரும் பணிவிடைக்காரன் நிலையை எடுக்க விருப்பம் கொள்ளவில்லை என்ற உண்மையை வெளிப்படுத்துகின்றது.

நமது கர்த்தர் அவர்களுடைய பிரச்சனையைத் தீர்த்து வைக்காமல், அல்லது அவர்களுள் ஒருவனை இந்த மதிப்புக்குறைவான வேலையை செய்யும்படிக்கு நியமிக்காமல், இவ்விதமாய் அவர்கள் சண்டையிட்டுக் கொள்ள அனுமதித்துவிட்டார். அவர்களோ, அக்காரியத்தைக்குறித்து சிந்திக்கும்படி அனுமதித்தார். அதாவது, அக்காரியத்தை மீண்டும் சீர்த்தூக்கிப்பார்க்கவும் மனங்களைத் தாழ்த்தவும், அவர்களுக்கு நேரம் விட்டுக் கொடுத்தார். அவர்களோ வழக்கத்திற்கு மாறாக கழுவப்படாத பாதங்களுடன் இராப்போஜனத்தைப் புசிக்கவும் ஆரம்பித்துவிட்டார்கள். R2449

**தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்தாரென்பதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்து; போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றிவைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு, பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார்.**

**– யோவான் 13:3–5 –**

பின்னர் இயேசு எழுந்து நின்று தமது மேலங்கியைக் கழற்றிப்போட்டு, ஒரு சீலையை எடுத்து அரையில் கட்டிக்கொண்டு, ஒரு பாத்திரத்தையும், தண்ணீர் எடுக்க ஜாடியையும் எடுத்துக்கொண்டு, தண்ணீர் ஊற்றி தமது சீஷர்களின் பாதங்களைக் கழுவ ஆரம்பித்தார். பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றிவிட்டப் பிற்பாடு பாதங்களைத் தண்ணீருக்குள் போட்டுக் கழுவுவது கிழக்குப் பகுதிகளில் உள்ள வழக்கமாக இராமல், கழுவப்பட வேண்டிய பாதங்கள் மீது தண்ணீர் ஊற்றப்படுவதே வழக்கமாயிருந்தது. இவ்விதமாக ஒவ்வொருவருக்கும் கழுவுவதற்கு சுத்தமான தண்ணீர் காணப்படும். மேலும் தண்ணீரும் குறைவாகவே செலவழிகின்றது; ஏனெனில் நம் நாடுகளைக் காட்டிலும், கிழக்கே உள்ள நாடுகளில் தண்ணீர் மிகவும் தட்டுப்பாடு உடையதாகவும், விலையேறப் பெற்றதாகவும் கருதப்படுகின்றது. மேலும் நாம் பயன்படுத்தும் வழக்கத்தின்படியாக மேஜைகளும், இருக்கைகளும் அக்காலக்கட்டத்தில் கிழக்குப் பகுதிகளில் காணப்படுவதில்லை. அவர்களுடைய மேஜைகள் உயரம் குறைந்தவைகளாகவும், கிட்டத்தட்ட குதிரையின் பாதங்களில் அணியப்படும் லாடத்தினுடைய வடிவில் காணப்படும். மேலும் மேஜையில் இருப்பவர்கள் உண்மையில் மேஜையின் மீது பக்கவாட்டில் சாய்ந்து படுத்துக்கொள்வார்கள். அவர்களுடைய இடது முழங்கையானது, தலையணை அல்லது திவான் மீது வைக்கப் பட்டிருக்கும். அவர்களுடைய தலை குதிரை லாடம் போன்ற வடிவம் உடைய மேஜையின் உள்பக்கம் நோக்கியிருக்கும். இந்த உள்பக்கத்தில் உணவு வைப்பதற்கான இடமும், உள்ளே வந்து உணவை வைக்க பணியாளர்களுக்கு இடமும் காணப்படும். இவ்விதமாய் இருப்பதினால் பாதங்கள் வெளி நோக்கிக் காணப்படுவதினால், சாப்பிட்டுக்கொண்டிருக்கும் மற்றவருக்கு இடையூறு உண்டுபண்ணப்படாமலேயே பாதங்களை கழுவுவதற்குப் பாதங்கள் பக்கம் எளிதில் செல்லலாம்.

பேதுருவின் பாதங்கள் பக்கம் வருவதற்கு முன்னதாகவே, நமது கர்த்தர் சீஷர்களில் அநேகருடைய பாதங்களைக் கழுவி முடித்துவிட்டார் என்பது உறுதியே. ஒருவரும் அவர் தங்கள் பாதங்களைக் கழுவுவதற்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை. எனினும் இவ்விஷயத்தைக்குறித்து தாங்கள் சண்டையிட்டுக் கொண்டதையும், ஒருவருக்கொருவர் ஊழியம் செய்ய தாங்கள் விருப்பமின்றி காணப்பட்டதையும், அவர்கள் எண்ணினதினிமித்தம் அவமானமும், குழப்பமும் அவர்கள் முகங்களைக் கவ்விக்கொண்டிருந்திருக்க வேண்டுமென்பதில் ஐயமில்லை. ஆனால், பேதுருவின் தருணம் வந்தபோது, பேதுரு மறுப்புக் கூறினார். இப்படிப்பட்ட மதிப்புக் குறைவான வேலையை நமது கர்த்தர் செய்ய அனுமதிப்பதா? ஒருபோதும் இல்லை எனப் பேதுரு எண்ணினார். பேதுரு கர்த்தரை நோக்கி, “ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவலாமா?” என்று கேட்டார். ஆனால், நமது கர்த்தரோ பேதுருவைக் கடிந்துகொள்வதற்கென கால் கழுவும் வேலையை நிறுத்தவில்லை. அதாவது, இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் அவருடைய பின்னடியார்களில் சிலர் செய்ய நாடுவதுபோன்று பேதுருவுக்கு நன்கு திட்டு/வசவு கொடுப்பதற்கும், முழுமையாக எல்லாவற்றையும், விவரிப்பதற்கும் அவர் அவ்வேலையை நிறுத்தவில்லை. மாறாக, இவ்விஷயத்தைக்குறித்து பின்னர் விவரித்துக்கூறுவார் என்றும், ஒருவேளை தாம் பேதுருவின் கால்களைக் கழுவவில்லையென்றால் தம்மிடத்தில் பேதுருவுக்குப் பங்கில்லை என்றும் கூறி, மற்றவர்களுக்கு செய்வதுபோன்று பேதுருவுக்குச் செய்வதைத் தொடர வேண்டும் என வற்புறுத்தினவராக மாத்திரம் காணப்பட்டார்.

பேதுருவின் நடவடிக்கைகளிலுள்ள அருமையான/பெருந்தன்மையான பண்புகளால் நாம் கவரப் பட்டாலும், கவரப்படுகின்ற அளவைப்போன்றே அவருடைய சில பெலவீனங்களையும் நாம் ஒப்புக் கொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றோம். மேலும் இதில் கர்த்தருடைய அனைத்துப் பின்னடியார்களையும் உற்சாகப்படுத்தும் படிப்பினையையும் நாம் பார்க்கின்றோம். அதென்னவெனில், நம்மிடத்தில் பெலவீனங்களும் பூரணமற்றத் தன்மைகளும் காணப்படும்போது, அதேசமயம், பேதுருவிடம் காணப்பட்டது போன்று, கர்த்தரிடத்தில் இருதயப் பூர்வமான உண்மையும் நம்மிடத்தில் காணப்படுமாயின், நாமும் பேதுரு போன்று திடன் கொண்டவர்களாக முன்னேறிச் செல்வதற்கு நாட வேண்டும். அதாவது, ஜெயத்தின்மேல் ஜெயம் கொள்ளவும், இறுதியில் உண்மையுள்ளவர்களுக்கான பலனாகிய பரிசைப் பெற்றுக்கொள்ளவும் முன்னேறி செல்வதற்கு நாட வேண்டும்.

பாதங்கள் கழுவப்படுவதினால் வெளியாகும் அன்பையும், உண்டாகும் சௌகரியத்தையும்விட மிக ஆழமான அர்த்தங்கள், பாதங்கள் கழுவின விஷயங்களில் இருக்கின்றது எனவும், இவர்கள் மத்தியில் தாழ்மையின் ஆவி குறைவாய் இருப்பதைக் கடிந்துகொள்வதாக இருக்கின்றது எனவும், பேதுரு கற்றுக் கொண்டபோது, தன்னுடைய பாதங்கள் மாத்திரமல்லாமல், தனது கைகளும், தனது சிரசும் கழுவப்பட வேண்டுமென விரும்பினார். பெருந்தன்மையான பேதுரு! தளர்வில்லாத ஊக்கமுடைய பேதுரு! ஆர்வமிக்க பேதுரு! மனப்பூர்வமாய்க் காணப்படும் பேதுரு! R2449

**அனைவருடைய பாதங்களைக் கழுவும் வேலையை முடித்த பிற்பாடு, நமது ஆண்டவர் தம் மேலங்கியை மீண்டும் உடுத்திக்கொண்டு இராப்போஜனத்தீல் (இது பஸ்கா இராப்போஜனமாகும்; அப்பமும் திராட்சரசமுமுள்ள நினைவுகூருதல் இராப்போஜனமானது பிற்பாடு நிறுவப்பட்டது) பக்கவாட்டில் சாய்ந்த நிலையில் இருந்தார். நம்முடைய கர்த்தர் இப்பொழுது தம்முடைய வாய்ப்பைப் பயன்படுத்தி தாம் செய்த காரியத்தின் அர்த்தத்தைக்குறித்து அவர்களுக்கு விவரித்தார். இப்படிப்பட்ட மதிப்புக் குறைவான வேலையைச் செய்ததினிமித்தம் தாம் போதகர் அல்லவென்றோ கர்த்தர் அல்லவென்றோ குறிப்பதில்லை என்று சுட்டிக்காட்டினார். கர்த்தரும், போதகருமாகிய நானே பிதாவின் குடும்பத்திலுள்ள சிறிய அங்கங்களுக்கு ஊழியம் செய்வதிலும், அவர்கள் சௌகரியத்திற்கென/ஆறுதலுக்கென மிகுந்த மதிப்புக் குறைவான வேலையையும் செய்து கொடுப்பதிலும் விருப்பமற்ற நிலையில் காணப் படவில்லை என்பதே தமது செய்கையின் விளக்கம் என்றும் சீஷர்களும் ஒருவருக்கொருவர் இப்படிப்பட்ட ஊழியங்களைச் செய்வதில் விருப்பமற்றவர்களாய் இராமல், மகிழ்ச்சியுடன் செய்பவர்களாக இருக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார். கர்த்தரை உண்மையாக பின்பற்றுகிற அனைவரும் கவனமாக**

**செவி கொடுத்து எஜமானரின் சாந்தம் தாழ்மை மற்றும் அவரது சரீரத்தின் அங்கங்களுக்கு ஊழியம் செய்யும் ஆவியின் உண்மையான உதாரணத்தை சரியாக பின்பற்ற வேண்டும். R2250**

**ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்கு செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்.**
**– யோவான் 13 :14–15 –**

அவரது அன்பின் காரணமாகவே, அவர் தமது மகிமையைத் துறந்து மனுஷனானார்; அவரது அன்பின் காரணமாகவே, அவர் தம்மை மனிதனாகிய கிறிஸ்து இயேசுவாக அர்ப்பணம் பண்ணினார்; அவரது அன்பின் காரணமாகவே, அவர் தம்முடைய அருமையான சீஷர்களுக்கு ஓர் இடர்பாட்டில் உதவிடுவதற்கு ஆவல் உள்ளவராய் இருந்தார்; ஒருவேளை அவர்கள் இந்த இடர்பாட்டை மேற்கொள்ளவில்லையென்றால், அவர்கள் அவருடைய பின்னடியார்களெனத் தற்காலத்திலும், எதிர்காலத்திலும் பயன்படுத்தப்பட முடியாது. இந்த அன்பானது நமது கர்த்தரை அவசியமான கண்டிப்பைக் கொடுப்பதற்கு மாத்திரம் வழிநடத்திடாமல், இன்னுமாக அந்தக் கண்டிப்பை ஞானமான, சிறந்த மற்றும் அன்பான விதத்திலும் கொடுப்பதற்கும் அவரை வழிநடத்தினது.

போஜனம் பரிமாறப்படுவது வரையிலும் கர்த்தர் காத்திருந்தார் (போஜனம்பண்ணி முடிந்தபிறகு அல்ல, மாறாக பரிமாறி முடிவது வரையிலும் கர்த்தர் காத்திருந்தார்); பின்னர் கர்த்தர் பந்தியை விட்டெழுந்து மேல்வஸ்திரங்களைக் கழற்றி வைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டார், அதாவது உள்வஸ்திரங்கள் வேலை புரியும்போது இடையூறாக இராதபடிக்கு அரையிலே கட்டிக்கொள்ளும் கச்சையை, இறுக்கமாக்கிக் கொண்டார். இப்படியாக கர்த்தர் செய்வதையும், படுக்கையிலிருந்து நீட்டிக்கொண்டு காணப்படும் அப்போஸ்தலர்களின் பாதங்களினிடத்திற்கு ஒன்றன் பின் ஒன்றாக கர்த்தர் கடந்துபோவதையும், அப்போஸ்தலர்கள் கவனித்தபோது, அவர்கள் திகைத்துப் போயிருப்பதை நம்மால் நன்கு கற்பனை செய்துபார்க்க முடிகின்றது.

நமது கர்த்தர் செய்திட்டக் காரியத்தினிமித்தம் அப்போஸ்தலர் மிகவும் ஆச்சரியமடைந்திருந்தனர் என்பதில் உறுதியே மற்றும் அவரது செய்கை அளித்திட்ட கண்டனத்தை அவர்கள் உணர்ந்து கொண்டபடியால், என்னசொல்ல வேண்டுமென்று அறியாமல் இருந்தனர்; ஆகவே பேதுருவின் பாதங்களைக் கர்த்தர் கழுவ வருவதுவரையிலும் அமைதியே நிலவியது. “ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவலாமா?” என்று கூறி, கர்த்தர் தனது பாதங்களைக் கழுவுவதற்குப் பேதுரு மறுப்புத் தெரிவித்தார்; அதாவது, “ஆண்டவரே மிகவும் பெரியவரான நீர், ஏழை மீனவனாகிய எனக்குப் பணிவிடைப்புரிவது சரியல்ல” என்ற விதத்தில் பேதுரு கூறினார். ஆனால் நமது கர்த்தரோ, இக்காரியத்தைக் குறித்துப் பேதுரு முழுமையாய்ப் புரிந்துகொள்ளவில்லை என்றாலும், தாம் அனைவருடைய பாதங்களையும் கழுவினப் பிற்பாடு இக்காரியத்தைப் பேதுருவுக்கு விளக்குவதாகப் பதிலளித்தார்.

சிறியவன் ஆகிவிடுவோமோ என்ற அவர்களுடைய அச்சத்தின் காரணமாகவே, அங்கிருந்த சீஷர்கள் அனைவரும் போதகருக்கும் மற்றும் ஒருவர் இன்னொருவருக்கும் பணிவிடைப் புரிவதற்கான வாய்ப்பினைத் தட்டிக்கழித்துவிட்டனர். அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட தலையும், எஜமானருமான மேசியாவாகிய நமது கர்த்தர், அவர்கள் அனைவருக்கும் பணிவிடைப் புரியத்தக்கதாக தம்மையே தாழ்த்தினார் மற்றும் இவ்வாறாக அவர்களிடத்தில் காணப்பட்ட தாழ்மையின்மையைக் கடிந்துகொண்டார் மற்றும் அதேவேளையில், ஜீவியத்தின் சகல காரியங்களுக்கும் பொருந்தக்கூடிய ஒரு மாதிரியை அவர்களுக்கு முன்னாக வைத்தார்; அதாவது ஜீவியத்தின் உயர்வான காரியங்களிலோ அல்லது சாதாரணமான காரியங்களிலோ எப்போதும் ஒருவருக்கொருவர் பணிவிடை புரிந்திட அவர்கள் மகிழ்ச்சியுடன் காணப்பட வேண்டும் என்பதற்கான மாதிரியை முன்வைத்தார். ஒருவருடைய பாதங்களை ஒருவர் கழுவுதல் என்பது, ஜீவியத்தில் சகல மற்றும் எந்த

எளிமையான/கனமற்ற ஊழியங்களுக்கும், சகல மற்றும் எந்த இரக்கத்தின் பாராட்டுதலுக்கும் பொருந்துகின்றதாய் இருக்கின்றது, அதிலும் விசேஷமாக ஆவிக்குரிய உதவி மற்றும் ஆறுதல் அளிப்பது தொடர்புடைய விஷயங்களுக்கும், இரக்கம் பாராட்டுதலுக்கும் பொருந்துகின்றதாய் இருக்கின்றது.

மிகக் குறைந்த முக்கியத்துவம் (அ) முதன்மைநிலை கூட மிகுந்த மனத்தாழ்மையுடன் இணைக்கப் படாவிட்டால் ஆபத்தான கண்ணியாக மாறக்கூடும் எனும் விஷயத்தை அப்போஸ்தலர்கள் உணராதிருந்தார்கள். ஆனால் அதை கர்த்தர் உணர்ந்திருந்தார். எனவே தான் சீஷர்களுக்கு, குறிப்பாக பேதுருவுக்கு, சுயத்தை உயர்த்திக்கொள்வதற்கும் முன்னுரிமைக்கான லட்சியத்திற்கும் எதிரான எச்சரிக்கை அளிக்கப்பட்டது. இந்த எச்சரிக்கையின் பாடமானது ஒரு பொருத்தமான எடுத்துக்காட்டு மூலம் கற்பிக்கப்பட்டது, அவர்களுடைய ஆண்டவரும் போதகருமான இயேசுவே, அவர்களுடைய பாதங்களைக் கழுவும் மிகத் தாழ்மையான சேவையை அவர்களுக்காக செய்கிறார். (லூக்கா 22:1; லூக்கா 22:24; யோவான் 13:1; யோவான் 13:13–17 ஒப்பிடவும்.) இந்த எடுத்துக்காட்டோடு தம்முடைய சீஷர்களின் மனநிலை தேவபக்தியற்ற உலகத்தின் குணாதிசயங்களில் இருந்து எவ்வளவு வித்தியாசப்பட்டு இருக்க வேண்டும் என்பதை காட்டும் அறிவுரை வார்த்தைகளையும் அவர் சேர்த்தார். R3542, R1987

**மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல, அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல. நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்.**
**யோவான் 13:16–17.**

**நீங்கள் இஸ்ரவேல் சபையார் யாவரையும் நோக்கி: இந்த மாதம் பத்தாம் தேதியில் வீட்டுத் தலைவர்கள், வீட்டுக்கு ஒரு ஆட்டுக்குட்டியாக, ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ளக்கடவர்கள். அந்த ஆட்டுக்குட்டி பழுதற்றதும் ஆணும் ஒருவயதுள்ளதுமாய் இருக்கவேண்டும்; செம்மறியாடுகளிலாவது வெள்ளாடுகளிலாவது அதைத் தெரிந்துகொள்ளலாம்.**
**– யாத்திராகமம் 12:3,5 –**

“இதோ உன் இராஜா வருகிறார்” எனும் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றும் வண்ணமாகவும் மற்றும் அதே வேளையில் பஸ்கா **ஆட்டுக்குட்டியானது** அடிக்கப்படுவதற்கு ஐந்து நாட்களுக்கு முன்னதாக அது வீட்டிற்குள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற பஸ்கா நிழலிலுள்ள அம்சத்தினை நிறைவேற்றும் வண்ணமாகவும், இயேசு தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு ஐந்து நாட்களுக்கு முன்னதாக, கழுதையின்மேல் ஏறி, பட்டணத்திற்கு வந்தபோது, தாம் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாக அல்லது நிராகரிக்கப் படத்தக்கதாக தம்மை ஜனங்களுக்கு முன்வைத்தார். (மத்தேயு 21:4; யாத்திராகமம் 12:3) “பஸ்காபண்டிகை வர ஆறுநாளைக்கு முன்னே இயேசு பெத்தானியாவுக்கு வந்தார்...... மறுநாளிலே இயேசு எருசலேமுக்கு வருகிறாரென்று பண்டிகைக்கு வந்த திரளான ஜனங்கள் கேள்விப்பட்டு, அவரை சந்திக்க சென்றனர் என்று நாம் வாசிக்கிற பிரகாரமாக, பஸ்காவிற்கு ஐந்து நாட்களுக்கு முன்னதாக, இயேசு தம்மை இறுதியாக இஸ்ரயேல் ஜாதியாருக்கு (அ) வீட்டாருக்கு முன்வைத்தார் (யோவான் 12:1,12,13). அவர்களது இராஜா கழுதைக்குட்டியின் மீது ஏறி, அவர்களிடத்தில் வந்தார். அவரோ அவர்களுக்காகக் கண்ணீர்விட்டு, “இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும். கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும், இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள்” என்று கூறினார். (மத்தேயு 23:38,39)

முன்பு ஒருவரும் கடந்து செல்லாத இடுக்கமான வழியில், இயேசு தனிமையாகக் கடந்து செல்லுகையில்

நமக்கான முன்னோடியாகவும், தலைவராகவும் அவர் இவ்வழியில் தனிமையாகக் கடந்து செல்லுகையில், அவரது இருதயமானது, சில சமயங்களில், மரணத்திற்கு ஏதுவாக மிகவும் துக்கமடைந்ததில் ஆச்சரியமடை வதற்கு ஒன்றுமில்லை. “வேளை வந்தபோது, அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொன்னார்.” (லூக்கா 22:14-16) உண்மையான ஆட்டுக்குட்டி அன்றைய தினமே இன்னும் கொஞ்சம் நேரம் கழித்து அடிக்கப்படுவதன் மூலமாக எப்படி பஸ்காவின் காரியம் நிறைவேற ஆரம்பிக்கும் என்பதை சீஷர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென இயேசு ஆசையாயிருந்தார். R839

**குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்கள். அவர் உலகத்தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து, தமது மூலமாய் தேவன்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்காக இந்தக் கடைசி காலங்களில் வெளிப்பட்டார். – 1 பேதுரு 1:19-20**

**ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே.**
**– 1 கொரிந்தியர் 5:7 –**

நமது கர்த்தராகிய இயேசு தாம்தான் பஸ்கா ஆட்டுக்குட்டி என்று முழுமையாக அடையாளம் கண்டுகொண்டார். அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட அதே இராத்திரியில், சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னதாக, அவர் தம்முடைய சீஷர்களுடன் மேல்வீட்டறையில் கூடி, “நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன்” என்றார். அவர்கள் யூதர்களாக காணப்பட்டபடியால், நிழலான இப்பிரபஞ்சத்தின் அதிபதியிடமிருந்து நிழலான முதற்பேறானவர்கள் காப்பாற்றப்பட்டதற்காக அந்த இரவில் அவர்கள் பஸ்கா இராப்போஜனத்தைப் புசிப்பது அவசியமாயிருந்தது. மேலும் நிழலின் விஷயங்கள் நிறைவடைந்தவுடன், நமது கர்த்தர், பழையவைகளின்மீதே புதிய நினைவுகூருதலை ஏற்படுத்தி, “என்னை நினைவுகூரும்படி (பஸ்கா காலத்திற்கான நினைவுகூருதலை வருடந்தோறும்) இதைச் செய்யுங்கள்” என்றார். (1 கொரிந்தியர் 11:24-25) ஆனால் தன்னை தேவனுடைய திட்டத்தில் உலகத்தோற்றத்திற்கு முன்னே அடிக்கப்பட்ட தேவ ஆட்டுக்குட்டியாகவும், உலகின் இரட்சிப்பின் விலைக்கிரயமாக நான் எனது ஜீவனைக் கொடுக்கப்போவதையும் அறிந்த நீங்கள், மற்றவர்களால் உணரப்படாத விதத்தில், இந்தப் பஸ்கா காலத்தை சிறப்பானதாக, புனிதமானதாகக் கருதுவீர்கள். இதுமுதல் நீங்கள் இந்த நிழலை ஆசரிக்க மாட்டீர்கள் ஆனால் நிஜத்தை நினைவுகூருவீர்கள்; ஏனெனில் நான் தேவ ஆட்டுக்குட்டியாக மரிக்க இருக்கிறேன் என்ற விதத்தில் கூறினார். R5640

**அப்பொழுது, பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் ஜனத்தின் மூப்பரும், காய்பா என்னப்பட்ட பிரதான ஆசாரியனுடைய அரமனையிலே கூடிவந்து, இயேசுவைத் தந்திரமாய்ப் பிடித்துக் கொலைசெய்யும்படி ஆலோசனைபண்ணினார்கள்.**
**– மத்தேயு 26:3-4 –**

நமது கர்த்தர் ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கப்பட்டபோது காய்பா என்பவன் பிரதான ஆசாரியனின் ஸ்தானத்தில் காணப்பட்டான். இந்தக் காய்பா என்பவன்தான் “ஜனங்களெல்லாரும் கெட்டுப் போகாதபடிக்கு ஒரே மனுஷன் ஜனங்களுக்காக மரிப்பது நமக்கு நலமாயிருக்கும்” என்று முன்கூட்டியே அறிவித்தவனாகவும் இருந்தான். மேலும் இவ்விஷயமானது தேவன் எப்படி சில சமயம் பொல்லாத மனுஷர்களின் எண்ணங்கள்

மற்றும் நோக்கங்களைப் பயன்படுத்தி ஆழமான தீர்க்கதரிசன சத்தியங்களை வெளிப்படுத்துகின்றார் என்பதற்கு உதாரணமாகவும் அமைகின்றது. (யோவான் 11:50; 18:14). நாசரேத்து ஊரைச் சேர்ந்த இயேசுவின் மீதான ஜனங்களின் பிரியம் வளர்ந்துகொண்டுவருவதைக் காய்பா உணர்ந்துகொண்டவனாகக் காணப்பட்டான். உபதேசத்திலும் சரி, வாதம் பண்ணுவதிலும் சரி, இயேசுவுக்கு முன்பு, மிகவும் கற்றுத்தேர்ந்த பரிசேயர்களும், வேதபாரகர்களும் கூட நிகராக நிற்கமுடியவில்லை என்றும் காய்பா உணர்ந்துகொண்டவனாகக் காணப்பட்டான். இன்னுமாக, இயேசுவின் போதனைகள் காய்பாவினுடையதற்கும், யூதா மார்க்கத்தின் பொதுவான பாரம்பரிய நம்பிக்கைகளுக்கும் மிகவும் எதிராகக் காணப்பட்டபடியால், இயேசுவின் போதனைகள் ஏற்றுக்கொள்ளப்படுவது என்பது மதரீதியான புரட்சிக்கு நேராக வழி வகுத்துவிடும் என்றும் காய்பா உணர்ந்துகொண்டவனாகக் காணப்பட்டான். இப்படியாக, புரட்சி நடக்கும் பட்சத்தில் உரோமர்களுக்கு முன்பு தங்கள்தேசத்திற்குக் காணப்படும் மரியாதை போய்விடும் என்றும், ஒப்பந்தத்தின்படி தங்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டுள்ள சகல உரிமைகளும், சிலாக்கியங்களும்கூட ரத்து செய்துவிடப்படும் என்றும் காய்பா உணர்ந்துகொண்டான். காய்பாவைப் பொறுத்தமட்டில் அவனுடைய மனதில் இயேசுவுக்கான தீர்ப்பை அவன் ஏற்கெனவே நிர்ணயித்துக்கொண்டான். மேலும், அதை செயல்படுத்த, அதாவது இயேசுவைக் கொலை செய்வதற்கான வாய்ப்பை மாத்திரம் வகைதேடிக் கொண்டிருந்தவனாகக் காணப்பட்டான்.

**காய்பா வெளிவேஷமாகவும், பெயரளவில் பயபக்தியுள்ள மனுஷனாக/மதவாதியாகவும் இருந்தபடியினாலும், நீதிக்குப் பிரதிநிதியாகவும் காணப்பட்டப்படியினாலும் அவன் இயேசுவின் மரணத்தை, கொலையை நீதியின் செயல்பாடு எனும் தோற்றத்தில், பொது ஜனங்களின் நன்மைக்கு அவசியம் எனக் காட்ட வேண்டிய கட்டாயத்தில் காணப்பட்டான்.**



இயேசுவுக்கு எதிரான கூட்டத்தாருக்கு காய்பாவே கலகத் தலைவனாக இருந்திருக்க வேண்டும். காய்பாவும், அவனுடைய கூட்டத்தாருமே யூதாசிடம் பேரம் பேசினார்கள். இன்னுமாக, ஜனங்களால் சூழப்படாமல் தனிமையில் இயேசு இரவில் காணப்படுகையில், அவரைக் கைது செய்யத்தக்கதாக, யூதாசுடன் காய்பாவின் உடன் ஆசாரியர்களும், அவனுடைய அலுவலர்களும், அவனுடைய சேவகர்களுமே அனுப்பி வைக்கப்பட்டார்கள். இன்னுமாக, காய்பாவின் கட்டளைப்படியே நமது கர்த்தர் அவனுடைய மாமனாகிய அன்னாவிடம் முதலாவதாகக் கூட்டிச்செல்லப்பட்டிருக்க வேண்டும் என்றும் நாம் அனுமானிக்கின்றோம். காய்பாவின் மாமனாகிய அன்னா என்பவன், யூதர்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்கையுடைய மனுஷனாக

இருந்தான். இந்த அன்னா என்பவன், காய்பா பிரதான ஆசாரியனாகுவதற்கு முன்பு பிரதான ஆசாரியனாகக் காணப்பட்டான்.

இயேசு தம்முடைய மேசியாத்துவத்தைக் குறித்துத் தெரிவித்ததாக தன்னிச்சையாக சொல்லப்பட்டது என்பதில் ஐயமில்லை; சுவிசேஷப் பதிவுகளை வைத்துப் பார்க்கும்போது, பொது ஜனங்கள் மத்தியிலும், தம்முடைய தெரிந்துகொள்ளப்பட்ட பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் மத்தியிலும்கூட, அவர் தம்மை வெளிப்படையாக மேசியா என்று அறிவிக்கவுமில்லை மற்றும் தம்முடைய வார்த்தைகளை மிகவும் காத்து அடக்கிக் கொண்டவராகவும் இருந்தார். பேதுருவோ முதலாவதாக, "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து (மேசியா)" என்று அறிக்கைப் பண்ணினார். இதற்கு இயேசு, பேதுரு உண்மையைச் சொன்னார் என்றும், இப்படிச் சொல்லுவதற்கு பேதுரு பரிசுத்த ஆவியினால் வழி நடத்தப்பட்டுள்ளார் என்றும் ஒப்புக்கொள்ள மாத்திரமே செய்தார். ஆகவே, மேசியா தொடர்பான விஷயத்தில் காய்பா சாட்சியாளர்களைத் தேடினபோது, திருப்திகரமான சாட்சி அளிக்கக்கூடிய எவரையும் அவனால் கண்டுபிடிக்க இயலாமல் போயிற்று. முக்கியமான சாட்சி ஒன்றைத் தன்னால் கூற முடியும் என்று எண்ணி முன் வந்த ஒரு சாட்சியாளர், ஆலயம் தொடர்பான நமது கர்த்தருடைய வார்த்தைகளைத் தவறாய்த் திரித்து, சில காரியங்களைக் கூறினார். ஆனால், இந்த சாட்சியை உறுதி செய்துகொள்வதற்கு இரண்டாம் சாட்சியாளரை அவர்கள் தேடினபோது, முதலாம் சாட்சியாளர் சொன்ன அதே காரியங்களை சாட்சியளிக்க நபர் இல்லாமல் போயிற்று. இப்படிப்பட்ட விசாரணைகளில் குறைந்தபட்சம் இரண்டு சாட்சியாளர்களாகிலும் இருக்க வேண்டும் என்பது யூதர்களின் பிரமாணமாக இருந்தது. R2780

## அவர்கள் போஜனம்பண்ணுகையில், அவர்: உங்களிலொருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

**– மத்தேயு 26:21 –**

அவர்கள் இராப்போஜனத்தின்போது காணப்படுகையில், மிகவும் துக்கங்கொண்டவராக இயேசு, தம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட 12 பேரில் ஒருவன்தான் தம்மைக் காட்டிக்கொடுப்பான் என்றும், இப்படியாக தம்முடைய மரணத்திற்குத் துணை கருவியாக ஆகப்போகிறான் என்றும் விவரித்தார். அதாவது இதே இராப்போஜனத்தில், இதே அப்பத்தில், இதே சுடப்பட்ட ஆட்டுக்குட்டியின் மாம்சத்தில் தம்முடன் கூடப் புசிக்கிறவனும், தம்முடன் கூடத் தாலத்தில் கையிடுகிறவனே தம்மைக்காட்டிக்கொடுத்து, தம்முடைய மரணத்திற்குத் துணையாகப் போகிறான் என்று விவரித்தார். இவைகள் அனைத்தும் எழுதப்பட்டிருந்தாலும், தெய்வீகத் திட்டம் தொடர்பான எந்த காரியங்களிலும், எவ்விதமான மாற்றமில்லாமல் இருந்தாலும், இப்படியாகத் தம்மைக் காட்டிக்கொடுத்து, தம்முடைய மரணத்திற்குத் துணையாகிறது என்பது, தோழமையின் மிக மோசமான மீறலைக் குறிக்கின்றதாய் இருக்கும். அதாவது எண்ணுவதற்கே வேதனையானதாக இருக்குமென்று சுட்டிக்காட்டினார். காட்டிக்கொடுக்கப்படாமலேயே அவர் அதிகாரிகளால் கைது செய்யப்படுவதாய் இருந்தாலும் அல்லது முன் பின் தெரியாத நபர் மூலமாகவோ அல்லது ஒரு சீஷன் வாயிலாகவோ அவர் காட்டிக்கொடுக்கப்பட்டு அதிகாரிகளால் கைது செய்யப்படுவதாய் இருந்தாலும், இது கர்த்தருடைய நோக்கம் மற்றும் அர்ப்பணிப்பைப் பொறுத்தமட்டில் அவருக்கு ஒன்றும் வித்தியாசமாகக் காணப்படப்போவதில்லை; அதாவது இது தெய்வீக ஏற்பாட்டில் எவ்விதமான மாற்றத்தையும் ஏற்படுத்தப்போவதில்லை. எனினும் அவரைக் காட்டிக்கொடுப்பவர் அவருடைய உயிர் நண்பனாகவும், சீஷனாகவும் இருப்பதுதான் மிகுந்த துக்கத்திற்கான காரணமாகும். இதை நமது கர்த்தர் கூறினபோது அவர் "ஆவியில் கலங்கினதாக," உணர்வினை வெளிப்படுத்தினதாக யோவான் நமக்குத் தெரிவிக்கின்றார். தம்முடைய மரணம் தொடர்புடையதான உண்மைகளையும், விவரங்களையும் அவர் முன்னமே அறிந்திருந்தபடியால் அவர் காட்டிக்கொடுக்கப்படுகிற காரியமானது, அவரது இந்த மன உணர்விற்குக் காரணமாய் இருந்திருக்காது என்பதில் நமக்கு நிச்சயமே. அவரது துக்கத்திற்கானக் காரணமானது, தம்மால் மிகவும் பரிவோடு காக்கப்பட்டவர்களிலும், பராமரிக்கப்பட்டவர்களிலும் ஒருவன் இப்பொழுது நன்றியற்றவனாகவும், பரிசுத்தமற்றவனாகவும் போவதுகுறித்த சிந்தனையேயாகும் என நாம் நியாயமாய் அனுமானிக்கின்றோம்; அவரது துக்கம் யூதாசுக்காகவே என்பது உறுதியே. R2771& R3363

**என் பிராணசிநேகிதனும், நான் நம்பினவனும், என் அப்பம் புசித்தவனுமாகிய மனுஷனும், என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்.**
**– சங்கீதம் 41:9**

**அப்பொழுது, அவர்கள் மிகவும் துக்கமடைந்து, அவரை நோக்கி: ஆண்டவரே, நானோ, நானோ? என்று ஒவ்வொருவராய்க் கேட்கத்தொடங்கினார்கள்.**
**– மத்தேயு 26:22 –**

இப்படிப்பட்ட (யூதாசைப்போன்று) ஒரு குணத்தை வெறுத்து, இழிவாய்க் கருதி, அருவருப்பாகக் கருதி, இதற்கு எதிர்மாறாக நம்மால் முடிந்த மட்டும் நம்முடைய குணலட்சணங்களைக் கொண்டிருக்க நாடுகின்ற அதே வேளையில், யூதாசைப்போன்று கர்த்தரை அன்புகூருகின்றேன் என்று கூறியும், அவரை விற்றுப்போட்டு, காட்டிக்கொடுக்கின்ற இதே மாதிரியான குற்றத்தைப் (குறைந்த அளவில்) புரிகின்றவர்கள் அநேகர் கர்த்தருடைய சீஷர்கள் மத்தியில் காணப்படுவார்கள் என்ற உண்மையையும் நாம் பார்க்கத் தவறிவிடக்கூடாது. இந்தத் தவறு சொல்லர்த்தமான விதத்தில் இன்று செய்யப்பட முடியாது என்பது உண்மைதான்; எனினும் இதன் ஆவியை அவ்வப்போது பார்க்கலாம் என்பதை வேதனையுடன் நாம் தெரிவிக்கின்றோம்; யூதாஸ் காணப்பட்டது போன்று, இயேசுவை உண்மையாய் விசுவாசிக்கின்ற சிலர், அவருடைய பின்னடியார்களெனத் தங்களை அர்ப்பணம் பண்ணியுள்ள சிலர், அவருடைய சத்தியத்தின் ஊழியத்தில் தங்களை ஈடுபடுத்தியுள்ள சிலர், ஒரு பானைக் கூழுக்காக, அதாவது இந்தத் தற்கால ஜீவியத்திற்கான நன்மைகளுக்காக, சம்பளத்திற்காக, சமுதாயத்தின் அந்தஸ்திற்காக, மனுஷர் மத்தியிலான கனத்திற்காக, பிரபலம் அடைவதற்காக, பட்டங்களை பெற்றுக் கொள்வதற்காக, கர்த்தரை விற்றுப்போடுவதற்கு விரும்புகின்றனர்; யூதாசைப் போன்று தங்களுடைய உதடுகளைக்கூட விற்றுப்போடுவதற்கு விரும்புகின்றனர்; ஆகவே கர்த்தரைக் கனப்படுத்துகின்றோம் என்றும், கர்த்தருக்காக ஊழியம் புரிகின்றோம் என்றும் அறிக்கைப் பண்ணிக்கொண்டிருந்தும், தேவனுடைய குணலட்சணத்தையும், அவருடைய திட்டத்தையும், அவருடைய வார்த்தைகளையும் தவறாய்க் காட்டுகின்றவர்களுடன் சேர்ந்துகொள்ள விரும்புகின்றனர். கர்த்தரைக் கொலை செய்ய நாடுபவர்களுடன் சேர்ந்து களிகூர விரும்புகின்றனர். ஆ! இராப்போஜனத்தின்போது, “ஆண்டவரே நானோ?” என்று எழுப்பப்பட்டக் கேள்வியை ஒவ்வொருவரும் தனக்குத்தானே கேட்டுக்கொள்வது எவ்வளவு நலமாயிருக்கும்; இன்னுமாக எவனும் தன்னைத்தான் மன்னித்துக்கொள்ளும் விஷயத்தில் மிகவும் துரிதமாய் இல்லாமல் இருப்பானாக; ஆனால் ஒவ்வொருவனும் தான் எந்தவிதத்திலாகிலும், சத்தியத்தையும், ஜீவியத்தையும் எதற்காகவும் விற்றுப்போட்டுவிடாதபடிக்கு, தன்னுடைய சொந்த இருதயத்தையும், ஜீவியத்தையும், நடத்தையையும் உண்மையாய் ஆராய்ந்து தேடிப்பார்ப்பானாக. R2778

**இயேசு பிரதியுத்தரமாக: நான் இந்தத் துணிக்கையைத் தோய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ, அவன்தான் என்று சொல்லி, துணிக்கையைத் தோய்த்து, சீமோன் குமாரனாகிய யூதாஸ்காரியோத்துக்குக் கொடுத்தார். அந்தத் துணிக்கையை அவன் வாங்கினபின்பு, சாத்தான் அவனுக்குள் புகுந்தான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி: நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய் என்றார். அவன் அந்தத் துணிக்கையை வாங்கினவுடனே புறப்பட்டுப்போனான், அப்பொழுது இராக்காலமாயிருந்தது.**
**யோவான் 13:26–27,30**

**பிள்ளைகளே, இன்னும் கொஞ்சக்காலம் நான் உங்களுடனேக்கூட இருப்பேன், நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ஆனாலும் நான் போகிற இடத்துக்கு நீங்கள் வரக்கூடாதென்று நான் யூதரோடே சொன்னதுபோல இப்பொழுது உங்களோடும் சொல்லுகிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள், நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். – யோவான் 13:33–34**

தேவதூதர்களுக்கும், மனுக்குலத்திற்கும், கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தக்கூடிய நியாயப் பிரமாணத்தின் ஆவியைப் பற்றி பேசுகையில், இயேசு அதை இரண்டு கட்டளைகளில் சுருக்கமாக விளக்கினார். அவற்றில் முதலாவது, "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு பலத்தோடும் அன்புகூருவாயாக". இரண்டாவது, "உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக"என்பதாகும்.

நீதிக்குத் தேவையான அனைத்தையும், இயேசுவால் வகைப்படுத்தப்பட்ட இந்த இரண்டு கட்டளைகள் உட்கொண்டிருப்பதாக முதலில் தோன்றும், உண்மையில் அப்படியாகவே இருந்தன. இந்த இரண்டு கட்டளைகளில் உள்ளதைத் தவிர நீதிக்கு வேறொன்றும் தேவையில்லை. பிறகு ஏன் இயேசு தெய்வீக சட்டம் கோரும் எதற்கும் மேலான மற்றொரு புதிய மூன்றாவது கட்டளையை கொடுத்தார்? இந்த மூன்றாவது கட்டளை இயேசுவின் சீஷர்களாக மாறுபவர்களைத் தவிர வேறு யாருக்கும் பொருந்தாது என்று நாங்கள் பதிலளிக் கிறோம். இந்த மூன்றாவது கட்டளையை பிதா இயேசுவின் மீது சுமத்தவில்லை; அவர் தாமாகவே முன்வந்து இந்த நிபந்தனைகளை தம்மேல் ஏற்றிக்கொண்டு, மேலும் எந்தவொரு சட்டமும் நியாயமாக கோர முடியாத ஒரு விஷயமாயிருக்கும் தனது ஜீவனையே பலியாக செலுத்திவிட்டார். இக்காரியத்தை ஏசுவுக்கு ஒரு கட்டளை யெனும் விதத்தில் கொடுத்து அதை அவர் செய்யவேண்டும் என்று பிதா கோராமல்; மாறாக பலியின் உடன் படிக்கைக்குள் நுழையும் பரிசுத்தவானுக்கு கனம், மகிமை, அழியாமை, தெய்வீக சுபாவம் மற்றும் மேசியாவின் இராஜ்ஜியம் ஆகியவற்றை அவர் வாக்குத்தத்தம் பண்ணியுள்ளார் எனும் விதத்தில் தான் கோரினார்.

நம்முடைய கர்த்தரால் [இங்கே கொடுக்கப்பட்ட] புதிய கட்டளை பிதாவின் கட்டளை அல்ல, மாறாக கிறிஸ்துவின் பள்ளியில் நுழைந்து, அபிஷேகிக்கப்பட்டவர்களின் "உறுப்பினர்களாக", அதாவது புதிய யுகத்தின் மத்தியஸ்தரின், தீர்க்கதரிசியின், ஆசாரியரின் மற்றும் ராஜாவின் அங்கங்களாக ஆக விரும்பும் அனைவருக்கும் நமது தலை மற்றும் போதகரின் கட்டளை. நீதி இந்த புதிய கட்டளையை வழங்க முடியாது: நீதி கட்டளையிடக்கூடிய அனைத்தும் இஸ்ரேலுக்கு கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்திலேயே வெளிப்படுத்தப் பட்டுள்ளன. அதாவது, தேவன் மீது உயர்ந்த அன்பு மற்றும் தன்னைப்போலவே தன் அயலானையும் அன்பு கூறவேண்டும் என்ற பிரமாணங்களிலேயே வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கர்த்தர் கொடுத்த இந்த புதிய கட்டளை இந்த சுவிசேஷ யுகத்தின் திருச்சபைக்கு மட்டுமே பொருந்தும். உண்மையில் இது என்னவென்றால்: நீங்கள் என்னுடைய சீஷர்களாக இருந்தால், என்னுடைய சிங்காசனத்தையும், மகிமையையும், அழியாமையையும் நீங்கள் பகிர்ந்துகொள்ள விரும்பினால், உங்களிடம் என்னுடைய ஆவி இருக்க வேண்டும். நீங்கள் நியாயப்பிரமாணத்தை விட அதிகமாக செய்ய வேண்டும். நீதியை விட நீங்கள் அதிகமாக இருக்க வேண்டும். நீங்கள் சுயத்தை பலி செலுத்தக் கூடியவர்களாய் இருக்கவேண்டும். நீங்கள் என் மகிமையை பகிர்ந்து கொள்ள விரும்பினால், நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்புகூருங்கள் என்று கட்டளையிடுகிறேன். (யோவான் 15:12) உங்களுக்காக என் ஜீவனையே தியாகம் செய்யும் அளவுக்கு நான் உங்களை நேசித்தேன். நீங்கள் இதே ஆவியை உடையவராக இருக்க வேண்டும் மற்றும் சுயத்தை பலியிடுவதில் என்னுடன் சேர வேண்டும்; இல்லையெனில், நீங்கள் என் சீஷர்களாக இருக்க முடியாது, என் மகிமையில் பங்கு கொள்ள முடியாது, மற்றும் இஸ்ரயேல் மற்றும் மனக்குலத்தின் ஆசிர்வாதத்திற்காக மத்தியஸ்தராக எனது பணியில் பங்கேற்க முடியாது. ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னை பின்பற்ற கடவன். நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் சீஷனும் இருப்பான். என்னுடைய சீஷர்கள் என்னுடன் மரிக்க வேண்டும் என்கின்ற இரட்சகரின் வார்த்தையின் அர்த்தத்தை நிச்சயமாக எவரும் சந்தேகிக்க முடியாது. R5947 & R4549

**சீமோன்பேதுரு அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் எங்கே போகிறீர் என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் போகிற இடத்துக்கு இப்பொழுது நீ என் பின்னே வரக்கூடாது, பிற்பாடு என் பின்னே வருவாய் என்றார். பேதுரு அவரை நோக்கி: ஆண்டவரே, நான் இப்பொழுது உமக்குப் பின்னே ஏன் வரக்கூடாது? உமக்காக என் ஜீவனையும் கொடுப்பேன் என்றான்.**

**– யோவான் 13:36–37 –**

பேதுரு, மற்றவர்களை விட சற்று தன்னை உயர்தினவராகவும் தன்னம்பிக்கை கொண்டவராகவும் உணரும்போது, சில மணிநேரங்களில் எவ்வளவு பெரிய சோதனை அவரது குணாதிசயத்தை சோதிக்கும் என்பதை சற்று, குறைவாகவே அறிந்தவராக இருந்தார். மற்ற சீஷர்களும் தாங்கள் இருந்த முக்கியமான சூழ்நிலையின் தீவிரம் புரிந்துகொள்ளவில்லை. ஆனால் கர்த்தரோ அதை முழுமையாக உணர்ந்து, அதற்கு அவர்களை தயார்படுத்த முயற்சி செய்தார்.

**சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளக்கினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார். – லூக்கா 22:31–32**

மற்ற சகோதரர்களுக்கும் பலபடுத்தபடுதல் தேவையாகவே இருந்தது மற்றும் பேதுருவின் நம்பிக்கை மற்றும் தீவிர பக்தி மற்றும் வழிநடத்தக் கூடியதான குணாதிசயங்கள் அவர்களுக்கு சிறந்த ஊழியமாக அல்லது சேவையாக இருக்கும். ஆனால் பேதுரு சரியான இருதய நிலைமைக்குள் முதலாவதாக வராதவரையிலும், அவரால் மற்றவர்களுக்கு ஊழியம் செய்ய முடியாது. மேலும் பேதுரு இன்னும் தன்னுடைய பலவீனத்தையும் தேவையையும் அறியாமல், உணராமல் அன்பான விசுவாசத்தால் நிறைந்து கர்த்தரிடம் இவ்வாறு பதிலளித்தார்:

**“ஆண்டவரே, காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றிவர, ஆயத்தமாயிருக்கிறேன் என்றான்.”**

இயேசு அவருடைய (பேதுரு) பலவீனத்தை அறிந்து, அவர் அவனை நோக்கி:

**“பேதுருவே, இன்றைக்குச் சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை அறிந்திருக்கிறதை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.”**

அது அப்படியாகவே நடந்தது. சோதனை மிகவும் பெரியதாக இருந்ததால், சீஷர்கள் எல்லாரும் கலங்கி கர்த்தரிடத்தில் அன்பாயிருந்தும், பயந்ததினால் அவரை விட்டு ஓடி போனார்கள் (மத்.26:56); பேதுரு இயேசுவை விட்டு விலக மனதில்லாமல், தூரத்திலிருந்து பின்தொடர்ந்தார். ஆனால் கொஞ்சம் கொஞ்சமாக அவரது பயம் அவரது பக்தியை வென்றுவிட்டது. அதனால் அவரை நான் அறியேன் என்று வெளிப்படையாக மறுதலித்தார்.

கர்த்தரின் ஜெபமும் எச்சரிப்பும் பேதுருவுக்கு எவ்வளவு தேவைப்பட்டதையும், அவர் தேவையை கர்த்தர் எவ்வளவு கிருபையுடன் கவனித்தார் என்பதையும் எளிதில் புரிந்துகொள்ளலாம்! பேதுருவின் பிழையும் அவரது தேவையும் மட்டுமல்லாமல், அனைத்து சீஷர்களின் தேவைகளையும் நாம் இவ்வாறு சிந்திக்கும் போது, நமது சொந்த தேவைகளை மறந்துவிடக் கூடாது. ஏனெனில், நாமும் இதே போன்ற உணர்ச்சிகளைக் கொண்ட மனிதர்களே. சிறிய உயர்வு, ஒரு சிறிய வெற்றி, சிறிய பாராட்டு அல்லது முன்னுரிமை கூட, இருதயத்தில் தற்பெருமையை வளர்க்கும் வாய்ப்பாக மாறிவிடுகிறது. இதுவே பிறருக்குத் தகுதியற்ற தற்பெருமை, பூரிப்பு மற்றும் சுய உயர்வாக மற்றவர்களுக்கு வெளிப்படுகிறது. “உன் வலது கை செய்வதை உனது இடது கை அறியாதே” என்ற ஏவப்பட்ட (inspired) போதனையை எப்போதும் நினைவில் வைத்துக் கொண்டு, ஜெபத்தின் மூலமும் தாழ்மையான மற்றும் நிதானமான சிந்தனையை வளர்ப்பதின் மூலமும், இப்போக்குகளுக்கு எதிராக

நம்மைக் காக்க வேண்டும். மேலும், அப்போஸ்தலர்களுடன் சேர்ந்து, நம்முடைய மகிழ்ச்சி இதுவாக இருக்கட்டும்: "மாம்சத்திற்கேற்ற ஞானத்தோடே நடவாமல் [சுயத்தின்மேல் சார்ந்து, தனக்குத்தானே பாராட்டை தேடுகிற இந்த உலகத்தின் ஞானம்], தேவனுடைய கிருபையினால் நாங்கள் உலகத்திலேயும், விசேஷமாக உங்களிடத்திலேயும், கபடமில்லாமல் திவ்விய உண்மையோடே நடந்தோமென்று, எங்கள் மனது எங்களுக்குச் சொல்லுஞ் சாட்சியே எங்கள் புகழ்ச்சியாயிருக்கிறது". 2 கொரி 1:12. R1987

**அப்பொழுது, இயேசு அவர்களை நோக்கி: மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் என்று எழுதியிருக்கிறபடி, இந்த இராத்திரியிலே நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள்.**
**–மத்தேயு 26:31–**

## அவர்கள் போஜனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார்.

**– மத்தேயு 26:26 –**

வழக்கமான யூதருடைய பஸ்கா இராப்போஜனம் முடிவடைந்த பிற்பாடே, மீதியிருந்த புளிப்பில்லாத அப்பத்தில் சிலவற்றை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப் பிட்டு, தம்முடைய சீஷர்களிடத்தில் கொடுத்துக் கூறினதாவது: "வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்." (மத்தேயு 26:26; மாற்கு 14:22; லூக்கா 22:19)

நமது கர்த்தருடைய வார்த்தைகளை அதற்கே உரிய எளிமையிலும், தெளிவிலும் பார்க்கும்போது, அதன் பாடங்கள் எத்துணை அருமையாயிருக்கின்றது. புளிப்பில்லாத (தூய) அப்பமானது, இந்த நினைவுகூருதலின்போது – நாம் புசித்து, நித்திய ஜீவனை அடைவதற்கு ஏதுவாக, பரலோகத்திலிருந்து இறங்கி வந்ததான அப்பம் நமது கர்த்தரை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. அடுத்த கருத்தென்னவெனில், பரலோகத்திலிருந்து அருளப்பட்டதான இந்த "அப்பமானது," நம்முடையதாக்கிக்கொள்ளப்படுவதற்கெனப் "பிட்கப்பட" வேண்டும். ஆகையால் நமது கர்த்தர் பரலோகத்திலிருந்து "அப்பமாக" இறங்கிவருவது மாத்திரமல்லாமல், அவர் மரணத்தில் பிட்கப்பட வேண்டியதும் – நம்முடைய பாவங்களுக்காகப் பலிச் செலுத்தப்படுவதும் அவசியமாய் உள்ளது என்று நாம் பார்க்கின்றோம் – அவர் பிட்கப்பட்டால்தான், நாம் அவரது புண்ணியத்தினை நம்முடையதாக்கிக் கொண்டு, நித்திய ஜீவனை அனுபவிக்கமுடியும்.

ஆயிரவருட யுகத்தின்போது உலகமானது கிரியையினாலும், கீழ்ப்படிதலினாலும் நீதிமானாக்கப் படுவதற்கு முன்னதாக, இந்த சுவிசேஷயுகத்தின்போது சபையை விசுவாசத்தினால் நீதிமான்களாக்குவதிலுள்ள தேவனுடைய நோக்கமானது, இப்பொழுது காண்கிறவர்களும், கேட்கிறவர்களும், மனிதனுக்காக அன்பானது ஏறெடுத்துள்ளதான மாபெரும் பலியை இப்பொழுது உணர்ந்துகொள்பவர்களுமான இந்த வகுப்பார், தங்கள் சரீரங்களை ஜீவ பலியாக ஒப்புக்கொடுப்பதற்கும், மற்றும் இவ்விதமாய்க் கர்த்தர் இயேசுவோடுகூட, அவரது சரீரத்தின் அங்கத்தினர்களென அவரது பலியில் பங்கடைவதற்கும் அனுமதிக்கப்படுவதற்கேயாகும். நினைவுகூருதலுக்கான இந்த ஆழமான மற்றும் கூடுதலான அர்த்தத்தினை அவர் வெளிப்படையாய்க் குறிப்பிடவில்லை. இது "இன்னும் அநேக காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்தி ற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" என்று அவர் குறிப்பிட்டவைகளில் ஒன்றாயிருக்கும் என்பதில் ஐயமில்லை (யோவான் 16:12, 13).

சத்தியத்தின் ஆவியானது அப்போஸ்தலனாகிய பவுல் வாயிலாகப் பேசி, நினைவுகூருதலின் இந்த

இரண்டாம் மற்றும் மிக உயர்வான அர்த்தத்தினைத் தெளிவாய் விவரிக்கின்றது; ஏனெனில் அர்ப்பணித்துள்ள சபைக்கு அவர் எழுதுகையில் அவர், “கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா!” (1 கொரிந்தியர் 10:16 திருவிவிலியம்); அதாவது கிறிஸ்து தம்முடைய உண்மைக்கான பலனாகப் பெற்றுக்கொண்டதான மகிமையில், நாமும் அவரோடுகூடப் பங்காளிகளாகக் கருதப்படத்தக்கதாக, உடன் பலிச்செலுத்துபவர்களெனக் கிறிஸ்துவோடுகூட உள்ள மரணம் வரையிலுமான நம்முடைய பங்குகொள்ளுதலாய் இருக்கிறதல்லவா? – “ஏனெனில் அநேகரான நாம் ஒரே அப்பமும், ஒரே சரீரமுமாய் இருக்கிறோம்” என்று கூறுகின்றார் (1 கொரிந்தியர் 10:16,17). R3526 & R2771

**இந்த ஈர்க்கக்கூடிய கட்டளையினுடைய இரண்டு கண்ணோட்டங்களும் மிகவும் முக்கியமானவைகளாகும்; நமது கர்த்தருடைய பலியின் மூலமான நமது நீதிமானாக்கப்படுதலை, நாம் முதலாவதாகப் பார்ப்பது அவசியமாயிருக்கின்றது. முழுகிறிஸ்து, தெய்வீக கண்ணோட்டத்தின்படி இயேசுவைத் தலையாகப் பெற்றுள்ளதான, அநேக அங்கத்தினர்களையுடைய ஒரு சரீரமாக இருக்கின்றது என்றும், இந்த சபை முழுவதும் பிட்கப்பட வேண்டுமென்றும், அதன் அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் கர்த்தர் இயேசுவின் சாயலாக வேண்டுமென்றும் மற்றும் அவரது பலியின் அடிச்சுவடுகளில் நடக்க வேண்டுமென்றும் நாம் உணர்ந்துகொள்வதும் ஏற்றக் காரியமாயிருக்கின்றது. (1 கொரிந்தியர் 12:12–14). R2771**

**பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள், இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது.**

**– மத்தேயு 26:27–28 –**



நமது கர்த்தருடைய அன்பான பலிக்கான இந்த நினைவுகூருதலின் ஒரு பாகமாக, “திராட்சப்பழரசம்” (fruit of the vine) அடுத்து அறிமுகப்படுத்தப் படுகின்றது. இது தம்முடைய இரத்தத்தை – “பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தத்தை” அடையாளப்படுத்துகின்றது என்று விவரித்தார். (மத்தேயு 26:28) இது உலகத்தின் பாவங்களுக்காகக் கொடுக்கப்பட்டதான ஈடுபலி விலைக்கிரயத்திற்கும் அதன் அவசியத்திற்கும் எத்தகையதொரு நினைவுகூருதலாய் உள்ளது. பிட்கப்பட்ட அப்பமானது ஒருபகுதி பாடத்தினைக் கற்றுத்தந்தது; “பாத்திரமானது” மீதியான பாடத்தினைக் கற்றுத்தந்தது. தேவனிடத்திற்கும், அவருடைய தயவினிடத்திற்கும் திரும்பிடுவதற்கு நமக்கு போஷாக்கும், பலமும், உதவியும் மாத்திரம் அவசியமாயிராமல், நமக்கு விலையேறப்பெற்ற இரத்தமும் அவசியமாயுள்ளது – நீதியினுடைய ஆக்கினைத் தீர்ப்பினின்று நம்மை விடுவிக்கத்தக்கதாக நமக்கான மீட்பின் கிரயமாக நமது கர்த்தருடைய ஜீவன் அவசியமாயுள்ளது. கர்த்தருடைய சீஷர்கள் விசுவாசத்தினால் “அப்பத்திலும்,” “பாத்திரத்திலும்” பங்குகொள்ள வேண்டும் (தங்களுடையதாக்கிக் கொள்ள வேண்டும்) இல்லையேல் அவர்களால் அவரோடுகூட ஒன்றாய்க் காணப்பட முடியாது.

நமது கர்த்தர் தனது பலியின் பாடுகளைக் குறித்துப் பேசிக்கொண்டிருக்கையில், அவற்றை தனது “பாத்திரம்” என்று குறிப்பிட்டார். அவரது மரணத்தின் நினைவுகூருதலான அந்த கடைசி இராபோஜனத்தில் அவர் அந்த பாத்திரத்தை அடையாளமாகக் குறிப்பிட்டு “நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது” என்று கூறினார். (மத் 26:27–28) நம்முடைய கர்த்தரின் மரணத்தையும், அவருடைய பூமிக்குரிய உரிமைகளை நம்முடைய கர்த்தர் பலியாய் செலுத்தியதையும் அடையாளப்படுத்திய அந்த பாத்திரமே, புதிய உடன்படிக்கையை முத்திரையிடுவதற்கு போதுமானதாக இருந்தது. அப்போஸ்தலர்களையோ, அல்லது நம்மையோ, அல்லது வேறுயாரிடமோ, தம்முடைய சீஷர்களாக மாறவும், அவருடைய பாடுகளைப் பகிர்ந்து கொள்ளவும், அவருடைய பாத்திரத்தை பகிர்ந்துகொள்ளவும், அவருடைய மகிமை, கனம் மற்றும் அழியா தன்மையின் வெகுமதிகளை பகிர்ந்து கொள்ளவும் அவர் கேட்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் அவர் அந்தப் பாத்திரத்தை கடந்து போக (passed) அனுமதித்தார். அதாவது அவரது புண்ணியத்தை நமக்கு வழங்கினார் (passed); அல்லது அவருடைய பலியின் புண்ணியத்தை அவருடைய சீஷர்களும் பின்னடியார்களுமான நமது மூலம் கடந்து செல்லச்செய்கிறார் (passed). இது தெய்வீக திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்ததால் அவர் இதைச் செய்தார்; ஏனெனில், பரிசுத்த பேதுரு அறிவித்தபடி “நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவன் நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்.” இயேசுவை முன்னறிந்தவர் இயேசுவின் மூலம் நம்மையும் முன்னறிந்திருந்தார். இது தெய்வீகத் திட்டத்தில் ஒரு மாற்றத்தைக் குறிக்கிறது இல்லை. இந்த நிகழ்காலத்தின் துன்பங்களிலும், அதைத் தொடர்ந்து வரும் மகிமையிலும் நாம் கிறிஸ்துவின் உடன் சுதந்திரர்களாக ஆக்கப்பட வேண்டும் என்பது முற்காலம் வரை அறியப்படாத ஒரு இரகசியமாக இருந்ததினால் இக்காரியம் நமக்கு ஆச்சரியமாக இருந்தது .R3526 & R4453



**போஜனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது. நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.**

**– 1 கொரிந்தியர் 11:25 –**

அப்போஸ்தலர் “போதெல்லாம்” என்ற சொல்லை “எப்போதெல்லாம்” என்ற பொருளில் பயன் படுத்துகிறார். “எப்போதெல்லாம் நீங்கள் இதைச் செய்கின்றீர்களோ’ எனும் வார்த்தைகள், எதைப்பற்றி குறிப்பிடுகிறது என்பதை அறிய நம்முடைய கவனத்தை அதன் வசனப்பின்னணிக்குக் கொண்டு செல்கிறது. அவ்விடத்தில் பவுல், “(நமது கர்த்தர்) தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே” என்று குறிப்பிடுகின்றார் மற்றும் அப்போது, அங்கு நமது கர்த்தரினால் தமக்கான நினைவுகூருதல்களாகவும், யூதர்களால் புசிக்கப்பட்டதான நிழலான பஸ்காவின் இடத்தில் இடம்பெறுகின்றதாகவும் அப்பத்தையும், திராட்சரசத்தையும் நிறுவினார் என்றும் குறிப்பிடுகின்றார். யூதர் வழக்கங்களையும் அவை எப்பொழுதெல்லாம் ஆசரிக்கப்படுவதைப் பற்றியும் நன்றாக அறிந்தவர்களுக்கே பவுல் இதை எழுதியிருந்தார். எனவே “போதெல்லாம்” அல்லது “எப்போதெல்லாம்” என்ற வார்த்தைகள், அவர்களுக்குத் தங்கள் ஆண்டுநிறைவு நினைவுநாளைச் சுட்டிக்காட்டியது.

நிழலான ஆட்டுக்குட்டியினுடைய இரத்தத்தின் வாயிலாகக் காக்கப்பட்டு, இஸ்ரயேலின் முதற்பேறா னவர்கள் அடைந்த நிழலான கடந்துப்போகுதலுக்கான வருடாந்தர நினைவுகூருதலை அகற்றுவதற்காகவே கர்த்தருடைய இராப்போஜனமானது வடிவமைக்கப்பட்டது. நமது கர்த்தரும் அவருடைய சீஷர்களும் அனைத்து யூதர்களும் கண்டிப்புடன் கடைபிடித்த அதன் ஆண்டுநிறைவு நாளிலேயே இத்தகைய ஒரு நிகழ்வானது முறையாக ஆசரிக்கப்பட முடியும். இதை அவர்கள் வேறு எந்த நாளிலும் செய்ய நினைத்ததில்லை. மேலும், அமெரிக்கர்கள் தங்கள் விடுதலைக்கான அறிக்கையை ஜுலை 4–ஆம் தேதியைத் தவிர வேறு நாளில் கொண்டாட நினைப்பதை விட, இஸ்ரவேலர்கள் அதனை மிகுந்த முக்கியத்துவத்துடன் ஆண்டுநிறைவு நாளில் மட்டுமே ஆசரித்தனர்.

ஆனால் மீட்பரின் மரணத்தை பொருத்தமற்ற காலங்களில் நினைவுகூர்ந்தவர்களை நமது கர்த்தர் இதனால் ஆக்கினைக்குள்ளாக தீர்ப்பு செய்துவிட்டார் என்று நாம் போதிக்கிறோம் என எவரும் தவறாக எண்ண வேண்டாம். இல்லை, தேவனுக்கு ஸ்தோத்திரம், சுவிசேஷ சபை மற்ற எல்லா காரியங்களைப்போல இதிலும் நியாயப்பிரமாணத்தின் கீழ் வைக்கப்படாமல், கிருபையின் கீழ் வைக்கப்பட்டுள்ளது. இருதயத்தில் நேர்மையோடு நமது கர்த்தரின் சரீரம் மற்றும் இரத்தத்தின் சின்னங்களில் பங்கு கொண்டவர்களால், இந்த நினைவுகூறுதல் மீண்டும் மீண்டும் செய்யப்படுவதால் அது அவர்களின் இதயங்களில் ஏற்படுத்தவேண்டிய தாக்கத்தின் ஒரு **பகுதியை** இழந்திருக்கலாம். எனினும், அவர்கள் **பாவங்களுக்காக தம்மையே பலியிட்டவரின்** பலியை இவ்வாறு ஒப்புக்கொண்டிருப்பதால், அவரால் அவர்கள் நிராகரிக்கப்படவில்லை (அ) புறக்கணிக்கப் படவில்லை. ஆனால் நிச்சயமாக, கர்த்தரின் வார்த்தைகளின் உண்மையான நோக்கம் புரிந்துகொள்ளப்படும் போது, முழுமையாக அர்ப்பணிக்கப்பட்டவர்கள் அனைவரும் அவருடைய ஏற்பாடுகளே சிறந்ததும் மிகவும் பொருத்தமானதும் என்பதை உணர்ந்து மகிழ்ச்சியுடன் அதற்குச் சம்மதிப்பார்கள். மேலும், இது யாருக்காக நினைவுகூருதலாக இருக்கிறதோ அவரால் மிகவும் அங்கீகரிக்கப்படும் என்பதை அறிந்து அதில் இணங்குவார்கள். R1014

**கிறிஸ்தவர்களாகிய நாம், யூதருடைய பஸ்காவையும், யூதர்கள் எகிப்திலிருந்து விடுவிக்கப் பட்டதையும் ஆசரித்துக்கொண்டாடுவதில்லை; நாம் நிழலான ஆட்டுக்குட்டியை அடித்து, புசிப்பதுமில்லை. யூதர்கள் விஷயத்தில் (நீசான்) மாதத்தின் 10–ஆம் தேதியன்று ஆட்டுக்குட்டி தெரிந்தெடுக்கப்படுவதும், 14–ஆம் தேதியன்று ஆட்டுக்குட்டி அடிக்கப்படுவதுமானவைகள், 15–ஆம் தேதி துவங்கி, ஒருவாரமளவும் நீடிக்கும் பஸ்கா பண்டிகையினின்று வேறானதாகும். யூதர்கள் விசேஷமாக பண்டிகையை ஆசரித்தனர்; நாம் தேவனுடைய மாபெரும் ஆட்டுக்குட்டியினுடைய மரணத்தை நினைவுகூருகின்றோம் மற்றும் ஆயிரவருட காலையின் விடுதலைக்காகக் காத்திருப்பவர்களாக, இந்தச் சுவிசேஷ யுக இரவில், நாம் நம்முடைய ஆட்டுக்குட்டியினை, துன்பங்கள் எனும் கசப்பான கீரைகளுடன், தற்போது புசிப்பதன் விளைவாக வரும் முழுமையான மற்றும் நித்தியமான சந்தோஷத்திற்கு நிழலாக மாத்திரமே**

**யூதர்களுடைய ஏழு நாட்கள் கொண்ட பண்டிகைக் காணப்படுகின்றது என்று நாம் புரிந்திருக்கின்றோம். மாம்சீக இஸ்ரயேலினுடைய குருட்டுத்தன்மையானது விலக ஆரம்பிக்கும்போது, கிறிஸ்துவே பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய நிஜம் என்றும், அவரது மரணத்தின் வாயிலாக கடந்துவருகின்றதான ஆசீர்வாதங்களானது, பஸ்கா ஆசீர்வாதங் களுக்கான நிஜங்கள் என்றும், புரிந்துகொள்வார்கள். R1787**

**ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.**
**–1 கொரிந்தியர் 11:26–**

நினைவுகூருதலுக்கான இராப்போஜனத்தை நிறுவிய நமது கர்த்தர், அதன் ஆசரிப்பு விஷயத்தில் எவ்விதமான எல்லைகளை வைக்காததினால், நமக்கான ஈடுபலியாக நமது கர்த்தர் இயேசுவினுடைய மரணத்திற்கும், அவரோடுகூட பலிசெலுத்திடுவதற்கான நமது அர்ப்பணிப்பிற்குமான நினைவுகூருதலை ஒரு – குறிப்பிட்ட கால அளவில் ஆசரிப்பது ஏற்றதாய் இருக்கும் என்று அப்போஸ்தலன் கால அளவை எல்லைக்குட்படுத்துவதாக நாம் புரிந்துகொள்ளக் கூடாது. மாறாக அது கால வரம்பிற்குட்பட்ட, அதாவது கொஞ்சம் வருடங்களுக்குரிய ஏற்பாடு என்று கருதப்படாமல், கர்த்தருடைய இரண்டாம் வருகை வரையிலும் தொடர்ந்து ஆசரிக்கப்பட வேண்டும் என்று அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார். நமது கர்த்தருடைய இரண்டாம் வருகையைக்குறித்துப் பேசுகையில், உலகத்தை ஆளுகைசெய்து, ஆசீர்வதிக்கப்போகின்றதான கிறிஸ்துவின் இராஜ்யம் (அ) சபையினுடைய கூட்டிச் சேர்க்குதலையும், உயர்த்தப்படுதலையும் உள்ளடக்கின விதத்திலேயே, அப்போஸ்தலனுடைய வார்த்தைகள் காணப்படுகின்றன. இது ஒன்றோடொன்று தொடர்புடைய விஷயங்களை, ஒன்றுக்கொன்று ஒத்திருக்கும் விஷயங்களை இப்படியாய்ப் பேசுவது இன்றும் பொதுவான மற்றும் பொருத்தமான வழக்கமாய் இருக்கின்றது. கிறிஸ்துவாகிய தலையும், சரீரமும் வல்லமையிலும், மகா மகிமையிலும் உலகத்தை ஆளுவதற்கு **வந்துகொண்டிருக்கின்றனர்**. கர்த்தர் (அ) தலையினுடைய பிரசன்னம் முதலாவது அவசியமாகும்; அடுத்து அவரது சரீரத்திலுள்ள நித்திரையடைந்த அங்கத்தினர்களின் மறுரூபமடைதலும், உயிரோடிருக்கும் அங்கத்தினர்களின் சலித்தெடுத்தலும், அவர்கள் படிப்படியாக அவரோடு கூட்டிச்சேர்க்கப்படுதலும் சம்பவிக்கும்.

இராஜா தம்முடைய மாபெரும் வல்லமையை 1878–ஆம் வருடத்தில் செயல்படுத்தத் **துவங்கின** காலத்திலிருந்து இராஜ்யம் ஆரம்பித்துவிட்டது என்று கருதப்படுகின்றதாய் இருப்பினும் (வெளிப்படுத்தல் 11:17), இராஜ்யத்தினுடைய கடைசி அங்கத்தினன் மறுரூபமடைவது (அ) மகிமைப்படுத்தப்படுவது வரையில், அப்பமாகிய கிறிஸ்து எனும் தலை மற்றும் சரீரத்தினுடைய பிட்கப்படுதல் நிறைவடைவது வரையில், அது முழுமையாய் **ஸ்தாபிக்கப்பட்டிருக்காது**. ஓர் அங்கம் பாடுபடுகையில், சரீரம் பாடுபடுகின்றது; ஓர் அங்கத்தினன் மகிமையடையாமல் இருக்கையில், இராஜ்யமானது வல்லமையிலும், ஆளுகையிலும் முழுமையாய் வரவில்லை என்பதாகும்.

“ஆகையால் நீங்கள் இந்த (பஸ்காவில்) அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும், அவருடைய மரணத்தைத் (உங்கள் நம்பிக்கை மற்றும் உறுதி என்று) தெரிவிக்கின்றீர்கள்” என்று அப்போஸ்தலன் கூறுகையில், கிறிஸ்துவினுடைய சபை (அ) இராஜ்ஜியத்தினுடைய முழுமையான உயர்த்தப்படுதலை உள்ளடக்கின கிறிஸ்துவின் வருகையையே குறிப்பிட்டார் என்பதில் உறுதியே. இராஜ்ஜியத்தின் மகிமையே, அடையாளத்தினுடைய முடிவு என்ற இதே கருத்தானது, நினைவுகூருதலை நிறுவினப்போதான நமது கர்த்தருடைய பின்வரும் வார்த்தைகளிலிருந்தும் எடுத்துக்கொள்ளப்படலாம்: “இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் இராஜ்ஜியத்திலே நான்

பானம்பண்ணும் நாள்வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" – மத்தேயு 26:29. R5193



**இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத் தையும்குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக் கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம்பண்ணுகிறான்.**

**– 1 கொரிந்தியர் 11:27–29 –**

நினைவுகூருதல் இராப்போஜனம் அடையாளப்படுத்தும் காரியங்களை உணர்ந்துகொள்வதினால் மாபெரும் ஆசீர்வாதமும், அதில் பங்கெடுப்பவரின் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலுக்கு ஏற்ப சந்தோஷமும் கடந்துவருவதுபோல, நினைவுகூருதலில் அபாத்திரமான நிலையிலும், சரியற்ற நிலையிலும் பங்கெடுத்தல்கூட ஆக்கினைத் தீர்ப்பைக் கொண்டுவருகின்றதாய் இருக்கின்றது. கர்த்தருக்கும், அவரது ஊழியத்திற்கென்றும் தங்களுடைய இருதயங்களை – தங்களுடைய அனைத்தையும் – அர்ப்பணிப்பதன் மூலமாக கர்த்தருடன் உறவிற்குள் வந்தவர்களே இதில் பங்கெடுக்க வேண்டுமே ஒழிய, மற்றவர்கள் அல்ல.

யார் தங்களைப் பாவிகள் என்றும், இரட்சகரைப் பாவங்களிலிருந்து தங்களை மீட்பவர் என்றும், இவர் மூலமாய்ப் பிதாவினிடத்திற்கு வருபவர்களுடைய குறைவுகளை ஈடுசெய்திடுவதற்கு இவருடைய புண்ணியங்கள் போதுமானவைகள் என்றும் அடையாளங்கண்டுகொள்கின்றனரோ, இவர்களே இந்த அர்ப்பணிக்கப்பட்ட நிலைமைக்கு வரமுடியுமே ஒழிய, மற்றவர்கள் அல்ல. இப்படியானவர்களே மிகுந்த சந்தோஷத்துடன் இதில் பங்கெடுப்பவர்களாய் இருப்பார்கள். போதகருடைய பாடுகளை இவர்கள் நினைவுகூர்ந்து, அந்தப் பாடுகளிலும் மற்றும் அவை தங்கள் இருதயங்களிலும், ஜீவியங்களிலும் கொண்டு வந்திட்டதான ஆசீர்வாதங்களிலும் களிகூர்ந்திட வேண்டும். கிறிஸ்துவின் பலியின் புண்ணியங்களை தங்களுடையதாக்கிக் கொண்டவர்களும், தங்களுக்கான ஆசீர்வாதங்கள் அனைத்துமே அவர்மூலமே

கிடைத்தது என்பதை முழுமையாக உணர்ந்தவர்களுமே அந்த தருணத்தில் திராட்சப்பழரசத்தை பானம்பண்ண வேண்டுமே ஒழிய வேறு எவருமல்ல. தங்களுடையது அனைத்தையும் கர்த்தருக்குக் கொடுத்துவிட்டவர்களே பாத்திரத்தில் பானம்பண்ணிட வேண்டுமே ஒழிய, வேறு எவருமல்ல; ஏனெனில் இதுவே பாத்திரத்தினுடைய அர்த்தமாய் இருக்கின்றது அது பாடுகளின் பாத்திரமாகும், மரணத்தின் பாத்திரமாகும் – தேவனுடைய சித்தத்திற்கான முழுமையான ஒப்புக்கொடுத்தலாகும்.

எந்த ஒரு காரணத்தை முன்னிட்டும், எவரும் இந்த வருடாந்திர சிலாக்கியத்தினைப் புறக்கணித்திட வேண்டாமென்று நாம் வலியுறுத்துகிறோம். இதை ஆசரிக்கும் விஷயத்தில் விசேஷித்த ஆசீர்வாதம் உள்ளது. நீங்கள் சோர்வடைந்திருக்கிறீர்களானால், போய் பிட்கப்பட்ட அப்பத்தில் பங்கெடுத்து, உங்கள் நீதிமானாக்கப் படுதலைக் குறித்தப் புதிதான உணர்ந்துகொள்ளுதலையும், ஒரே அப்பத்தின் – அவரது சபையின், அவரது சரீரத்தின் அங்கத்தினர்களென அவரோடுகூடப் பிட்கப்படுவதற்கான (பலிச்செலுத்தப்படுவதற்கான) உங்களது அர்ப்பணிப்பைக்குறித்த புதிதான உணர்ந்துகொள்ளுதலையும் கர்த்தரிடத்தில் கேளுங்கள்.

இப்படியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, உணர்ந்துகொள்ளப்படவில்லையெனில், நினைவுகூருதலானது அர்த்தமற்றதாக (அ) பாதகமானதாகக் காணப்படும் என்பதை நாம் மறக்காமல் இருப்போமாக. ஆனால் பாவங்களோ, அனலற்றத் தன்மைகளோ, அபாத்திரன் என்ற உணர்வுகளோ, நம்மைத் தடைச் செய்யாதிருப்பதாக. கர்த்தரிடத்தில்போய் உங்கள் குறைவுகள் அனைத்தையும் மறைக்காமல் கூறிவிடுங்கள். உங்கள் சகோதர சகோதரிகளிடத்தில் (அ) நீங்கள் யாருக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தீர்களோ, அவர்களிடத்தில்போய், அவர்கள் உங்களிடத்தில் தவறுகளை ஒப்புக்கொள்கிறார்களோ, இல்லையோ,

## நீங்கள் முழுமையாய் ஒப்புக்கொண்டுவிடுங்கள்.

....உங்கள் கர்த்தருடன் ஒப்புரவாகிக்கொள்ளுங்கள் மற்றும் கூடுமானமட்டும் அனைத்து மனிதர்களுடனும் ஒப்புரவாகிக்கொண்டு வந்து புசியுங்கள் – ஆம் இப்பொழுது (அ) பின்னர் "ஏற்றக்காலத்தில்" ஏற்றுக்கொள்பவர் அனைவருக்குமான கர்த்தருடைய ஐசுவரியமான ஏற்பாட்டில் பங்கெடுங்கள்.

இப்படியானதொரு இருதய ஆராய்தலும், சுத்திகரித்தலும், யூதர்களுக்குக் கொடுக்கப்பட்டதான பஸ்கா நிழலில் காண்பிக்கப்பட்டுள்ளதை நாம் நினைவுகூருகிறோம். தங்கள் பஸ்கா ஆட்டுக்குட்டியினைப் புசிப்பதற்கெனக்கூடிடுவதற்கு முன்னதாக, புளிப்பான அல்லது அழுகிப்போனதான ஏதாகிலும் பொருட்கள், எலும்புகள், ரொட்டித் துண்டுகள் காணப்படுகின்றதா என்று தங்களது குடியிருப்புகளில் எல்லாம் அவர்கள் தேடினார்கள். இவைகளெல்லாம் எரிக்கப்பட்டன – அழிக்கப்பட்டன. ஆகையால் நாமும் நிஜத்தை நிறைவேற்றி, கோபம், பகைமை, சண்டை, துர்க்குணம் எனும் "பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போட" வேண்டும் (1 கொரிந்தியர் 5:7,8).இவ்வகை பாவம் எனும் புளிப்பானது, எரிக்கப்படாமல், முற்றிலுமாகப் புறம்பே கழித்துப்போடப்பட முடியாது என்பதையும், அன்பு – பரம அன்பு, தேவ அன்பு மாத்திரமே இதை எரித்துப்போட முடியும் என்பதையும் நினைவில் கொண்டிருக்க வேண்டும். இந்த அன்பானது, நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருந்தால், இது எதிர்ப் பண்புடைய அனைத்தையும், அதாவது பொறாமை, பகைமை, புறங்கூறுதல் முதலானவைகள் அனைத்தையும் பட்சித்துப் போட்டுவிடும். இவைகளையெல்லாம் புறம்பே கழித்துப்போட்டு, கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டு, அவரது ஆவியில் நிரம்பிடுவதற்கு அப்போஸ்தலன் வலியுறுத்துகின்றார். மனம் தளர்ந்துபோக வேண்டாம். பாடத்தைக் கற்றுக்கொண்டு, புதிய தீர்மானங்களுடனும், ஆண்டவருடைய உதவியில்லாமல், நீங்கள் நீங்களாகவே பரிசை ஒருபோதும் அடையமுடியாது என்ற உண்மையினைப்பற்றின அதிகமானப் புரிந்துகொள்ளுதலுடனும், மீண்டுமாகத் தொடருங்கள். மேற்கூறிய உண்மையினை நம்மைவிட அவர் நன்றாய் அறிவார் மற்றும் "என்னையல்லாமல் உங்களால் ஒன்றுஞ்செய்யக் கூடாது" என்று கூறுகின்றார். நமக்கான தேவையின் காரணமாகவே, பிதா நமக்கு இப்படியாக ஏற்பாடு பண்ணியுள்ளார். "தைரியங் கொண்டிருங்கள்!" என்பதே "ஜெயங்கொள்ளுகிற" வகுப்பாரில் அடங்குவதற்கு நாடுகிற மற்றும் ஏங்குகிற அனைவருக்குமான ஆண்டவருடைய வார்த்தைகளாக இருக்கின்றது. R5420 & R5193

**இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.**

**–மத்தேயு 26:29–**



இங்கு நமது கர்த்தர் இரண்டு பெரிய நாட்களை – **பாடுபடுகிற** நாளையும் மற்றும் **மகிமையின்** நாளையும் வித்தியாசப்படுத்துகின்றார். இந்தச் சுவிசேஷயுகமானது பாடுபடுகிற நாளாய்க் காணப்படுகின்றது. ஆயிரவருட நாளானது, மகிமையின் நாளாகக் காணப்படும் மற்றும் இது விசேஷமாக கிறிஸ்துவினுடைய நாள் என்று பேசப்படுகின்றது. இனிப் பாத்திரத்தில் பானம்பண்ணுவதில்லை என்று நமது கர்த்தர் குறிப்பிட்டார்; அவர் பானம்பண்ணவுமில்லை. அவரது வேலை – பாத்திரத்தில் அவர் பானம் பண்ணுதலானது, அடுத்த நாளில், கல்வாரியில் நிறைவேறினது. அங்கு அவர் பிதா தமக்கென ஊற்றின பாத்திரத்தில் பானம்பண்ணுதலை நிறைவேற்றி முடித்தார். அதே பாத்திரத்தினைப் பிதா, இயேசுவின் பின்னடியார்கள் அனைவருக்குமாக ஊற்றிக்கொடுத்துள்ளார்; மற்றும் சீக்கிரத்தில் ஸ்தாபிக்கப்படப் போகின்றதான இராஜ்யத்தில் அவரது உடன்சுதந்திரர்களாகக் காணப்படவேண்டுமானால், அவர்களும் அவரது பாத்திரத்தில் பானம்பண்ணிட வேண்டும் மற்றும் அவரது பிட்கப்பட்ட சரீரத்தினுடைய புண்ணியங்களில் பங்கெடுக்க வேண்டும்.

நமது கர்த்தர் இயேசுவுக்கான பூமிக்குரிய அனுபவங்களினுடைய விஷயத்தில், பிதா அவருக்கு ஒரு குறிப்பிட்ட பாதையை அமைத்து வைத்திருந்தார். இந்தப் பாதையானது, பாடுகள் மற்றும் மரணம் எனும் அவருடைய பாத்திரமாகக் காணப்பட்டது. ஆனால் அவர் இந்தப் பாத்திரத்தில் உண்மையாய்ப் பானம்பண்ணிட்ட பிற்பாடு, அவருக்கு வித்தியாசமான/வேறே பாத்திரம், வேறே அனுபவம், அதாவது கனம், மகிமை மற்றும் அழியாமை கொடுக்கப்படும் என்று பிதா அவருக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருந்தார். மேலும் அவருடைய பின்னடியாளர்களாகுவதற்கு விரும்புகிறவர்களுக்கும் இதே செய்தியை, அதாவது அவரோடுகூடப் பாடுபட்டார்களானால், அவரோடுகூட மரணம் எனும் அவரது பாத்திரத்தில் பானம் பண்ணினார்களானால், அப்போது அவர்கள் சந்தோஷமாகிய அவரது வருங்கால பாத்திரத்திலும் பங்கடைவார்கள் என்று இரட்சகர் முன்வைக்கத்தக்கதாக, பிதா அவருக்கு அதிகாரம் அளித்தவரானார். R5643 & R5542

# இயேசு சீஷர்களுக்கு ஆறுதல் அளித்தல்

சீஷர்களுடையப் பாதங்களைக் கழுவிய பிறகு, யூதாசுக்குத் துணிக்கையைக் கொடுத்தப் பிறகு, யூதாஸ் புறப்பட்ட பிறகு; தம் நிமித்தம் அந்த இரவில் சீஷர்கள் அனைவரும் இடறலடைவார்கள் என்று கூறினப் பிறகு, மற்றும் சேவல் கூவுவதற்கு முன்பாக, பேதுரு மூன்று முறை மறுதலித்துவிடுவான் எனப் பேதுருவுக்கு அவர் பதிலளித்த பிறகு, பதினொரு பேரின் இருதயங்களும் பாரம் அடைந்ததாகவும், குழப்பம் அடைந்ததாகவும், நடக்கப்போகிறவை பற்றி பயத்தால் கலக்கமடைந்ததாகவும் இருந்திருக்கும் என்பதை நம்மால் நன்கு அறியமுடிகிறது. ஆண்டவர் தம்மை மேசியா என்றும், இராஜ்யத்தின் சுதந்தரவாளி என்றும் மற்றும் அவர்கள் அவருடைய சிங்காசனத்தில் அவரோடு கூட அமர வேண்டும் என்றும் சொன்னபோது அவர்கள் உண்மையில் ஏமாற்றப்பட்டிருப்பார்களா அல்லது தவறாகப் புரிந்துகொண்டார்களா? கர்த்தர் கூறியவற்றை அவர்கள் எப்படி புரிந்துகொள்வது, ஏனெனில் ஐந்து நாட்களுக்கு முன்பு, கழுதையின் மீது ஏறி வந்தபோது, இஸ்ரவேலின் இராஜாவாக, தாவீதின் குமாரனாக, திரளான ஜனங்களால் ஓசன்னாக்களைப் பெற்றதை கண்டிருந்தார்களே. ஆண்டவர் இப்போது "மிகவும் துக்கத்தில் இருப்பதையும்" காட்டிக்கொடுப்பது குறித்து கூறுவதும், சீஷர்களின் சிதறடிக்கப் படுதலை மற்றும் தம்முடைய சொந்த மரணம் பற்றிப் பேசுவதன் பொருள் என்னவாக இருக்கலாம்? அவர்களுடைய இந்த குழப்பமான எண்ணங்களுக்கு பதிலளிக்கும் விதமாகவே, நமது கர்த்தர் யோவான் சுவிசேஷத்தின் 14, 15, 16 மற்றும் 17 வது அதிகாரங்களில் காணப்படும் ஆறுதலும், தேறுதலுமான வார்த்தைகளை அவர்களிடம் கூறுகிறார்.

**இவ்வார்த்தைகளை அவர், "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்தில் விசுவாசமாயிருங்கள்" என்று ஆரம்பிக்கின்றார்.**

**– யோவான் 14:1 –**



அப்போஸ்தலர்கள் இயேசுவுடன் தொடர்புக்குள் வருவதற்கு முன்னதாகவே, அவர்கள் ஏற்கெனவே தேவனுடைய ஊழியக்காரர்கள் என, தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்களாகக் காணப்பட்டனர். அவர்கள் ஏற்கெனவே தேவனில் நம்பிக்கையும், விசுவாசமும் கொண்டிருந்தனர். அவர்கள் கபடற்ற உத்தம இஸ்ரயேலர்களாக இருந்தனர். அவர்கள் தேவனை அறிந்தவர்களாகவும், தேவனில் விசுவாசம்

உள்ளவர்களாகவும் மாத்திரம் இராமல், இராஜ்யம் தொடர்பான தேவனுடைய வாக்குத்தத்தங்களையும், அந்த இராஜ்யத்தின் வாயிலாகப் பூமியின் குடிகள் அனைத்தின் மீது வரும் ஆசீர்வாதங்களையும் அறிந்திருந்த வர்களாகவும், விசுவாசித்திருந்தவர்களாகவும் காணப்பட்டனர். அவர்களுடைய மனங்களுக்கு முன்பாக எழும்பின கேள்வி, இயேசு தொடர்பானதேயாகும். அதாவது, இயேசு உண்மையில் மேசியாவா? அல்லது அவருடைய அற்புதமான வார்த்தைகள் மற்றும் கிரியைகளைக் கண்டு, தாங்கள்தான் தவறான சில எதிர்ப்பார்ப்புகளை வளர்த்துவிட்டார்களா?

பிதாவிடத்திலும், அவருடைய திட்டத்திலுமுள்ள அவர்களது விசுவாசத்தை அவர்களுக்குள் புத்துயிரடையச் செய்யத்தக்கதாக, "தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமா யிருங்கள்" என்று கூறி நமது கர்த்தர் ஆரம்பித்தார். அதாவது, பிதாவினுடைய திட்டமனைத்தும் நிறைவேறும் என்ற உண்மையை உணர்ந்துகொள்ளுங்கள். மேலும் பிதாவுக்கு, வார்த்தையிலும், கிரியையிலும் நான் உண்மையாய் இருப்பதை நீங்கள் பார்த்துள்ளபடியினாலும், என்னிலுள்ள நற்கிரியைகளில் பிதாவினுடைய வல்லமை வெளிப்பட்டுள்ளதை நீங்கள் பார்த்துள்ளபடியினாலும், விசுவாசத்தினுடைய நங்கூரம் உறுதியாய் நிலைத்திருப்பதாக. என்னைத் தொடர்ந்து விசுவாசித்துக்கொண்டிருங்கள், தொடர்ந்து நம்பிக்கைக் கொண்டிருங்கள். இப்படியிருந்தால் உங்களுக்கு ஆசீர்வாதம் கிடைக்கும். தெய்வீகத் திட்டத்தினுடைய விரிவாகுதலுக்காகக் காத்திருங்கள். மேலும் இது உங்கள் உயர்ந்த எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும். R2453

**என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன் நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்.**

**– யோவான் 14:2-3 –**

மெய்யாகவே இந்த அண்ட சராசரம் தான் பிதாவாகிய தேவனின் வீடாகும். உருவகமான வார்த்தையில் "வானம் அவரது சிங்காசனம் பூமி அவரது பாத படி" என்று சொல்லலாம். திருச்சபையின் மீது ஒரு இடத்தை விட மற்றொரு இடத்தில் இருக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு எதுவும் வேதத்தில் சுட்டிக்காட்டப்படவில்லை. அவள் தனது மாற்றத்தை அனுபவித்த பிறகு, சபை சிறிது காலத்திற்கு பூமியிலிருந்து விலகி பரலோக பிதாவின் முன்னிலையில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 45-வது சங்கீதத்தில் மணவாட்டியானவள் ராஜாவின் முன்னிலையில் சித்திரத்தையலாடைத் தரித்தவளாய், பொற்சரிகையின் ஆடையில் கொண்டு வரப்பட வேண்டும் என்று வாசிக்கிறோம். கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கத்தினர்கள் அனைவரும் பூமியில் இருந்து தொலைவில் இருந்தாலும் சரி பூமியின் அருகில் இருந்தாலும் சரி அவர்கள் ஆவிக்குரிய சுபாவத்தில் தான் இருப்பார்கள். தெய்வீக குடும்பத்தில் – "நான் உங்களுக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணப் போகிறேன்" என்று நமது ஆண்டவர் கூறியதன் அர்த்தம் இதுதான். இந்த குறிப்பிட்ட இடம் (அ) ஸ்தலம் வேறு யாராலும் நிரப்பப்படாத ஒன்றாகும்.

பிதாவால் பல்வேறு வரிசைகளில் ஆவிக்குரிய ஜீவிகள் உருவாக்கப்பட்டு ஒவ்வொன்றும் அதற்கே உரிய சொந்த ஸ்தலத்தையும் பெற்றிருக்கிறது. ஆனால் இவற்றில் கிறிஸ்துவின் சபையானது இல்லை. கிறிஸ்துவின் சபையானது பிதாவுக்கும் கர்த்தருக்கும் அடுத்த இடத்தையும் மற்ற அனைத்து ஆவிக்குரிய ஜீவிகளை விட மேலான இடத்திற்கும் அழைக்கப்பட்டிருக்கிறது. முதலாம் வருகையில் இந்த இடம் சபைக்காக ஆயத்தம் பண்ணப்படவில்லை இருப்பினும் கர்த்தர் அதை மனதில் வைத்திருந்தார். நமது கர்த்தர் இந்த இடத்தை ஆயத்தப்படுத்துவதற்காகவே உன்னதத்திற்கு ஏறிப் போனார். அவருடைய பலியின் புண்ணியத்தை சபைக்கு பயன்படுத்துவதன் மூலமும், (application) அவர் இடத்தை ஆயத்தப்படுத்திவிட்டார். அவருடைய

பலியின் புண்ணியத்தை அவர்களுக்கு சாற்றி (impute) தற்காலத்தில் நமது கர்த்தருடைய பாடுகளிலே அவரோடு கூட பங்குக்கொள்ளவும், இவ்வாறு அவரோடு பாடுகள் அனுபவிக்கும்பொழுது அவருடைய திவ்விய சுபாவத்திற்கும் பங்குள்ளவர்களாகவும் அனுமதித்தார். இவ்வாறே நமது கர்த்தர் அனைத்து ஆவிக்குரிய ஜீவிகளைக் காட்டிலும் உயர்ந்த திவ்விய சுபாவத்திற்குள் நுழைவதற்கான வழியை ஆயத்தப்படுத்தினார். R2453 & R4973

## "நான் போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள், வழியையும் அறிந்திருக்கிறீர்"
## – யோவான் 14:4 –

மூன்று ஆண்டுகளாக, நமது கர்த்தர் தம்முடைய சீஷர்களுக்கு தம்மைத் தெரியப்படுத்தியும், பிதாவின் குணலட்சணங்களை அறிமுகப்படுத்தியும் வந்தார். ஆகவே, அவர் இப்போது பிதாவின் வீட்டிற்கு செல்கிறேன் என்று சொன்னபோது, அவர்கள் பிதாவை முன்பில்லாத அளவுக்கு அறிந்து ள்ளதையும், "அவர் நீதி மற்றும் உண்மையான சந்தோஷத்தின் வீட்டை வழங்கி, அதை பராமரிப் பதையும் முன்பில்லாத அளவுக்கு உணர்ந்து பாராட்ட முடிந்தது. மேலும், கர்த்தரின் போதனைகளிலும் வழிநடத்துதலிலும் கிடைத்த அனுபவம், தேவனிடத்தில் செல்லும் வழியை அவர்கள் அறிந்துகொள்ள உதவியது. அதாவது, அவ்வழியை தேவனுடைய வழி என்று அவர்கள் அடையாளம் கண்டுகொள்ளாதிருந்த போதிலும், அவ்வழிக்கு அவர்கள் பழக்கிவிக்கப்பட்டி ருந்தனர். ஆகவேதான் நமது கர்த்தர்,

**"நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கின்றேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று கூறினார்.** R2453



## அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல் லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.
## – யோவான் 14:6 –

நமது கர்த்தருடைய பலியின் மூலமாக, "ஈடுபலியின்" மூலமாக, அவருடைய பலியின் புண்ணியம் பாவிகளுக்குத் தரிக்கப்படுவதன் மூலமாக மாத்திரமே, சீஷர்கள் பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் அல்லது மீண்டுமாகப் பிதாவினிடத்திலான ஐக்கியத்திற்குள்ளாக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்ற விதத்தில் நமது கர்த்தர், "வழியாக" இருக்கின்றார். அவருடைய வார்த்தைகள், அவருடைய அறிவுரைகள், அவருடைய வழிகாட்டுதலின் வாயிலாக மாத்திரமே, சீஷர்கள் தேவனுடைய ஆவிக்கு, சத்தியத்தின் ஆவிக்கு இசைவுடன் வருவதற்குரிய நம்பிக்கைக் காணப்படும் என்ற விதத்தில் நமது கர்த்தர், "சத்தியமாக" இருக்கின்றார். மனுக்குலம் முழுவதும் மரித்து, தெய்வீக தண்டனைத் தீர்ப்பின் கீழ்க் காணப்படுவதால், ஜீவனுக்கான உரிமைகள் அனைத்தையும் இழந்துள்ளபடியினால், எவரும் நமது கர்த்தர் மூலம் அல்லாமல், அதாவது நமக்காக அவர் கொடுத்திட்ட ஜீவன் மூலமாக வராத எவரும், ஜீவனுக்குரிய நிலைமைக்குள் மீண்டுமாக வரமுடியாது என்ற விதத்தில் நமது கர்த்தர் "ஜீவனாக" இருக்கின்றார். இப்படியாக, அவர் நமக்கான ஈடுபலியாகவும் (அ)

வழியாகவும், நீதியிலும், சத்தியத்திலும் நமக்கான போதகராகவும், நமக்கு ஜீவன் கொடுப்பவராகவும் இருக்கின்றார்... “அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை” (அப்போஸ்தலர் 4:12). “என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்,” அதாவது வேறெந்த வழி மூலமாகவும், வேறெந்த சத்தியம் மூலமாகவும், வேறெந்த ஜீவன் மூலமாகவும் பிதாவினுடைய வீட்டிலுள்ள வாசஸ்தலம் ஏதாகிலும் ஒன்றில் இடம்பெற்றுக்கொள்ளலாம் என்று, எந்த மனிதனும் எண்ணிக்கொள்ளாதிருப்பானாக என்ற விதத்தில் கர்த்தர் கூறுகின்றார் . – யோவான் 14:6.

இப்படியாகவே, ஆயிரவருட யுகத்தின்போது, மனுக்குலத்திற்கு கிறிஸ்துவானவர் வழியாகவும், சத்தியமாகவும், ஜீவனாகவும் இருப்பார். கர்த்தர் தம்முடைய பலியின் மூலமாக, சுவிசேஷ யுக சபையாகிய, தம்முடைய மணவாட்டிக்கு, தேவனுடைய வீட்டிலுள்ள பரலோகப்பகுதியில் ஒரு வசிப்பிடத்தைத் திறந்து வைத்ததுபோன்று, அதே பலியின் மூலமாக, பிதாவின் வீட்டிலுள்ள பூலோகப்பகுதியில், ஒரு வசிப்பிடத்தை (அவருக்குக் கீழ்ப்படிகின்றவர்கள் – அப்போஸ்தலர் 3:23) மீட்டு, மனுக்குலத்திற்குத் திரும்பக் கொடுப்பார். அந்தப் பூமிக்குரிய வசிப்பிடமோ, மீண்டும் தேவனுடைய பரதீசாக மாறும். R2453

## என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்; இதுமுதல் நீங்கள் அவரை அறிந்தும் அவரைக் கண்டும் இருக்கிறீர்கள் என்றார்.

**– யோவான் 14:7 –**

அப்போஸ்தலர்கள் அதிகமாய் ஆண்டவரை மதித்தாலும், அவருடைய பூரணம் குறித்த கருத்தை, அதாவது அவர் மாம்சத்தில் வெளிப்பட்ட தேவனுடைய சாயலாய் இருக்கின்றார் என்ற கருத்தை, அவர்கள் கிரகித்துக்கொள்வதற்கு, அவர்களுக்குச் சிரமமாய் இருந்தது (1தீமோத்தேயு 3:16). “தேவன் ஆவியாயிருக்கின்றார்,” மாம்சத்தில் இல்லை; ஆகவே அவரைப் பார்க்க முடியாது என்பதாக அவர் கூறியுள்ளதையும் அப்போஸ்தலர்கள் கேட்டிருந்தனர்; மற்றும் இக்கருத்தை அவர்கள் நியாயப்பிரமாணத் திலிருந்தும் அறிந்திருந்தனர். “தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்” (யோவான் 1:18) என்பதை அவர் ஏற்கெனவே கூறியிருப்பதையும் அவர்கள் கேட்டிருக்கின்றனர். ஆனால், இயேசுவைத் தாங்கள் பார்க்கையில், தெய்வீக மானவரிடத்தில் காணப்படக்கூடிய அனைத்தையும் அவரில் பார்க்கின்றார்கள்; அதாவது தெய்வீக மானவரின் பூரண சாயலை, மாம்சத்தில் பார்க்கின்றார்கள் என்ற விஷயத்தை, அவர்கள் அதுவரையிலும் கிரகித்துக் கொள்ளவில்லை. ஆகவேதான், “என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்” என்ற உண்மையினிடத்திற்கு அவர்களுடைய கவனத்தை அவர் திருப்ப வேண்டியிருந்தது.

இவ்வார்த்தைகளை, தாம்தான் பிதா என்ற அர்த்தத்தில் அவர்களிடத்தில் அவர் கூறவில்லை. காரணம் பிதா தம்மிலும் பெரியவர் என்றும், தாம் செய்யும் கிரியைகள் பிதாவினுடைய வல்லமையினாலே செய்யப்படுகின்றது என்றும், அவர் அநேகம் தரம் தெளிவாய் அறிவித்திருக்கின்றார் (யோவான் 14:28,10). மேலும் தேவன் கண்களுக்குப் புலப்படாதவர் போன்று இருப்பதுபோல, தம்மைப் பார்க்கும்போது, கண்களுக்குப் புலப்படாத ஜீவியைப் பார்ப்பதாக அவர்கள் புரிந்துக்கொள்ள வேண்டுமெனும் அர்த்தத்திலும் அவர் கூறவில்லை. அவர்கள் தம்முடைய குணங்களை, நோக்கங்களை, அன்பைப் பார்க்கும்போது, பிதாவைப் பற்றிய அனைத்திலும் மிகுந்த உண்மையுடன் பிரதிபலிக்கும் ஒரு மெய்யான வெளிப்பாட்டைப் பார்த்ததாகவே புரிந்து கொள்ள வேண்டும் என அவர் பொருள்படச் சொன்னார்.

பிதாவுக்கும், தமக்கும் இடையே நிலவும் ஒற்றுமை குறித்தும், தம்முடைய சித்தமானது, பிதாவின் சித்தத்திற்குள் புதைக்கப்பட்டுள்ளது குறித்தும், தமக்கு வேறே சித்தமில்லை, “என் சித்தமல்ல, உம் சித்தமே ஆகக்கடவது” என்பதைக் குறித்தும் அவர்களைப் புரிந்துகொள்ள வைத்தார். இன்னுமாக, பிதா தம்முடைய வல்லமையின் மூலமாகவும், தம்முடைய ஆவியின் மூலமாகவும், தம்மில் வாசம் பண்ணினதால், தம்முடைய வார்த்தைகளும், கிரியைகளும் முற்றும் முழுமையாகப் பிதாவுடையதே என்றும் அவர்களுக்குப் புரியவைத்தார்.

தம்முடைய ஊழியத்தின் நாட்களில் அவர்களால் பார்க்கப்பட்ட கிரியைகள் அனைத்தும், தம் மீது உன்னதமானவரின் வல்லமை காணப்படுகின்றது என்பதற்கும், தம் மூலம் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது என்பதற்கும் சான்றாக இருக்கின்றது என்றும் அவர்களிடம் கூறினார். இவைகள் அப்போஸ்தலர்களை முழுமையாய் திருப்திப்படுத்தி, அவர்களுடைய இருதயங்களுக்குச் சமாதானத்தைக் கொண்டுவந்தது. R2453

**மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்.**

**– யோவான் 14:12 –**

இன்னுமாக தாம் பிதாவினிடத்திற்குப் போக வேண்டியதன் அவசியம் பற்றி விவரிக்கும் வண்ணமாக, தாம் கடந்துப்போவதினால், தம்முடைய பின்னடியார்கள், தாம் செய்ததைக் காட்டிலும் பெரிய கிரியைகள் செய்வார்கள் என்று நமது கர்த்தர் அறிவித்தார். இந்த "பெரிய கிரியைகளில்" சில, இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்ட பிற்பாடு செய்யப்படும் என்று எண்ணுவது அநேகமாகச் சரியாகவும் இருக்கலாம். அதாவது மரணம் என்னும் நித்திரையினின்று உலக மனுக்குலத்தை எழுப்பி, விருப்பமும் மற்றும் கீழ்ப்படிதலும் காட்டுகின்றவர்களை, மனுஷீக ஜீவனுக்குரிய முழுமையான பூரணத்திற்குத் திரும்பக்கொண்டு வருவதாகிய மாபெரும் கிரியை, இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்ட பிற்பாடு செய்யப்படும். இது உண்மையில் முதலாம் வருகையின் போது, நமது கர்த்தர் இயேசுவினால் செய்யப்பட்ட கிரியையைக் காட்டிலும், பெரிய கிரியைதான். காரணம், முதலாம் வருகையின் போது, கர்த்தர் இயேசு மரணத்தில் நித்திரை பண்ணிக் கொண்டிருந்த சிலரை, மனித சுபாவத்திற்குரிய முழுமையான பூரணத்திற்குக் கொண்டுவராமல் வெறுமனே எழும்பப்பண்ணினதே அவருடைய பெரிய கிரியையாக இருந்தது.

ஆனால் நம்முடைய அபிப்பிராயத்தின்படி, இந்த ஒரே வகையில் மாத்திரமே கர்த்தருடைய பின்னடியார்கள், அவர்களின் ஆண்டவரின் கிரியைகளைக் காட்டிலும் பெரிய கிரியைகள் செய்வார்கள் என்று புரிந்துகொள்ளக்கூடாது.கர்த்தருடைய கிரியைகள் மாம்சீகத் தளத்திலேயே காணப்பட்டது மற்றும் அப்படி செய்வது அவசியமான விஷயமாக இருந்தது. அப்பொழுது இன்னும் பரிசுத்த ஆவி அருளப்படவில்லை; அவர் **ஈடுபலியைச்** செலுத்தி, அதைப் பிதாவிடம் ஒப்படைத்து, அதைப் பிதா ஏற்றுக்கொள்ளும் வரையிலும், பரிசுத்த ஆவி வர முடியாது. இதன் காரணமாக, அவர் யாருக்கு ஊழியம் புரிந்திட்டாரோ, (அவருடைய சீஷர்கள் கூட, ஆவியினால் ஜெநிப்பிக்கப் படாதவர்கள்) அவர்களுக்கு கூட அந்த (ஆவிக்குரிய) நிலைப்பாட்டில் இருந்து அறிவுறுத்தப்பட முடியாது (போதிக்கமுடியவில்லை). அவர்களுடைய செவிகள், பூமிக்குரிய விஷயங்களால் நிறைந்திருந்தன; ஆனால் பரலோக விஷயங்களைப் பொறுத்தவரை, அவர்களால் எதையும் புரிந்து கொள்ள முடியவில்லை; காரணம், "ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்." பெந்தெகொஸ்தே நாளிலிருந்துதான் "நமக்கோ தேவன் அவைகளைத் [ஆவிக்குரிய விஷயங்களை] தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானது எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறது." 1 கொரி. 2:10; 1 கொரி. 2:14; யோவான் 3:12.

இன்னமும் ஆவியினால் ஜெநிப்பிக்கபடாமலும், புத்திரத்துவத்திற்குரிய சிலாக்கியம் இன்னமும் அருளப்படாத நிலமையிலுமுள்ள வேலைக்காரர் வீட்டாரின் மத்தியில், நமது கர்த்தரால்

பூமிக்குரியத் தளத்தின் அடிப்படையிலேயே அல்லாமல், மேலான தளத்தின் அடிப்படையில் எதையும் போதிக்கவும், செய்யவும் முடியவில்லை. அதாவது உவமைகளினாலும், மறைப் பொருள்களினாலுமே ஜனங்களிடம் பேசினார். இவைகள் ஏற்றவேளையில் பரிசுத்த ஆவியினுடைய வழிநடத்துதல் கீழாக, சபை புரிந்துகொள்வார்கள். இதன் காரணமாகவே நம்முடைய கர்த்தருடைய அற்புதங்கள் அனைத்தும் சரீரப்பிரகாரமான நிலையிலும், எளிமையாய்ப் புரிந்துக்கொள்ளப்படும் அவரது போதனைகள் அனைத்தும், சுபாவத்தின்படியான மனிதனால் உணர்ந்துக் கொள்ளப்படும் நிலையிலும் காணப்பட்டது.

பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிற்பாடு, அதாவது பரிசுத்த ஆவி வந்திறங்கினப் பிற்பாடு கர்த்தரால் செய்யப்பட்டவைகளைக் காட்டிலும், கர்த்தருடைய ஜனங்கள் அவருடைய நாமத்தில், அவருடைய பிரதிநிதிகளாக இருந்து, பெரியதும், மிகவும் ஆச்சரியமானதுமான கிரியைகளைச் செய்தார்கள். கர்த்தர் குருடர்களின் கண்களைத் திறந்தார். ஆனால் அவருடைய பின்னடியார்கள் மனிதர்களுடைய புரிந்து கொள்ளுதலின் கண்களைத் திறப்பதற்குரிய சிலாக்கியத்தைப் பெற்றுக் கொண்டனர். கர்த்தர் சரீரத்தில் வியாதிப்பட்டவர்களைச் சொஸ்தப்படுத்தினார். ஆனால் அவருடைய சீஷர்கள் ஆவிக்குரிய நோய்களால் பாதிக்கப்பட்டவர்களைச் சொஸ்தப்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டார்கள். கர்த்தர் சரீரப்பிரகாரமான குஷ்டரோகத்தை சொஸ்தப்படுத்தினார். ஆனால் ஆவிக்குரிய குஷ்டரோகமாகிய பாவத்தைச் சொஸ்தப்படுத்துவதற்குரிய சிலாக்கியம், அவருடைய பின்னடியார்களுக்கு உரியதாய் இருக்கின்றது. நம்முடைய கர்த்தர் மரித்தவர்களை உயிர்ப்பித்தார். ஆனால் அநேகரை மேன்மையான அர்த்தத்தில் மரணத்தை விட்டு நீக்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கப்பண்ணும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்குரிய சிலாக்கியம், அவருடைய பின்னடியார்களுக்கு உரியதாய் இருக்கின்றது. இந்தப் பெரிய கிரியைகளுக்கான சிலாக்கியங்கள் இன்னும் கர்த்தருடைய ஜனங்களுக்குக் காணப்படுகின்றது. இந்தத் தங்களுடைய பெரிய ஆசீர்வாதங்களைப் புரிந்துக்கொண்டு, பிதாவின் வேலையில் ஊக்கத்துடனும், வைராக்கிய த்துடனும் ஈடுபட்டிருப்பவர்கள் நிச்சயமாக பாக்கியவான்களாக இருக்கின்றனர். R2453

## நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும் படியாக, அதைச் செய்வேன்.

**– யோவான் 14:13 –**

இன்னுமாக, சபை தொடர்புடைய அனைத்துக் காரியங்களிலும், தாம் தொடர்ந்து முழுமையாக பிதாவின் பிரதிநிதியாக இன்னும் காணப்படுவதை சுட்டிக்காட்டும் வகையில் நாம் தந்தையிடம் கேட்பது போன்றவற்றை பிதா குமாரனில் மகிமைப்படும்படி, அவர் **(இயேசு) நமக்காகச் செய்வார்** என்று நம் ஆண்டவர் உறுதியளிக்கிறார். அதாவது, பிதா அனைத்தையும் குமாரனுடைய கரங்களில் ஒப்படைத்துள்ளார்; ஆகிலும் குமாரன் எல்லாவற்றிலும் பிதாவை கனப்படுத்தி, அவருடைய நாமத்திற்கு மகிமை சேர்ப்பார் என்றும் நமக்கு உறுதியளிக்கிறார். R2453

## நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்க ளுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.

**– யோவான் 14:16 –**

நமது கர்த்தர் தம்முடைய மரணத்திற்கான நினைவுகூருதலை நிறுவும்போது, கலக்கமடைந்த தம்முடைய சீஷர்களுக்குத் தம்முடைய உரையைத் தொடர்ந்துகொண்டிருக்கையில், ஏற்றக்காலத்தில் அவர் திரும்பிவந்து அவர்களைத் தம்மிடத்தில் சேர்த்துக்கொள்வதாக மாத்திரம் அவர் வாக்களிக்காமல், தாம் இல்லாத

இடைப்பட்ட காலத்தில் பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனையும் வாக்களித்தார். பரிசுத்த ஆவி என்பது வேறொரு தேற்றரவாளன், எனினும் தேற்றுதல் ஒரே வகையில்தான் காணப்படும். இங்கு இடம்பெறும் “தேற்றுதல்” (comfort) என்ற வார்த்தையானது, இவ்வசனத்தின் கருத்தாகிய பலப்படுத்தலை, தக்கவைத்தலை சரியாக வெளிப்படுத்துகிறதில்லை. “தேற்றுதல்” எனும் வார்த்தை கொடுக்கும் அர்த்தத்தின்படி பரிசுத்த ஆவி என்பது, வேதனைகளைத் தேற்றுகிறவராகவும், பயங்களைத் தணிக்கிறவராகவும் மாத்திரம் காணப்படாமல், பரிசுத்த ஆவியானது அவர்களது புரிந்துக்கொள்ளுதலை உயிர்ப்பிக்கின்றதாகவும், அவர்களது பக்தி வைராக்கியத்தைப் பலப்படுத்துகின்றதாகவும், அவர்களை நீதியில் சரிச்செய்யத்தக்கதாகவும், அவர்கள் “ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தை” சுதந்தரித்துக்கொள்ளத்தக்கதாகவும் எனத் தெய்வீக வழிநடத்துதலானது அனுமதிப்பவைகளைச் செய்வதற்கும் மற்றும் சகிப்பதற்கும் அவர்களை உற்சாகப் படுத்துகின்றதாகவும் இருக்கின்றது. சபையினிடத்திற்கு வந்து, சபையோடு யுகம் முழுவதும் தங்கி, உண்மையு ள்ளவர்களின் நலனுக்கடுத்த விஷயங்களை மேற்பார்வையிட்டு வழிநடத்துகிறதாகிய பரிசுத்த ஆவி அல்லது பரிசுத்தமான செல்வாக்கு என்பது, பிதா மற்றும் குமாரன் இருவருடைய பிரதிநிதியாக இருக்கின்றது.

இவ்வாறு, பரிசுத்த ஆவியை, சத்தியத்தின் ஆவியை, அன்பின் ஆவியை, பிதாவின் ஆவியை, கிறிஸ்துவின் ஆவியைப் பெற்றவர்களே இயேசுவைப் பார்க்கவும், அவர்களில் ஒரு புதிய ஜீவியத்தை ஆரம்பிக்கவும் பெற்றிருக்கின்றனர். (வசனம் – 19.) இவர்கள் தங்களுடைய புரிந்துகொள்ளுதலின் கண்களினால் பார்க்கின்றனர் மற்றும் இருளில் நடப்பதுமில்லை. “இதுவே வழி, இதிலே நடவுங்கள்” என்று சொல்லும் கர்த்தருடைய சத்தத்தை இவர்கள் கேட்கின்றனர். தேவனுடைய நல்ல வார்த்தைகளை இவர்கள் ருசித்து, அவர் மிகவும் கிருபையுள்ளவராய் இருப்பதை உணர்ந்துக்கொள்கின்றனர். தங்களுடைய இருதயத்தில் தேவனுடைய அன்பு ஊற்றப்பட்டிருக்கிறதையும், அந்த அன்பு இவர்களுக்குள், சகோதரருக்கான அன்பை உண்டு பண்ணுவதையும், ஆவியின் அனைத்து நற்கனிகளை உண்டுபண்ணுகிறதையும் இவர்கள் உணருகின்றனர். அதாவது, சாந்தம், பொறுமை, நீடியப்பொறுமை, சகோதர சிநேகம் அன்பாகிய ஆவியின் கனிகளை உண்டுபண்ணுகிறதையும் இவர்கள் உணருகின்றனர். – ஏசாயா 30:21; 1 பேதுரு 2:3; ரோமர் 5:5; கொலோசெயர் 3:12-13. R2455

**நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன், உங்களிடத்தில் வருவேன்.**
**– யோவான் 14:18**



**நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்.என் கற்பனைகளை பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார். – யோவான் 14:20-21**

**இன்னும் கொஞ்சக்காலத்திலே உலகம் என்னைக் காணாது, நீங்களோ என்னைக் காண்பீர்கள்; நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள்.**
**– யோவான் 14:19 –**

நான் போகிறேன் என்று சொன்னபடியினால், அதாவது பிதாவினிடத்திற்குப் போகிறேன் என்று சொன்னபடியினால் நீங்கள் குழம்பிப்போயிருக்கிறீர்கள். ஆனால், நான் உங்களுடைய நன்மைக்காகவே

போகிறேன் என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். அநேக வாசஸ்தலங்களுள்ள என்னுடைய பிதாவின் வீட்டில் உங்களுக்கென ஒரு ஸ்தலத்தை ஆயத்தப்படுத்தும்படிக்கு போகின்றேன். இதை செய்த பிற்பாடு, நான் நிச்சயமாய் மீண்டும் வந்து நாம் என்றென்றும் சேர்ந்துக் காணப்படத்தக்கதாக, உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன் என்ற விதத்தில் இயேசு கூறினார்.

தெய்வீக சித்தத்திற்கு அவர் கீழ்ப்படிந்து, மனிதனாகிய கிறிஸ்து இயேசுவாகிய தம்மை, பலி செலுத்துவதன் மூலமாக ஆதாமையும், ஆதாமுடைய சந்ததியையும் மீட்டுக்கொள்வது மாத்திரமல்லாமல், தாம் மரணத்திலிருந்து மேலான தளத்திலுள்ள புதிய சுபாவத்திற்கு, திவ்விய சுபாவத்திற்கு உயர்த்தப்படுவதும் அவருக்கான நம்பிக்கையாய் இருந்தது. ஆகவே, கிறிஸ்து இயேசு எனும் மனிதனாகிய அவர், அவர்களை விட்டுக் கடந்துப்போவதும், அவரை மனுஷனாக அவர்கள் இனிமேல் காணாமல் இருப்பதும் அவசியமா யிருந்தது. ஆனால் ஏற்றவேளையில், அவருடைய இரண்டாம் வருகையின்போது, அவர்களும் மனித நிலைமையிலிருந்து, ஆவிக்குரிய நிலைமைக்கு மாறி, "அவர் இருக்கிற வண்ணமாகவே அவரை தரிசித்து அவருக்கு ஒப்பாயிருப்பார்கள்" –1 யோவான் 3:2.

இப்படியாக சொற்ப வார்த்தைகள் மூலம், ஆண்டவர் சுவிசேஷ யுகத்தின் பணியை விவரித்து, தம்முடைய இரண்டாம் வருகையைக் குறித்தும், யுகத்தின் முடிவில் சபையின் மகிமையடைதலைக் குறித்தும் சுட்டிக்காட்டினார். அவர்கள் கண்டிப்பாக கடந்துசெல்ல வேண்டிய பொறுமைக்கான மற்றும் விசுவாசத்திற்கான பரீட்சைகளைக் குறித்தும் இங்கு அவர் விவரமாய் விவரிக்கவில்லை. இவைகள் குறித்து வேறே தருணங்களில், எச்சரிப்பு கொடுத்துள்ளார் (மத்தேயு 24:1–51). இப்பொழுது அவர்களுடைய இருதயங்கள் கலக்கமடைந்துள்ளது. அவர் கடந்துபோவது அவசியம் என்றும், அவரது இரண்டாம் வருகை நிச்சயமாய்க் காணப்படுமென்றும், ஆயத்தம் பண்ணப்படும் வாசஸ்தலங்களில் நித்திய காலத்திற்குமான ஐக்கியத்திற்குள் அனைவரும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்பது நிச்சயமானது என்றும் உள்ள வாக்குத்தத்தங்களினால் அவர்களை அவர் ஆறுதல்படுத்த மாத்திரம் செய்பவராக இருந்தார். R2453

**இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம். – யோவான் 14:23**

## என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்.

**– யோவான் 14:26 –**

அவர்கள் உண்மையுள்ளவர்களாக இருந்தால், அவருடைய சிங்காசனத்தில் அவரோடுகூட அவர்கள் உட்காருவார்கள் என்று நம் போதகர் குறிப்பாக அவர்களுக்கு உறுதியளித்திருந்தார். இருப்பினும் அவருடைய இராஜ்ஜியம் ஆவிக்குரிய ஒன்றாக இருக்கும் என்றும், அதில் அவர்கள் பங்குபெறுவதற்கு முன் அவர்கள் முதலாம் உயிர்த்தெழுதலின் மாற்றத்தை அடைந்திருப்பது அவசியமாயிருக்கும் என்றும் அவர்களிடத்தில் கூறியிருக்கவில்லை. இராஜ்ஜியத்தில் அவர்கள் பங்குபெறுவதற்கும், அந்த இராஜ்ஜியம் மனுஷர் மத்தியில் ஸ்தாபிக்கப்படுவதற்கும் முன்பாக, ஒரு யுகத்தின் குறுக்கீடு இருக்கும் என்ற உண்மையை அவர்களுக்கு அப்போது அவர் தெளிவுபடுத்தவில்லை. ஆனால் இவை எல்லாவற்றையும் சூசகமாக காட்டியிருந்தார். "இன்னும் அநேகக் காரியங்களை நான் உங்களுக்கு சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்போது தாங்க மாட்டீர்கள். எனினும் சத்தியஆவி வரும்போது, அது என்னுடைய வார்த்தைகளை உங்கள் நினைவிற்கு கொண்டுவந்து, வரப்போகிற காரியங்களைப் பற்றி உங்களுக்கு அறிவிக்கும்" என்று கூறியிருந்தார். R5483

நாம் கர்த்தரால் பயன்படுத்தப்படுவதும், பரிசுத்த ஆவியின் ஜெநிப்பித்தல் மூலமாக அவருடைய குடும்பத்திற்குள் தத்தெடுக்கப்படுவதுமாகிய சிலாக்கியத்தின் மூலமாக, எத்துணை திருப்தியும், எத்துணை ஆறுதலும் கர்த்தருடைய ஜனங்களுக்குக் கடந்துவந்துள்ளது. பரிசுத்த ஆவியின் அபிஷேகமும், பிதா மற்றும் குமாரனுடைய பரிசுத்தமான செல்வாக்கும், ஆசீர்வாதமும், நம்முடைய கணிப்புகளையும், நம்முடைய இருதயங்களையும் வழிநடத்தி, வேதவாக்கியங்களை நமக்குத் திறந்துகாட்டி, பூமியின் சகல குடிகளுக்குமான நமது பிதாவின் இரட்சிப்புக்கு அடுத்த மகிமையான திட்டத்தினுடைய ஆழத்தையும், நீளத்தையும், அகலத்தையும், உயரத்தையும் அதிகமாய் உணர்ந்துக்கொள்ளும் நிலைக்கு நம்மைக்கொண்டுவந்து, நம்முடைய இருதயங்களைக் கொழுந்துவிட்டு எரியச்செய்கின்றது. நமது கர்த்தர் சொன்னதுபோல, உண்மையில் பரிசுத்த ஆவியானது, நமக்கு வரப்போகும் காரியங்களைக்காட்டி, நடந்து முடிந்தவைகளை நமக்கு விவரிக்கின்றதாய்க் காணப்படும். R4167

**சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக.**

**– யோவான் 14:27 –**

நமது கர்த்தர் தம்முடைய பூமிக்குரிய ஜீவியத்தின் கடைசி இரவில் மிகுந்த பரிவுடனும், கருணையுடனும் தம்முடைய பிரியமான சீஷர்களுக்கு, தம்முடைய இறுதி ஆசியாக, தமது சொத்தாக, சமாதானத்தை அருளினார். இது அவர் சீஷர்களுக்குக் கொடுத்திட்ட ஐசுவரியமான சொத்தாகவும், விலையேறப்பெற்ற ஒன்றாகவும் காணப்பட்டது. இது இயேசு தாமே பெற்றிருந்த அந்த ஆத்தும அமைதி, அந்த மன அமைதி, அதாவது தேவ சமாதானம் பற்றின வாக்குத்தத்தமாகும். இந்த ஒரு சமாதானமானது, தீமையின் அனுமதியினால் வந்திட்ட குழப்பங்கள் அனைத்தின் மத்தியிலுங்கூட தேவனால் எப்போதும் அனுபவிக்கப்பட்ட அதே சமாதானமாகும்; ஆனால் இந்த சமாதானமானது அதே ஆதாரத்திலிருந்து வரவில்லை. தேவனுடைய விஷயத்தில் இந்த சமாதானம், அவரிலேயே மையம் கொண்டிருந்தது; தேவன் தம்மிலே சர்வ வல்லமையையும் எல்லையைற்ற ஞானத்தையும், உணர்கிறார்; ஆனால் கிறிஸ்துவின் சமாதானமோ, அவரில் மையம் கொண்டிராமல் மாறாக தேவனுடைய ஞானத்தின் மீதும், வல்லமையின் மீதும், கிருபையின் மீதுமான விசுவாசத்தின் மூலமாக, தேவனிலேயே மையம் கொண்டதாய் இருக்கின்றது. ஆகவே நாமும் தேவனுடைய சமாதானத்தை, கிறிஸ்துவின் சமாதானத்தை ("என்னுடைய சமாதானம்") பெற வேண்டுமானால், அது அவரைப் போலவே, விசுவாசத்தின் மூலமாய்த் தேவனில் மையம் கொண்டிருக்கவேண்டும்.

நம்முடைய அருமையான மீட்பரினால் நமக்கு விட்டுச்செல்லப் பட்ட சமாதானம் மற்றும் அன்பாகிய சொத்து எவ்வளவு அருமையாகவும், எவ்வளவு ஆறுதலாகவும், சீஷர்களுடைய கலங்கின இருதயங்களுக்கு இருந்தது மற்றும் நமக்கு எவ்வளவு புத்துணர்வு அளிக்கின்றதாய் இருக்கின்றது. இது உலகத்தினுடைய சமாதானமல்ல, ஜாக்கிரதையற்றவர்கள் மற்றும் அலட்சியமானவர்களின் சமாதானமல்ல, சுயதிருப்திகொள்பவர்களின் சமாதானம் அல்ல, விதியை நம்புகிறவர்களின் சமாதானமல்ல மாறாக, இது கிறிஸ்துவின் சமாதானமாய் இருக்கின்றது. "என்னுடைய சமாதானம்" என்று ஆண்டவர் கூறுகின்றார். தேவனிடத்திலான இந்த சமாதானத்தை, எல்லா சூழ்நிலைகளிலும் ஆண்டவர் தக்கவைத்துக் கொண்டதை நாம் பார்க்கின்றோம். இந்த சமாதானமானது, தெய்வீக ஞானத்தை, அன்பை, நீதியை, வல்லமையை அப்படியே நம்புகின்ற சமாதானமாய் இருக்கின்றது; மற்றும் கர்த்தருடைய உண்மையுள்ளவர்களை எதுவும்

**பாதிப்பதில்லை என்றும், தேவனை அன்புகூருகின்றவர்களுக்கு அனைத்தும் நன்மைக்கு ஏதுவாக மாற்றப்படும் என்றும், கர்த்தருடைய உண்மையுள்ளவர்களுக்குப் பண்ணப்பட்ட கிருபையான வாக்குத்தத்தங்களை நினைவுகூருகின்ற சமாதானமாகவும் இருக்கின்றது. இந்த சமாதானத் தினால், தெய்வீக ஏற்பாட்டால் அனுமதிக்கும் எதையும் விசுவாசத்தின் மூலம் ஏற்றுக்கொள்ள முடியும்; மேலும் தற்கால சந்தோஷமும், சமாதானமும் முன் சுவைத்தலாக மாத்திரம் காணப்படும். கர்த்தரால் வாக்களிக்கப்பட்டுள்ள, முடிவில் வரும் ஆசீர்வாதங்களைக் கண்ணீர்கள் மத்தியில், மகிழ்ச்சியுடன் எதிர்ப்பார்த்திட இந்த சமாதானத்தினால் கூடும். R4817 & R2455**

## அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்.

**– மத்தேயு 26:30 –**

பின்னர், அவர்கள் ஸ்தோத்திரப் பாட்டைப்பாடி, ஒலிவ மலைக்கு, கெத்செமனே தோட்டத்திற்கும், அனைத்து சீஷர்களுக்குமான புதிய சோதனையினிடத்திற்கும் சென்றனர். ஒவ்வொரு நினைவுகூருதலின் காலங்களிலும், கர்த்தருக்கான நம்முடைய வாக்குறுதியை அடையாளமாய்த் தெரிவிக்கும் ஒவ்வொரு முறையும், கர்த்தருடைய ஜனங்களுக்குப் புதிய சோதனைகள், புதிய பரீட்சைகள், புதிய சலித்தெடுத்தல்கள் வருவதாக நமக்கு தோன்றுகிறது. யாரால் நிலைநிற்க முடியும்? நம்முடைய இரட்சகராகிய நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியைப் பற்றிக்கொண்டிருப்போமாக! மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களைப் பற்றிக்கொண்டிருப்போமாக! உண்மையுள்ள வார்த்தைகளைப் பற்றிக்கொண்டிருப்போமாக! நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாக! R3363

**கெத்செமனே தோட்டமானது காட்டு மரங்களையுடைய தோட்டமாகவோ அல்லது பொதுத் தோட்டமாகவோ இராமல் ஒலிவமரத் தோட்டமாயிருந்தது. இத்தோட்டத்தின் பெயரை வைத்துப்பார்க்கும்போது, இத்தோட்டத்திற்குள் ஓர் இடத்தில் ஒலிவ பழங்களிலிருந்து எண்ணெய் எடுப்பதற்குரிய, எண்ணெய் செக்குக் காணப்பட்டதும் புரிகின்றது. இந்தத் தோட்டம் மாற்குவினுடைய தாயாருக்குச் சொந்தமானது என்று அநுமானிக்கப்படுகின்றது. அவள் ஒரு செல்வந்த விதவை, இயேசுவின் தோழி எனப் பெயர் பெற்ற மாற்குவின் தாயின் வீடாக இருந்ததாகக் கருதப்படுகிறது. இவர்களுடைய வீடு, இந்தத் தோட்டத்திற்குள் ஓர் பக்கத்தில் காணப்பட்டிருக்க வேண்டும். இந்த இடம் இயேசுவினுடைய நண்பர்களுடைய கட்டுப்பாட்டிற்குள் காணப் படுகின்றது என்பதும், இயேசுவும் அவருடைய சீஷர்களும் அவ்விடத்திற்கு நன்கு அறிமுகமாக இருந்தார்கள் என்பதும் உறுதியே. நினைவுகூருதலின் போஜனம் புசித்த பிற்பாடு, நமது கர்த்தரும் அவருடைய சீஷர்களும் இத்தோட்டத்திற்கே வந்தார்கள். R3885**

நினைவுகூருதலின் இராப்போஜனத்தை நிறுவின பிற்பாடு, கர்த்தரைக் காட்டிக்கொடுப்பதற்கு எனப் புறப்பட்டுப் போய்விட்ட யூதாஸைத் தவிர, கர்த்தரும், அவருடைய சீஷர்களும் மேல் வீட்டு அறையிலிருந்து புறப்பட்டு, கெத்செமனே தோட்டத்திற்குப் போனார்கள். (இங்கேதான்) அவர் திராட்சச்செடியின் உவமையை அவர்களுக்குக் கூறினார். கர்த்தருடைய மற்ற உவமைகளைப் போலவே, இதுவும் அவர்கள் அனைவராலும் ஏதோ ஒன்றை வழியில் பார்த்து, இந்த உவமையின் காரியங்களைக் கூறினார் என சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர். போகும் வழியில் காணப்பட்ட திராட்சத்தோட்டங்களோ , அல்லது கர்த்தரும், சீஷர்களும் மாபெரும் பொன்னினால் செய்யப்பட்ட திராட்சச்செடியை உடைய ஆலயத்தின் பொன்னினாலான நுழைவாயிலை அநேகமாய்க் கடந்து போனதோ இவ்வுவமை பேசப்படுவதற்குத் தூண்டியிருக்கலாம். R3544

**நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத் தோட்டக்காரர். என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச் செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள். நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத் திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.**

**– யோவான் 15:1,4–5 –**

தாம் மெய்யான திராட்சச்செடியாக இருப்பதாகவும், தம்முடைய பிதா மெய்யான திராட்சச்செடியை நட்ட மெய்யான திராட்சத்தோட்டக்காரராக இருப்பதாகவும் மற்றும் தம்முடைய பின்னடியார்கள் அந்தத் திராட்சச்செடியின் மெய்யானக் கொடிகளாக இருப்பதாகவும் கர்த்தர் கூறுகின்றார். சிறிய முளையாகக் காணப்படுவதும் நல்லது, வாக்குத்தத்தின் மொட்டுகள் இருப்பது நல்லது, கொடியாக வளர்ந்து, கொடியானது கொடிச்சுருளைவிடுவதும் நல்லது. எனினும் கொடி பெரியதாகவோ (அ) சிறியதாகவோ, எவ்வளவு வயது முதிர்ந்ததாகவோ (அ) இளமையானதாகவோ காணப்பட்டாலும், கனிகளை உண்டுபண்ணும் உயிர்ச்சாறானது, திராட்சச்செடி மற்றும் வாக்குத்தத்தமாகிய அதன் வேருடன் தொடர்ந்து உறவு கொண்டிருப்பதன் மூலமாகக் கிடைக்கப்பெறும் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். ஒருவேளை உறவிலிருந்து பிரிந்து போவோமானால், அனைத்து நம்பிக்கைகளும் உலர்ந்து போய்விடும். நாம் கிறிஸ்துவுக்குள் காணப்பட்டால் மாத்திரமே மற்றும் அவர் மூலம் தேவனுடைய சுதந்தரர்களாய்க் காணப்பட்டால் மாத்திரமே நமக்கு இவ்விஷயத்தில் பங்கு காணப்படும். மேலும் இப்படியாக மாத்திரமே நம்மால் மாபெரும் தோட்டக்காரர் நாடும் கனிகளையும் கொடுக்க முடியும். இந்தக் கனிகள், அப்போஸ்தலரால் ஆவியின் கனிகள் என்று விவரிக்கப் படுகின்றது. திராட்சச்செடியின் ஆவியானது, அனைத்துக் கொடிகளிலும் ஊடுருவிட வேண்டும் மற்றும் திராட்சச்செடியின் கனிகளானது, ஒவ்வொரு கொடியிலும் காணப்பட வேண்டும். இந்த ஆவியின் கனிகள், சாந்தம், பொறுமை, நற்குணம், நீடிய பொறுமை, சகோதர சிநேகம், அன்பு என பட்டியலிடப்படுகின்றது. ஒருவேளை இவைகளெல்லாம் நம்மில் காணப்பட்டு, பெருகும்போது, இவைகள் நம்மை நமது கர்த்தரும், இரட்சகருமானவர் பற்றின அறிவில் வீணரும், கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார்.

திராட்சச்செடிக்கும் அதன் கொடிகளுக்கும் இடையே அப்படிப்பட்ட ஓர் ஒற்றுமை காணப்படுவதினால், நாம் ஒரு கொடியை எங்கெல்லாம் தொட்டாலும், நாம் திராட்சச்செடியையே தொடுகின்றவர்களாய் இருப்போம். அது கொடிகள் அடங்கிய ஒரு திராட்சச்செடியாகும்; இப்படியாகவே கிறிஸ்துவின் சரீரம் அநேக அங்கங்களை யுடைய ஒரே சரீரமாகக் காணப்படுகின்றது. எங்கெல்லாம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஓர் அங்கம் அல்லது ஒரு கொடி காணப்படுகின்றதோ, அங்குக் கிறிஸ்துவின் சகல பல்வேறு அம்சங்களும் காணப்படுகின்றது – ஆவியில், நோக்கத்தில், புதிய சிருஷ்டிகளெனக் காணப்படுகின்றது. கிறிஸ்துவில் உள்ள இந்த ஒற்றுமையே கொடிகளின் பலம், கனிகொடுத்தல் மற்றும் தோட்டக்காரராகிய பிதாவினால் ஏற்றுக்கொள்ளுதல் ஆகியவற்றுக்கான திறவுகோலாக/இரகசியமாகக் காணப்படுகின்றது. R3544 & R2464

**பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள்.**

**– யோவான் 15:9 –**

அன்பு சகல கிருபைகளுக்கும் கிரீடமாய், "நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாய்" இருக்கின்றது. ஊக்கமுள்ள, ஜ்வாலிக்கிற அன்பில்லாமல், நம்மால் கீழ்ப்படிதல் கொண்டிருக்கவோ அல்லது குணலட்சணம் வளருவதற்கும், உறுதியடைவதற்கும் வேண்டிய திவ்விய அன்பினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள பரீட்சைகளில்

நிலைநிற்கவோ முடியாது. தாம் பிதாவுக்குப் பிரியமுள்ள குமாரனென நமது கர்த்தர் நம்மிடம் கூறுகின்றார் மற்றும் “இவர் என் நேசகுமாரன் ” என்று பிதா தாமே கூறியுள்ளார்; நமது **கர்த்தர் இயேசு** ஏன் இவ்வளவாய் அன்புகூரப்பட்டார் என்பதை நம்மால் உடனே கண்டு கொள்ள முடிகின்றது; ஏனெனில் அவர் பிதாவின் அன்பினை முழுமையாய் வெளிப்படுத்தினவரானார் . ஆனால் அதே அன்பானது பிதாவினால் நம் மீதும் பாராட்டப்படுகின்றது என்பதை அறிகையில் , ஆச்சரியத்திற்குள்ளாகுகின்றோம் ! “நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்..” “பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்”!–1 யோவான 3:1; யோவான் 16:27.

பிரியமுள்ள குமாரனென, பிதாவின் அன்பில் தாம் நிலைத்திருப்பதற்கான காரணம் , பிதாவின் சித்தத்திற்கான தம்முடைய கீழ்ப்படிதலேயாகும் என்றும் , நாம் அவர் அன்பில் நிலைத்திருந்து, அவரது சிங்காசனத்திலும், மகிமையிலும் பங்கடைய வேண்டுமெனில், நாமும் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என எதிர்ப்பார்ப்பார் என்றும் நமது கர்த்தர் சுட்டிக்காட்டுகின்றார். - யோவான் 15:10. கர்த்தருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவதும், இன்னுமாக இதோடுகூட அவரிலும், அவரது வார்த்தைகளிலும் நிலைத்திருப்பதன் சிலாக்கியமும் தான், மாபெரும் சந்தோஷமென, அதாவது உலகம் அளிக்கும் அற்பத்தனமான இன்பங்கள் அனைத்திற்கும் அப்பாற்பட்ட சந்தோஷமென கர்த்தருக்கு நெருக்கமாய் ஜீவிப்பவர்கள் என்பதற்கு உறுதியான சான்று பகருபவர்கள் நன்கு அறிந்திருப்பார்கள் . இந்தச் சந்தோஷமும் , சமாதானமும் இருதயங்களை ஆளும் “எல்லாப் புத்திக்கும்மேலான தேவசமாதானமாய் ” இருந்து, இதனோடு “இந்த ஜீவனுக்கும் , இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும்” வாக்குத்தத்தத்தை மற்றும் உறுதியைக் கொண்டுவருகின்றதாய் இருக்கின்றது. – 1 தீமோத்தேயு 4:8. R5080

## நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்.

**– யோவான் 15:10 –**

வெறும் வெளிப்புற சம்பிரதாயமான கீழ்ப்படிதல் மற்றும் பக்தி ஆகியவைற்றை கர்த்தர் கணக்கில் எடுத்துக்கொள்வார் என்று இந்த வசனத்திலோ அல்லது வேறு எந்த வசனத்திலோ நமக்கு எந்த பரிந்துரையும் கொடுக்கப்படவில்லை. கர்த்தர் “தம்மை ஆராதிக்கிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்க வேண்டும் என்று விரும்புகிறார்” – அதாவது நீதியின் ஆவி, நீதியின் மீதான அன்பு, சத்தியத்தின் மீதான அன்பு, தெய்வீக குணாதிசயங்களின் அனைத்து பண்புகள் மீதான அன்பும், அதற்கு சிந்தனையிலும், வார்த்தையிலும், செயலிலும் இணங்க வேண்டும் என்கிற விருப்பமுடையவர்களை தேடுகிறார். நம்முடைய கர்த்தரால் குறிப்பிடப்பட்ட கட்டளைகள், தேவன் யூதர்களுடன் செய்த உடன்படிக்கையைச் சார்ந்திருக்கும் பத்துக் கட்டளைகள் என்று சிலர் நினைத்துக்கொண்டிருப்பத்தைப் போல தவறை நாமும் செய்யக்கூடாது. நாம் யூதர்கள் அல்ல, எனவே சீனாய் மலையில் அதன் மத்தியஸ்தரான மோசேயின் மூலம் கொடுக்கப்பட்ட அவர்களின் உடன்படிக்கைக்கும் அல்லது அதன் அடிப்படையில் உருவாக்கப்பட்ட நியாயப்பிரமாணத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை. நாம் கிறிஸ்தவர்கள், மேலும் நமது மத்தியஸ்தராகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தால் முத்திரையிடப்பட்ட ஒரு மேலான உடன்படிக்கைக்கு உட்பட்டுள்ளோம் மற்றும் பத்து கட்டளைகளை விட இன்னும் உயர்ந்த சட்டத்தின்/பிரமாணத்தின் - அடிப்படையில் இருக்கிறோம். “நீ இதைச் செய்யாதே” “நீ அதைச் செய்யாதே” என்று சொல்வதற்குப் பதிலாக, இது ஒரு நேர்மறையான சட்டமாக இருக்கிறது. மேலும் நாம் என்ன செய்யவேண்டும் என்பதை இப்படியாக வலியுறுத்துகிறது, “உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழு பலத்தோடும் அன்புகூருவாயாக மற்றும் உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே”. இது ஒரு உயர்ந்த சட்டமாகும். இதைக் குறித்து நமது சட்டங்களை வழங்குபவரான இயேசு “நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற

புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்" என்று கூறினார். மேலும் "அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது" என்று அப்போஸ்தலர் கூறினார். மேலும் அப்போஸ்தலர் யோவான் "அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான்; அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார்" என்று கூறுகிறார். - 1 யோவான் 4:8, 1 யோவான் 4:16 , R2648

## ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை.

**– யோவான் 15:13 –**

தேவனுடைய கற்பனை நீதியை மாத்திரமல்ல அன்பையும் சேர்த்து செய்யும்படி கோருகிறது என்பதை கவனிக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக தேவனிடம் அன்பு செலுத்த வேண்டும், சகமனிதர்களிடமும் அன்பு செலுத்த வேண்டும். அதற்கு இரக்கமும் தயவும் தேவைப்படுகிறது. இதே வரிசையில் நியாயப் பிரமாணத்தின் கீழாக கட்டளைகளை தேவன் மாம்சீக இஸ்ரயேலருக்குக் கொடுத்தார் என்பதை நாம் கவனிப்போமாக. இது எந்த அளவுக்கு அவர்களுக்கு தாக்கத்தை உண்டாக்கியிருக்கிறது என்பதை நாம் பார்க்கலாம். உன் சத்துருவின் மாடாவது அவனுடைய கழுதையாவது தப்பிப் போகக் கண்டால், அதைத் திரும்ப அவனிடத்தில் கொண்டு போய் விடுவாயாக. உன்னை பகைக்கிறவனுடைய கழுதை சுமையோடே விழுந்துகிடக்கக் கண்டாயானால், அதற்கு உதவி செய்யாதிருக்கலாமா? அவசியமாய் அவனோடே கூட அதற்கு உதவி செய்வாயாக. உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்குப் புசிக்க ஆகாரங்கொடு; அவன் தாகமாயிருந்தால், குடிக்கத் தண்ணீர் கொடு. அதினால் நீ அவன் தலையின் மேல் எரிகிற தழல்களைக் குவிப்பாய்; கர்த்தர் உனக்குப் பலனளிப்பார். (யாத் 23:4,5; நீதி 25: 21,22) அன்பானது இவ்வளவு பரந்தும் விசாலமாகவும் தேவனுடைய பிரமாணத்தால் கோரப்படுகிறது. மேலும் மாம்சீக இஸ்ரயேலர் மேல் அது கட்டாயமாக இருக்கும்போது, ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் எந்த அளவுக்கு இந்த உயர்ந்த குணத்தை பெற்றிருந்து வெளிப்படுத்த வேண்டும்!

மகா பெரிய இரட்சிப்பின் திட்டத்தில் வெளிப்படுத்தப்பட்ட தேவன் மற்றும் கிறிஸ்துவின் அன்பு ஒரு தியாக அன்பு. ஆகையால் கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக அழைக்கப்பட்டவர்கள் இப்படிப்பட்ட அன்பை உடையவர்களாக இருக்க வேண்டும். பல்வேறு சுபாவங்களில் உள்ள ஜீவிகளில் வைக்கப்பட்டுள்ள இந்த அன்பு, தேவனுடைய பூரண பிரமாணம் கேட்கிற அன்பல்ல, அதற்கும் மேலான அன்பாகும். கிறிஸ்துவின் மரணத்தால் விலை கொடுத்து வாங்கப்பட்ட இந்த ஜீவனை மகிழ்ச்சியுடன் கொடுக்கிற ஒரு அன்பாக இது இருக்கிறது. இந்த ஜீவன் தங்கள் கர்த்தரும் தலையுமானவரோடு கூட ஒரு தியாக பலியாக வைக்கப்பட்டுள்ளது. ஊழியத்தில் சகோதரருக்காக நமது ஜீவனை கொடுக்கிறோம். கிறிஸ்துவின் பலியின் புண்ணியம் நம்மேல் சாற்றப்பட்டு, நாம் தேவனுக்கு முன்பாக பூரணராக எண்ணப்படும்படி செய்யப்படுவதால் இந்த பலி ஏற்புடையதாக இருக்கிறது. அப்போஸ்தலர் கூறுவது போல், "நாம் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்க கடனாளிகளாயிருக்கிறோம்". சகோதரர்கள் நமது ஜீவனைக் கேட்கமாட்டார்கள், நாமும் அவர்களது ஜீவனைக் கேட்க மாட்டோம்; ஆனால் நமக்கு சந்தர்ப்பம் இருப்பதால் நாம் இதை எல்லாரும் சந்தோஷமாக செய்ய வேண்டும். – 1 யோவான் 3:16. R5643

## நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துகொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது.

**– யோவான் 15:19 –**

நம்முடைய கர்த்தர் விளக்கியது போல், பாவம் மற்றும் தப்பறையின் இருள் சத்தியத்தின் ஒளிக்கு நேர் விரோதமானதாக இருக்கிறது. இதன் விளைவாக அவருடைய ஜனங்கள் ஒளியை உயர்த்தும் போது– அவர்களை "அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு" வரவழைத்த

“பரலோகத்திலிருக்கிற தங்கள் பிதாவை மகிமைப்படுத்த அவர்களின் ஒளி பிரகாசிக்கபடக்கடவது”, – இது இயல்பாகவே இருளுடன் இணைந்திருப்பவர்களிடையே எதிர்ப்பையும் அமைதியின்மையையும் தூண்டுகிறது. இதன் விளைவாக, இருள், தீமை மற்றும் பாவத்தை அதன் பல வடிவங்களில் விரும்புவோர், ஒளியை வெறுத்து, அதற்கு வருவதைத் தவிர்க்கிறார்கள். ஆனால், அவர்கள் ஒளியின் பிள்ளைகளை - அறிவூட்டப்பட்டவர்களை – ஒளியை சுமப்பவர்களை – வெளிப்படையாகவோ அல்லது இரகசியமாகவோ எதிர்க்கிறார்கள். மேலும், தார்மீக மாசுபாட்டின் தீவிர இருளிலிருந்து நாகரீக சீர்திருத்தம் மற்றும் தார்மீக முன்னேற்றத்தின் ஒரு நிலைக்கு வந்தவர்களும் (ஒரு வகையில் வெளியேறியவர்கள் கூட), உண்மையான நற்செய்தியின் தெளிவான, தேடும் ஒளியைத் தாங்க முடியாது. அவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவிலான இருளில் இருக்க விரும்புகிறார்கள் – யோவான் 3:20. ஒளிக்கும் இருளுக்கும் இடையிலான போராட்டத்தின் விளைவாக, நமது ஆண்டவர் ஒளியின் பிள்ளைகள் தேவனின் பிள்ளைகள் என்று கூறிக் கொண்டவர்களின் கைகளில் துன்பப்பட்டார் அவர்களிடத்தில் குறைந்தபட்சம் ஒரு சிறிய வெளிச்சம் இருந்தது. இதேபோல், இந்த சுவிசேஷ யுகம் முழுவதும், உலகில் பிரகாசமாக பிரகாசித்துக் கொண்டிருப்பவர்கள் பெரும்பாலும் (கிட்டத்தட்ட பிரத்தியேகமாக) சிறிய வெளிச்சம் உடையவர்களால் வெறுக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டனர். ஆனால் கர்த்தரின் முழுமையான அர்ப்பணிக்கப் பட்டவர்கள் மூலம் பிரகாசிக்கும் பரிசுத்த ஆவியின் பிரகாசமான ஒளியுடன் ஒப்பிடும்போது அவர்களின் சிறிய ஒளி மங்கலாக அல்லது இருளாக இருந்தது. “அவர்கள் என்னைப் பகைத்தால் உங்களையும் பகைப்பார்கள்” என்ற நமது ஆண்டவரின் வாக்கு இவ்வாறு நிறைவேறியது. R4813

**ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள்; அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்டதுண்டானால், உங்கள் வசனத்தையும் கைக்கொள்ளுவார்கள். அவர்கள் என்னை அனுப்பினவரை அறியாதபடியினால் என் நாமத்தினிமித்தமே இவைகளையெல்லாம் உங்களுக்குச் செய்வார்கள். – யோவான் 15:20–21**

**அதுபோல நீங்களும் இப்பொழுது துக்கமடைந்திருக்கிறீர்கள். நான் மறுபடியும் உங்களைக் காண்பேன், அப்பொழுது உங்கள் இருதயம் சந்தோஷப்படும், உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடத்திலிருந்து எடுத்துப்போடமாட்டான்.**

**– யோவான் 16:22 –**

நம்மிடமிருந்து யாராலும் எடுக்க முடியாத சந்தோசம் என்ன?, மற்றும் எந்த துன்புறுத்தல், துன்பம், பிரச்சனை மற்றும் தொல்லைகள் ஆழமடைந்து விரிவடைந்து மேலும் இனிமையாக மாறும்? அப்பேற்பட்ட சந்தோசம் என்ன? இந்த சந்தோசம் வரவிருக்கும் ஆசீர்வாதங்களின் முன்னறிவிப்பாகும் (foretaste–முன்னணி சுவை), நமது சுதந்திரத்தின் உத்தரவாதமாக இருக்கிறது. நாம் விசுவாசித் திருக்கிறவரில் வைத்திருக்கும் நம்பிக்கையினால் தூண்டப்படுகிறது, அவர் தொடங்கியுள்ள வேலையை முடிக்க அவர் வல்லவரும் மற்றும் விருப்பமுள்ளவராகவும் இருக்கிறார் என்ற நம்பிக்கை அவரது சொந்த வழியில்/சிறந்த வழியில் முழுமை படுத்தபடும்: நம்முடைய விசுவாசத்தின் கரங்களால் மூலம் அவருடைய கிருபையான வாக்குத்தத்தங்களை நாம் உறுதியாகப் பற்றிக்கொண்டிருக்கும் வரை, அவர் நம்மை அவரிடமிருந்து பிரிக்க அனுமதிக்கமாட்டார் என்னும் நம்பிக்கை. கிறிஸ்துவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவர் யார்? உபத்திரவமா, துன்புறுத்தலா? “பிதாவின் கையிலிருந்து நம்மை யாரும் பறிக்க முடியாது” என்பதும், “பிதா தாமே நம்மை நேசிக்கிறார்” என்பதும், அவருடைய அன்பில் கீழ்ப்படிதலுடன் நிலைத்திருக்க நாம் விரும்பும் வரை நம்மை

நிராகரிக்க மாட்டார் என்பதும் நமது நம்பிக்கை. ஆம், உண்மையில் தேவனை நேசிப்பவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்றும், நமக்கு எதிராக இருப்பவர்களை விட நமக்காக இருப்பவர் அதிக வல்லமையுள்ளவர் என்று விசுவாசிக்கிறோம். இந்த நம்பிக்கையானது உலகத்தின் புரிதலுக்கு அப்பாற்பட்ட சந்தோஷத்தையும், மேலும் இதயத்தைக் காக்கும் எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தை தரும் என்பதும் உறுதி. R2232

## இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்.

**– யோவான் 16:24 –**

ஒரு சமயத்தில் நமது கர்த்தர் சொன்னதாவது: “பூமிக்குரிய பெற்றோர்கள் நல்ல ஈவுகளை கொடுக்கும்பொழுது, பரம பிதாவானவர் தம்மிடம் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு பரிசுத்த ஆவியை கொடுப்பது அதிக நிச்சயமல்லவா.” (லூக்கா 11:18) ‘பரிசுத்த ஆவியைக் கொடுங்கள்’ என்ற வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும் என்றோ, நல்ல எண்ணங்கொண்ட சில நண்பர்கள் பெந்தேகொஸ்தே ஆசீர்வாதத் திற்காக ஜெபிப்பது போல நாம் ஜெபிக்க வேண்டும் என்றோ நமது ஆண்டவர் கூறவில்லை. ஆனால் நாம் சத்திய ஆவிக்காக, தெளிந்த புத்திக்காக, பரத்திலிருந்து வருகிற ஞானத்திற்காக ஜெபிக்க வேண்டும் என்று கூறினார். நமது காரியங்களை சரியாக வழிநடத்தும் அளவுக்கு நாம் புத்திசாலிகள் அல்ல. நாம் போதிக்கப்பட்டுள்ளதாவது: “உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்.” (யாக்கோபு 1:5) நம் வாயின் வார்த்தைகளும், நம் இருதயத்தின் தியானமும் தேவனுடைய பார்வையில் அங்கீகரிக்கதக்கதாக இருப்பதற்கு, தேவனுடைய ஊழியக்காரர்களாகிய நமக்கு இந்த ஞானம் விசேஷமாகத் தேவையானதாகக் காணப்படுகிறது. – சங்கீதம் 19:14.

நமது கர்த்தர் தமது சீஷர்களுக்கு போதித்ததாவது: “என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதீர்கள். (இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித் தேடுகிறார்கள்) இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரம பிதா அறிந்திருக்கிறார்” (மத்தேயு 6:31,32). நாம் உலகத்திலிருந்து வேறுபட்டு இருக்க வேண்டும் என்பதை அவருடைய வார்த்தைகள் உணர்த்துகின்றன. கற்பனை செய்யக்கூடிய ஒவ்வொரு ஆசீர்வாதத்தையும் கேட்கவும் ஜெபிக்கவும் அவர்கள் தயாராக இருப்பார்கள் – வெவ்வேறு வகையான உணவுகள், வீடுகள், பணம் மற்றும் தேவையான எல்லாவற்றிற்காகவும்! ஆவிக்குரிய காரியங்களுக்காக அவர்கள் ஜெபிக்க மாட்டார்கள், ஏனென்றால் அந்த ஈவுகளை அவர்கள் உணரமாட்டார்கள். அவர்களைப் போல நாம் இருக்கக்கூடாது. R5202.

## நீங்கள் என்னைச் சிநேகித்து, நான் தேவனிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேனென்று விசுவாசிக்கிறபடியினால் பிதாதாமே உங்களைச் சிநேகிக்கிறார்.

**– யோவான் 16:27 –**

ஒரு அன்பான மற்றும் அங்கீகரிக்கும் தந்தையின் உண்மையான மகன் இயல்பாகவே ஆழமான, மென்மையான உணர்ச்சிகளை உணருவான். விசேஷமாக, அனைத்து கிருபையின் பரிபூரணத்தையும், அனைத்து சிறப்புகளுக்குமான மகுடமான மகிமையையும் தனது பரலோகத் தந்தையில் கண்டு உணர்ந்து, அவருடன் நெருங்கிய தொடர்பில் மற்றும் ஐக்கியத்தில் வாழ்ந்து, மேலும் அவருடைய அன்பிற்கும், அங்கீகாரத்திற்கும் தனக்குள்ளேயே நிலையான சாட்சியைக் கொண்டிருக்கும் ஒரு உண்மையான தேவனுடைய குமாரனுடைய விஷயத்தில் இது உண்மையாகவே இருக்கும். (இது – இயல்பாகவே ஆழமான, மென்மையான உணர்ச்சிகளை உணரும் தன்மை)

ஆ, “பிதா தாமே உங்களை நேசிக்கிறார்” “ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்” என்று நமது ஆசீர்வதிக்கப்பட்ட கர்த்தராகிய இயேசு சொன்னது வெற்று வார்த்தைகள் அல்ல (யோவான் 16:27; 14:23). அத்தகைய நிலைமைகளின் கீழ்தான் அன்பு, கனிவு, விசுவாசம், நன்றியுணர்வு மற்றும் துதி போன்ற பரிசுத்த உணர்ச்சிகள் நம் மகிழ்ச்சியின் கோப்பையை விளிம்பு வரை நிரப்புகின்றன மற்றும் தூய்மையான பரவசத்துடன், “என் பாத்திரம் நிரம்பி வழிகிறது. என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்” என்று பாடுவோம்.

தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? இதைவிட வலிமையான வழியில் அவரால் தன் அன்பை வெளிப்படுத்த முடியுமா? அவரது மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களில் நமக்கு நம்பிக்கையை அளிக்கும் அனைத்து மகிமையான விஷயங்களையும் அவர் எந்த அளவுக்கு சுதந்திரமாக நமக்கு அளிப்பார் என்பதற்கான வேறு ஏதேனும் பலமான சான்றுகளை அவர் நமக்கு காட்ட முடியுமா? நம் விசுவாசத்தை இன்னும் முழுமையாக உறுதிப்படுத்த வேண்டுமானால், “பயப்படாதே, சிறு மந்தையே, உங்களுக்கு இராஜ்ஜியத்தைக் கொடுப்பதில் பிதா சித்தமாயிருக்கிறார்;” “ஏனெனில் பிதா தாமே உங்களை நேசிக்கிறார்” என்ற நம் அன்பான கர்த்தரின் வார்த்தைகளை நினைவு கூருவோமாக. – லூக்கா 12:32; யோவான் 16:27. R1914 & R1141

**நான் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு உலகத்திலே வந்தேன்; மறுபடியும் உலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகிறேன் என்றார்.**
**– யோவான் 16:28**

**என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்.**
**– யோவான் 16:33**

நமது ஆண்டவரின் வார்த்தைகள் கடந்த பதினெட்டு நூற்றாண்டுகளாக அவருடைய ஜனங்களுக்கு ஆறுதல் அளித்தது போல், நமக்கும் ஆறுதல் அளிக்க வேண்டும். அவர் மிகுந்த ஆர்வத்துடன் நம்முடைய பயணத்தை கவனிக்கிறார், நாம் மகிமையில் அவருடன் ஒன்றாக இணையும் நேரம் நெருங்குவதால் நம்முடன் மகிழ்ச்சியடைகிறார். அவருடைய அன்பின் நிமித்தம், சத்தியத்தின் நிமித்தம் நாம் மகிழ்ச்சியுடனும், அன்புடனும் தாங்கும் ஒவ்வொரு சோதனையும், அவருக்கு நம்மை மேலும் அன்பாக ஆக்குகிறது. மேலும் நம்மை நெருங்கிய ஒற்றுமைக்கும் ஐக்கியத்திற்கும் கொண்டு வருகிறது.

வாக்களிக்கப்பட்ட சமாதானமானது உலகத்தில் சில நேரங்களில் மட்டுமே அனுபவிக்கப்படும் தற்காலிக சமாதானமல்ல, அது குறுகிய காலத்திற்கு மட்டுமே அனுபவிக்கப்படுகிறது. ஆனால், “என் சமாதானம்” என்ற தேவ சமாதானம், கிறிஸ்து தாமே விசுவாசத்தினாலே அனுபவித்த சமாதானம் ஆகும்; அவர் ஐஸ்வரியமுள்ளவராயிருந்தும் நம் நிமித்தம் தரித்திரரானார்; (2 கொரி. 8:9) அவர் தம்முடைய நண்பர்களை ஒன்றன் பின் ஒன்றாக இழந்தார்; அவரது இறுதிவேளையில், அவருக்கு இருந்த கொஞ்சமானவர்களும், அவரை விட்டுவிட்டுப் போய்விட்டார்கள்; இழப்புகளின் மத்தியிலும், துன்புறுத்துதல்களின் மத்தியிலும், ஏளனங்களின் மத்தியிலும், இகழ்ச்சிகளின் மத்தியிலும், சிலுவையினுடைய வேதனைகளின் மத்தியிலும் கூட அவரது சமாதானம் நிலைத்திருந்தது. இந்தவொரு சமாதானத்தை தற்கால ஜீவியத்தின் எந்தக் காரியங்களினாலும் அழித்திடமுடியாது. மற்ற எந்தச் சத்துருவும் இந்த சமாதானத்தை நம்மிடமிருந்து பறிக்க முடியாது.

வாக்களிக்கப்பட்டுள்ள சமாதானமானது, உலகத்தினால் அடையாளம் கண்டுகொள்ளவோ, உணர்ந்துகொள்ளவோ முடியாத ஒன்றாகும்; ஏனெனில் இச்சமாதானத்தை பெற்றிருப்பவர்கள், கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் போலவே புயல் நிறைந்த பாதையை பெற்றிருப்பார்கள். அவர்கள் வெளிப்புற சமாதானத்தை அனுபவிக்கவில்லை. அவர்கள் ஒவ்வொரு பக்கத்திலும் துன்பங்களும் தொல்லைகளும் சந்தித்தார்கள், துரத்தப்பட்டார்கள், ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு தப்பிச் செல்ல வேண்டியிருந்தது; பழைய (சுவிஷேசயுக சபை) பரிசுத்தவான்களில் சிலர் கல்லெறிந்து கொல்லப்பட்டனர்; சிலர் துண்டு துண்டாக வெட்டப்பட்டனர். ஆனாலும் அவர்களுடைய இருதயங்களில் நிறைந்திருந்த தேவ சமாதானம், இந்தச் சோதனைகளையெல்லாம் சந்தோஷமாகச் சகிக்க அவர்களுக்கு உதவியது. உண்மைதான், தீமையை அனுமதிப்பதிலுள்ள தேவனுடைய நோக்கங்கள் நிறைவேறி முடிவதுவரையிலும், உண்மையுள்ளவர்கள் அனைவரின் விஷயத்திலும் இப்படிப் புயல் நிறைந்த பாதைகளே காணப்படும்; எனினும் அனைத்துப் புயல்களின் மத்தியிலும், இந்தச் சமாதானம் நிலைத்திருக்கும் என்ற வாக்குறுதியுடன் முன்னெச்சரிப்பு வழங்கப்பட்டிருக்கிறோம்; “உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு,” ஆனாலும் “என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன் என்றார்” (யோவான் 16:33). வாக்குறுதியளிக்கப்பட்ட இந்த உதவியைக் கருத்தில் கொண்டு, “திடன்கொள்ளுங்கள்” என்று நாம் அறிவுறுத்தப்படுகிறோம். “நமக்கு விரோதமாய் இருக்கிற எல்லாரை பார்க்கிலும் நமக்கு ஆதரவாய் இருக்கிறவர் பெரியவர்”. எதிர்காலத்தில் வெற்றி நமக்கு உறுதியானது மட்டுமல்ல, இன்னும் குறிப்பிடத்தக்க வகையில், தற்போதைய தருணத்தில் நாம் ஏற்கனவே அதை வைத்திருக்கிறோம். “எதுவும் உங்களுக்கு எந்த வகையிலும் தீங்கு செய்யாது”. நமக்குத் தீங்கிழைப்பதாக மற்றவர்களுக்குத் தோன்றுவது, தெய்வீக மேற்பார்வையின் கீழ், நமக்கு ஆசீர்வாதமாகவே மாறும். R847, R4417 & R4817

# இயேசு தனது உண்மையுள்ள பின்னடியாளர்களுக்காக ஜெபித்தல்

நமது ஆண்டவர் தம்முடைய சீஷர்களை விட்டு பிரியப்போகும் நிலையில் அவர்களுக்காக செய்த இந்த ஜெபத்தில் மனதை தொடும் கருணை இருக்கிறது, இது அவருடைய அன்பான இதயத்திற்கு நம்மை மிகவும் நெருக்கமாக இழுக்கிறது. நமது ஆண்டவர் காட்டிக்கொடுக்கப்பட்ட அந்த இராத்திரியில் சொன்ன இந்த வார்த்தைகளை நாம் நினைவில் கொள்கிறோம். பரிசுத்த யோவான் எழுதிய சுவிசேஷத்தின் 17–வது அத்தியாயத்தில் பதிவு செய்யப்பட்ட இந்த ஜெபம், நினைவுகூரும் இராப்போஜனத்திலிருந்து கெத்செமனே தோட்டத்திற்குச் செல்லும் வழியிலேயே ஏறெடுக்கப்பட்டது. இந்த ஜெபம் அப்போஸ்தலர்களுக்காகவும், கர்த்தருடைய வார்த்தையின் மூலம் அவருடைய சீடர்களாக அல்லது பின்பற்றுபவர்களாக மாற வேண்டிய அனைவருக்காகவும் உள்ளதென்பதை ஜெபத்திலிருந்து நாம் தெளிவாக அறிந்துகொள்கிறோம். அவர் பன்னிரண்டு அப்போஸ்தலர்களுக்காகவும், குறிப்பாக அந்த நேரத்தில் பதினொருவருக்காகவும் ஜெபித்தார், ஏனெனில் அவர், “கேட்டின் மகனைத் தவிர, அவர்களில் யாரையும் நான் இழக்கவில்லை” என்று கூறினார். ஆனால், அவருடைய ஜெபம் முழு யுகத்திலும் அவரை உண்மையாக பின்பற்றுபவர்களையெல்லாம் உள்ளடக்குவதாக இருப்பதை சூழ்நிலையின் பின்னணி காட்டுகிறது. “நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்” என்று அவர் கூறினார். அவரும் அவருடைய பிதாவும் ஒரே மாதிரியான ஒற்றுமையுடன், மனம் மற்றும் நோக்கத்தில் ஒன்றாக இருப்பதுபோல, தம்மைப் பின்பற்றுபவர்களும் ஒன்றுபட வேண்டும் என்று அவர் ஜெபித்தார்.

திருச்சபையைப் பற்றிய கர்த்தரின் உணர்வுகளின் இந்த அழகிய வெளிப்பாட்டை நாம் கருத்தில் கொள்ளும்போது, தெய்வீக குடும்பத்தின் ஆசீர்வதிக்கப்பட்ட ஒருமைப்பாட்டின் மகிமையின் ஒரு பார்வை நமக்குக் கிடைக்கிறது. இதுவே நோக்கத்தின் ஒற்றுமை, நம்பிக்கையின் ஒற்றுமை, அனுதாபத்தின் ஒற்றுமை, அன்பின் ஒற்றுமை, கனத்தின் ஒற்றுமை மற்றும் பரஸ்பர உடைமையின் ஒற்றுமை ஆகும். இந்த ஒருமைப் பாடு, தமக்கும் தந்தைக்கும் இடையே ஏற்கனவே இருப்பதாக நமது ஆண்டவர் விவரித்தார். எவ்வா றாயினும், அவருடைய சீடர்களைப் பொறுத்தவரை இது இன்னும் எதிர்காலத்தின் வாய்ப்பாகவே உள்ளது. இந்த ஒருமைப்பாட்டை முழுமையாக அடைவதே, நம்மால் அடையவேண்டிய இலட்சியமாகக் கற்பிக்கப்படுகிறது. இந்த இலட்சியத்தை அடைய, இந்த முன்மாதிரியான ஒருமைப்பாட்டை நாம் இன்னும் நெருக்கமாகவும் கவனமாகவும் படித்து புரிந்து கொள்வோமாக. R3160, R5319 & R5358



**யோவான் 17 அதிகாரம்**

**1. இயேசு இவைகளைச் சொன்னபின்பு தம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்து:**
**2. பிதாவே, வேளை வந்தது, நீர் உம்முடைய குமாரனுக்குத் தந்தருளின யாவருக்கும் அவர் நித்தியஜீவனைக் கொடுக்கும்பொருட்டு மாம்சமான யாவர்மேலும் நீர் அவருக்கு அதிகாரங்கொடுத்தபடியே, உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்.**
**3. ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்.**
**4. பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன்.**
**5. பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்.**
**6. நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன். அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர், அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள்.**
**7. நீர் எனக்குத் தந்தவைகளெல்லாம் உம்மாலே உண்டாயினவென்று இப்பொழுது அறிந்திருக்கிறார்கள்.**
**8. நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்; அவர்கள் அவைகளை ஏற்றுக்கொண்டு, நான் உம்மிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேன் என்று நிச்சயமாய் அறிந்து, நீர் என்னை அனுப்பினீர் என்று விசுவாசித்திருக்கிறார்கள்.**
**9. நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்களே.**
**10. என்னுடையவைகள் யாவும் உம்முடையவைகள், உம்முடையவைகள் என்னுடையவைகள்; அவர்களில் நான் மகிமைப்பட்டிருக்கிறேன்.**
**11. நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள்; நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்.**
**12. நான் அவர்களுடனேகூட உலகத்திலிருக்கையில் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொண்டேன்; நீர் எனக்குத் தந்தவர்களைக் காத்துக்கொண்டுவந்தேன்; வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக, கேட்டின் மகன் கெட்டுப்போனானேயல்லாமல், அவர்களில் ஒருவனும் கெட்டுப்போகவில்லை.**

**13. இப்பொழுது நான் உம்மிடத்திற்கு வருகிறேன்; அவர்கள் என் சந்தோஷத்தை நிறைவாய் அடையும்படி உலகத்தில் இருக்கையில் இவைகளைச் சொல்லுகிறேன்.**
**14. நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன்; நான் உலகத்தானல்லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல; ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது.**
**15. நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.**
**16. நான் உலகத்தானல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல.**
**17. உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்.**
**18. நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன்.**
**19. அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்.**
**20. நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.**
**21. அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.**
**22. நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்.**
**23. ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.**
**24. பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன்.**
**25. நீதியுள்ள பிதாவே, உலகம் உம்மை அறியவில்லை, நான் உம்மை அறிந்திருக்கிறேன்; நீர் என்னை அனுப்பினதை இவர்களும் அறிந்திருக்கிறார்கள்.**
**26. நீர் என்னிடத்தில் வைத்த அன்பு அவர்களிடத்திலிருக்கும்படிக்கும், நானும் அவர்களிலிருக்கும்படிக்கும், உம்முடைய நாமத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்; இன்னமும் தெரியப்படுத்துவேன் என்றார்.**

**இயேசு இவைகளைச் சொன்னபின்பு தம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்து.**

**– யோவான் 17:1 –**

முதலாவதாக, தந்தை மற்றும் மகன் இருவருக்கும் பொதுவான ஒரே நோக்கம் – தந்தையின் நோக்கம் என்பதை நாம் கவனிக்கிறோம். பிதாவின் நோக்கம் ஏற்ற வேளை மற்றும் ஏற்ற முறையில் குமாரனுக்கு படிப்படியாக வெளிப்படுத்தப்பட்டது, பிறகு இந்நோக்கம் குமாரனும் ஏற்றுக்கொண்டு பின்பற்றி, அவரது நோக்கமாகவும் ஆனது. “அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார்.” (மாற்கு 13:32), என்று இயேசுவே சொன்னதிலிருந்து, அந்தத் திட்டம் படிப்படியாக அவருக்கு வெளிப்படுத்தப்பட்டது என்பது தெளிவாகிறது. ஒவ்வொரு அம்சமும் அவரின் சொந்த செயல்கள் மற்றும் கருவிகளின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய நேரம் வந்தபடியால், அதன் பல்வேறு அம்சங்களைப் பற்றிய அறிவுக்கு அவர் வழிநடத்தப்பட்டார். இவ்வாறு, அவர் அறிவில் வளர அனுமதிக்கப்பட்டார்; மேலும், அதேபோல, தெய்வீகத் திட்டத்தின் பாதையில் இருந்த அடுத்தடுத்தப் பிரச்சனைகளின் துன்பகரமான காட்சிகளைப் பார்ப்பதிலிருந்து அவர் காப்பாற்றப்பட்டார். இந்த வகையில், அவர் சிருஷ்டிப்பின் மகத்தான திட்டத்தை (யோவா 1:3; நீதி 8:22–31) மகிழ்ச்சியுடன் செயல்படுத்துகையில், தீமையை அனுமதிப்பதற்கான தேவனின் நோக்கம் மற்றும் அதைத் தொடர்ந்து வரவிருக்கும் மீட்பின் மாபெரும் வேலையின் அவசியத்தையும் அவர் அறிந்திருக்கவில்லை. தேவனின் மீதான விசுவாசத்தின் சோதனையை எதிர்கொள்வதற்கு முன்பு, தேவனுடைய சர்வவல்லமையுள்ள ஞானம், வல்லமை மற்றும் அன்பின் மீதான அவரது நம்பிக்கை கடந்த கால அனுபவங்கள் மூலம் உறுதியாக கட்டமைக்கப் பட்டிருந்தது. பல நூற்றாண்டுகளாக, அவர் அவருடைய (தேவனுடைய) வல்லமையான செயல்களைக் கண்டார், அவருடைய அற்புதமான ஞானத்தைக் குறித்துக்கொண்டார் மற்றும் அவரது மென்மையான அன்பை அனுபவித்து உணர்ந்திருந்தார். அப்படியானால் தேவனுடைய திட்டத்தின் மற்றொரு அம்சமான மீட்பு மற்றும் மறுசீரமைப்பு என்ற மாபெரும் வேலையை வெளிப்படுத்தியபோது, மற்றும் பிதா அவருக்கு முன் வைத்த சந்தோஷத்தின் பொருட்டு இந்த வேலையைச் செய்யும் பாக்கியத்தையும் இயேசுவுக்குக் கொடுத்தபோது, இயேசு தேவனை சந்தேகிக்க முடியுமா? இல்லை; அவர் கடந்து செல்ல வேண்டிய அவமானம் மற்றும் துக்கத்தின் முழு ஆழத்தையும் அவர் ஆரம்பத்தில் அறியவில்லை/புரிந்து கொள்ளவில்லை என்பதில் சந்தேகமில்லை. இருப்பினும், அவமானம் மற்றும் துன்பத்தின் ஒவ்வொரு வலிமிகுந்த படியிலும் அவர் முன்னேறும்போது, தந்தையின் மீதான அவரது நம்பிக்கை – அவரது முந்தைய அனுபவ அறிவின் அடிப்படையில் – அதாவது “என் தாசனாகிய நீதிபரர் தம்மைப்பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்” என்று எழுதியுள்ளபடி அவரைத் தாங்கியது. – ஏசாயா 53:11.

அடுத்ததாக, பிதாவுக்கும் குமாரனுக்கும் இடையே ஒரு அழகான நம்பிக்கையின் ஒருமைப்பாட்டை நாம் கவனிக்கிறோம். குமாரன் முதலில் பிதாவை முழுமையாக நம்பினார், ஏனென்றால் அது மிகவும் எளிதானதும் இயல்பானதாகவும் இருந்தது. தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டவர், அவரை உருவாக்கியவரை நம்புவது தன்னிச்சையானது (spontaneous), மேலும் அனுபவம் அதை வளர்த்துவதற்கும் உறுதிப்படுவதற்கும் உதவியது. மேலும் பிதாவும் குமாரனை முழுவதுமாக நம்பினார், ஏனென்றால், தேவன் வழங்கிய நீதி, சத்தியம், ஒரு குழந்தை பெற்றோரிடம் காட்டும் விசுவாசம் ஆகிய உள்ளார்ந்த (இயற்கையான) கொள்கைகளை அவர் அவரிடம் கண்டார். மேலும், காலமும் அனுபவமும் வளர்ச்சியடைந்து, அவருடைய குமாரன் நீதியில் உறுதியாக நிலைநிறுத்தப்பட்டபோது, பிதாவுக்கும் அவர் மீதான நம்பிக்கை உறுதியாக நிலைநிறுத்தப்பட்டது. மேலும், தனது அன்பான குமாரனின் விசுவாசத்தின் மீதான தந்தையின் நம்பிக்கை மிகவும் வலுவாக இருந்தது, அவர் மீட்பின் வேலையைத் தொடங்குவதற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே குமாரனின் உண்மைத் தன்மையின் முடிவுகளை அறிவிக்கத் தயங்கவில்லை. அவர் வேலையைத் தொடங்குவதற்கு முன்பே, தனது பரிசுத்த தீர்க்கதரிசிகள் மூலம், நான்காயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக பல்வேறு இடைவெளிகளில் பணியின் அனைத்து சிறப்பு அம்சங்களையும் அறிவித்தார். இன்னும் அவர் இந்தப் பணி சரியான நேரத்தில் மகிமையுடன் நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கிறார். இந்த பரஸ்பர நம்பிக்கை எவ்வளவு அருமையாகவும் அழகாகவும் உள்ளது! R3160

**இந்த ஐக்கியம் எவ்வளவு பாக்கியமானது! இது மகிழ்ச்சி மற்றும் துன்பம் ஆகிய இரண்டின் ஐக்கியமாக இருந்தது – எதிர்கால மகிமையை முன்கூட்டியே எதிர்பார்த்ததில் மகிழ்ச்சியும் அந்த இலக்கை அடைய முதற்கட்ட சோதனைகளைப் பகிர்ந்து கொள்வதில் துன்பமும் இருந்தது. குமாரன் தனது அவமானத்திலும் மரண வேதனையிலும் துன்பங்களைச் சகித்தார், அதே சமயம் பிதா தம்முடைய ஒரே பேறான குமாரனை விட்டுக்கொடுக்கும் ஆழமான வலியை அனுபவித்தார் – அன்பான, ஏங்கும் இருதயங்களைக் கொண்ட அர்ப்பணிப்புள்ள பெற்றோர்கள் மட்டுமே இந்த வலியை கற்பனை செய்து நன்றாகப் புரிந்துகொண்டு பாராட்ட முடியும்.** R3160

**பிதாவே, வேளை வந்தது, நீர் உம்முடைய குமாரனுக்குத் தந்தருளின யாவருக்கும் அவர் நித்தியஜீவனைக் கொடுக்கும்பொருட்டு மாம்சமான யாவர்மேலும் நீர் அவருக்கு அதிகாரங்கொடுத்தபடியே, உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும் படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்.**

**– யோவான் 17:2 –**

நம்முடைய கர்த்தரில், பரிபூரண திரும்ப கொடுத்தலின்/ மறுசீரமைப்பு ஜீவனின் வெளிப்பாட்டைக் காண்கிறோம், மேலும் அவருடைய பலியில், அந்த மறுசீரமைப்பு ஜீவனை அவரிடமிருந்து ஏற்றுக்கொள்ளும் அனைவருக்கும், முழு மனித குடும்பத்திற்காகவும் எப்படிப் பெற்றுக்கொண்டார் (பாதுகாத்தார்) என்பதைக் காண்கிறோம். ஆனால், அவர் திருச்சபைக்கு என்ன கொடுத்தார்? ஆ, நாங்கள் பதிலளிக்கிறோம், மாபெரும் மீட்பர் திருச்சபைக்கு மறுசீரமைப்பு ஜீவன் மற்றும் ஆசீர்வாதங்களை விட மிகவும் மேம்பட்ட ஒன்றை வழங்கியுள்ளார். இந்த ஏற்பாடுகள் பொதுவான உலகத்திற்கு மாபெரும் அற்புதமானதாக இருந்தாலும், திருச்சபைக்கு அவர் வழங்கியதெல்லாம் அதை காட்டிலும் பெரியதே ஆகும். திருச்சபைக்கு அவர் அழியாமை, ஜீவனின் உட்சபட்ச நிலை, தெய்வீக சுபாவம், தெய்வீக நிலையில் ஜீவன் ஆகியவற்றை வழங்கியுள்ளார். இந்த யோசனை நாம் முழுமையாக புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு அற்புதமானது; அது நம் புரிதலுக்கு அப்பாற்பட்டது. அதை முழுமையாகப் புரிந்துகொள்ளவோ அல்லது விளங்கிக்கொள்ளவோ எதிர்பார்க்காமல் நாம் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். தேவனுக்கு கீழ்ப்படிகிற அனைவருக்கும், அவருடைய சிறு மந்தை அனைவருக்கும், நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவின் மூலம் தேவனின் விவரித்து சொல்ல முடியாத பரிசுக்கு இது ஒரு சான்றாகும். நமது கர்த்தர் தற்போது தம்மைப் பின்பற்றுபவர்களை ஜீவனின் மிக உயர்ந்த நிலைக்கு அழைக்கிறார். மேலும் வானத்தின் நான்கு காற்றுகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் சேகரிக்கப்படும் வரை, கிறிஸ்துவின் மணவாட்டி தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ளும்வரை, மெருகூட்டல் செயல்முறைகள் எஜமானரின் பயன்பாட்டிற்காக ஆபரணங்களைத் தயாரிக்கும் வரை, பின்னர் உயிர்த்தெழுதல் மாற்றத்தின் மூலம், அவை கனம், மகிமை, மற்றும் அழியாமைக்கு மாற்றப்படும்வரை, தெய்வீகத் திட்டத்தில் உள்ள அனைத்தும் காத்திருக்க வைக்கப்படுகின்றன. R4154

**ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்.**

**– யோவான் 17:3 –**

யாரைப் பிதா அவருக்கு கொடுக்கிறாரோ, யாரை தேவனின் சத்தியம் மற்றும் மேற்பார்வை, கிறிஸ்து மற்றும் நீதியை நோக்கி ஈர்க்கும் விளைவைக் கொண்டிருக்கிறதோ, கிறிஸ்து இயேசுவில் உள்ள ஜீவ ஆவியின்

சட்டத்தின் அடிப்படையில் பிதா யாரை அங்கீகரிக்கிறாரோ, அத்தகையவர்களுக்கு தான் தேவனின் குணாதிசயத்தைப் பற்றிய முழுமையான புரிதல் வழங்கப்படும். இப்படிப்பட்டவர்கள் தேவனின் ஏற்பாட்டின் கீழ் நித்திய ஜீவனின் சுதந்திரவாளிகளாக இருப்பார்கள். மேலும் தேவன் மீதான அவர்களுடைய அறிவும் தேவனுடனான நெருங்கிய உறவும் இனி அவர்கள் நித்திய ஜீவனை வாக்குத்தத்தமாய் பெற்றிருக்கும் அவருடைய நண்பர்கள் என்பதையும், ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படும் மற்றும் நீதிமான்களின் சபையின் பாகமாக இருக்க மாட்டார்கள் என்று கர்த்தர் அறிவித்த அவருடைய எதிரிகள் அல்ல என்பதற்கு ஒரு சான்றாக இருக்கும். அப் 3:23; சங் 1:5–6.

தேவனை அறிந்துகொள்வது என்பது அவருடைய அன்பான திட்டத்தையும் குணத்தையும் அறிந்து கொள்வதை விட அதிகமானதாகும்; அது அவருடன் தனிப்பட்ட உறவைக் கொண்டிருப்பதையும் அவருடைய குணாதிசயத்தை அறிவார்ந்த முறையில் பாராட்டுவதையும் குறிக்கிறது. மேலும், தேவனுடைய ஆவியான பரிசுத்த ஆவி மற்றும் அன்பின் ஆவியில் பங்குபெறுவதன் மூலம் மட்டுமே இதைப் பெற முடியும். இந்தப் பரிசுத்தம் மற்றும் அன்பின் ஆவி உடனடியாக பெற முடியாது; இது வளர்ச்சியின் ஒரு செயல்முறையாகும். மேலும் இந்த ஆவியை வளர்ப்பது தேவனை முழுமையாக அறிந்து நித்திய ஜீவனின் வெகுமதியைப் பெரும் நம்பிக்கையுடைய ஒவ்வொருவரின் முதன்மையான பணியாக இருக்க வேண்டும் (மற்றும் அக்கறையாக இருக்க வேண்டும்). R1235 & R4836

## பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன்.

**– யோவான் 17:4 –**

பிதாவுக்கும் குமாரனுக்கும் இடையே உள்ள உணர்வின் (sympathy) மற்றும் சிந்தனையின் ஒற்றுமையை நாம் மேலும் கவனிக்கிறோம். குமாரன், பிதாவின் திட்டத்தில் மகிழ்ச்சி அடைந்து, “என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்” எனக் கூறுகிறார். அவர் தனது பிதாவின் மகிமையான குணாதிசயங்களின் மதிப்புமிக்க அம்சங்களை அந்த திட்டத்தில் கண்டதால், அது அவருக்கு மகிழ்ச்சியளித்தது. அவரது விசுவாசம், தீமையின் அனுமதியால் தற்காலிகமாக சோதிக்கப்பட்டிருந்தாலும், தேவனுடைய குணாதிசயங்களின் மகத்துவமும், ஆதாரங்களின் நிறைவும், அவரது ஞானத்தின் ஆழத்தையும் பற்றிய அறிவு அவரை சந்தேகிக்க அனுமதிக்கவில்லை. மாறாக, அந்த அறிவு அவரை தேவனுடைய எல்லையற்ற நன்மை மற்றும் கிருபையில் உறுதியான அன்பு மற்றும் நம்பிக்கையில் நிலைத்திருக்க வைத்தது. அதனால், நீதியும் சத்தியமும் இறுதியாக வெற்றி பெறுவதற்கான பிதாவினால் முன்மொழியப்பட்ட திட்டங்களை முழுமையாக ஏற்கவும், ஆதரிக்கவும் அவர் முழுமையான தயார் நிலையில் இருந்தார்.

பிதா குமாரனை ஒரு வேலைக்காரனாகக் கருதி அவருடைய நோக்கங்களை அவரிடமிருந்து மறைத்து வைக்கவில்லை; மாறாக, ஞானமும் விவேகமும் அனுமதிக்கப்படும் அளவுக்கு, அதாவது, சத்தியம் அவருக்கு ஏற்ற வேலை ஆகாரமாக மாறியதால், அவரை அவருடைய நம்பிக்கைக்குக் கொண்டுவருவதில் (அவருடைய நோக்கங்களை அவருடன் பகிர்ந்து கொள்வதில்) அவர் மகிழ்ச்சி அடைந்தார். பதிலுக்கு, குமாரன் ஒரு கூலித் தொழிலாளியாக மட்டுமே தந்தைக்கு சேவை செய்யாமல் ஒரு பொதுவான ஆர்வமுள்ள ஒரு மகனாக பணியாற்றினார். “இவர் என் நேச குமாரன்” என்று பிதா அறிவித்தார். அதற்கு குமாரன், “உம்முடைய சித்தத்தைச் செய்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்” என்றார். R3160

## பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்.

**– யோவான் 17:5 –**

அவர் பிதாவிடம் “உலகம் உண்டாகிறதற்கு முன்னே” தமக்கு இருந்த மகிமைக்கு திரும்பச் செய்யும்படி ஜெபித்தார் (யோவான் 17:5). தனது மனத்தாழ்மையில், அவர் எந்த உயர்ந்த ஒரு மகிமையையும் கேட்கவில்லை. [ஆனால்] நமது கர்த்தரின் வார்த்தைகள் அவர் தெய்வீக சுபாவத்தில் அடையக்கூடிய அவரது வருங்கால பங்கைப்பற்றி அறியாதிருந்தார் என்பதைக் குறிக்கிறதில்லை. அவருக்கு வேத வசனங்களின் உறுதியும் ஆதாரமும் இருந்தன: ஒன்று, அவர் மிக உயர்ந்த நிலைக்கு உயர்த்தப்படுவார் என்று கூறுகிறது. மற்றொன்று, தேவன் அவருக்குக் ராஜ்யத்தைத் தருவார் என்று உறுதிபடுத்துகிறது. மேலும், “அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக்கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்; பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார்” என்று கூறுகிறது; (ஏசா. 53:12), இன்னொருவர், “நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார்; மனம் மாறாமலுமிருப்பார்” (சங்கீதம் 110:4) என்கிறார். இவற்றின் அடிப்படையில், அவர் மிகவும் உயர்ந்த நிலை மற்றும் கனத்திற்குரிய ஆசாரியராகவும், ராஜாவாகவும் இரு மகத்தான பாத்திரங்களையும் வகிக்க வேண்டும் என்பது உறுதி.

பரிசுத்த பவுல் மூன்றாம் வானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, “மனுஷர் பேசப்படாததும் வாக்குக்கெட்டாததுமாகிய” அற்புதமான விஷயங்களைப் பற்றிய அறிவைப் பெற்றதைப் போலவே, (2 கொரி. 12:4) நம்முடைய கர்த்தர் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட பிறகு, இவற்றை முழுமையாக அறிந்திருக்கலாம். எனவே நமது கர்த்தராகிய இயேசு சில சிறப்பான வெளிப்பாடுகளைக் கொண்டிருந்தார் என்பது மிகவும் சாத்தியம். ஏனெனில், “பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கிறதுபோல, குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள் செய்திருக்கிறார்” (யோவான் 5:26) என்று அவர் கூறியதாக நாம் வாசிக்கிறோம்; ஆகவே, அவரும் திருச்சபையும் தெய்வீக சுபாவம் மற்றும் தம்மில்தாமே ஜீவனுடைய தன்மையில் பங்கு கொள்வார்கள் என்ற உண்மையைப் பற்றிய அவரது அறிவைக் குறிக்கிறது.

அவர் பிதாவிடம், “எனக்கு திருப்பிச்செலுத்த மறவாதீர்; நீர் வாக்களித்ததை மறந்துவிடாதீர்” என்று கூறவில்லை. மாறாக, எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றினார். நம்மிடமும் அப்படியாகவே இருக்கிறது. அதே அணுகுமுறையை நாமும் பின்பற்ற வேண்டும். தெய்வீக சுபாவத்தை வெகுமதியாக மட்டுமே தேடும் எவரும், அது தங்களுக்குக் கடமைப்பட்டிருப்பதாக நம்பும் எவரும் தவறான கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளனர். தெய்வீக சுபாவத்தின் எந்த வெகுமதியும் இல்லாவிட்டாலும், நீதிக்காக நிற்பதையும், நம்முடைய கர்த்தராகிய இயேசுவோடு இணைந்திருப்பதையும் நாம் ஒரு பெரிய பாக்கியமாகக் கருத வேண்டும். ஆனால் வெகுமதியைப் பற்றிய எண்ணம், நாம் கேட்ட அல்லது நினைத்ததை விட மிக அதிகமான, மிகுதியான ஒன்றுக்கு பொறுமையாக ஓட ஒரு சிறந்த ஊக்கமாகும். R 5748 & R 5066

## நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; உலகத்துக்காக வேண்டிக் கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்களே.

**– யோவான் 17:9 –**

உலகத்தின் இரட்சகராகவும், புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராகவும் அவர் ஆகுவதற்கு முன்னதாக, மனுக்குலத்தின் உலகத்தினைக் கையாளும் விஷயத்தில் அவரது முதல் வேலை, சபையைத் தெரிந்துகொள்ளுதலாகும். இந்த வேலையைத்தான் கர்த்தர் இப்பொழுது ஆரம்பித்துள்ளார் மற்றும் அவர்களிடம் சாட்சியை அளிக்கின்றார். சபை முழுவதும் நோக்கத்தில் ஒருமைப்பாடு கொண்டவர்களாகவும், தம்முடைய சித்தத்துடன் ஒருமைப்பாடு கொண்டவர்களாகவும் இருக்க வேண்டுமெனக் கர்த்தர் விரும்புகின்றார். மேலும் இப்படியாக சித்தத்தில் ஒருமைப்பாடு என்பது, நம்முடைய சித்தத்தை முழுமையாய் ஒப்புக்கொடுப்பதாகிய ஒரே வழியின் மூலமாகவே அடையப் பெறக்கூடிய காரியமாக இருக்கின்றது. இந்த ஒப்புக்கொடுத்தல் என்பது

வேதவாக்கியங்கள் தெரிவிப்பதுபோல, நாம் மரித்தவர்களாகும்போது மட்டுமே நடைபெறும். நம்முடைய சீஷத்துவத்தின் ஆரம்பத்திலேயே, பார்க்கப்பட வேண்டிய முதல் காரியம், நாம் நம்முடைய சித்தங்கள் தொடர்புடைய விஷயத்தில் மரித்துவிட்டோமா என்பதும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் ஜீவனுடைய வர்களாக இருக்கின்றோமா என்பதும் தான். இப்படியாகச் செய்கிறவர்கள் அனைவரையும் அவர் புதிய சிருஷ்டிகள் என அழைக்கின்றார். அவர் அவர்களுக்குப் புதிய மனம், புதிய சித்தம் காணப்படத்தக்கதாக, அவர்களுக்குப் பரிசுத்த ஆவியை அருளுகின்றார். அவர்கள் எந்தளவுக்குப் புதிய மனதை, புதிய சித்தத்தை உடையவர்களாய் இருக்கின்றார்களோ, அவ்வளவாய் ஒருவருக்கொருவர் ஒருமைப்பாடும் காணப்படும். R5358

## என்னுடையவைகள் யாவும் உம்முடையவைகள், உம்முடையவைகள் என்னுடையவைகள்; அவர்களில் நான் மகிமைப்பட்டிருக்கிறேன்.

**– யோவான் 17:10 –**

கிறிஸ்து இயேசுவுக்கும் அவரது சரீர அங்கங்களுக்கும் இடையே உள்ள இந்த ஒருமைப்பாட்டை கவனிப்பது ஆசீர்வாதமானது. நமது கர்த்தர் சகல மகிமையையும் சுய நலமாகக் கவர்ந்து கொண்டு அதைத் தானே வைத்துக்கொள்ளுகிறவர் அல்ல. மாறாக, அன்பான அக்கறையுடன், தம்மைப் போன்ற குணலட்சண சாயலில் அவரது சரீர அங்கங்கள் முன்னேறுவதை கவனிக்கிறார். அவர் கூறுகிறதாவது: "அவர்கள் என்னுடையவர்கள், அவர்களில் நான் மகிமைப்பட்டிருக்கிறேன்" (யோவான் 17:10). அவர்கள் அனைவரும் தேவனுடைய அன்பினாலே கர்த்தரோடு கூட கட்டப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அவர் மேல் வந்த அனைத்து தீவிர சோதனைகளிலும் அவரது உண்மைத் தன்மைக்கும் கீழ்ப்படிதலுக்கும் பரிசாக அவருக்கு பிதாவானவர் அளித்திருக்கிற மகிமையில் அவர்களையும் அவரோடு கூட பெற்றிருப்பார். R5212

## நான் அவர்களுடனேகூட உலகத்திலிருக்கையில் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொண்டேன்; நீர் எனக்குத் தந்தவர்களைக் காத்துக் கொண்டுவந்தேன்; வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக, கேட்டின் மகன் கெட்டுப் போனானேயல்லாமல், அவர்களில் ஒருவனும் கெட்டுப்போகவில்லை.

**– யோவான் 17:12 –**

அந்தப் பன்னிரண்டு பேரையும், அவர்களது வார்த்தைகளையும் கர்த்தர் கனப்படுத்தியுள்ளார் மற்றும் அவர்கள் வாயிலாக நமக்கு ஆசீர்வாதம் வரும்படிக்கு ஜெபம்பண்ணியும் உள்ளார். "நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்" (யோவான் 17:20). இன்னுமாக அவர்கள் பூமியில் கட்டுவது எதுவோ, அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும் என்றும், அவர்களால் பூமியில் கட்டவிழ்க்கப்படுவது எதுவோ, அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றும் கர்த்தர் கூறி, அவர்களுடைய வார்த்தைகளானது விசேஷமான வழிகாட்டுதல் பெற்றிருந்தது என்று நமக்குப் புரியவைக்கின்றார்; ஆகையால் அவர்கள் கட்டளையிடும் எதையும் தெய்வீகக் கட்டளையாக நாம் புரிந்துகொள்ள வேண்டும் மற்றும் கிறிஸ்துவுக்குள்ளான நம்முடைய சுயாதீனங்கள் குறித்து அவர்கள் நமக்குச் சொல்லிடும் எதுவும், தெய்வீகச் செய்தியாக நம்மால் புரிந்துகொள்ளப்பட வேண்டும். இன்னுமாக இந்த ஆசீர்வாத கால்வாய்களை தம்முடைய சபையினுடைய ஆறுதலுக்காகவும், பக்திவிருத்திக்காகவும் அவர் எவ்வளவு அதிகமாய் பயன்படுத்தினார் என்பதையும் நாம் நினைவுகூர வேண்டும். இன்னுமாக அவர்கள் எப்படிப் பிதாவினால், கர்த்தருக்கு விசேஷமாய் கொடுக்கப் பட்டார்கள் என்பதையும் நாம் நினைவுகூர வேண்டும்; இது பற்றி அவர் கூறினதாவது: "நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன். அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர், அவர்கள் உம்முடைய வசனத்தைக்

கைக்கொண்டிருக்கிறார்கள்" (யோவான் 17:6). யூதாசினுடைய விலகிச்செல்லுதலின் காரணமாய், இவர் இடத்தை நிரப்பும்படிக்கு, அப்போஸ்தலனாகிய பவுல் திவ்விய தெரிந்துகொள்ளுதலின்படியானவராய் காணப்பட்டார் என்று நாம் பார்க்கின்றோம் மற்றும் கர்த்தருடைய வழிநடத்துதலின் பேரில், புதிய ஏற்பாட்டினுடைய பெரும்பான்மையான செய்தியானது ஒட்டுமொத்த தெய்வீகத் திட்டத்திற்கான விளக்கமானது, சபைக்கு அப்போஸ்தலனாகிய பவுல் வாயிலாகத் தேவனால் அனுப்பப்பட்டது. R4097

**நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன்; நான் உலகத்தானல்லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல; ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது. நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக் கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன். நான் உலகத்தானல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல.**

**– யோவான் 17:14–16 –**

அவருடைய சீஷர்கள் உலகத்தில் சிறுபான்மையாகவே இருப்பார்கள் என்றும், அவர்கள் உலகத்தால் வெறுக்கப்படுவார்கள் என்றும், உலகத்தால் எதிர்க்கப்படுவார்கள் என்றும், உலகத்தால் தவறாய் புரிந்துக்கொள்ளப்படுவார்கள் என்றும், அவர்களில் அநேகர் பெரியவர்களாக இருக்கமாட்டார்கள் என்றும், ஞானிகளாக அநேகர் இருக்கமாட்டார்கள் என்றும், ஐசுவரியவான்களாக அநேகர் இருக்கமாட்டார்கள் என்றும், பிரபுக்களாக அநேகர் இருக்கமாட்டார்கள் என்றும், பிரதானமாக ஏழைகளாகவும், "சிறுமந்தையினராகவுமே" இருப்பார்கள் என்றும் தான் அவருடைய ஜெபத்தின் வார்த்தைகள் சுட்டிக்காட்டுகின்றது. இயேசு தனிப்பட்ட விதத்தில் தெரிந்தெடுத்துக்கொண்ட சீஷர்களிடம் காணப்பட்ட பண்புகளானது, பிற்காலங்களிலும் அவருடைய உண்மையான பின்னடியார்களென, அவரிடம் கிட்டிச்சேரும் அனைவரிடமும் காணப்பட வேண்டும்.



கிறிஸ்தவத் தேசங்கள் மற்றும் கிறிஸ்தவப் பிரிவுகளின் மக்கள் பெரும் திரளாய்க் காணப்பட்டாலும், "கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்". மேலும், இந்த ஜெபத்தை நாம் பார்க்கையில், இந்த யுகத்தில் அவர் தம்முடைய ஜனங்களை உலகத்திடமிருந்து பிரிக்காமல், அவர்களை உலகத்தில் தான் விட்டுச்சென்றார். அவர்கள் இருதயம் உலகத்திடமிருந்து பிரிந்திருப்பது மாத்திரமே முக்கியமானதாகும். "நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்" (யோவான் 17:15). தீமையை நன்மை என்று நாம் சொல்லக்கூடாது, உலகம் தூய்மையாகிவிட்டது என்று நாம் சொல்லக்கூடாது, அது இன்னமும் தீமை நிறைந்ததாகவே உள்ளது. கர்த்தரைச் சிலுவையில் அறைந்து, அவருடைய பின்னடியார் களைத் துன்பப் படுத்திய யூத மார்க்கம் அப்போது எந்த நிலையில் காணப்பட்டதோ, அதே நிலையில்தான் இன்று கிறிஸ்தவ மண்டலமும் நடைமுறையில் காணப்படுகின்றது.

இன்றைய காலங்களிலும் இப்படியாகவே காணப் படுகின்றது. வெளிப்புறத்தில் பளபளப்பு (அ) பாசாங்கே

காணப்படுகின்றது. அநேக சந்தர்ப்பங்களில் மாய்மாலமும், வெளிவேஷமான வழிபாடுந்தான் காணப்படுகின்றது; நாகரிகமான உடைகள் மற்றும் சந்தோஷம் ஆகியவற்றில் மூழ்கிப்போன நிலையிலும், கடுமையான பாவங்கள் மூலம் பணம் சம்பாதிக்கும் விக்கிரக ஆராதனையில் மூழ்கிப்போன நிலையிலும், இருதயம் தேவனிடத்திலிருந்து மிகத் தொலைவில் இருக்க, உதடுகள் மாத்திரமே அசைகின்றதாய் இருக்கின்றது.

இத்தகையச் சூழ்நிலைகளிலிருந்து தம்முடைய உண்மையான பின்னடியார்கள் பரலோக வல்லமையினால் விலக்கிக்காக்கப்பட வேண்டும் என்றே நமது கர்த்தர் ஜெபம் பண்ணினார். அதாவது மாய்மாலங்கள் மீது ஈர்க்கப் படுவதிலிருந்தே விலக்கி, காக்கப்படுவார்களே ஒழிய, மாய் மாலக்காரர்களிடமிருந்து பின்னடியார்கள் பிரிக்கப்படுவதில்லை. இது சுவிசேஷ யுகம் முழுவதும் உள்ள அனைவருக்கும் பொருந்தக்கூடியதாக இருக்கின்றது என நாம் விசுவாசிக்கின்றோம். கர்த்தருடைய ஜெபம் நிறை வேறியுள்ளது என்றும், சிதறி ஆங்காங்கே காணப்படும் அவருடைய சிறுமந்தையானது, அதாவது மெய்யான திராட்சச்செடியின் கிளைகளானது, இருதயத்தில் ஆவிக்குரியவர்களாகத் தழைத்து ஓங்கியுள்ளனர். மேலும், உலகத்தின் ஒரு பாகமாக மாத்திரமே இருக்கும் பெயர்க்கிறிஸ்தவ மண்டலத்தாரிடமிருந்து, முற்றிலும் பிரிந்த ஜீவியத்தைக் கைக்கொண்டவர்களாக இருக்கின்றனர் என்றும் நாம் நம்புகின்றோம். R3551

## உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்.

**– யோவான் 17:17 –**

பரிசுத்தமாக்கும் என்ற வார்த்தை “பிரித்து வை அல்லது புனிதப்படுத்தல்” என்பதைக் குறிக்கிறது. பரிசுத்தமாக்குதல் என்ற இந்த வேலையில் இரண்டு பாகங்கள் உள்ளன. முதலாவது, ஆரம்பத்தில் நாம் செய்வது, தேவனுடைய சித்தத்தை அறிந்து, அதன்படி செய்ய விருப்பத்துடன் நம்மை நாமே பிரித்துக் கொள்ளுவதாகும். அதன் இரண்டாவது பகுதி படிப்படியாக வருவதாகும் – அதாவது நாம் இதற்குமுன் அறிந்திராத போதனைகளும் அறிவுறுத்தல்களும் மற்றும் நாம் இதற்கு முன் அங்கீகரித்திராத சில நீதியின் கொள்கைகளும் நமக்குத் தெளிவாக தெரிவிக்கப்படுகின்றன. இது ஆழமாக பிரித்து வைத்தலாகும். இது தேவனால் செய்யப்படுகிறது, பிதாவானவரின் ஏற்பாட்டின்படி செய்யப்படுகிறது.

பரிசுத்தமாக்குதலின் இந்த ஆழமான பொருளே வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே நமது கர்த்தர் இந்த வேலையைச் செய்யும்படி பிதாவானவரிடம் ஜெபிக்கிறார். இயேசுவை பின்பற்றி நடக்க சீஷர்கள் எல்லாவற்றையும் விட்டிருந்தார்கள். அவர்கள் பிரிக்கப்பட்டிருந்தார்கள். அதாவது பிதாவானவரின் சித்தத்தை அறிந்து, அதன்படி செய்ய விருப்பங்கொண்டிருந்தார்கள். “எல்லாரும் தேவனால் போதிக்கப்பட்டிருப்பார்கள்” என்று எழுதப்பட்டிருக்கிறபடி, நமது கர்த்தர் தெய்வீக அறிவுறுத்தலின் வேலை அவர்களில் நடைபெற வேண்டும் என்று ஜெபித்தார். சீஷர்களின் தெய்வீகக் கிருபையின் அறிவுறுத்தலுக்கு வரவேண்டும் என்று ஆண்டவர் விரும்பினார். அது தேவனுடைய வசனத்தின் மூலம் வரும் என்று குறிப்பிட்டார். பரிசுத்தப்படுத்தும் இந்த சத்தியம் பொதுவான அறிவின் நிலைப்பாட்டிலிருந்து பார்க்கப்படுகிறதில்லை. ஏனெனில் இந்த சத்தியம் உலகத்திற்கானதல்ல, அவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டதல்ல. அது அர்ப்பணம் செய்தவர்களுக்கானது, தேவனுடைய பிள்ளைகளானவர்களுக்கானது. தேவன் தம் குடும்பத்திற்கு கொடுக்கக்கூடிய ஒருவகையான சத்தியம்.

உண்மையான பரிசுத்தப்படுத்துதல் ஆரம்பிப்பதற்கு முன்னதாக ஒரு பரிசுத்தப்படுத்துதல் நடைபெறுகிறது. கர்த்தர் இஸ்ரயேல் ஜனங்களிடம் கூறுகிறதாவது: “நீங்கள் உங்களை பரிசுத்தப்படுத்தி பரிசுத்தராயிருங்கள். நான் உங்களை பரிசுத்தப்படுத்துவேன்.” இது ஒரு நம்பிக்கையினால் தங்களை பிரித்து வைத்துக்கொள்ளுதல் ஆகும். ஆனால் ஒருவர் தன்னைப் பரிசுத்தப்படுத்தி பிரித்துக் கொள்ளுதல் என்பது ஒன்று, தேவன் அவனை பரிசுத்தப்படுத்துதல் என்பது மற்றொன்று. தேவன் நம்மை ஒரு புதிய அழைப்புக்கு

அழைத்திருக்கிறார். நமது அழைப்பின் உண்மையான பொருளும் நோக்கமும், அவருடைய புதிய சிருஷ்டியாக நம்மைப் பொருத்தி தயார்படுத்துவதாகும். கடைசியில் கிறிஸ்து இயேசுவின் மூலமாகத் தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தைக் காண்பிக்கும்படியாக, தேவன் தம்முடைய தீர்மானத்தின்படி நம்மை அழைத்திருக்கிறார் என்று அப்போஸ்தலர் பவுல் கூறுகிறார். –எபே. 2:7. R5319

## நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன்.

**– யோவான் 17:18 –**

பிதா எப்படிக் குமாரனை அனுப்பினார் என்றும், குமாரன் மாம்சமாகி, நம் மத்தியில் மனுஷனாக வாசம் பண்ணுபவராக மாற்றப்படுவதற்கு முன்பு, அவருக்கு பிதாவோடு இருந்த மகிமையைத் துறந்து வந்தார் என்றுமான காரியங்களுக்கு, நமக்குப் போதுமான அளவு நிரூபணங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், உலகத்தாராகப் பிறந்துள்ள நாம், எந்த விதத்தில் உலகத்திற்கு அனுப்பப்படுகின்றோம்? உண்மைதான் ஒரு காலத்தில் அப்போஸ்தலர்கள் விசேஷமாக அனுப்பப்பட்டிருந்தனர். ஆனால், கர்த்தருடைய சகல பின்னடியார்களும் ஒரு விதத்தில் அனுப்பப்பட்டிருக்கின்றார்கள். இருதயத்திலும், சத்தியத்திலும் நாம் அவருடையவர்களாக இருக்கத்தக்கதாக நாம் உலகத்தினின்று, பிரிக்கப்படாதது வரையிலும், நாம் அனுப்பப்படுவதில்லை. பின்னரே, அவருடைய நாமத்தில், அவருடைய காரணத்திற்கென, ஒரு வேலை செய்யும்படிக்கு அவர் நமக்கு ஒரு கட்டளையை (அ) செய்தியைக் கொடுத்துள்ளார். அவருடைய காரணம் என்று சொல்லும்போது, அது நீதியின் பொருட்டான காரணமாகவே இருக்கின்றது. கர்த்தருடைய உண்மையான பின்னடியார்கள், தேவனுக்கான ஸ்தானாதிபதிகளாகவும், இயேசுவின் பிரதிநிதிகளாகவும் இருக்கின்றார்கள். அவர் உலகத்தில் இருந்ததுபோன்று, நாமும் உலகத்தில் இருக்கின்றோம். ஆகவே நாம் வெளிச்சத்தின் பிள்ளைகளாக நடக்கும்படிக்கும், நமக்குள்ளாகவே பாவத்தை எதிர்த்துப் போராடுவதற்கும், பாவத்திற்கு எதிராகவும், நீதி, சத்தியம் மற்றும் வெளிச்சம் ஆகியவைகளுக்கு ஆதரவாக சகலவிதமான நேர்த்தியான வழிகளிலும் நம்முடைய செல்வாக்கைப் பயன்படுத்துவதற்கும் அவர் நம்மை அழைக்கின்றார். R3552

## அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்.

**– யோவான் 17:19 –**

இத்தருணத்தில் பிதாவின் திட்டம் குறித்துத் தெளிவான புரிந்துக்கொள்ளுதலுக்குள், நமது கர்த்தர் வந்துவிட்டார் என்பது இவ்வார்த்தைகளில் வெளிப்படுகின்றது. அதாவது, இராஜ்யத்தில் தம்மோடு உடன் சுதந்தரர்கள் ஆகுவதற்கும், தம்முடைய மகிமையில் பங்கடைவதற்குமான நோக்கத்திற்கெனத் தம்முடைய சீஷர்கள் வளர்ச்சி பெற வேண்டும் என்பதைக் குறித்ததான பிதாவின் திட்டத்தை முழுமையாகப் புரிந்துக் கொண்டிருந்தார். இராஜ்யத்தின் இத்தகைய மாபெரும் மகிமையைப் பங்குப்போடுவது, இயேசுவின் மாபெரும் மகிமையைக் குறைத்துப் போடுவதுபோன்று, நாம் பார்க்கும் மாத்திரத்தில் நமக்குத் தோன்றலாம். அதாவது, இது மோசேயுடன் இஸ்ரயேல் ஜனங்களுக்கு நியாயம் விசாரிப்பதற்கென, 70 மூப்பர்கள் நியமித்த காரியமானது, மோசேயின் அதிகாரத்தை (அ) கௌரவத்தைக் குறைத்துப் போடுவதுபோன்று அதைப்பார்க்கும் மாத்திரத்தில் தோன்றியதுபோல் காணப்படுகின்றது.

ஆனால், நிழலில் மோசே மிகவும் சாந்தத்துடனும், மகிழ்ச்சியுடனும், 70 மூப்பர்களையும் தன்னுடன் பணிபுரிய வரவேற்கும் விதத்தில், "ஆண்டவரின் மக்கள் அனைவருமே இறைவாக்கினராகும்படி ஆண்டவர் அவர்களுக்குத் தம் ஆவியை அளிப்பது எத்துணை சிறப்பு!" என்று கூறுகின்றார் (எண்ணாகமம் 11:29

திருவிவிலிய மொழியாக்கம்). ஆகவே கர்த்தர் இயேசுவும், தம்முடன் கூட்டிச்சேர்க்கப்படும் சபையானது, தம்முடைய இராஜ்யத்தில் உடன்சுதந்தரர்களாக இருப்பது, தம்முடைய மகிமையைக் குறைத்துப் போடுகின்றதாய் இருக்குமே என்று எண்ணுவதற்குப் பதிலாக, அவர்களை இருதயப்பூர்வமாகத் தெய்வீகத் திட்டத்தில் சேர்த்துக்கொண்டார். இன்னுமாக அவர் தாம் இடம் விட்டுக்கொடுப்பதாகக் கூறுகின்றார். அதாவது, பிதாவின் பரிசாகிய மகிமை மற்றும் கனம் ஆகிய அம்சங்களில் தம்முடைய பின்னடியார்கள் பங்கடையும் படிக்கும், தங்களுக்குக் கொடுக்கப்பட்ட மகா அருமையான வாக்குத்தத்தங்கள் மற்றும் சத்தியத்தின் வாயிலாக தங்களை அர்ப்பணித்து, இத்தகைய கனத்திற்குள் வரவும், தம்மோடு கூட உடன்சுதந்தரர்களாக இருக்கும்படிக்கும் வந்த அவர்கள் பங்கடையத்தக்கதாக, குமாரன் விலகி இடம் விட்டுக்கொடுத்தார் என்று கூறுகின்றார். R3552

**நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்ளுகிறேன். நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்.**

**– யோவான் 17:20-22 –**

"அவர்களெல்லாரும் ஒன்றாய் இருக்க வேண்டும்" என்ற நமது கர்த்தருடைய ஜெபமானது, யுகம் முழுவதிலும் நிறைவேறியுள்ளது. உண்மையாக அவர்களுடையவர்களாக இருக்கும் அனைவரும் பிதா மற்றும் குமாரனுடன் கூட ஒரே இருதயமுள்ளவர்களாகவும், ஒரே நோக்கம் உள்ளவர்களாகவும், ஒரே ஆவி/சிந்தை உடையவர்களாகவும் காணப்பட்டுள்ளனர். பூமிக்குரிய விசுவாசப் பிரமாணங்களினாலோ சங்கிலிகளினாலோ தெய்வீகமானவர்களோடு ஐக்கியத்தை/உறவை ஏற்படுத்த முடியாது. கர்த்தருக்குச் சொந்தமானவர்கள் விஷயத்தில் இன்றும், என்றென்றும் இப்படியாகவேக் காணப்படுகின்றது. வெளித்தோற்றமான அடையாளச் சொற்களினால் அல்ல (அ) அடையாளங்களினால் அல்ல (அ) வெளித் தோற்றமாக பற்றிப் பிடித்துக் கொண்டிருப்பதினால் அல்ல, மாறாக, விசுவாசம் மற்றும் அன்பின் மூலமாக அவர்கள் ஒருவரையொருவர் (தேவன், குமாரன், சபை) அறிந்துக்கொண்டிருக்கின்றனர். "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களா யிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துக் கொள்வார்கள் என்றார்" (யோவான் 13:35). "நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட் பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம்" (1 யோவான் 3:14). உண்மைதான், நாம் அனைத்து மனுஷர்களையும் அன்புகூர்ந்து, வாய்ப்பு அமையும்போது, சகலருக்கும் நன்மை செய்ய நாடுகையில், அப்போஸ்தலர் அறிவித்த பிரகாரம், "விசேஷமாக விசுவாச வீட்டாருக்கு", அதாவது, கர்த்தரை அன்புகூர்ந்து, அவருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தின் மீது விசுவாசம் வைத்து, அவருக்கென்று தங்களை முழுமையாக அர்ப்பணம் செய்து, தங்களால் முடிந்தமட்டும் அவருடைய சித்தத்தைச் செய்து, நாளுக்கு நாள் அவர் சித்தம் என்ன என்று இன்னுமாக அறிந்து கொள்ள நாடுபவர்களாகிய விசுவாச வீட்டாருக்கு நன்மை செய்ய நாடுபவர்களாக நாம் இருக்க வேண்டும்.

கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் காணப்படும் இந்த ஒற்றுமையானது, (ஆள்தத்துவத்தின்) நபர்களின் ஒற்றுமையைக் குறிப்பதில்லை. கர்த்தருடைய பின்னடியார்கள் மாம்ச சரீரத்தின் விஷயத்தில் ஒன்றானவர்கள் அல்ல. மாறாக, ஆவியில்/சிந்தனையில் ஒன்றாக இருக்கின்றனர். இந்த உதாரணமே, தமக்கும், பிதாவுக்கும் இடையில் காணப்படும் ஒன்றாய் இருத்தலுக்கான விளக்கமாக அமைகின்றது எனக் கர்த்தர் விளக்குகின்றார். அவர்கள் இருவரும் ஒரு நபராக இராமல், சிந்தனையிலும், நோக்கத்திலும், சித்தத்திலுமே ஒன்றாய் இருக்கின்றார்கள். ஏனெனில், பிதாவின் பார்வைக்கு பிரியமாய் இருக்கும் பிதாவின் சித்தத்தையே, தாம் எப்போதும் செய்கின்றதாகக் கர்த்தர் கூறுகின்றார். இவ்விதமாகவே, நாமும் பிதாவின் சித்தமாகக் காணப்படும்,

கர்த்தருடைய சித்தத்தைச் செய்து, அவருக்குள்ளும், அவருடைய அன்பிலும் நிலைகொண்டிருக்கின்ற வர்களாகக் காணப்படுகின்றோம். மேலும், இவ்விதமாக ஆவியிலும், சத்தியத்திலும் பிதாவும், குமாரனும், மணவாட்டியாகிய சபையும் ஒன்றாயிருக்கின்றார்கள். R3553

**ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.**

**– யோவான் 17:23 –**

உலகமானது காரியங்களைக் குறித்து முழுமையாய் புரிய வரும்போது, அவர்கள் அப்போது, நமது கர்த்தர் தம்முடைய சீஷர்களுடன் ஏறெடுத்த கடைசி ஜெபத்தில், பிதா கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அன்புகூருவது போன்று, பிதா சபையையும் அன்புகூருகின்றார் என்று கூறின வார்த்தைகளிலுள்ள உண்மையை அறிந்துகொள்வார்கள். இது பிரம்மிக்க வைக்கும் ஒரு வாக்கியமாகும். இது நமது கர்த்தரிடத்தில் சுயநலம் எதுவும் இல்லை என்பதைக் காட்டுகின்றதாய் இருக்கின்றது. “அவர்கள் எனக்குக் கீழாகத்தான் இருப்பார்கள். நான் கொண்டிருக்கும் மகிமையை, அவர்கள் ஒருபோதும் அடைவதில்லை” என்று கர்த்தர் கூறவே இல்லை.

மாறாக கர்த்தர் இயேசுவோ, கொள்கை மற்றும் குணலட்சணத்தின் அடிப்படையிலேயே பரம பிதா, தம்முடைய அன்பைச் செயல்படுத்துவார் என அறிந்திருந்தார். இந்த மகிமையான கூட்டத்தாரில் அங்கத்தினராய் இருப்பவர்கள் அனைவரும், நமது கர்த்தர் கொண்டிருந்த அதே மகிமையான குணலட்சணத்தைக் கொண்டிருப்பவர்களாக இருக்க வேண்டும்; அதாவது, வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், அவர்கள் மனதின் அடி ஆழம் வரை, உண்மையுள்ளவர்களாகக் காணப்பட வேண்டும். அவர்கள் தாங்கள் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுப்பதை நிரூபித்துக் காட்ட வேண்டும். “நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர்; ஆதலால், தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம்பண்ணினார்” என்றும் நாம் வாசிக்கின்றோம் (எபிரெயர் 1:9). ஆகவேதான் கர்த்தர் சபை வகுப்பாரின் தலையாக இருக்கும்படிக்கு அபிஷேகம் பண்ணப்பட்டுள்ளார். ஆனால் சபை வகுப்பார் இந்த வேதவாக்கியத்தில் (எபிரெயர் 1:9) அவருடைய தோழர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளனர்; அதாவது, அவர்கள் கீழானவர்கள் என்ற அர்த்தத்தில் குறிப்பிடப்படாமல், ஒரே தளத்தில், அவரோடு இருப்பவர்களாகவே குறிப்பிடப் பட்டுள்ளனர். அப்போது உலகமானது, பிதா இயேசுவை அன்புகூர்ந்ததுபோலவே, சபையையும் அன்புகூர்ந்திருக்கிறார் என்று அறிந்துக்கொள்ளும். சபையானவள் தனது கர்த்தராகிய இயேசுவுடன் கூட, ஒரே தளத்தில் காணப்படுவாள் என்று நாம் புரிந்திருக்கின்றோம். எனினும் தேவன் கர்த்தரை, “எல்லாவற்றிற்கும் மேலான தலையாக தந்தருளினார்” என்றும், தேவன் இப்படியாக அவரை என்றென்றும் இருக்கும்படிக்கு ஆசீர்வதித்துள்ளார் என்றும் நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். சபை ஒருபோதும் கிறிஸ்துவுக்குச் சரிசமமானவளாக இருப்பதில்லை.

தேவனுடைய அன்பானது நம்முடைய இருதயங்களில் ஊடுருவுகையில், அதில் சுயநலம் குடிகொள்வதற்கு இடமே இருப்பதில்லை. நமது அன்பான மீட்பர், மற்றவர்கள் தெய்வீக சுபாவத்திற்குள் உயர்த்தப்பட்டு, இராஜ்யத்தின் பங்காளிகள் ஆக்கப்படபோவதைக் குறித்துப் பொறாமை கொள்வதற்குப் பதிலாக, தம்முடைய ஜெபத்தில் தாம் இத்திட்டத்திற்கு முழுமையாக ஒப்புக்கொள்ளுவதாகவும், இதற்கு இருதயப்பூர்வமான ஒத்துழைப்பையும் அருளுவதாகவும், இத்திட்டம் இப்படி இருப்பதினிமித்தம்

தமக்கும் சந்தோஷமாய் இருப்பதாகவும், பிதாவிடம் அறிக்கைப்பண்ணினார். இக்காரியங்கள் பரலோக மணவாளனுக்கு ஏற்கெனவே நிச்சயிக்கப்பட்டுள்ள, வருங்கால மணவாட்டிகளாகிய நமக்கு எத்தகைய கருத்துக்களைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. நம்மை நம்முடைய தாழ்மையான நிலையிலிருந்து உயர்த்தி, அவரோடுகூட, அவருடைய இராஜ்யத்தில் அவருடைய சிங்காசனத்தில், அவருடைய பிதாவின் அன்பில் பங்கடையச் செய்வதில் கர்த்தர் பிரியமுள்ளவராக இருக்கின்றார்.

அதிசயங்களிலேயே அதிசயம்! தெய்வீக கருணைக்கு முடிவே இல்லை! நாம் இன்னமும் பாவிகளாக இருக்க, இன்னமும் மரணம் என்னும் தெய்வீகத் தீர்ப்பின் கீழ் இருக்கையிலேயே, நாம் அன்புகூரப்பட்டுள்ளோம். மாபெரும் விலை கொடுத்து மீட்டுக்கொள்ளப்பட்டுள்ளோம். மீட்கப்பட்ட பின்னர் இப்பொழுது, ஒரு பரலோக சத்தத்தை நாம் கேட்கின்றோம்… “இன்னும் மேல் நிலைக்கு/உயர வாருங்கள்.” ஆம், இராஜாதி இராஜாவிடத்திற்கும், கர்த்தாதி கர்த்தரிடத்திற்கும், பிதாவின் ஒரே பேரரனவரிடத்திற்கும், கிருபையும், சத்தியமும் முழுமையாகக் கொண்டிருப்பவரிடத்திற்கும், அவரோடு கூட அவருடைய சிங்காசனத்திலும், அவரோடு உடன்சுதந்தரர்களாகவும் இருக்க வாருங்கள் என்பதேயாகும். அன்பு மற்றும் சுயநலமின்மையின், இம்மாபெரும் வெளிப்படுத்துதலை நம்முடைய மனங்களுக்கு முன்பாக நாம் என்றென்றும் வைத்திருக்கக்கூடுமானால், தேவனுடைய அருமையான குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாய் இருக்கும்படி நாடுகின்ற அனைவருடைய மனங்களிலிருந்தும், ஒருவருக்கொருவர் கொண்டிருக்கும் ஒவ்வொரு போட்டி மனப்பான்மையும் சிதறடிக்கப்பட்டுப் போய்விடும். மேலும் இப்படி நினைவில் கொண்டிருக்கும்போது, சரீரத்தின் ஒவ்வொரு மற்ற அங்கமும், கர்த்தருடைய ஊழியத்தில் பயனுள்ளவர்களாக வளர்வதில் நம்மை எவ்வளவாக சந்தோஷம் கொள்ளச்செய்யும். மேலும், இப்படி நினைவில் கொண்டிருக்கும்போது, “கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக் கொள்ளுங்கள்” என்ற வேதவாக்கியத்தின் விளக்கத்தை நாம் அதிகமதிகமாய் உணர்ந்துகொள்ளச் செய்து, மற்ற சகோதரருடைய வளர்ச்சியிலும், சபைக்கான அவனுடைய பயன் வளர்ந்துவரும்போது, தேவன் மற்றும் மனுஷரிடத்திலும், அவன் பெற்றுக் கொள்ளும் தயவிற்கான சாட்சிகள் வளர்ந்துவரும்போது, நம்மை மகிழ்ச்சி கொள்ளச்செய்யும் (ரோமர் 12:10). சரீரத்தின் உடன் அங்கங்களாகிய மற்றச் சகோதரர்களின் வளர்ச்சியில், இவ்விதமாக சந்தோஷம் கொள்ள முடிகிறவர்களுக்கு, மாபெரும் மகிமையான தலைக்கு ஒத்திருக்கும் சாயலில், தாங்கள் வளர்ச்சியடைந்துள்ளனர் என்பதற்கான சாட்சியாகவும் அமைகின்றது. இம்மனநிலையில் இல்லாதவர்கள், இதற்காக முயற்சி செய்ய வேண்டும்; மேலும், இதை அடையும் வரையிலும் முயற்சியைத் தொடர்ச்சியாகக் கொண்டிருக்க வேண்டும். R5358 & R3553

**பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன்.**

**– யோவான் 17:24 –**

இது ஒரு விண்ணப்பம் அல்ல, மாறாக தம்முடைய சித்தம் குறித்துக் கர்த்தர் இங்கு அறிக்கை யிடுகின்றார். அதாவது, பின்வருமாறு அவர் கூறுவது போன்றுள்ளது: “பிதாவே என்னுடைய பின்னடியார்கள் தொடர்புடைய விஷயத்தில், இதுவே உம்முடைய சித்தமென நான் புரிந்துள்ளேன். நானும் அதையே விரும்புகின்றேன். நீர் ஆயத்தம் பண்ணியுள்ள இந்த மாபெரும், தாராளமனமுள்ள ஏற்பாட்டிற்கு நான் ஆட்சேபனையின்றி ஒப்புக்கொள்கின்றேன். இறுதியில், என்னுடைய பின்னடியார்கள் என்னோடு கூட, ஒரே

மகிமையின் தளத்தில், என்னோடு இடம் பெற்றுக்கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். மேலும், உலகம் தோன்றுவதற்கு முன்பும், என்னுடைய இந்த சீஷர்களுக்கு ஒழுங்குகள் ஏற்பாடு பண்ணுவதற்கு முன்பும், என் மீது கொண்டிருந்த அன்பின் நிமித்தமாகவே, எனக்கு நீர் கொடுத்த மகிமைகளை என்னுடைய பின்னடியார்கள் காணவும், அதில் அவர்கள் பங்கடையும்படிக்கு அவர்கள் ஆசீர்வதிக்கப்படுவதில் நான் மகிழ்ச்சிக்கொள்வேன்" என்பதேயாகும்.

கர்த்தருடைய ஜெபத்தின் இறுதியான வார்த்தைகள் அழகாகவும், தாம் பிதாவிடத்தில் கொண்டுள்ள உறவின் மீதுமுள்ள, கர்த்தருடைய நம்பிக்கையைக் குறித்து வெளிக்காட்டுவதாகவும் இருக்கின்றது. அவர் பிதாவை அறிந்திருந்தார். ஆகவேதான் பிதாவினால் நாம் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கும், அவர் அளிக்கும் நித்திய காலத்திற்குமான ஜீவனுக்குள் நாம் பங்கடைவதற்கும் அளிக்கப்படும் மாபெரும் சாட்சி இதுவே என்று நம்மைக் குறித்த விஷயத்தில் அவர் கூறியுள்ளார். "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்" (யோவான் 17:3). "நீதியுள்ள பிதாவே, உலகம் உம்மை அறியவில்லை, நான் உம்மை அறிந்திருக்கிறேன்; நீர் என்னை அனுப்பினதை இவர்களும் அறிந்திருக்கிறார்கள்" (யோவான் 17:25). உம்முடைய நாமம் குறித்தும், உம்முடைய குணலட்சணம் குறித்தும், உம்முடைய மகத்துவம் குறித்தும், உம்முடைய நற்பண்புகள் குறித்தும், உம்முடைய அன்பு குறித்தும், உம்முடைய நன்கொடைகளைக் குறித்தும் நான் அவர்களுக்கு அறிவித்துள்ளேன். இன்னமும், அவர்கள் தாங்கிக்கொள்ளும் அளவிற்குத் தகுந்தாற்படி, சத்திய அறிவில் அவர்கள் வளரும்போது, அதிகமாக உம்மைக் குறித்து அவர்களுக்கு வெளிப்படுத்துவேன். இப்படியாக நீர் என்னிடத்தில் வைத்த அன்பு அவர்களிடத்திலிருக்கும்படிக்கும், நானும் அவர்களிலிருக்கும்படிக்கும் உம்மைக் குறித்து அவர்களுக்குத் தெரியப்படுத்துவேன் என்ற விதத்தில் கூறினார்.

தேவனுடைய இந்த அன்பும், கிறிஸ்துவினுடைய இந்த அன்பும் எத்துணை அதிசயமாய் உள்ளது! இதன் நீளத்தையும், அகலத்தையும், உயரத்தையும், ஆழத்தையும் நம்மால் அளக்க முடியாததுபோன்று தோன்றுகின்றது! கர்த்தரைத் தங்களுடைய மீட்பராகவும் ஏற்றுக்கொண்டு, அவருடன் ஓர் உடன்படிக்கையின் உறவிற்குள் வந்துவிட்டு, தங்களிடத்தில் இருக்கும் கொஞ்சமான காரியங்கள் அனைத்தையும் அவருக்கென்று கொடுத்துவிட்டு, அவர் ஏற்பாடுபண்ணியுள்ள இந்த அனைத்து ஆசீர்வாதங்களில் பங்கடையும் வாய்ப்பை அவரிடத்தில் பெற்றுக்கொண்ட பிற்பாடு, பெலவீனத்தாலோ (அ) எதிர்ப்பினாலோ (அ) வேறு ஏதாவது காரணங்களினாலோ ஒருவேளை கீழே தள்ளப்பட்ட நிலையில் காணப்பட்டார்களானால், அத்தகையவர்கள், பிதா நமக்காகக் கொண்டிருப்பதும், குமாரன் பங்கிட்டுக் கொடுப்பதுமான இந்த மாபெரும் அன்பை நினைவில் கொண்டுவந்து, எண்ணிப்பார்க்கிறவர்களாக இருக்க வேண்டும். அதாவது, நாம் பாவிகளாகவே இருக்கையில் நம்மை மீட்டுக்கொண்டது மாத்திரமல்லாமல், (ஒருவேளை) நாம் அவருக்காக பாடுபடுவோமானால், நாம் அதிசயமான ஆசீர்வாதங்களையும், சிலாக்கியங்களையும் மற்றும் கர்த்தராகிய கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரத்துவத்தையும் அடையும்படிக்கு, நம்மை அழைத்ததுமான அன்பை நாம் நினைவில் கொண்டுவந்து, எண்ணிப் பார்க்கிறவர்களாக இருக்க வேண்டும். ஒருவேளை நாம் அவருக்காகப் பாடுபடுகிறவர்களாக இருப்போமாகில், இந்த அன்பானது நம்மைவிட்டு எளிதில் தள்ளிப்போவதில்லை; நாம் பின்வாங்கி இரண்டாம் மரணத்திற்குள்போவதை அனுமதிப்பதைக் காட்டிலும், இந்த அன்பானது நம்மைச் சிட்சித்துத் திருத்துகின்றது. பின்னர், இயேசுவின் மீதான விசுவாசத்தில் நிலைத்திருப்பவர்களையும், உண்மையுள்ள வார்த்தைகளைத் தொடர்ந்துப்பற்றிப்பிடித்துக் கொண்டிருப்பவர்களையும், இறுதியில் இந்த அன்பானது ஒன்றில் சிறுமந்தை யினராகவோ (அ) திரள்கூட்டத்தினராகவோ விடுவித்துவிடுகின்றது. ஆனால், தேவனுடைய இந்த அன்பு எந்த அளவிற்கு செழிப்பாக நம்மிடத்தில் குடியிருக்கிறதோ, கிறிஸ்து எந்த அளவிற்கு நம் இருதயங்களில் வாசம் செய்கிறாரோ, நம் இருதய சிங்காசனத்தில் அவர் எந்த அளவிற்கு நிலையாக வீற்றிருக்கிறாரோ, அந்த அளவிற்கு நாம் பிதாவின் பார்வையில் பிரியமாகவும், நம் கர்த்தரால் அங்கீகரிக்கப்படுகிறவைகளையும் செய்ய ஆர்வமாக இருக்கும் பதிலளிக்கிற அன்பை வெளிப்படுத்துவோம். அதே அளவுக்கு, கர்த்தருக்கும் நம் ஆத்துமாக்களுக்கும் இடையே தடை அல்லது திரை வரக்கூடிய எதையும் செய்ய நாம் வெறுப்புடன் இருப்போம் (செய்யமாட்டோம்). அப்படியிருக்கையில், தெய்வீக அன்பின் நீளம், அகலம், உயரம், ஆழம் ஆகியவற்றை நாம்

தெளிவாகப் புரிந்துகொள்வதன் மூலம் புதிய தைரியத்தை அடைவோமாக. மேலும், இந்த தேவனுடைய அன்பு நம்மை அவருக்காகவும், அவருடைய நோக்கங்களுக்காகவும் மாபெரும் உழைப்பும் பக்தி வைராக்கியமும் கொண்டவர்களாக ஆக்க நெருக்கி ஏவுவதாக. R3553

**நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும்,விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி, சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து; அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.**
**– எபேசியர் 3:16–19**

நம்முடைய பரலோகத் தந்தை, நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் மீது வைத்தது போலவே, நம்மிடமும் அதே அன்பு செலுத்துகிறார் என்று நமக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது. இது மிகவும் ஆச்சரியமானதாக இருக்கலாம். ஆனால் நம்முடைய கர்த்தரின் ஜெபத்தைப் கேளுங்கள்: "நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுக்கிறேன் … அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும் … ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும் . . . நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும்" (யோவான் 17:20–23). ஆச்சரியத்துடன், "இது எப்படி முடியும்?" என்று வினாவுகிறோம். நம்முடைய கர்த்தராகிய இயேசு எப்பொழுதும் பிதாவுடன் பரிபூரணமான இணக்கத்துடன் இருந்தார்; அவரது சாயலை மகிமையுடன் பிரதிபலித்த ஒரு குமாரனாக இருந்தார்; ஆனால் அது நம்மிடம் அப்படியாக இல்லை: நாம் பாவிகளாக இருந்தோம் மற்றும் நம்மிடத்தில் அன்பிற்கு தகுதியான எதுவும் இல்லை. ஆம், ஆனால் நாம் கழுவப்பட்டு சுத்திகரிக்கப்பட்டுள்ளோம், நம்முடைய மண்பாண்டங்கள் இன்னும் எவ்வளவு அபூரணமாக இருந்தாலும், இருதயத்தை வாசிக்கக்கூடிய அவருடைய பார்வையில் நம்முடைய இருதயம் பரிபூரணமாக இருக்கிறது. மேலும், இந்த பரிபூரண இருதயத்துடன் அவர் நம்மைப் பார்க்கும்போது – அதாவது ஒரு சரியான நோக்கமும் எண்ணமும், நமது அபூரண மாம்சத்தின் பலவீனங்களையும் குறைபாடுகளையும் கடக்க போராடி முயற்சித்து, மேலும் தேவனுடைய சித்தத்தைச் செய்ய வலிமிகுந்த, ஆனால் உறுதியான முயற்சியுடன் செயல்பட்டு, மேலும் வீழ்ச்சியிலிருந்து நம்மை மீட்பதற்கான தேவனின் இந்த ஏற்பாடுகளில் தாழ்மையுடன் நம்பிக்கை வைக்கும் இந்த இருதயத்தை தேவன் பார்த்து, நம்மில் அதை அவருடைய அன்பிற்கு தகுதியானதாக தேவன் அங்கீகரிக்கிறார். ஆகவே, பிதா குமாரனில் அன்பாயிருக்கிறது போலவே நம்மிலும் அன்பாயிருக்கிறார் என்பதை நம் கர்த்தராகிய இயேசு நமக்குத் தெளிவாகப் புரிய வைக்கிறார்.

கிறிஸ்து இயேசுவை அவர் நேசிப்பதைப் போலவே, நம்மீது பிதாவின் அன்பு சமமாக இருப்பது மட்டுமல்லாமல், அது வெளிப்படையாகவும் காட்டப்படுகிறது. நாம் அவருடைய குமாரனுக்கு உடன்சுதந்திர வாளிகளாகவும், அவருடைய மகிமையில் பங்குகொள்ளக்கூடியவர்களாகவும் அழைக்கப்பட்டுள்ளோம்; மேலும் எல்லாம் அவருடையதானபடி, அவைகள் எல்லாம் நம்முடையதாகவும் கூறப்படுகின்றன – ரோம 8:17; 1 கொரி 3:21–23.

நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே, தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே, கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும். – ரோமர் 8:17

எல்லாம் உங்களுடையதே. நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள். கிறிஸ்து தேவனுடையவர்.
– 1 கொரிந்தியர் 3:21, 23

பரலோகத் தகப்பனுக்கும் அவரது அபிஷேகம் செய்யப்பட்ட பிள்ளைகளுக்கும் உள்ள ஒற்றுமை இப்படியாக இருந்தாலும், கிறிஸ்து இயேசுவுக்கும் அவரது அபிஷேகம் செய்யப்பட்ட சகோதரர்களுக்கும் இடையே அதே ஒற்றுமையைக் காண்பது ஆசீர்வாதமாகும். கர்த்தராகிய இயேசு சுயநலத்துடன் எல்லா மகிமையையும் பிடித்து வைத்துக்கொண்டு அதைத் தனக்காக தக்கவைத்துக்கொள்ள முயலவில்லை; மாறாக, அவர் தம்மைப் பின்பற்றுபவர்களை மெச்சுதலுடன் பார்க்கிறார். அவர்கள் பெற்ற தகுதியை பரிசீலிக்கிறார். மேலும் அவர்கள் “என்னுடையவர்கள், நான் அவர்களிலே மகிமைப்படுகிறேன்” என்று கூறுகிறார் (யோவான் 17:10); அவர்கள் அனைவரும் தம்முடன் தந்தையின் அன்பில் தம்மோடு இணைந்து பிணைக்கப்பட்டிருப்பதற்கு அவர் விரும்புகிறார். மேலும் அவர் அவர்கள் தம்முடன் இருக்கவும், தந்தையால் உலகத்தின் ஆதிகாலத்தில் தமக்கு அளிக்கப்பட்ட மகிமையையும் – அவரது மாபெரும் படைப்புச் செயல்களின் மகிமையையும், தந்தையின் அன்பின் மற்ற சான்றுகளுடனும் பார்க்கவும் பகிர்ந்து கொள்ளவும் விரும்புகிறார். (யோவான் 17:22–24)

இவ்வாறு அனைத்து தெய்வீகக் குடும்பத்தினரும் ஒரே அன்பு, ஐக்கியம், நம்பிக்கை, பரிவு, ஒற்றுமை மற்றும் பொதுவான நலனுக்கடுத்த பிணைப்பில் பிணைக்கப்பட்டிருக்கிறார்கள்; ஒருவருடைய கனமும் மகிமையும் அனைவருக்கும் கனமும் மகிமையும் ஆகும். கர்த்தரின் பிரார்த்தனையில் இந்த ஒற்றுமைக்கான விண்ணப்பங்களால் நிறைந்துள்ளது. இந்த வசனத்தை கவனியுங்கள் (யோவான் 17:21) – “பிதாவே.., நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்”. [உமது ஆவி, சிந்தனை, நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் எங்கள் அனைவருக்கும் பொதுவானது]. எனவே, அவர் நம்மை அதே தந்தையின் ஆவியை, நோக்கத்தை மற்றும் குறிக்கோளை ஏற்றுக்கொண்டு, பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதற்கு வைராக்கியத்துடனும் உண்மையுள்ளவர்களாக நம்முடைய எல்லா திறன்களையும் அர்ப்பணிக்க வேண்டும் என விரும்புகிறார். R3160

ஆமென், அவ்வாறே ஆகட்டும்.

# நள்ளிரவு வேளையில்

**இயேசு இவைகளைச் சொன்னபின்பு, தம்முடைய சீஷருடனேகூட கெதரோன் என்னும் ஆற்றுக்கு அப்புறம் போனார், அங்கே ஒரு தோட்டம் இருந்தது, அதிலே அவரும் அவருடைய சீஷரும் பிரவேசித்தார்கள்.**
**– யோவான் 18:1**

மேல் வீட்டறையை விட்டுச் சென்றதற்கும், எண்ணெய் செக்காகிய கெத்செமனேயை வந்தடைவதற்கும் இடையில் நடைப்பெற்றவைகளானது பரிசுத்த யோவான் எழுதிய சுவிசேஷத்தின், மூன்று அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது

**இயேசு தம்முடைய சீஷருடனேகூட அடிக்கடி அங்கே போயிருந்தபடியினால், அவரைக் காட்டிக்கொடுக்கிற யூதாசும் அந்த இடத்தை அறிந்திருந்தான்.**
**– யோவான் 18:2**


அநேகமாக, நடுராத்திரி வேளையில், இயேசு பதினொரு பேருடன் எருசலேமின் நுழைவாயிலைக் கடந்து வெளியேபோய், கெதரோன் என்னும் சிறு ஆற்றைக்கடந்து, அதற்கு அப்புறத்திலுள்ள கெத்செமனே தோட்டம் என்று அழைக்கப்படும் ஒலிவமரத் தோட்டத்திற்குப் போனார். ஒருவேளை இது பொதுவான தோட்டமாக அல்லது நமது கர்த்தருடன் நட்புறவில் காணப்படும் யாரோ ஒருவருக்குச் சொந்தமான தோட்டமாகவும் கூட இருக்கலாம்.

இதற்கிடையில், சில நாட்களுக்கு முன்னதாக இயேசுவைக் காட்டிக்கொடுப்பதாக பிரதான ஆசாரியனுடன் ஒப்பந்தம் போட்டிருந்த யூதாஸ், அதாவது இராப்போஜனம் முடிந்தவுடன் தன்னுடைய கொடிய திட்டத்தை நடத்தும்படிக்கு மேல் வீட்டறையை விட்டுப் புறப்பட்ட யூதாஸ், இயேசுவைக் கைதுசெய்து, பஸ்காவிற்கு முன்னதாக அவருக்கு மரணதண்டனை அளிக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கும் போர்ச்சேவகரின் கூட்டத்தையும், பிரதான ஆசாரியர், பரிசேயர் என்பவர்களால் அனுப்பப்பட்ட ஊழியக்காரரையும் கூட்டிக்கொண்டு வந்தான். இந்தப் போர்ச்சேவகர்கள் அடங்கிய கூட்டத்தில், 3 முதல் 600 ரோம போர்ச்சேவகர்கள் இருந்தார்கள் என்று பொதுவாய் நிலவிவரும் கருத்தை நாம் முற்றிலுமாக நிராகரிக்கின்றோம். இங்கு அனுப்பப்பட்ட போர்சேவகர்கள், இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் போர்ச்சேவகர்கள் பொதுவாய் நடந்துக்கொள்வதிலிருந்து, வித்தியாசமாய் செயல்பட்டனர். இதுவுமல்லாமல், இந்தப் போர்சேவகர்கள் ரோமின் பிரதிநிதிகளாகிய பிலாத்துவினால் அல்லது ஏரோதினால் அனுப்பப்படாமல், ரோம படையினுடைய கட்டளையின் கீழ் காணப்படாத பிரதான ஆசாரியர்கள் மற்றும் பரிசேயர்களால் தான் அனுப்பி வைக்கப்பட்டனர் என்று அனைத்து சுவிசேஷகர்களும் பதிவு செய்துள்ளனர். இயேசுவைக் கைது செய்த இந்தப் போர்சேவகர்கள், யோவான் 7:32–46 வரையிலான வசனங்களில் இடம்பெறும் சேவகர்கள் தான் என நாம் எடுத்துக்கொள்கின்றோம்.

நமது கர்த்தர் அன்று ராத்திரியிலே அவ்விடத்திற்கு சென்றதற்கு அநேகமாக இரண்டு காரணங்கள் இருந்தன. முதலாவது காரணம் என்னவெனில்: துரோகியான யூதாசும், அவனால் கூட்டிக்கொண்டுவரப்படும் கூட்டத்தாராலும், தாம் கைது செய்யப்படுவார் என்பதை உணர்ந்த நமது கர்த்தர், மிகவும் அன்பாக மாடி அறையைப் பயன்படுத்தும்படிக்கு அனுமதித்த நண்பனுக்குப் பிரச்சனையைக் கொண்டுவர அநேகமாக விரும்பவில்லை என்பதாகும். இரண்டாவது காரணம் என்னவெனில், அவர் நடு இராத்திரியின் அமைதியான வேளையை விரும்பி, மலைப்பகுதிக்குச் சென்று, தேவனுடன் தனிமையில் இருக்க விரும்பினார் மற்றும் தம்முடைய ஆத்துமாவை ஜெபத்தில் ஊற்றி, நடக்கவிருக்கும் சம்பவங்களுக்குப் போதுமான பலத்தைப் பெற்றுக்கொள்ள அவர் விரும்பினார் என்பதாகும்.

இது போதகருடைய அனுபவங்களிலேயே மிகவும் குறிப்பிடத்தக்க இரவாகும். அவர் பஸ்காவினுடைய ஒவ்வொரு அம்சத்தின் அர்த்தத்தையும் நன்கு அறிந்திருந்தார். தாம்தான் நிஜமான தேவ ஆட்டுக்குட்டி என்றும், தம்முடைய மரணமானது அடுத்த நாளில் சிலுவையில் அறையப்படுவதின் மூலம் நிறைவேறும் என்றும் அவர் அறிந்திருந்தார். R2773, R2467, R4707

# JERUSALEM 33A.D



# தோட்டத்திலே

**துக்கமடையவும் வியாகுலப்படவும் தொடங்கினார்.**
**– மத்தேயு 26:37 –**

நமது கர்த்தர் தம்முடைய சீஷர்களுடன் பேசிக்கொண்டிருந்தபோதும், அவர்களுக்காக ஜெபித்தபோதும், அவர் திடமனதுடன் காணப்பட்டதாகத் தெரிகின்றது. அதாவது, அவர்களுடைய இருதயங்கள் கலங்காதிருப்பதாக என்று அவர்களுக்கு அவர் புத்திமதிக் கூறிக்கொண்டிருந்தபோது, அவருடைய சொந்த இருதயம் கலக்கம்கொள்ளாமல்தான் காணப்பட்டது. ஆனால், அந்தச் சிறுகூட்டம் கெத்செமனேயை நோக்கி நடந்துக்கொண்டிருக்கையில், நம்முடைய அருமை மீட்பருடைய உணர்வுகளை, மிகுந்த பாரம் அழுத்தினதை நம்மால் புரிந்துக்கொள்ள முடிகின்றது. “என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது” (மத்தேயு 26:38) என்று அவர் கூறினது நம்முடைய நினைவுக்கு வருகின்றது. தற்போது அவர் கெத்செமனேக்குச் சென்றுகொண்டிருப்பதென்பது, முற்காலங்களில் அவ்விடத்திற்கு அவர் சென்றதிலிருந்து மிகவும் வேறுபட்டதாய் இருந்தது. ஆண்டவருடைய துக்கத்தைக்கண்டு, அப்போஸ்தலர்கள் சூழ்நிலையைக் கொஞ்சம் கிரகித்திருப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லையென்றாலும், அடுத்து என்ன சம்பவிக்கப்போகின்றது என்பதைச் சற்றே புரிந்திருந்தார்கள்.



சுவிசேஷகர்கள் பதிவு செய்ததிலிருந்து நாம் அறிந்துகொள்வது என்னவெனில், தோட்டத்திற்கு வந்தபோது, நமது கர்த்தர் அப்போஸ்தலர்களில் எட்டுபேரைத் தோட்டத்தின் நுழைவுவாயிலிலேயே நிறுத்திவிட்டு, தமக்கு நெருக்கமானவர்களாகிய பேதுருவையும், யாக்கோபையும், யோவானையும் தம்முடன் கூட உள்ளே கூட்டிக்கொண்டு போனார் மற்றும் அது விசேஷமான சோதனைக்கான வேளையாய் இருந்தபடியினால், அவர்களனைவரையும் விழித்திருந்து ஜெபம் பண்ணும்படிக்கு எச்சரித்தார். இவர்களைக் கர்த்தர் இந்தக் கவலைக்கிடமான வேளையில் தம் அருகாமையில் காணப்பட வேண்டும் என்று விரும்பினார். எனினும் இந்தத் தருணத்திலும்கூட, கர்த்தர் தம்முடைய ஜெபத்தில் இன்னும் தனித்துக் காணப்பட விரும்பினார்; காரணம் இந்த அவருடைய உண்மையான நண்பர்களுங்கூடச் சூழ்நிலையை உணர்ந்துகொள்ள முடியாமல் காணப்படுவார்கள்; “ஜனங்களில் ஒருவனாகிலும் அவருடன்கூட இருக்கவில்லை”. ஆகவே இந்த மூவரையும் விட்டு, கல்லெறியும்

தூரத்திற்கு அப்பால் போய், பதிவுகளின்படி முகம்குப்புற விழுந்து பிதாவுடன் இரகசியமாக சம்பாஷித்தார். அவருடைய உணர்வுகளை, அவருக்கு அன்பாய் இருந்த சீஷர்களிடம் கூட அவர் பகிர்ந்துகொள்ளவில்லை, கொள்ளவும் முடியாது. அவர் கடந்துபோகின்ற பரீட்சையை/சோதனையை அவர்களால் புரிந்துகொள்ள முடியாது. அவர்கள் இன்னமும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவில்லை. ஆகவே அவருடைய மிகுந்த சோதனையான வேளையில், இயேசு தனிமையிலேயே காணப்பட்டார்.

அவரது வாயினின்று பேசப்பட்டவைகளைக் குறித்துக் குழப்பமடைந்து, அதிர்ச்சியடைந்துக் காணப்பட்ட சீஷர்கள், உண்மை நிலவரத்தைப் புரிந்துகொள்ளவில்லை. அவரது வார்த்தைகள் மறைப்பொருட்களாகவே இருக்குமென்று அவர்கள் எண்ணினார்கள் என்பதில் உறுதியே. அவரோடுகூட விழித்திருக்க அவர்களுக்கு விருப்பம்தான், ஆனாலும் அவர்கள் களைப்படைந்திருந்தபடியால், உறங்கிப்போனார்கள். அவர்களது ஆவி உற்சாகமுள்ளதாய்தான் இருந்தது, ஆனால் மாம்சமோ பெலவீனமாய் இருந்தது. R2467, R2773 & R4707

## அப்பொழுது, அவர்: என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது, நீங்கள் இங்கே தங்கி, என்னோடேகூட விழித்திருங்கள் என்று சொல்லி.
## – மத்தேயு 26:38 –

இத்தருணத்திலுள்ள நமது கர்த்தருடைய அனுபவங்களைப்பற்றின பல்வேறு பதிவுகளை வைத்து, எல்லாவற்றையும் தொகுத்துப்பார்க்கும்பொழுது, அவர் ஒருபோதும் அனுபவித்திராத மன வேதனையானது, மிகுந்த வேதனையுடன் அவர்மேல் கடந்துவந்திருந்ததை நம்மால் பார்க்க முடிகின்றது. மேலும் அவர்மேல் வந்த பாரத்தின் சுமை அதிகரித்துக்கொண்டே இருந்தது; அதாவது, “மரணத்துக்கு ஏதுவான துக்கமாய் இருந்தது”, அதாவது அவருடைய ஜீவியத்தையே நசுக்கிப்போடும் அளவுக்கு உள்ள துக்கமாய் இருந்தது என மத்தேயுவின் பதிவின்படி பார்க்கின்றோம். மாற்கு 14:33–ஆம் வசனத்தின்படி ஏதோ எதிர்பாராத விதத்தில் அவர்மேல் துக்கம் வந்ததுபோலவும், ஏதோ அவர் திகைத்துவிட்டது போலவும், “அவர் திகிலடையவும், மிகவும் வியாகுலப்படவும்” செய்தார் என்று பார்க்கின்றோம். வைத்தியனாகிய லூக்கா அவர்களின் பதிவின்படி, அவர், “மிகவும் வியாகுலப்பட்டார்” (லூக்கா 22:44) என்று பார்க்கின்றோம்; இங்கு இடம்பெறும் வியாகுலத்திற்கான (agony) கிரேக்க வார்த்தையின் பொருளானது, ஆற்றலிலும், வீரியத்திலும் பெருகிக்கொண்டிருக்கும் ஒரு போராட்டம் என்பதாக இருக்கின்றது; ஆகவே, அவருடைய வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் தரையிலே விழுந்தது என்று பார்க்கின்றோம்; இந்த இரத்த வியர்வை என்பது, இன்றைய வைத்தியர்களினால் மிகவும் அபூர்வமான ஒன்றாகக் கருதப்பட்டாலும், இரத்த வியர்வை என்பது அவர்களால் அறியப்பட்டுள்ள ஒன்றாகத்தான் இருக்கின்றது. இரத்த வியர்வை என்பது, மரணத்துக்கு ஏதுவான துக்கமாகிய உச்சக்கட்ட நெருக்கடியையே சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது.*

இப்படிப்பட்ட கடினமானவர்கள், விருப்பு வெறுப்பு இல்லாத கல் மனதையுடையவர்கள் போல் இயேசு இல்லை என்பதினாலும், அவர் மென்மையான, அன்பான, பரிவான உணர்வுகளையும், உணரும் திறன்களையும் கொண்டிருந்தார் என்பதினாலும், மற்ற/வேறெந்த மனுஷனைக்காட்டிலும் மிகவும் பரிவுடனும், மிகவும் மென்மையாகவும், மிகவும் தூய்மையுடனும், மிகவும் கூர்மையான உணர்வுடனும் இயேசுவினால் அனுதாபம்/இரக்கம்கொள்ள முடியும் என்பதினாலும், நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். நம்பொருட்டு, தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுக்கும் விஷயத்தில் அவர் தம்மைத்தாம் எந்த ஒரு நிலைக்குள்ளாக வைத்திருந்தார் என்பதை அவர் நன்கு உணர்ந்திருக்க வேண்டும்; ஏனெனில் ஒரு சிருஷ்டி பூரணமாய் இருந்தால், அதன் உணர்வுகள் மிகுந்த உணர்வுத்திறன் கொண்டதாயும், உயர் ஆற்றல் மிக்கதாயும் காணப்படும்;

(*Vatican மூலப்பிரதிகளில் நமது கர்த்தருடைய இரத்த வியர்வைக்குறித்த பதிவு இடம்பெறவில்லை என்றும், Sinaitic மூலப்பிரதிகளில் இது இடம்பெற்றாலும், இது பின்னாளில் வல்லுநர் ஒருவரால் அகற்றப்பட்டுள்ளது என்றும் பேராசிரியர் டிஸ்கென்டார்ப் அவர்கள் தெரிவிக்கின்றார். ஆகையால் இவ்வசனப்பகுதியானது சந்தேகத்திற்குரியதாக (அ) கேள்விக்கு இடம் கொடுப்பதாகக் காணப்படுகின்றது.)

சந்தோஷத்தையும் அதிகமாய் உணர்ந்துகொள்ளும், துக்கத்தையும் அதிகமாய் உணர்ந்துகொள்ளும் திறன் கொண்டிருக்கும். நமது கர்த்தர் முழுமையாய்ப் பூரணமானவராக இருந்தபடியினால், மற்றவர்களைக்காட்டிலும், கர்த்தரே வலியின் தாக்கத்திற்கு அதிகமாய் உள்ளாகுகின்றவராய் இருப்பார்.

ஜீவனை இழப்பது என்பது, நமது கர்த்தருடைய துக்கத்திற்கான முக்கிய காரணி என்பதில் எவ்விதமான ஐயமுமில்லை. இதை அப்போஸ்தலர் எபிரெயர் 5:7–ஆம் வசனத்தின் வார்த்தைகளில் தெளிவாகத் தெரிவிக்கின்றார். “அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டார்.” பிதாவின் சித்தத்தைச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் அவருக்கு ஒவ்வொரு நாளும் சுயத்தைப் பலி செலுத்தும் விஷயத்தில் கடந்து சென்றது இன்னும் ஒருசில மணி நேரங்களில் அனைத்தும் முடிந்துவிடும்; இந்த ஒரு எண்ணமானது, வேறொரு எண்ணத்தையும் கூடக் கூட்டிக்கொண்டு வந்தது, ..... தாம் பிதாவின் சித்தத்தைப் பூரணமாய்ச் செய்துள்ளாரா? மரணத்திலிருந்து உயிர்த்தெழுதல் என்று தமக்கு வாக்களிக்கப்பட்ட பலனை/பரிசைத் தம்மால் உரிமைக்கோர முடியுமா? தம்மால் பெற்றுக்கொள்ள முடியுமா? என்பதேயாகும்.

பூரணத்தின் அளவுகோலுக்கு ஏற்ப வரும் விஷயத்தில், அவர் ஏதேனும் தவறிப்போனால், அவருடைய மரணம் என்பது, முற்றிலுமான அழிவாக இருக்கும்; மனுஷர்கள் அனைவரும் தாங்கள் அழிந்துபோவதைக் குறித்துத் திகிலடைந்தாலும், எவராலும் அழிவின் அர்த்தத்தினுடைய முழு ஆழத்தையும், அழுத்தத்தையும் அவரைப்போல் அதாவது, பரிபூரணமான ஜீவனை உடையவராக மாத்திரமல்லாமல், பிதாவுடன் தமக்கிருந்த முந்தின மகிமைப்பற்றின நினைவுகளைப் பெற்றிருந்த அவரைப்போல் அறிந்துகொள்ள முடியாது. அவரைப் பொறுத்தமட்டில், அழிவைப் பற்றின சிந்தனையே, அவருக்கு துக்கத்தையும், ஆத்துமாவில் அச்சத்தையும் கொண்டுவந்தது. இதே சிந்தனையானது முன்பு அவருக்கு இப்படியாக அழுத்தத்தைக் கொடுக்கவில்லை. இதுவே இப்பொழுது அவரை மரணத்துக்கு ஏதுவான அதிர்ச்சிகலந்த துக்கம் கொள்ளுமளவுக்கு அவர்மேல் பாரமாய் அழுத்தினது. R2773

## சற்று அப்புறம்போய், முகங்குப்புற விழுந்து: என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும், ஆகிலும் என் சித்தத்தின் படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்.

## – மத்தேயு 26:39 –

தீர்க்கதரிசிகளால் முன்னறிவிக்கப்பட்ட நேரம்/வேளை இதுதான் என்று உணர்ந்ததால் நமது கர்த்தர் இந்த நேரத்தில் மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தாலும்,ஆயினும், அந்த மரணத்தோடு கூட மனதையும் உடலையும் சித்திரவதை செய்வதும், அவமானப்படுத்தப்படுவதும் ஏன் என்பதை அவர் தெளிவாக புரிந்திருக்கவில்லை. எனவே அவர் “என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு **நீங்கக்கூடுமானால்** நீங்கும்படிச் செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின் படியல்ல, உம்முடைய சித்தத்தின் படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார்”. (மத்தே. 26:39.) மரணத்திற்க்குள்ளான ஞானஸ்நானம் (மூழ்குதல்) என்பது தனது பணி என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார் மேலும் அதைத் தவிர்க்க ஒரு கணம் கூட அவர் நினைக்கவில்லை: மேலும் அதனுடன் பாடுகளும் அவமானமும் நிறைந்த ஒரு கசப்பான பாத்திரமும் அவருக்கு வர வேண்டும் என்பதையும் அவர் அறிந்திருந்தார். ஆனால் அவரது நேரம் கிட்டத்தட்ட வரும் வரை,அந்தக் பாத்திரத்தின் அடிமாண்டி எவ்வளவு கசப்பாக இருக்கும் என்பதை அவர் முழுமையாக உணர்ந்து கொண்டிருக்கவில்லை. மரணம் தான் நமது பாவங்களுக்கான தண்டனையே தவிர, அவமானமும், தவறாக சித்தரிக்கப்படுவதும் அல்ல என்பதால், மனுக்குலத்தை மீட்பதற்குத் தேவையானதை விட அதிகமாக சகித்துக்கொள்ளும்படி தம்மிடம் கேட்பது தொடர்பாக , பிதாவின் ஞானத்தையும் அன்பையும் கேள்விக்குட்படுத்த நமது கர்த்தருக்கு இடமளிக்கப்பட்டது. ஆனால் அவர், “என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது” என்று கூறி தந்தையின்

ஞானத்திற்கும் அன்பிற்கும் முழுமையாக பணிந்து ஒப்புக்கொண்டார். அப்போஸ்தலரின் வார்த்தைகளின் வெளிச்சத்தில் நாம் பார்க்கும்போது, பரிபூரணமான "மனிதன் கிறிஸ்து இயேசு" மனிதர்களை மீட்பதற்காக மட்டுமல்ல, தனது மரணம் வரை–சிலுவையின் மரணம் வரைக்கும் கீழ்ப்படியும் கீழ்ப்படிதலின் மூலம் தெய்வீக சுபாவத்தின் பரிபூரணத்திற்கு, உயர்ந்த மேன்மைக்கு **தகுதியானவர்** என்பதை நிரூபித்தார். இந்த முழுமையான மற்றும் கண்மூடித்தனமான கீழ்ப்படிதலின் காரணமாகவே இப்போது அவர் அந்த உன்னத ஸ்தானத்தை அடைந்துள்ளார் (பிலி. 2:9). அதேபோல, அவரது கடைசி தருணங்களில், தாம் யாருக்காக **மீட்கும்பொருளை** கொடுக்க வந்திருக்கிறாரோ அந்த **பாவிகளைப் போலவே** நடத்தப்பட்ட போது, தம்முடைய பிதாவுடன் இருந்த மன ஐக்கியம் தடைப்பட்டு, ஒரு கணம் தனிமையாக உணர்ந்தார். பிதாவிடமிருந்து பிரிக்கப்பட்டு, தாம் பிரதிநிதித்துவம் செய்த பாவிகளைப் போலவே கண்டனத்திற்குள்ளானவர் ஆகி உணர்ந்த அந்த நிலை அவருக்கு தாங்க முடியாததாக இருந்தது. இதனால் அவர் உரத்த குரலில், "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னை கைவிட்டீர்?" என்று கூக்குரலிட்டார். இது மற்ற எல்லாவற்றையும் விட மிகக் கடுமையானதாகவும், அந்த பாடுகளின் பாத்திரத்தின் அடிமண்டியாகவும் இருந்தது. தந்தையின் திட்டத்தின் இந்த அம்சத்தின் ஞானமும் தேவையும்/அவசியமும் அன்பும், அந்த நேரம் கடந்து சென்ற பின்பே முழுமையாக வெளிப்படுத்தப்பட்டது. அந்த மணிநேரம் வரை அவர் தமது தேவனுடனான முழுமையான ஐக்கியத்தில் இருந்தார். – யோவான் 16:32 ஐ பார்க்கவும்.

ஒவ்வொரு யுகத்திலும், ஜீவனுக்கான அனைத்து தளங்களிலும் உள்ள தேவனுடைய ஒவ்வொரு சிருஷ்டிகளுக்குமான கீழ்ப்படிதலைப் பற்றிய என்ன ஒரு ஆழமான பாடம் இவ்வாறு அளிக்கப்பட்டது. ஏன் அப்படி இருக்க வேண்டும் என்று புரியாமல் இருக்கும்பொழுதும், இருதயத்தை பிளக்கும் மிகப் பெரிய சோதனைகளின் நிலையிலும் கூட, தேவனுடைய சித்தத்திற்குத் தாழ்மையுடன் அன்பாக தலைவணங்கும் கீழ்ப்படிதலாகும். நாம் கற்றுக்கொள்வதற்கும், பின்பற்றுவதற்கும் எத்தனை மகிமையான முன்மாதிரி! தேவனுடைய சித்தத்திற்கான முழுமையான சமர்ப்பணமும், முழுமையான நம்பிக்கையும் உள்ளடங்கிய நற்பண்பு. இது, சர்வவல்லமையுள்ள பிதாவை தெளிவாக காண முடியாத, ஐக்கியம்கொள்ள முடியாத சந்தர்ப்பங்களிலும் கூட, அவர் மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துத் தலைவணங்கும் மனப்பான்மையைக் காட்டுகிறது. R959

### அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, – எபிரெயர் 5:8

இயேசு தம் மீது வரவிருக்கும் அனைத்து காரியங்களையும் முன்கூட்டியே அறிந்திருந்தார் என சுவிசேஷகர்கள் தெரிவிக்கின்றனர். மேலும், அவர் ஜெபம் பண்ணினபோது, "வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி அவரை பலப்படுத்தினான்" என்றும் நமக்குத் தெரிவிக்கப்படுகின்றது. கர்த்தர் பட வேண்டிய பாடுகள் எவை மற்றும் அவைகள் எப்படி எதிர்ப்பார்க்கப்பட வேண்டும் என்பவை தொடர்புடைய விஷயங்களிலுள்ள, பிதாவின் சித்தத்தைப் பற்றிக் கர்த்தருக்குத் தெரிவிப்பதாக தூதனின் இவ்வூழியம் காணப்பட்டிருக்கலாம். மேலும், காரியங்கள் தொடர்பான இந்த அறிவின் காரணமாகவும், பிதா அனைத்தையும் நன்மைக்கு ஏதுவானதாக மாற்றுவார் என்ற நிச்சயத்தின் காரணமாகவும், அவருடைய இருதயம் பலப்பட்டது; மற்றும் இதற்குப் பின்னர் நடந்த காரியங்கள் அனைத்திலும், நம்மால் அவரிடம் கவனிக்க முடிந்த, மாபெரும் அமைதியையும் அவருக்குக்கொடுத்தது. R2467

## அவர் ஜெபம்பண்ணி முடித்து, எழுந்திருந்து, தம்முடைய சீஷரிடத்தில் வந்து, அவர்கள் துக்கத்தினாலே நித்திரை பண்ணுகிறதைக் கண்டு.

## – லூக்கா 22:45 –

கொஞ்சம் நேரம் ஜெபம் பண்ணின பிற்பாடு, அவர் தம்முடைய மூன்று சீஷர்களிடத்தில் வந்தார். மற்றவர்களைக் காட்டிலும், இம்மூவரிடமே அவருடைய மாபெரும் நம்பிக்கை காணப்பட்டது; இவர்கள்

அவருடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான கூட்டாளிகளாக இருந்தனர்; ஆனால் இவர்களை நித்திரைப் பண்ணுகிறவர்களாக இயேசு கண்டார். துயரத்தின் காரணமாகவே இவர்கள் தூங்கிப்போய்விட்டனர் என லூக்கா அவர்கள் விவரிக்கின்றார். அந்த இரவும், அதன் பாடங்களும் மனதில் ஆழமாய் பதிந்ததாய் இருந்தது; அவர்களால் முழுமையாகப் புரிந்துகொள்ளப்படாத நினைவுகூருதலின் போஜன காரியங்களானது, ஆண்டவருடைய மரணத்தைக் குறிக்கின்றது என ஆண்டவர் தெரிவித்ததினாலும், இன்னுமாய் அவர்களில் ஒருவன் ஆண்டவரைக் காட்டிக்கொடுப்பான் என்றும் அவர் கூறினபடியினாலும், அவர்கள் மீது மிகுந்த துக்கமான பாரத்தைக் கொண்டுவந்ததாய் இருந்தது. துக்கத்தின் காரணமாக, மந்த தன்மையுடன் கூடிய தூக்கம் அவர்களுக்கு ஏற்பட்டது. "நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக்கூடாதா? நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" என்று அவர்களை மென்மையாய் நமது கர்த்தர் கடிந்து கொண்டார். "எனக்காக மாத்திரம் நீங்கள் விழித்திராமல், உங்களுக்காகவும் நீங்கள் விழித்திருக்க வேண்டும். நம் அனைவர் மீதும் கடுமையான சோதனை காலம் வரவிருக்கின்றது; இந்த பொல்லாத காலக்கட்டத்தில் விழுந்துபோகாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" என்ற விதத்தில் கர்த்தர் கூறினார்.

பின்னர், மீண்டும் கர்த்தர் ஜெபம் பண்ணும்படிக்குக் கடந்துபோனார். மூன்று முறையும், அவர் ஒரே வார்த்தைகளைக் கூறி ஒரே உணர்வுகளை வெளிப்படுத்தி – ஜெபம் பண்ணினதாக நமக்குக் கூறப்பட்டுள்ளது; அதாவது அவருடைய இருதயத்தை அழுத்திக்கொண்டிருந்த காரியத்திற்காக ஜெபம் பண்ணினார். பிதாவின் சித்தத்தை செய்வதற்கு நாடி, இப்பொழுது தமது ஓட்டத்தை முடிக்கப்போகின்ற அவர், தாம் அங்கீகரிக்கத்தக்க விதத்தில் செய்துள்ளார் என்று நம்பிக்கைக்கொள்ளலாமா? மரணத்திலிருந்து, உயிர்த்தெழுதல் மூலமாய் தம்மை தேவன் இரட்சிப்பார் என விசுவாசத்தின் முழு நிச்சயத்தை தம்மால் பெற்றுக்கொள்ளக்கூடுமோ? கர்த்தருடைய விண்ணப்பத்திற்கு பதிலளிக்கும் வண்ணமாக, அவரை ஆறுதல்படுத்தும்படிக்கும், அவருக்கு நிச்சயம் கொடுக்கும்படிக்கும், அவரை பலப்படுத்தும்படிக்கும், தேவதூதன் அனுப்பி வைக்கப்பட்டார். என்ன செய்தி தேவதூதன் கொண்டுவந்தார் என்பது பற்றி நமக்குக் கூறப்படவில்லை, எனினும் அது சமாதானம் கொடுக்கும் செய்தியாகவும், கர்த்தருடைய நடத்தை பிதா அங்கீகரிக்கத்தக்கதாய் இருந்தது என்பதற்கும், அவர் மரணத்திலிருந்து, உயிர்த்தெழுதல் மூலம் மீண்டும் ஜீவனுள்ளவராய் கொண்டுவரப்படுவார் என்பதற்கும் உறுதியளிக்கும் செய்தியாகவும் இருந்திருக்கும் என நாம் எண்ணுகின்றோம். இவை நமது கர்த்தருக்கு முன்பாக இருக்கும் சோதனைக்கு அவசியமான பலத்தையும், தைரியத்தையும் அவருக்கு அளிப்பதற்கு போதுமானதாய் இருந்தது; மேலும் அதுமுதல் அனைவர் மத்தியிலும் கர்த்தர் அமைதியுடன் காணப்பட்டார். R2774

**நான் ஒருவனாய் ஆலையை மிதித்தேன், ஜனங்களில் ஒருவனும் என்னோடிருந்ததில்லை, – ஏசாயா 63:3**

அவரது சீஷர்களும், பின்னடியார்களும் அவரை மிகவும் அன்புகூர்ந்தார்கள். ஆனாலும் அவர் தனியாகத்தான் காணப்பட்டார்; ஏனெனில் அவர் மாத்திரமே பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப் பட்டவராய் இருந்தார். அவரது பலி நிறைவேறுவது வரையிலும், அவர்களுக்கு தம்முடைய புண்ணியத்தினைத் தரிப்பிக்கத்தக்கதாகவும், அவர்கள் பின்வரும் மகிமைகளில் பங்கடையத்தக்கதாக, தற்காலத்தின் பாடுகளில், அவரோடுகூட பலிச்செலுத்தும்படிக்கு பங்கடைவதற்கு அவர்களை அனுமதிக்கத்தக்கதாகவும், அவர் தேவன் முன்னிலையில் தோன்றுவது வரையிலும், அவரது பின்னடியார்களால் தாங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதாக உணரமுடியாது, ஆவியினால் ஜெநிப்பிக்க படவும்முடியாது. இந்த நமது கர்த்தருடைய அனுபவத்தைக் குறித்துப் பரிசுத்த பவுல் அவர்கள், "தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டார்" (எபிரெயர் 5:7) என்று தெரிவிக்கின்றார். அவருடைய கடுமையான வேளையின்போது அவருக்கு மிகுந்த ஆறுதலும், தேறுதலும் அவசியப்பட்டபோது, அவருடைய பூமிக்குரிய நண்பர்கள் மத்தியில் அவருக்கு நெருக்கமாயும், அன்பாயும் காணப்பட்டவர்களால் கூட அவருடைய உணர்வுகளைப புரிந்துகொள்ளவும் முடியவில்லை, அவருக்கு ஆறுதல் அளிக்கவும் முடியவில்லை. R4707 & R3886

**அவர் திரும்ப வந்தபோது, அவர்கள் மறுபடியும் நித்திரைபண்ணுகிறதைக் கண்டார், அவர்களுடைய கண்கள் மிகுந்த நித்திரைமயக்கம் அடைந்திருந்தது. அவர் மறுபடியும் அவர்களை விட்டுப்போய், மூன்றாந்தரமும் அந்த வார்த்தைகளையே சொல்லி, ஜெபம்பண்ணினார்.**

**– மத்தேயு 26:43–44 –**



உச்சக்கட்டமான மன வியாகுலம் காணப்பட்ட வேளையில், நமது கர்த்தர் மீண்டும் மீண்டுமாக ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார். இதற்கிடையில் ஆறுதலடை வதற்கென அவர் தமது சீஷர்களிடத்தில் வந்தார். ஆனால், அவர்களுடைய கண்கள் துக்கத்தின் காரணமாக நித்திரை மயக்கத்தினால் இருப்பதையும், அவர்கள் உறங்கிக் கொண்டிருப்பதையும் அவர் கண்டார். அப்போது நடு ராத்திரி வேளையாய் இருந்தது. அவருடைய துக்கங்களில் அவரோடுகூட இருந்தாலும், அவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளாதவர்களாக காணப்பட்டார்கள்.

**நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள், ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்.**
**– மத்தேயு 26:41**

அவர் பேதுருவை, “நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடுகூட விழித்திருக்கக்கூடாதா? நீங்கள் சோதனை க்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்” என்று போதகர் கடிந்து கொண்டார் (மத்தேயு 26:40). “உம்மை அனைவரும் கைவிட்டுப்போனாலும், நான் உம்மை கைவிட்டு ஓடமாட்டேன்” என்று கொஞ்ச நேரத்திற்கு முன்பு சூளுரைத்த பேதுருவோ, பட்டயத்தைத் தன்னிடத்தில் பெற்றிருந்தவரும், பிற்பாடு அதனை போதகரைக் காக்கும் முயற்சியில் பயன்படுத்தினவருமாகிய பேதுருவோ, அந்நேரத்திற்குரிய முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளாதவராகக் காணப்பட்டார். மேலும் தமக்கு வரப்போகும் பரிட்சைகள் எவ்வளவு கடுமையானதாக இருக்கும் என்றும், அவைகள் எவ்வளவு அண்மையில் இருக்கின்றது என்றும் போதகர் அறிந்திருந்தது போன்று பேதுரு அறிந்திருக்கவில்லை. மேலும், “சேவல் கூவுகிறதற்கு முன்னே என்னை நீ மூன்றுதரம் மறுதலிப்பாய்” என்று பேதுருவிடம் போதகர் பேசின வார்த்தைகள் இன்னும் சிறிது நேரத்தில் நிறைவேறப்போகின்றது என்பதையும் பேதுரு அறியாதவராய் இருந்தார். பேதுருவும், போதகரைப் போன்று, பரிட்சைகள் சமீபமாய் இருக்கின்றது என அறிந்திருப்பாரானால், அவர் எவ்வளவு எச்சரிப்பாய்க் காணப்பட்டிருந்திருப்பார் என்பதில் ஐயமில்லை. இன்றைக்கு வாழ்ந்துகொண்டிருக்கும் நமக்கும் இது பொருந்துகின்றது அல்லவா? கர்த்தருடைய ஜனங்களாகிய நாமும் இந்த அறுவடை காலகட்டத்தில் சபைக்கான கெத்செமனே வேளையை நெருங்கிக் கொண்டிருக்கின்றோம் அல்லவா? நாம் ஏற்கெனவே கொஞ்சம் அந்த சோதனை வேளைக்குள் காணப்படுகின்றவர்களாய் இருக்கின்றோமல்லவா? கிறிஸ்துவின் கடைசி சரீர அங்கம் சீக்கிரத்தில் தலையோடு சேர்ந்து, பலி நிறைவடையப் போகின்றதல்லவா? நாம் எவ்விதத்தில் ஆயத்தமாய்க் காணப்படுகின்றோம்?

**பின்பு அவர் தம்முடைய சீஷர்களிடத்தில் வந்து: இனி நித்திரைபண்ணி இளைப்பாறுங்கள், இதோ, மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிற வேளை வந்தது. – மத்தேயு 26:45**

“இனி நித்திரைப் பண்ணி இளைப்பாறுங்கள்” என்ற வார்த்தைகளை அவர் ஏளனத்துடன் சீஷர்களை நோக்கிப் பேசவில்லை என்றும், காலையில் வரப்போகிற காரியங்களினிமித்தம் இரவில் அவர்கள் கொஞ்சம் இளைப்பாறுதலும், புத்துணர்வும் அடையட்டும் என்றே கூறினார். ஆனால், அவர்களால் அதிக நேரம் உறங்கமுடியவில்லை. R3885

**என்னைக் காட்டிக்கொடுக்கிறவன், இதோ, வந்துவிட்டான், எழுந்திருங்கள், போவோம் என்றார். – மாற்கு 14:42**

யூதாசின் வழிகாட்டுதலின் கீழ் இயேசுவைத் தேடி வந்த இந்தக் கூட்டத்தார், இயேசுவும், அப்போஸ்தலர்களும் சுமார் ஒருமணி நேரத்திற்கு முன்னதாகவே வெளியேறி கடந்து போய்விட்ட மேல் வீட்டு அறைக்குத்தான் முதலாவதாகச் சென்றிருக்க வேண்டும். இயேசுவும் பதினொரு பேரும் மேற்வீட்டறையை விட்டுக் கடந்துபோயிருப்பதைக் கண்டபோது, அவர்களைக் கெத்செமனே தோட்டத்தில் கண்டுபிடிக்கலாம் என்பதை யூதாஸ் அறிந்திருந்தான். காரணம், “இயேசு தம்முடைய சீஷருடனேகூட அடிக்கடி அங்கே போயிருந்தார்.” காட்டிக்கொடுத்த காரியம் தொடர்புடையதாய் மற்ற சுவிசேஷகர்களால், பதிவு செய்யப்பட்ட காரியங்களை, யோவான் பதிவு செய்யாமல் விட்டுவிட்டார். அநேகமாக அன்பான சீஷனாயிருந்த யோவான், அவ்வுண்மைகளினிமித்தம் மிகவும் வெட்கமடைந்ததால், அவைகளைக் குறிப்பிட அவர் விரும்பவில்லை போலும். யூதாசின் நம்பிக்கை துரோகம் போன்று, வெகு சில சம்பவங்களே நடந்துள்ளது. துரோகியின் ஸ்தானமானது, மிகுந்த இழிவானவர்கள் மத்தியில் தான் காணப்படுகின்றது என, தவறான மனநிலையில் காணப்படும் மனுக்குலம் கூட உணர்ந்துள்ளது. ஆண்டவருடைய இப்படிப்பட்ட அன்புக்கும், இரக்கத்திற்கும், நன்மைகளுக்கும்/நற்குணங்களுக்கும் எதிரான இப்படியான நம்பிக்கை துரோகச் செயல்கள், மிகவும் பொதுவானதல்ல என்பதில் நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கலாம். எனினும் கர்த்தருடைய ஜனங்களின் அனுபவத்தில், இதற்கு இணையான அனுபவங்கள் காணப்படுகின்றன. அதாவது, “சகோதரர்களால் வரும் மோசங்கள்” கர்த்தருடைய ஜனங்களுக்கு உண்டு. இது, யூதாசின் ஆவிக்கு ஒத்ததான எதுவும் நம்முடைய இருதயங்களை அலைக்கழிக்க நாம் அனுமதிக்கக்கூடாது என்று நம்மில் ஒவ்வொருவருக்கும் எச்சரிக்கின்றதாய் இருக்கின்றது. இப்படிப்பட்டதான விஷயங்களில் நம்முடைய கர்த்தர், “தம்முடைய சரீரத்தின் அங்கங்களை” தம்முடன் ஒரே தளத்தில் வைத்தவராக, இந்தச் சிறியவர்களான தம்முடைய சகோதரர்களுக்கு இடறல் உண்டாக்குகிறவர்கள் விஷயத்தில், இடறல் உண்டாக்குகிறவனின் கழுத்தில் எந்திரக் கல்லைக் கட்டி, அவனைக் கடலின் ஆழத்தில் அமிழ்த்திவிடுவது அவனுக்கு நலமாயிருக்கும் என்று நமக்கு உறுதியளிக்கின்றார் – மத்தேயு 18:6.

யூதாசின் எண்ணங்கள், வெளியரங்கமான பொல்லாத கிரியையின் தோற்றத்தை எடுப்பதற்கு முன்னதாக, யூதாஸ் ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும் பொல்லாத எண்ணங்களை விதைத்து வந்துள்ளார். யூதாஸ் ஆஸ்தி மற்றும் செல்வாக்கின் மீது பேராசை கொண்டிருந்தார். அவர் சீஷர்களுடைய சிறிய கூட்டத்திற்குப் பொருளாளரானார். மேலும், நன்கொடையாகக் கொடுக்கப்பட்ட பணத்தில் ஒரு பாகத்தைத் தன்னுடைய சொந்த காரியங்களுக்காக, யூதாஸ் திருடினதாக வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன. யூதாஸ் எந்தளவுக்குப் பணத்தின் மீது ஆசை வைத்தாரோ, அந்தளவுக்கு அந்த ஆசையை நடைமுறையும்படுத்தினார். அதாவது, தனது ஆண்டவரை முப்பது வெள்ளிக் காசுகளுக்கு காட்டிக்கொடுக்க விருப்பங்கொள்ளும் அளவுக்கு, பணத்தின் மீதான யூதாசின் ஆசை பெருகினது.

யூதாஸ், தான் காட்டிக்கொடுத்ததின் விளைவாக உண்டான நிகழ்வுகளினிமித்தம் பயங்கரமான ஏமாற்றத்தை அடைந்திருப்பார் என்பது நிச்சயமே. நமது கர்த்தர் தம்முடைய சத்துருக்களின் கையினின்று அற்புதமான வல்லமையினால் தம்மைத் தப்புவித்துக்கொள்வார் என யூதாஸ் எதிர்ப்பார்த்திருக்க வேண்டும். இதைவிட பரந்த மனப்பான்மையுடன்கூடிய கண்ணோட்டத்தில், யூதாசினுடைய நம்பிக்கை துரோகமான செயலை எடுத்துக்கொள்ள நமக்குத் தெரியவில்லை. எனினும், இந்தப் பரந்த மனப்பான்மையுடன்கூடிய கண்ணோட்டம் கூட, யூதாசினுடைய செய்கையிலுள்ள கரும்புள்ளியில் கொஞ்சத்தையே துடைக்கின்றது.

எனினும், பணம் விஷயத்திற்காகத் தன்னுடைய சிறந்த நண்பனை இழிவான விதத்தில் தற்காலிகமாகக்கூட பயன்படுத்த விரும்புகிறவன், பணத்தின் மீதான தன்னுடைய ஆசையுடன், தன்னுடைய அனைத்து உணர்வுகளையும் வேசித்தனம் பண்ணியுள்ளதை வெளிக்காட்டுகிறவனாய் இருக்கின்றான். கனமடைவதற்குரிய ஆசையும் கூட யூதாசுக்குக் காணப்பட்டிருக்கலாம். காரணம், நீண்ட காலமாய் வாக்களிக்கப் பட்டிருந்த இராஜ்யத்தை கர்த்தர் ஸ்தாபிக்கும்படிக்கு, அவர் (இயேசு) கட்டாயத்திற்குள்ளாகத்தக்கதாக அல்லது அவர் கூறியவை அனைத்தும், மற்றும் வாக்குத்தத்தங்களும் மோசடி என்று வெளிப்படுத்தத்தக்கதாக இந்த ஆபத்தைக் கொண்டுவருவதற்கு யூதாஸ் எண்ணியிருந்திருக்கலாம்.

கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துள்ளவர்களாகிய நாம் அனைவரும், இந்த வெட்கக்கேடான பண்பின், எவ்வித அம்சங்களும் நம் எவரிடத்திலும் காணப்பட்டுவிடாதபடிக்குக் கவனத்துடனும், விழிப்புடனும், ஜெபத்துடனும் இருக்கக்கடவோம். கர்த்தரையும், “சகோதரரையும்” காட்டிக்கொடுக்கும் விஷயத்தில் பல்வேறு இரகசியமான வழிகளும், அநேக வெளியரங்கமான வழிகளும் இருப்பதை நாம் நினைவில் கொள்வோமாக. R 2468

## அவர் இப்படிப் பேசுகையில், பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் வந்தான், அவனோடேகூடப் பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் அனுப்பின திரளான ஜனங்கள் பட்டயங்களையும் தடிகளையும் பிடித்துக்கொண்டு வந்தார்கள்.
## – மத்தேயு 26:47 –

யூதாஸ் இயேசுவைத் தேடிவந்த திரளான அதிகாரிகளுக்கு வழிகாட்டி அவ்விடத்திற்கு வந்தான். இந்த அதிகாரிகள் ரோம சேவகர்களாய் இராமல், ஒரு நியாயாதிபதியாக இருந்த பிரதான ஆசாரியனுடைய சேவகர்களாகவும், என்ன நடக்கப்போகின்றது எனப் பார்ப்பதற்கும் வந்திருந்த கும்பலுமாய் இருந்தார்கள். இவர்கள் அப்போது நீதிமன்றத்தின் அதிகாரிகளாயிருந்ததால், பஸ்கா அநுசரிக்கும்படிக்குப் பட்டணத்தில் ஜனங்கள் நிறைந்திருக்கும் வேளையில் காலைப்பொழுதில், இயேசுவைக் கைது செய்வது என்பது, பிரச்சனைகளை ஏற்படுத்திவிடும் என பயந்து, அதைத் தடுக்கவேண்டும் என்று நாடி, இவரை இரவோடு இரவாகக் கைது செய்யும்படிக்குக் கெத்செமனே தோட்டத்திற்கு வந்தார்கள். கெத்செமனே தோட்டத்திற்கு இயேசுவும், அவருடைய சீஷர்களும் அடிக்கடி போவார்கள் என்று, அல்லது இராப்போஜனத்தின்போது இயேசுவும் அவருடைய சீஷர்களும் இத்தோட்டத்திற்குப் போக இருக்கின்றார்கள் என்று யூதாஸ் அறிந்திருக்கலாம். யூதாசுக்குள் சாத்தான் புகுந்த பிற்பாடு, கர்த்தரைக் காட்டிக்கொடுப்பதின் மூலம், முப்பது வெள்ளிக்காசுகளை சம்பாதித்துக் கொள்ளலாம் என்ற தீர்மானத்துடன் பஸ்கா போஜனம் புசிக்கும்படிக்குக் கூடியிருந்த சீஷர்களை விட்டுவிட்டு யூதாஸ் புறப்பட்டுபோய், பிரதான ஆசாரியர்களைக் கண்டு அவர்களிடத்தில் பேரம் பேசினான். இந்த உடன்படிக்கையின் காரணமாகவே இயேசுவை சந்திக்கும்படியாகவும், சேவகர்கள் அவரைப் பிடிக்கத்தக்கதாக அவர்களுக்கு அடையாளம் காட்டிக்கொடுக்கத்தக்கதாகவும் சேவகர்கள் கூட்டத்திற்கு முன்பாக யூதாஸ் வந்தார். யூதாஸ் இயேசுவின் அருகே வந்து, ரபீ வாழ்க என்று சொல்லி, அவரை முத்தஞ்செய்தான். கிரேக்கப் பதிவுகளின் அர்த்தத்தின்படி பார்க்கையில் யூதாஸ் மீண்டும் மீண்டுமாக முத்தஞ்செய்தான் என்பதாகத் தெரிவிக்கின்றது. அன்பிற்கான பொதுச் சின்னமாய் இருந்த இந்த முத்தத்தை இயேசு ஏற்றுக்கொண்டார். மேலும், இது துரோகத்தின் முத்தமாய் இருந்தது என்றும் இயேசு அறிந்திருந்தும் எவ்விதமான கோபத்தின் வார்த்தைகள் அவர் வாயிலிருந்து வரவேயில்லை. மாறாக, மிகுந்த அன்புடனும், மரியாதையுடனும், “சிநேகிதனே என்னத்திற்காக வந்திருக்கின்றாய்?” என்றார் (மத்தேயு 26:50). “தோழா, எதற்காக வந்தாய்?” என்று கேட்டார் (திருவிவிலியம்). இங்கு தோழா, சிநேகிதனே என்று மொழிப்பெயர்க்கப் பட்டுள்ளதற்கான ஆங்கில வார்த்தையான, “**friend**” அன்பான நண்பனைக் குறிப்பதில்லை; இன்னுமாக பிரியமான எனும் அர்த்தத்தைக் கொடுக்கும் philos என்ற கிரேக்க வார்த்தையிலிருந்தும் வரவில்லை; மாறாக உடன்வேலையாள் அல்லது கூட்டாளி என்ற அர்த்தத்தை அளிக்கும் **hetaire** என்ற கிரேக்க வார்த்தையிலிருந்தே வந்துள்ளது. R3885

**இயேசு அவனை நோக்கி: யூதாசே முத்தத்தினாலேயா மனுஷகுமாரனைக் காட்டிக்கொடுக்கிறாய் என்றார்.**

**– லூக்கா 22:48 –**

நமது கர்த்தரைக் கைது செய்யும்படிக்கு, யூதாசினால் வழிகாட்டப்பட்டு வந்த திரளான மனுஷர்கள் ரோம சேவகர்களாய் இராமல், மாறாக பட்டயங்கள், தடிகள் முதலிய ஆயுதங்களுடன் காணப்பட்ட பிரதான ஆசாரியனுடைய வீட்டின் கீழ் (உடன்) அதிகாரிகள் மற்றும் வேலைக்காரர்களும் மாத்திரமே ஆவர். அடுத்த நாளில் ஆசாரியர்களும், முக்கிய அதிகாரிகளும், தூண்டிவிடப்பட்ட வேலைக்காரர்களும், ஜனங்களும், இயேசுவைத் நியாய ஸ்தலம் முன்பாகக் கொண்டுவந்து, இயேசுவுக்கு மரணதண்டனையை நிறைவேற்றும் படிக்குக் கேட்பது வரையிலும் பிலாத்துவும், அவருடைய ரோம இராணுவ அதிகாரமும் இயேசுவைக் கவனத்தில் கொள்ளவே இல்லை.

யூதாசினுடைய நடத்தையைக் குறித்து வாசிக்கின்ற எந்த உயர் மனமுள்ள நபராலும், ஒரு நீதியான கோபத்தின் உணர்வை அடையாமல் இருக்க முடியாது; இன்னுமாக யூதாஸ் இயேசுதான் மேசியா என்று உறுதியாய் இருந்தாரோ, இல்லையோ, ஆனால் மனுஷர்கள் மத்தியிலேயே உயர்குணமுள்ளவராக அடையாளம் கண்டிருந்த இயேசுவை, முப்பது வெள்ளி காசுகளுக்காக காட்டிக்கொடுப்பது யூதாசின் இழிவான குணத்தைக் காட்டுகிறது என்பதில் சந்தேகமில்லை. இந்த அளவுக்கு அக்கிரமத்தின் ஆழத்திற்கு, யூதாஸ் திடீரென வரவில்லை என்று கூறுவது தவறல்ல; மாறாக போதகருடன் தொடர்புகொண்டிருந்த மூன்று வருடங்களாக, யூதாசின் இந்த எதிர்மாறான பண்பானது அவரை முற்றிலும் கட்டுப்படுத்தத்தக்கதாக யூதாசுக்குள் வளர்ந்துகொண்டு வந்தது. அவர் ஒரு அப்போஸ்தலராக தேர்ந்தெடுக்கப்பட்ட நேரத்தில் குறைந்தபட்சம் வெளித்தோற்றத்தைப் பொறுத்த வரையில் அவர் ஒரு நல்ல மனுஷனாகவே இருந்தார்; மற்றும் “புகழ்/துதி” என்பதைக் குறிக்கும் அவரது பெயர், அவரது பெற்றோர்களும் தேவபக்தியுள்ள மனதைக்கொண்டிருந்ததையும், இவர் தேவனுக்குத் துதி சேர்க்கத்தக்கதாக, தேவனுடைய செய்தியாளராக இருக்க வேண்டும் என்று விரும்பினதையும், யூதாசைக்குறித்துத் தீர்க்கத்தரிசனம் உரைத்ததையும் சுட்டிக்காண்பிக்கின்றது. இவர் எத்தகைய ஒரு சிலாக்கியத்தையும், வாய்ப்பையும் (இப்படித் தேவனுக்குத் துதி சேர்க்கும்) இவ்விஷயத்தில் அடைந்திருந்தார்! R2778

**அதற்கு இயேசு: நான்தான் என்றார்.**

**– யோவான் 18:5 –**

இயேசுவைக் கைது செய்யும்படிக்கு வந்த “போர்சேவகர்கள்”, அவரை மரங்களின் மறைவுகளுக்குள் ளெல்லாம் தேட வேண்டிய நிலை தங்களுக்கு ஏற்படும் என்று எண்ணியிருந்திருக்க வேண்டும். ஆகவே அவர்கள் பந்தங்களோடும், தீவட்டிகளோடும் வந்திருந்தார்கள். நமது கர்த்தர், அவர்களிடமிருந்து தப்பி ஓடுவதற்கு பதிலாக, அவர்களுக்கு முன்பாக எதிர்பட்டு, அவர்கள் யாரைத் தேடுகின்றார்கள் என்று கேட்டதினிமித்தம், அவர்களுக்கு மிகுந்த ஆச்சரியம் ஏற்பட்டிருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. இந்தப் போர்சேவகர்களில் சிலருக்கும் ஏற்கெனவே கர்த்தரை, அதாவது அவருடைய அற்புதங்கள், பிசாசுகள் மீதான வல்லமைகள் முதலியவைகள் பற்றிய அறிவு இருந்திருக்க வாய்ப்பு உண்டு. மேலும், இதுகூட அவர்கள் பின்னிட்டுத் தரையில் விழுவதன் மூலம், தங்களது பெலவீனத்தை வெளிப்படுத்தினதற்கான காரணமாககூட இருக்கலாம். இல்லையேல், தாம் அவர்களை எதிர்க்க விரும்பினால், அவர்களை எதிர்ப்பதற்கான முழு வல்லமையும் தம்மிடத்தில் இருக்கின்றது என்பதை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக, அவர்கள் பின்னிட்டுத் தரையில் விழத்தக்கதாக, அவர்கள் மீது உயர் மனதின் சக்தியைக்கூட (Superior Mental Power) நமது கர்த்தர் பயன்படுத்தியிருக்கவும் வாய்ப்புள்ளது.

அங்கு வந்துள்ள திரளான ஜனக்கூட்டத்தைத் தம்மால் முழுமையாய் சமாளிக்க முடியும் என்பதையும், தாம் விரும்பினால் தம்மைப் பாதுகாக்க, பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரைக்கொண்டு

வருவதற்கு தம்மிடத்தில் வல்லமை உள்ளது என்பதையும் சுட்டிக்காட்டும் வண்ணமாக, இந்த ஒரு வல்லமையை வெளிப்படுத்தின பிற்பாடு (மத்தேயு 26:53), நம்முடைய கர்த்தர் தாம் கைது செய்யப்படுவதற்கென முழுமையாய்த் தம்மை ஒப்புக்கொடுத்துவிட்டு, சீஷர்கள் அவர்கள் வழியே போய்விட அனுமதிக்க வேண்டுமெனும் நிபந்தனையை மாத்திரம் வைப்பதை நாம் பார்க்கின்றோம். இப்படிப்பட்ட ஒரு தருணத்தில், இப்படிப்பட்ட சோதனையான சூழ்நிலையின் கீழ், தம்மைப்பற்றி முற்றிலுமாக மறந்துவிட்டு, மற்றவர்களுடைய நலனில் மாத்திரம் அக்கறைக்கொண்டிருப்பது எத்துணை அருமையான குணலட்சணமாய் உள்ளது! அவரிடமிருந்து நாம் எதிர்பார்க்கிற படியே அவர் இருக்கிறார்! R2468

**இயேசு பிரதியுத்தரமாக: நான்தானென்று உங்களுக்குச் சொன்னேனே, என்னைத் தேடுகிறதுண்டானால், இவர்களைப் போகவிடுங்கள் என்றார். நீர் எனக்குத் தந்தவர்களில் ஒருவனையும் நான் இழந்துபோகவில்லையென்று அவர் சொல்லிய வசனம் நிறைவேறத்தக்கதாக இப்படி நடந்தது.**

**– யோவான் 18:8-9 –**

மறுபடியும் ஆண்டவருடைய நடத்தையில் இங்கு அவர் மேல்வீட்டறையை விட்டுப்போவதற்கு முன்பாகத் தம்முடைய ஜெபத்தில் கூறினதின்படியே, தம்முடைய சீஷர்களுக்கான அவருடைய பராமரிப்பிற்கு உதாரணத்தை நாம் காண்கின்றோம். அவர்களில் எவரும் இழந்து போகப்படக்கூடாது என்பதில், அவர்களுடைய ஆவிக்குரிய நன்மைகள் தொடர்பான விஷயமே பிரதானமாக அவருடைய ஜெபத்தின் எண்ணமாக இருப்பினும், இது அவருடைய சீஷர்களாகும் அனைவருடைய சரீரத்திற்கடுத்த நன்மைகள் தொடர்புடைய விஷயத்திலுமுள்ள, நம்முடைய கர்த்தரின் அக்கறையை உறுதிப்படுத்தும் உதாரணமாகவும் இருக்கின்றது. அவர்களுடைய தலையிலிருந்து அவரை அறியாமல், ஒரு மயிர்கூட கீழே விழுவதில்லை; எதுவும் அவர்கள் பாதிக்கத்தக்கதாக அனுமதிக்கப்படுவதில்லை. ஜீவியத்தின் ஒவ்வொரு விஷயமும், சம்பவங்களும், அவர்களுடைய மேலான நன்மைக்கு ஏதுவாக மாற்றப்படும் (மத்தேயு 6:32,33). R2468

கர்த்தர் கைது செய்யப்பட்ட போது, சீஷர்கள் அனைவரும் அவரைத் தனியே விட்டு ஓடிப்போன காரியத்தை நாம் பார்க்கும்போது, சீஷர்கள் மிகவும் கோழைத்தனமாக நடந்து கொண்டதுபோன்று தோன்றலாம். ஆனால், அவர்கள் நமது கர்த்தருடைய வார்த்தையின்படியே போனார்கள் என்பதையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். “என்னை தேடுகிறதுண்டானால் இவர்களைப் போகவிடுங்கள்” என்று கர்த்தர்தான் அதிகாரிகளிடம் கூறினார் (யோவான் 18:8). தேசத்தின் சட்டத்திற்கும், அரசியல் நீதிமன்றத்திற்கும் பிரதிநிதித்துவம் வகிக்கும் பிரதான ஆசாரியனின் கரங்களில் கர்த்தர் சிக்கின பிற்பாடு, தங்களைக் கொண்டு கர்த்தருக்கு எவ்விதமான பிரயோஜனமில்லை என்றும், இந்தப் பிரதான ஆசாரியர்கள் இயேசுவுக்கு எதிராக கெடுதல் விளைவிக்கக்கூடியவர்கள் என்றும் சீஷர்கள் உணர்ந்திருந்தனர். “இவர்களைப் போகவிடுங்கள்” என்ற கர்த்தரின் வார்த்தைகளை சீஷர்கள் அவரிடமிருந்து வந்த நேரடி கட்டளையாக எடுத்திருக்கலாம். மேலும், அவர்கள் திகைத்து, குழம்பிய நிலையிலும் இருந்தனர். அவர்கள் இயேசுவோடு ஒட்டிக்கொண்டிருந்தபோது, வித்தியாசமானக் காரியங்களையே அவரிடத்தில் எதிர்ப்பார்த்தவர்களாக இருந்தார்கள். அவர் (இராஜாவாக) உயர்த்தப்படுவார் என அவர்கள் எதிர்ப்பார்த்த நிலையிருந்தபோது, அவரோ தாம் சிலுவையில் அறையப்படுவதைக் குறித்து பேசிக்கொண்டிருந்தார். அவர் துக்கத்துடனும், வேதனையுடனும் காணப்பட்டார். இப்பொழுதோ, அவர் கைதும் செய்யப்பட்டுவிட்டார். இவை அனைத்தும் அவர்களுக்கு மிகுந்த குழப்பத்தையும், சோர்வையும் ஏற்படுத்தியது. அவர்கள் பெரிதும் ஏமாற்றமடைந்தவர்களாக, அநேகமாக தங்கள் வீடுகளுக்குத் திரும்பியிருக்கலாம். பேதுருவும் யோவானும் மட்டுமே அவரைப் பின்தொடர்ந்து தொலைதூரத்தில் சென்றனர். R3888.

**அப்பொழுது சீமோன்பேதுரு, தன்னிடத்திலிருந்த பட்டயத்தை உருவி,**
**பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலதுகாதற வெட்டினான்,**
**அந்த வேலைக்காரனுக்கு மல்குஸ் என்று பெயர்.**
**– யோவான் 18:10**

## உன் பட்டயத்தை உறையிலேபோடு, பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ?....

**– யோவான் 18:11 –**

நமது போதகர் அனைத்து காரியங்களிலும் ஜெயங்கொண்டவராக வெளிவரத்தக்கதாக, அவருக்கு உதவிபண்ணினதும், பரம பிதாவினிடத்திலான அவருடைய கீழ்ப்படிதலுக்குக் காரணமுமான கொள்கைகளை இந்த ஆதார வசனமானது மிகவும் அருமையாகவும், மிகவும் சுருக்கமாகவும், மிகவும் அழுத்தமாகவும் வெளிப்படுத்துகின்றது; மேலும் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதற்கும், அவருடைய உண்மையான சீஷர்களாய் இருப்பதற்கும் நாடுகின்ற அனைவரும் இவ்வசனத்திலுள்ள கருத்தைச் சிந்தித்துப் பார்ப்பது நலமாயிருக்கும். "பிதா எனக்குக்கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ". இதிலுள்ள கருத்துத் தெளிவாய் வெளிப்படுகின்றது. தமக்குக் காணப்படும் சந்தர்ப்பங்களும், சூழ்நிலைகளும் தம்மால் ஏற்படுத்தப்படவில்லை என்றும், தம்முடைய சத்துருக்களினால் தமக்கு ஏற்படுத்தப்படவில்லை என்றும் கர்த்தர் உணர்ந்திருந்தார். தம்முடைய விஷயங்கள் அனைத்திலும் தெய்வீக மேற்பார்வை இருக்கின்றது என்பதை உணர்ந்திருந்தார்; மேலும் பிதா அனுமதிக்காத எதுவும் தம் மீது வருவதில்லை என்பதையும் அறிந்திருந்தார்; ஏனெனில் பிதா இப்படியாக ஏற்பாடு பண்ணியுள்ளார் என்றும், தமக்கெனப் பிதா இந்தப் பாத்திரத்தில் ஊற்றியிருக்கின்றார் என்றும், இதநிமித்தம் அதை பானம் பண்ணுவது தம்முடைய கடமை என்றும் அறிந்திருந்தார்.

அப்போஸ்தலர்கள் பட்டயங்களை எடுத்துக்கொள்ளும்படிக்கு நமது கர்த்தர் அவர்களிடம் கூறினார் என்றும், இரண்டு பட்டயங்கள் இருக்கின்றது என்று சொன்னபோது, அவை "போதும்" என்று நமது கர்த்தர் கூறினார் என்றும், சுவிசேஷங்களில் ஒருவர் பதிவு செய்துள்ளது நம்முடைய நினைவிற்கு வருகின்றது (லூக்கா 22:36,38). தமக்காக தம்முடைய சீஷர்கள் சரீரப்பிரகாரமான யுத்தம் பண்ணவேண்டும் என்ற எண்ணம் நம்முடைய கர்த்தருக்கு இல்லை. இதை அவர் பிற்பாடு, "என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப் பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல" என்று தெரியப்படுத்துகின்றார் (யோவான் 18:36). தற்காப்பிற்காக எதுவும் இல்லை என்பதினாலோ, அதே சமயம் தம்முடைய சீஷர்கள் கோழைத்தனமாய் இருப்பதினாலோ, நம்முடைய கர்த்தர் கைது செய்யப்படாமல், மாறாக அவருடைய வேளை வந்தது என்பதையும், நம்முடைய பாவங்களுக்காக அவர் மரித்து, அவருடைய மகிமையில் பிரவேசிப்பதற்குரிய வேளை வந்துள்ளது என்பதையும் அறிந்து, அவர் தம்மை முற்றிலுமாகக் கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுத்த தினாலேயே, அவர் கைது செய்யப்பட்டார் என்பதைக் காட்டுவதற்கு இரண்டு பட்டயங்கள் போதுமானதாய் இருந்தது .– லூக்கா 24:46.

அநேகமாக இயேசுவைக் கட்டுவதற்கு ஆரம்பித்திருக்கும்போதுதான், அவரைப் பாதுகாப்பதற்கெனப் பேதுரு தன்னுடைய பட்டயத்தை உறையிலிருந்து வெளியே எடுத்திருந்திருக்க வேண்டும். ஒருவேளை தம்முடைய சீஷர்களனைவரும் அவரைக் கைவிட்டு ஓடிவிடுவார்கள் என்ற கர்த்தருடைய வார்த்தைகளும், "உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் இடறலடையேன்" என்று பண்ணின சத்தியத்தையும் பேதுரு நினைவுகூர்ந்திருப்பார் (மாற்கு 14:29). உன்னதமான, வைராக்கியமான பேதுரு! அவரது உணர்ச்சிகளின் உயர்ந்த வெளிப்பாட்டிற்கும், அதிகமானவர்களின் எதிர்ப்புக்கு மத்தியில் வாளினால் ஆண்டவரை வீரத்துடன் பாதுகாத்த செயலுக்காகவும் நாம் அவரை நேசிக்கிறோம். இங்குள்ள பேதுருவின் செயல்பாடானது, பேதுருவின் துடுக்குத்தனத்தினால் செய்யப்பட்ட தவறுகளில் ஒன்றுதான் என அநேகர் இழிவுப்படுத்தும் வழக்கமுண்டு. அப்போதுவரை அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளவில்லை என்பதையும், தாங்கள்

அழைக்கப்பட்டிருப்பது ஆவிக்குரிய இராஜ்யம் என்பதைத் தெளிவாகப் புரிந்துக்கொள்ள முடியாமல் இருந்தார்கள் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆனால், நாம் பார்த்துள்ளபடி பேதுரு, பட்டயத்தை எடுத்துக்கொள்ளும்படியான கர்த்தருடைய ஆலோசனையின்படி செய்தவராகத்தான் இருக்கின்றார்; மற்றும் அப்பட்டயத்தைப் பயன்படுத்தினதில், அவர் தெய்வீக நோக்கத்தை நிறைவேற்றினவராகவே காணப்படுகின்றார். குற்றப்படுத்துவதற்கென எதையும் நாம் பார்க்க முடியவில்லை. அனைத்தும் பாராட்டும் வண்ணமாகவே காணப்படுகின்றது. இவ்விஷயம் பேதுருவினாலும், அங்கிருந்த மற்றவர்களாலும் உணரப்பட்டதைக் காட்டிலும் மிகப் பெரிய முக்கியத்துவம் உடையதாய் இருந்தது.

இவ்வளவு தூரம் காரியங்கள் அனைத்தும் நடைபெறும் வண்ணமாக அனுமதித்துப் பிற்பாடு, நமது கர்த்தர், “உன் பட்டயத்தை உறையிலே போடு; பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ” என்று கூறி, பேதுருவைக் கட்டுப்படுத்தினார் (யோவான் 18:11). இப்படிக்கூறிக்கொண்டு, கர்த்தர் காயமடைந்த தம்முடைய சத்துருவைத் தொட்டு அவனை சொஸ்தப்படுத்தினார். நமது கர்த்தர் தம்முடைய சத்துருக்களிடத்தில், தாமே முன்வந்து விரும்பிக் கையளிக்கின்றார் என்பதை சீஷர்கள் கண்டு, புரிந்துக்கொள்ள வேண்டும்; மற்றும் இதுபற்றின உறுதியும் அவர்களுக்கு ஏற்பட வேண்டும். ஆகவே, இப்பாடத்தை வலியுறுத்தும் வண்ணமாக அனைத்தும் நடத்தப்பட்டன. R2778 & R2468

**இயேசு அவர்களை நோக்கி: கள்ளனைப் பிடிக்கப் புறப்படுகிறதுபோல, நீங்கள் பட்டயங்களையும் தடிகளையும் எடுத்துக்கொண்டு என்னைப் பிடிக்கவந்தீர்கள். நான் தினந்தோறும் உங்கள் நடுவிலே தேவாலயத்தில் உபதேசம்பண்ணிக் கொண்டிருந்தேன்: அப்பொழுது நீங்கள் என்னைப் பிடிக்கவில்லையே: ஆனாலும் வேதவாக்கியங்கள் நிறைவேறவேண்டியதாயிருக்கிறது என்றார்.**

**– மாற்கு 14:48-49 –**



நமது கர்த்தரைக் கட்டுவதற்கு அவசியமில்லை. ஆனால், இந்தப் போர்சேவகர்களை அனுப்பி வைத்தவர்களுக்கு முன்பாக, இந்தப் போர்சேவகர்கள் தங்களது வீரத்தை வெளிப்படையாகக் காண்பிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டதினால், இப்படியாக அவரைக் கட்டியிருக்கலாம். இதை நமது கர்த்தர் கண்டித்தார். அப்பொழுதுதான் பதினொரு பேரும் அவரைத் தனியே விட்டுவிட்டு ஓடிவிடுகின்றனர். யூதாஸ் போர்ச்சேவகர்களுடன் ஆசாரியனாகிய அன்னாவினுடைய வீட்டிற்குப் போனான். இந்த அன்னாதான் யூதாசுடன் பேரம் பேசியிருந்தான். மேலும் இத்தருணத்தில்தான், ஒப்பந்தத்தின்படி நிறைவேற்றி முடித்துள்ள யூதாசுக்குக் கூலியாக முப்பது வெள்ளிக்காசுகள் செலுத்தப்பட்டிருக்க வேண்டும். இவன் ஈனமான/கேடுகெட்ட மனுஷன்! இப்படியாகவே, கிறிஸ்துவினுடைய சரீர அங்கங்களின் விஷயத்திலும் காணப்படுகின்றது. கிறிஸ்துவின் சரீர அங்கங்களுக்கு அவமானங்கள் வருவது அவசியமாயுள்ளது. இன்னுமாக, தலையினுடைய உபத்திரவங்களில், குறைவானதைக் கிறிஸ்துவின் சரீரமானது நிறைவேற்றுவது என்பது, தெய்வீகத் திட்டத்தின் ஒரு பாகமாக இருக்கின்றது (கொலோசெயர் 1:24). எனினும், இது இப்படியான “காட்டிக் கொடுத்தலை” செய்பவர்களின் செய்கையினுடைய பாவத்தைக் குறைத்திடாது. அதுவும் சத்தியத்தின் அறிவை அனுபவித்திருக்கும் “கள்ள சகோதரருடைய” விஷயத்தில் குறைத்திடாது. கர்த்தருக்கும் சரி, அவரோடு கூட உண்மையாய்ப் பாடு அனுபவிக்கும் அனைவருக்கும் சரி, பரீட்சைகளும், சோதனைகளும் ஆசீர்வாதத்தைக் கொண்டுவருவதாக இருப்பினும், யூதாசின் போக்கைத்

தெரிந்துக்கொண்டு அநீதி செய்பவர்கள், தங்களுக்கு கனமும், ஆசீர்வாதமும் வேண்டும் என்பதற்காக, பொல்லாப்பு செய்யும்படிக்குத் தங்களை விற்றுப்போடுகிறபடியால், தாங்கள் இச்சித்த கனங்களையும், ஆசீர்வாதங்களையும் ஒருபோதும் அடைவதில்லை. R2468

**நமது கர்த்தர் கைகள் கட்டப்பட்ட நிலையில் அன்னாவிடத்திற்கும், காய்பாவினிடத்திற்கும் இழுத்துச் செல்லப்பட்டார். அது இரவு நேரமாகவும், சுமார் ஒரு மணி அளவும் காணப்பட்டாலும், யூதர்களுடைய பிரதான அதிகாரிகளில் சிலரும், ஆலோசனை சங்கத்தின் அங்கங்களில் சிலரும் கூடி வந்திருந்தனர். அன்றைய இரவு இயேசு கைது செய்யப்படுவார் என்றும், இயேசுவின் சீஷர்களில் ஒருவன் இயேசுவைப் பிடித்து, கைது செய்யத்தக்கதாக அதிகாரிகளை வழி நடத்துவான் என்றும், இவ்விஷயங்களைப் பொதுவான ஜனங்கள் அறிந்துகொள்வதற்கு முன்பும், பஸ்கா வாரம் ஆரம்பிப்பதற்கு முன்பும், எவ்வளவு சீக்கிரமாய் செய்ய முடியுமோ அவ்வளவு சீக்கிரமாய் இயேசுவின் மரணம் அடுத்த நாள் சம்பவித்தாக வேண்டும் என்னும் அளவுக்கு இவ்விஷயங்கள் அவசரமாய்ச் செய்யப்பட வேண்டும் என்றும் இந்த யூத அதிகாரிகளுக்கும், ஆலோசனை சங்கத்தாரின் அங்கங்களுக்கும் முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருந்தபடியாலே, அவர்கள் உடனே கூடிவந்தார்கள். சூரியன் மறைந்தது முதல் சூரியன் உதிக்கும் வரையிலும், இடையில் காணப்படும் காலப்பகுதியில் மரணதண்டனைக்குரிய எந்த மனுஷனையும் விசாரணை செய்வது பிரமாணத்திற்கு விரோதமாய் இருந்தபடியால் இவர்கள் நடத்தின இந்த விசாரணையானது வழக்கத்திற்கு மாறான விஷயமாகும். சூரியன் உதித்த பிற்பாடே ஆலோசனை சங்கத்தார் எடுக்கும் முடிவுகள் அதிகாரப்பூர்வமானவைகள் என்று கருதப்படும். இவர்கள் தங்கள் நோக்கங்களை நிறைவேற்றத்தக்கதாக நியாயப் பிரமாணத்தை மீறுவதற்கும், இவர்கள் சித்தம் கொண்டவர்களாகக் காணப்பட்டார்கள்.R3366**

**இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் வெளியரங்கமாய் உலகத்துடனே பேசினேன்; ஜெபஆலயங்களிலேயும் யூதர்களெல்லாரும் கூடிவருகிற தேவாலயத்திலேயும் எப்பொழுதும் உபதேசித்தேன்; அந்தரங்கத்திலே நான் ஒன்றும் பேசவில்லை.**
**– யோவான் 18:20**

# திராட்சைரசம் பிழியும் ஆலையில் ஒருவராக

துக்கம் நிறைந்த மாலை நேரத்தில்,
நமது துயரமும் கண்ணீரும் சூழ்ந்த போது,
மலர்களின் இதயத்தில் பனி உறைந்தது போல
ஆண்டுகளின் மலர்ச்சியில் சோகம்.
தாயின் மென்மையான குரல் மெல்ல அடக்குவது போல,
அழுகையும் முனகல் சத்தமும்;
வேதனையில் நொறுங்கும் போது, நாம் கேட்கிறோம்:
அவர் ஒருவராய் ஆலையை மிதித்தார்.

அதனால், ஒரு மனிதன் தாங்கக்கூடிய துயரத்தை
அவர் முழுமையாக அறிந்தவர்;
எஜமானரால் குணப்படுத்தவோ அல்லது பகிர்ந்துக்கொள்ளவோ முடியாத
எந்த ஒரு வேதனையும் மனிதனுக்கு இல்லை.
எனவே, நாம் ஒப்புரவாக வேண்டும் என்பதற்காக
அவரை (தமது குமாரனை) நொறுக்கினவராகிய
அன்புள்ளவரிடம் மேலெழும்பி செல்லும் அழுகையானது/கூக்குரலானது
அவரின் மென்மையான கடிந்து கொள்ளதல் மூலம் அமைதியடைகின்றன:
அவர் ஒருவராய் ஆலையை மிதித்தார்.

பேரழிவு எத்தனை சடுதியாக வந்தாலும்,
அல்லது, எவ்வளவு பலமான கரம் அடித்தாலும்,
நாம் இன்னும் எஜமானரின் கிருபையின்கீழ் தான் இருக்கிறோம்,
ஒருபோதும் நாம் அவரது பார்வைக்குப் புறம்பாவதில்லை.
சோதனை எனும் தூற்றும் காற்றானது
நான்கு திசைகளிலிருந்து சுழற்றி அடித்தாலும்;
வரபோகும் இரட்சிப்பை குறித்து நாம் உறுதியாயிருக்கிறோம்,
கர்த்தா தமக்கு சொந்தமானவர்களை நினைவுகூறுவார்.

அவரது சோதனையின் இரவில்,
வானமும், பூமியும் அவரிடமிருந்து விலகி ஓடின;
அவருடைய துணிச்சலானவர்கள் (பேதுரு) மறுதலித்தனர்,
அவருக்கு அன்பானவர்களும் திகைத்து நின்றனர்;
பிதாவின் முகத்தை ஒரு மேகம் மறைத்திட,
இனம்புரியாதொரு வேதனையில் அவர் கடந்து சென்றார்;
ஆனால், நாமோ, எத்தனை துயரத்தால் சூழப்பட்டாலும்,
நமது துக்கங்கள் யாவுமே திரண்டுவந்தாலும்;
அவற்றை ஒருபோதும் தனியே தாங்குவதில்லை.

- Hymns of Dawn, 336

# இராமுழுவதும்

இயேசு பிரதான ஆசாரியன் முன் நின்றுகொண்டிருக்கையில், அவருடைய சத்துருக்கள் அவருக்கு எதிராக சாட்சிகளைக் கொண்டுவந்து விசாரணை தொடர்ந்து கொண்டிருக்கையில், நமது கர்த்தர் தம்மைத் தற்காத்துக்கொள்ள எதுவும் முன் வைக்கவில்லை என்று சொல்லப்படுகின்றது. இன்னுமாக, ஏதோ ஒரு குற்றத்தை அவரிடத்தில் கண்டுபிடிக்க வேண்டும் என்பது அவர்களுடைய நோக்கமாயிருந்தபடியாலும், அவர்களுடைய இருதயத்தில் கொலைபாதகம் காணப்பட்டபடியாலும், தற்காத்துக் கொள்வதற்கான பிரயாசங்கள் பயனற்றதாகவே காணப்படும். தேவதூஷணம் என்னும் குற்றச்சாட்டை நிலைவரப்படுத்துவதற்கே அவர்கள் நாடினார்கள். இந்த தேவதூஷணம் எனும் குற்றச்சாட்டானது, நியாயப்பிரமாணத்தின் கீழ் மரணதண்டனைக்கு ஏதுவான குற்றச்சாட்டுகளில் ஒன்றாக காணப்பட்டது. மேலும், இயேசு மரிக்க வேண்டும் என்பதே அவர்களுக்கு வேண்டிய காரியமாகவும் இருந்தது. இயேசு தம்மை தேவனுடைய குமாரன் என்று கூறினதின் மூலம் தேவனுக்கு எதிராக தூஷணம் பேசினார் என்றும், ஆலயத்தை இடித்து அதை மூன்று நாளில் மீண்டும் கட்டுவதாக இயேசு கூறியதை சிலர் கேட்டதாக குறிப்பிட்டதன் மூலம் ஆலயத்திற்கு எதிராக தூஷணம் பேசினார் என்றும் நிரூபிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஒரு தீர்மானத்திற்குள் வந்தார்கள். எனினும், விடியும்வரை எதையும் அவர்களால் செய்ய முடியாது. இதற்கிடையில் ஆசாரியனுடைய வீட்டு முற்றத்தில் காணப்பட்ட குறுகிய மனப்பான்மையுடைய வேலைக்காரர்கள் கர்த்தர் மேல் காறி உமிழ்ந்து, அவருடைய கண்களைக் கட்டி, அவரை அடித்து, “உம்மை அடித்தவன் யார்? அதை ஞானதிருஷ்டியினால் எங்களுக்குச் சொல்லும்” என்றார்கள். மேலும், இப்படியாகவே விடியும்வரை அந்த மணி நேரங்கள் கடத்தப்பட்டன. இவைகள் கர்த்தருக்கு சோதனைகள் என்று யூதர்கள் எண்ணினார்கள். ஆனால், கர்த்தருடைய சோதனைகள் அனைத்தும் கடந்துபோன காலங்கள்/மணி நேரங்களிலேயே காணப்பட்டது. இது யூதர்களுடைய பிரதான ஆசாரியர் களுக்கும், அதிகாரிகளுக்கும், ஆலோசனை சங்கத்தாரின் அங்கங்களுக்கும் மற்றும் யூத ஜனங்களுக்குமே சோதனையாக இருந்தது. இவர்கள் சத்தியம் அல்லது தப்பறையில் எதை நேசிக்கின்றார்கள் என்பதற்கும், நீதி மற்றும் அநீதியில் எதை நேசிக்கின்றார்கள் என்பதற்குமான சோதனையாக/பரிட்சையாகக் காணப்பட்டது. இவர்களோ அநீதியின் பக்கம் சாய முடிவு பண்ணினார்கள். R3366



**பிரதான ஆசாரியரும் மூப்பரும் சங்கத்தார் யாவரும் இயேசுவைக் கொலை செய்யும்படி அவருக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி தேடினார்கள், ஒருவரும் அகப்படவில்லை, அநேகர் வந்து பொய்ச்சாட்சி சொல்லியும் அவர்கள் சாட்சி**

**ஒவ்வவில்லை, கடைசியிலே இரண்டு பொய்ச்சாட்சிகள் வந்து: தேவனுடைய ஆலயத்தை இடித்துப்போடவும், மூன்றுநாளைக்குள்ளே அதைக் கட்டவும் என்னாலே ஆகும் என்று இவன் சொன்னான் என்றார்கள். அப்பொழுது, பிரதான ஆசாரியன் எழுந்திருந்து, அவரை நோக்கி: இவர்கள் உனக்கு விரோதமாய்ச் சாட்சிசொல்லுகிறதைக்குறித்து நீ ஒன்றும் சொல்லுகிறதில்லையா என்றான்.**

**– மத்தேயு 26:59–62**

**இயேசுவோ பேசாமலிருந்தார். அப்பொழுது, பிரதான ஆசாரியன் அவரை நோக்கி: நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன்பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன் என்றான். அதற்கு இயேசு: நீர் சொன்னபடிதான்;.... என்றார்.**

**– மத்தேயு 26:63–64 –**

“என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கின்றார்” என்றும், “பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்” என்றும் உள்ள நமது கர்த்தர் இயேசுவின் வார்த்தைகளை மிகுந்த பக்தியுள்ள கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கின்றார்கள். பிதாவும், குமாரனும் ஒன்றாயிருக்கின்றார்கள் என்பது அவர்கள் ஒரு நபராகவே இருக்கின்றார்கள் என்பதைக் குறிக்காமல், ஒரே இருதயம், மனம், நோக்கம் உடையர்களாய் இருக்கின்றார்கள் என்பதையே குறிக்கின்றது என இவர்கள் உணர்ந்து/அறிந்து கொண்டு இருக்கின்றார்கள் இந்த ஒன்றாய் இருத்தலானது, இயேசு தம்முடைய ஜனங்களுக்காக ஜெபம் பண்ணுகையிலும் வெளிப்படுகின்றது; “நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள் நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்” (யோவான் 17:11). இன்னுமாக மிகுந்த பக்தியுள்ள கிறிஸ்தவர்கள் மனுஷனாகிய கிறிஸ்து இயேசு, பரம பிதாவின் பிரதிநிதி என்றும், குமாரனைக் (பிதாவின் தற்சொரூபமாய் இருப்பவரை) காண்கிறவன் பிதாவைக் காண்கிறான் என்றும், இதுவே அதரிசனமான தேவனை மனுக்குலம் பார்ப்பதற்கான ஒரே வழி என்றும், மனுஷர் ஒருவரும் கண்டிராதவரும், காணக் கூடாதவருமானவரை, அவருடைய ஒரே பேறான குமாரன் மாத்திரம் அருமையாக மனுஷர்களுக்கு வெளிப்படுத்தியுள்ளார் என்றும் ஒப்புக்கொள்கின்றவர்களாய் இருக்கின்றார்கள் (யோவான் 1:18).

புத்தியுள்ளவர்களும், சிந்திக்கிற ஆற்றலுள்ள, பக்தியுள்ள கிறிஸ்தவர்களோ, நமது கர்த்தர் இயேசு வேறு இடங்களில் பேசின வார்த்தைகளுக்கும், இங்குப் பேசின வார்த்தைகளுக்கும் முரண்பாட்டைக் காணாமல், இசைவையே பார்க்க முடியும். கர்த்தர் இயேசு தம்மைப் பரம பிதா என்று கூறினதாக, யூதர்கள் ஒரு கணம் கூட எண்ணிக்கொள்ளவில்லை. இது கேட்கப்பட்ட கேள்வி அல்ல. மேலும், யூதர்கள் மேசியாதான் பிதா என்று எண்ணாமல், மேசியா பிதாவின் பிரதிநிதியாக, தேவனுடைய குமாரனாகத்தான் இருப்பார் என்றே அவர்களும் கருதினார்கள். “இதோ, நான் என் தூதனை (ஊழியன்) அனுப்புகிறேன்” என்றே நாம் வாசிக்கின்றோம் (மல்கியா 3:1). இயேசு தேவதூஷணம் பேசினதாகக் கூறப்பட்டதற்கான காரணம், அவர் தம்மைப் பிதா என்று கூறினார் என்று கருதப்பட்டதால் இல்லை, மாறாக அவர் தம்மை தேவனுடைய குமாரன் என்று கூறினதினாலேயே ஆகும். இதே குற்றச்சாட்டு முன்பொரு தருணத்திலும் அவர் மேல் சுமத்தப்பட்டது (யோவான் 10:29–36). அங்கு அவர் தம்மை தேவனுடைய குமாரன் என்று கூறிக்கொள்கின்றார் என்பதே குற்றம் என அவரைக் குற்றம் சாட்டினார்கள் /கூறினார்கள். இயேசு, தம்மை தேவனுடைய குமாரன் என்று கூறுவதின் மூலம் தம்மை தேவனுக்கு சமமாக்கி, அதாவது பிதாவினுடைய சுபாவம் போன்ற சுபாவம் கொண்டவர் என்று கூறுகின்றார் என்றே அவர்களது குற்றச்சாட்டு காணப்பட்டது. அத்தருணத்தில் அவர்களுடைய சொற்புரட்டுக்கு பதில் கொடுக்கும் வண்ணமாக, சங்கீதத்தில் உள்ள வாக்கியங்களைக் கோடிட்டுக் காட்டினார்; அதாவது சுவிசேஷ யுகத்தின் சபையாகிய சகல கர்த்தருடைய ஜனங்களும், தேவனுடைய குமாரர்கள் என்று அழைக்கப்படும் காரியம்

சங்கீதம் 82:6– ஆம் வசனத்தில் இடம்பெறுவதை அவர்களுக்குச் சுட்டிக் காட்டினார். மேலுமாக, விசுவாசத்தின் வாயிலாக, நீதிமானாக்கப்படுவதின் மூலமாக பிதாவிடத்தில் உறவிற்குள்ளாக வருகிறவர்களுக்கும் கூட, "தேவனுடைய குமாரர்கள்" என்ற பெயர் இலவசமாகக் கொடுக்கப்பட்டிருக்குமாயின், பிதாவுடன் முழு இசைவுடன் என்றென்றும் காணப்படும் தேவனுடைய குமாரனாகிய தாமும் அப்பெயரை உரிமையுடன் சூட்டிக்கொண்டார் என்றும் அவர்களுக்குச் சுட்டிக் காண்பித்தார். R 2780

**அதற்கு இயேசு: நீர் சொன்னபடிதான், அன்றியும், மனுஷகுமாரன் சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்களென்று, உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அப்பொழுது பிரதான ஆசாரியன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: இவன் தேவதூஷணம் சொன்னான், இனிசாட்சிகள் நமக்கு வேண்டியதென்ன? இதோ, இவன் தூஷணத்தை இப்பொழுது கேட்டீர்களே. – மத்தேயு 26:64–65**

சூரியன் உதயமாகிய பின்னர், ஆலோசனை சங்கத்தார் சட்டப்பூர்வமாகக் கூடினார்கள். மேலும், பிரதான ஆசாரியன் தான் சாட்சிகளை விசாரித்ததாகவும், இயேசு தேவனுக்கும், ஆலயத்திற்கும் எதிராக தூஷணம் பேசினது உண்மையென நிரூபிக்கப்பட்டுவிட்டன என்றும் கூறியவைகளை ஆலோசனை சங்கத்தார் ஏற்றுக்கொண்டு, இயேசு மரிக்க வேண்டும் என்ற தீர்ப்பில் முடிவுக்கு வந்தார்கள். பின்னர் இவ்விஷயத்தை எப்படி ரோம தேசாதிபதியான பிலாத்துவுக்கு முன்பாக வைப்பதெனத் தனியாக ஆலோசனை பண்ணினார்கள். தேவதூஷணம் போன்ற எந்தக் குற்றச்சாட்டிற்கும் பிலாத்து கவனம் செலுத்தமாட்டார் என்றும், தேவதூஷணம் எனும் குற்றம், ரோம சட்டத்தின் கீழ் ஒரு குற்றமேயல்ல என்று கூறுவார் என்றும் அவர்கள் நன்கு அறிந்திருந்தனர். ஆகவே பிலாத்துவுக்கு முன்பாக இயேசுவுக்கு எதிராக சாட்டப்பட வேண்டிய குற்றம், இயேசு ரோம அரசாங்கத்திற்கு எதிரான துரோகி என்றதாகவே காணப்பட வேண்டும் என்று அவர்கள் தீர்மானித்தார்கள். இன்னுமாக ரோம அரசாங்கத்திற்கு எதிரான இராஜ துரோகம் எனும் குற்றச்சாட்டிற்கு ஆதரவாக, அவர்கள் இராயனுக்கு மேலாக வேறொரு இராஜா இருக்கின்றார், அது மேசியாவாகிய தாம்தான் என்று இயேசு கூறினதாகக் கூறினார்கள். இன்னுமாக, இக்குற்றச்சாட்டிற்கு ஆதரவாகக் காணப்படும் வண்ணம், இயேசு இராயனுடைய அரசாங்கத்திற்கு வரி செலுத்த வேண்டாம் என்று தடுத்தார் எனப் பொய்யுரைத்தார்கள். இராயனுக்கு வரி செலுத்தும் விஷயத்தில் இயேசுவை சிக்கவைக்கும்படியே இரண்டு தினங்களுக்கு முன்னர் முயற்சி செய்தனர். ஆனால் "இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள்" என்ற இயேசுவின் பதிலோ அவர்கள் எதிர்பார்த்ததற்கு எதிர்மாறாகக் காணப்பட்டது (மாற்கு 12:17). இன்னும் சொல்லப்போனால், இயேசு தமக்காகவும், பேதுருவுக்காகவும் வரி செலுத்தும்படிக்குப் பேதுருவை மீனிடம் அனுப்பினார். ஆனால் இவர்களின் இந்தப் பொய்யான குற்றச்சாட்டுகள், அவர்கள் முன்வைத்த இராஜ துரோகம் எனும் முக்கிய குற்றச்சாட்டுகளுக்கு ஆதரவளிக்கும் விதமாகக் காணப்பட்டது. இப்பொழுது பிலாத்துவுக்கான சோதனை வேளை வந்தது. பிலாத்து நியாயாதிபதியாக நின்றார். மேலும், இவ்வழக்கிலுள்ள நீதியையும், அநீதியையும், உண்மையையும், பொய்யையும், சரியையும், தவறையும் கண்டறிவது இவருடைய வேலையாக ஒப்புவிக்கப்பட்டிருந்தது.

பிலாத்து ஒரு யூதனாகவோ, கிறிஸ்தவனாகவோ இராமல், தேவன் அற்றவனும், உலகத்தில் எவ்விதமான நம்பிக்கையும் இல்லாத புறஜாதி மனுஷனானவன் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். பிலாத்து எதை நம்பிக்கொண்டிருப்பவனாக இருந்திருந்தாலும் சரி, ஆனால் அவனுக்கு யூத மதத்தில் எவ்விதமான நம்பிக்கையும் இல்லை என்பதையும் நாம் நினைவுகூர வேண்டும். பிலாத்து இயேசுவில் விசுவாசம் வைக்கவுமில்லை, இன்னுமாக மேசியா குறித்ததான வாக்குத்தத்தங்களை அவர் ஒரு பொருட்டாக எண்ணினதுமில்லை. பிலாத்து ரோமிலுள்ள இராயனுடைய அரசாங்கத்தின் பிரதிநிதியாகக் காணப்பட்டு, ஒரு தேசாதிபதியாகவே காணப்பட்டார். யூதர்கள் மற்றும் அவர்களுடைய பண்டிகைகள் முதலானவற்றின் மீது எவ்விதமான அக்கறை கொண்டிராத பிலாத்து, யூதர்களிடமிருந்து முற்றிலும் வேறுபட்டவிதத்தில் தனக்கென்று

சொந்த விருப்பங்களும், சுய மனநிறைவையும் கொண்டிருந்த நபர் ஆவார். பிலாத்துவுக்கு தேவன் யார் என்பது தெரியாததினால், அவர் தேவனுக்கு இணங்க வேண்டியதில்லை. ஆனால் பிலாத்து இராயனை அறிந்திருந்தபடியினால் அவருக்கே அவர் இணங்க வேண்டும். மேலும், பிலாத்து பட்டணத்தில் சமாதானத்தையும், அமைதியையும் தக்கவைத்துக்கொண்டு, ரோமின் அதிகாரத்தையும், மரியாதையையும் தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்றே இராயன் இவரிடம் எதிர்பார்த்தார். நாட்டில் சமாதானம் தக்க வைக்கப்படுவதற்கென ஒன்றல்ல, பத்தல்ல, நூற்றுக்கணக்கான அப்பாவி மனுஷர்கள் கொல்லப்பட்டாலும், அது ரோமுக்கு ஒரு பொருட்டல்ல. ஆகவே ரோம தேசாதிபதியாக இருந்த பிலாத்து, எருசலேமுக்குள் சமாதானத்தை நிலவச் செய்வதே அவருடைய பிரதான கடமையாகும்.

பரிசேயர்களுடைய குற்றச்சாட்டை பிலாத்து உடனடியாக ஏற்றுக்கொள்ளவில்லை. இவர்கள் மாய்மாலக்காரர்கள் எனப் பிலாத்து அறிந்திருந்தார். உலகத்தின் வரலாற்றிலேயே, எல்லா காலகட்டங்களிலும் காணப்பட்ட மிகுந்த பொல்லாப்பு என்னவெனில், அது மதம் என்னும் போர்வையின் கீழ் பகட்டாய் சுற்றித்திரியும் பொல்லாப்பே ஆகும்; மேலும் சத்தியம், உண்மை, நன்மை என்ற போர்வையில் செய்யப்படும் தீமைகளேயாகும் என்று நாம் இங்குக் குறிப்பிட விரும்புகின்றோம். பிலாத்து துரோகக் குற்றத்திற்கான விவரங்களைக் கேட்டபோது, பிரதான ஆசாரியர்கள் ஆச்சரியமடைந்தனர்; ஏனெனில், அவர்கள் தங்கள் வாக்குகள் எவ்விதமான நிரூபணங்களும் இல்லாமலேயே ஏற்றுக்கொள்ளப்படும் என்று எதிர்பார்த்திருந்தார்கள். ஒருவேளை இவர்களே ஒரு யூதன், இராஜ துரோகியாகக் காணப்பட்டு, மரணத்திற்குப் பாத்திரனாய் இருக்கின்றான் எனக்கருதினால், நிச்சயமாக பிலாத்துவும் அப்படியே சந்தேகிக்க வேண்டும்; ஏனெனில் இவர்கள் தங்கள் இனத்தாரில் ஒருவன் இப்படியானதொரு குற்றச்சாட்டின் கீழ் அழிக்கப்படுவதை விரும்பமாட்டார்கள் என்று பிலாத்துவுக்குத் தெரியும். பிலாத்து இயேசுவைப் பார்த்தார். இயேசுவினிடத்தில் குற்றவாளிக்குரிய எந்தத் தோற்றத்தையும் பிலாத்துவினால் பார்க்கமுடியவில்லை. இன்னுமாக, கலகவாதிகளின் தலைவனுக்குரிய எவ்வம்சமும் அவரிடத்தில் பிலாத்துவால் பார்க்க முடியவில்லை. மாறாக சாந்தமும், பொறுமையும், நீடியபொறுமையும், அன்புமே இயேசுவின் அம்சங்களாக பிலாத்துவுக்குத் தெரிந்தது. "**நீர் யூதருடைய இராஜாவோ**" என்று பிலாத்து இயேசுவிடம் வினவினார். R3366

**நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான், சத்தியத்தை குறித்து சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன், சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார்.**

**– யோவான் 18:37 –**

இப்படியாக பிலாத்துவுக்கு முன்பு இயேசு நல்ல அறிக்கையிட்டார் என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார் (1 தீமோத்தேயு 6:13). இயேசு தமது இராஜ உரிமையையும், தெய்வீக அதிகாரத்தையும் அறிக்கையிட்டார். நமது கர்த்தர், தாம் ஒரு இராஜா என்று கூறினதை பிலாத்து நம்பவில்லை என்றும், இயேசுவை மதவெறி கொண்டவராக பார்த்தார் என்றும் நாம் எண்ணிவிடக்கூடாது. இயேசுவைக் குறித்து கேள்விபட்டவர்களில் சிலர் மாத்திரமே, அவர் தம்மை இராஜா என்று கூறின வார்த்தையின் உண்மையை அறிந்திருந்தனர். பெயர்கிறிஸ்தவ மண்டலங்களிலும் கூட, சிலர் மாத்திரமே நமது கர்த்தருக்குரிய இராஜ ஸ்தானத்தை உணர்ந்துள்ளனர்! இயேசுவை பாடுள்ள மனுஷனாக அடையாளம் கண்டு கொண்ட அனைவரும் மற்றும் இயேசு நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் என்று உணர்ந்து கொண்ட சிலரும், இயேசு மனுஷனை மாத்திரம் அல்ல, முதல் ஆதாமுக்கு கொடுக்கப்பட்ட சாம்ராஜ்யத்தையும் மீட்டுக் கொண்டார் என்பதை புரிந்துகொள்ளவில்லை. நமது கர்த்தரை ஆசாரியராகக் காண்கின்ற அநேகர், அவர் ஒரு இராஜா என்பதைக் காணத் தவறிவிடுகின்றனர்; மேலும், ஆயிர வருட அரசாட்சியில், மெல்கிசெதேக்கின் முறைமையின்படியான ஆசாரியராக சிங்காசனத்தில், வீற்றிருப்பார் என்பதையும் காணத் தவறிவிடுகின்றனர். மணவாட்டியாகிய சபை இயேசுவோடு, அவருடைய ஆசாரிய மற்றும் இராஜ பணியிலும்/ஸ்தானத்திலும் பங்கடைவார்கள். R2470

**அவரே நித்தியானந்தமுள்ள ஏகசக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும்,**
**– 1 தீமோத்தேயு 6:15**

**அப்பொழுது, பிலாத்து அவரை நோக்கி: இவர்கள் உன்மேல் எத்தனையோ குற்றங்களைச் சாட்டுகிறார்களே, நீ அவைகளைக் கேட்கவில்லையா என்றான். அவரோ ஒரு வார்த்தையும் மாறுத்தரமாக சொல்லவில்லை, அதனால் தேசாதிபதி மிகவும் ஆச்சரியப்பட்டான்.**

**– மத்தேயு 27:13–14 –**

இயேசுவுடனான தனது சுருக்கமான சம்பாஷணையை முடித்துவிட்டு, பிலாத்து ஜனங்கள் கூடிக் காணப்படும் தனது அரமனையினுடைய முற்றத்து வாசலுக்கு வந்து, "**இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை**" என்று வெளிப்படையாகவே அறிக்கையிட்டார்.

பின்னர் நமது கர்த்தர் ரோம போர்வீரர்களுடைய கூட்டத்துடன் பகிரங்கமாக, ஏரோதுவினிடத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டார்; இந்த ஏரோது நமது கர்த்தரை சந்திக்க ஆவலாய் காணப்பட்டார்; இயேசுவைக் குறித்து அநேக காரியங்களை கேள்விப்பட்டிருந்தார். மரணதண்டனைக்கு ஏதுவான குற்றம் எதுவும் கைதியினிடத்தில் தன்னால் காணமுடியவில்லை என்று அறிவித்து கைதியை பிலாத்து ஏரோதிடத்திற்கு ஒப்படைத்தது போன்று, ஏரோதும் கைதியை பிலாத்துவினிடத்திற்கு மீண்டும் (விசாரித்துவிட்டு, தீர்ப்புக் கூறி) அனுப்பி வைத்தார் R3895

இயேசுவின் வழக்கானது மீண்டும் பிலாத்துவினிடத்தில் திரும்பினபோது, பிரதான ஆசாரியர்கள் தங்கள் திட்டங்கள் தோல்வியடைந்துவிடுமோ என அச்சம் கொண்டு இயேசுவுக்கு மரணதண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற தங்களின் கோரிக்கையில் விடாபிடியுடன் காணப்பட்டதோடில்லாமல், அதைக்குறித்து கூக்குரலிடும்படிக்கு ஜனக்கூட்டத்தையும் தூண்டிவிட்டார்கள். சுமார் ஆறுமுறை பிலாத்து இயேசு குற்றமற்றவர் என்று அறிவித்தார். மேலும், பிலாத்துவுக்கு இருந்த இக்கட்டான சூழ்நிலைகள் என நாம் ஏற்கெனவே பார்த்த அந்த நிலையினிமித்தம் அவர் யூதர், ஆசாரியர்கள் மற்றும் ஜனங்களின் கோரிக்கையை முற்றிலும் நிராகரிக்க கொஞ்சம் தயங்கினார். அதிலும், விசேஷமாக "இவனை விடுதலைபண்ணினால் நீர் இராயனுக்கு சிநேகிதனல்ல; அதாவது ராயனுக்கும் ரோம அரசாங்கத்திற்கும் எதிரியாயிருப்பீர்" என்ற அந்த வார்த்தைகள் பேசப்பட்டதைக் கேட்டபோது பிலாத்து தயங்கினார் (யோவான் 19:12).

வருடத்தினுடைய அந்தத் தருணத்தின்போது, பெருந்தன்மையின் வெளிப்படுத்துதலாகவும், அத்தருணத்தில் நிலவும் மகிழ்ச்சியுடன்கூட, இன்னும் கொஞ்சம் மகிழ்ச்சி காணப்படத்தக்கதாகவும், ஒரு கைதியை விடுதலை செய்வது ரோம அரசாங்கத்தினுடைய வழக்கமாக இருந்தது. பிலாத்து இதனை அவர்களுக்கு நினைப்பூட்டி, இயேசுவை வாரினால் அடித்த பிற்பாடு, தான் விடுதலை பண்ணப்போகும் கைதி இயேசு ஆவார் என்று பரிந்துரைத்தார்; ஆனால் பிலாத்துவினுடைய இந்தக் கருத்துக்கு எதிராக, ஜனக்கூட்டத்தினர் ஒரே குரலாக, "இவனை அகற்றும், பரபாசை எங்களுக்கு விடுதலையாக்கும்" என்று கூக்குரலிட்டனர். ஜனங்கள் இப்படி சத்தமிடுவதற்கு பிரதான ஆசாரியர்களும், அதிகாரிகளும் காரணம் என்பதில் நமக்கு ஐயமில்லை; இவர்கள் ஜனங்களை இயேசுவுக்கு எதிராக தூண்டிவிட்டுக்கொண்டே இருந்தார்கள். யூதர்களைப்பற்றி நாம் எண்ணிப்பார்க்கும்போது, அவர்கள் வெளிப்படுத்தும் இருதயத்தின் நிலைமை நம்மை திகைக்கவே வைக்கின்றது. பரபாஸ் என்பவன் உண்மையில் கலகவாதியாவான் மற்றும் கொலைபாதகத்தின் நிமித்தம் அவன் சிறையில் அடைக்கப்பட்டிருந்தான்; இவனையே ஜனங்கள், இயேசுவுக்கு எதிராக தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள்! உண்மையில் இவர்கள் தங்களுடைய இருதயத்தின் கொலை பாதக

நிலைமையை வெளிப்படுத்தினார்கள்; வெளித்தோற்றத்தில் இவர்கள் ஒழுக்கமுள்ள ஜனங்களாகவும், நியாயப்பிரமாணத்தை மதிக்கிறவர்களாகவும் இருந்திட்டாலும், உட்புறத்திலோ எதிராளியானவனுடைய ஆவியினால் நிரப்பப்பட்டவர்களாகவும், வெளிச்சத்தையும், வெளிச்சத்தை சுமந்து வந்த மகா பெரியவரையும் பகைக்கிறவர்களாகவும் காணப்பட்டனர்.

இதற்கிடையில், பிலாத்துவின் மனைவி இயேசுவைக் குறித்து சொப்பனம் கண்டதாகவும், அவருக்கு எதிராக எதுவும் செய்துவிட வேண்டாம் எனவும் வலியுறுத்திப் பிலாத்துவுக்குத் தூது அனுப்பினாள். இம்மாதிரியான சூழ்நிலைகளில் ஓர் உலகப்பிரகாரமான மனுஷன் என்ன செய்வான் என்று எதிர்பார்க்கப் படலாமோ, அவை அனைத்தையும் பிலாத்து செய்தான். R3895 & R3366

## அப்பொழுது பிலாத்து இயேசுவைப் பிடித்து வாரினால் அடிப்பித்தான். போர்சேவகர் முள்ளுகளினால் ஒரு முடியைப் பின்னி அவர் சிரசின்மேல் வைத்து, சிவப்பான ஒரு அங்கியை அவருக்கு உடுத்தி: யூதருடைய ராஜாவே, வாழ்க என்று சொல்லி, அவரைக் கையினால் அடித்தார்கள்.

**– யோவான் 19:1–3 –**

நமது கர்த்தருடைய தனிச்சிறப்பை பிலாத்து உணர்ந்து அதினிமித்தம் கொண்டிருந்த மதிப்பினால் அல்லது முந்தின இரவில் பிலாத்துவின் மனைவி கண்ட சொப்பனத்தினுடைய தாக்கத்தினால்தான், இயேசுவை விடுவிப்பதற்கு, பிலாத்து யூத அதிகாரிகளுடன் போராடினார். பிலாத்துவின் ஸ்தானத்தில் காணப்படும் அநேக நபர்கள், அநேகமாக தங்களது கட்டுப்பாட்டின் கீழ் காணப்படுபவர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக வாய்ப்பை பயன்படுத்தி, அவர்களைப் பிரியப்படுத்துவதற்கென இயேசுவை மரணத்தண்டனைக்கு ஒப்புக்கொடுத்திருப்பார்கள்; அதாவது, வேறொரு சம்பவத்தில் ஏரோது நடந்துகொண்டது போன்று நடந்து கொண்டிருந்திருப்பார்கள்.

சவுக்கினால்/வாரினால் அடிக்கப்பட்டச் சம்பவம் பின்வரும் கண்ணோட்டத்திலேயே பார்க்கப்பட வேண்டும்; அதாவது பிலாத்து தனது அரமனையின் வாசலில் காணப்பட்ட கும்பலின் கலக ஆவியைத் தணித்திடவே விரும்பினார்; ஒருவேளை இயேசு தண்டிக்கப்படாமல் விடுவிக்கப்படுவதைக் காட்டிலும் வாரினால் அடிக்கப்பட்டு இப்படியாக அவமானப்படுத்தப்பட்டாலே ஜனங்கள் அநேகமாக நன்கு திருப்தியடைந்து, காரியத்தை விட்டுவிடுவார்கள் என்றே பிலாத்து கருதினார். ஆகவே கெட்ட நோக்கத்தினால் அல்லாமல், மாறாக பிலாத்து நல்ல நோக்கத்துடனே இயேசு வாரினால் அடிக்கப்படும்படிக்கு செய்தார் என்று பிலாத்துவைக் குறித்து உயர்வாகவே நாம் கருதுகின்றோம்.R3896

## இயேசு, முள்முடியும் சிவப்பங்கியும் தரித்தவராய், வெளியே வந்தார். அப்பொழுது பிலாத்து அவர்களை நோக்கி: இதோ, இந்த மனுஷன் என்றான்.

**– யோவான் 19:5 –**

இரவு நேரத்தில் அலைக்கழிக்கப்பட்ட பெலவீனத்தினாலும், சவுக்கடியினாலும் பெலவீனப்பட்டு பரிதாப தோற்றத்தில் காணப்பட்ட இயேசுவை, பிலாத்து வெளியே கொண்டு வந்தார். முள்முடியுடனும், இரத்தம் தோய்ந்த இரத்தாம்பர வஸ்திரத்துடன் இயேசு நின்ற காட்சி அனுதாபத்திற்குரியதாக இருப்பினும், பரிபூரண மனிதனுக்குரிய உயரிய அம்சங்கள் இன்னும் இயேசுவிடம் காணப்பட்டதினாலேயே பல நூற்றாண்டுகளாக எதிரொலிக்கும், “இதோ இந்த மனுஷன்” என்ற வார்த்தைகளைப் பிலாத்து கூறினார் (யோவான் 19:5). நமது கர்த்தரின் தோற்றத்தினால் பிலாத்து கவரப்பட்டார். இப்படியாக ஒரு பிரமாண்டமான மனிதனை அவர் ஒருபோதும் கண்டதில்லை. அவரை யாரும் இராஜாவாக்கிவிடும் தோற்றம் அவருக்கு இருந்தது. இந்த விதமான

எண்ணம்/தாக்கம், குற்றம் சாட்டுகிறவர்களிடமும் ஏற்படும் என்று பிலாத்து எதிர்ப்பார்த்தார். ஆனால் பிலாத்து எதிர்ப்பார்த்தது தவறு; கலகம் இன்னும் பெருகினது; அவரை சிலுவையில் அறையும்! அவரை சிலுவையில் அறையும்! என்று சத்தங்கள் அதிகம் எழும்பின. R2470



இயேசுவைக் கொன்றுபோட வகை தேடிக்கொண்டிருந்தவர்களிடமிருந்து இயேசுவை விடுவிக்கும்படியான முயற்சிக்குத் தொடர்பாகவே இயேசுவை முன்பாக கொண்டுவந்து நிறுத்தி, "**இதோ இந்த மனுஷன்**" என்று பிலாத்து கூறினான். இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையின் போது, நமது கர்த்தரிடத்தில் நிலவின அமைதியும், அவருடைய முகபாவனையும் பிலாத்துவை மதிப்பு கொடுக்கத்தக்கதான வியப்பிற்குள் ஆழ்த்தியது என்பது, அவர் மேற்கூறின இந்த வார்த்தைகளில் வெளிப்படுகின்றது. அவருடைய வார்த்தைகள் இப்படியாக அர்த்தம் கொடுக்கின்றதாய் இருந்தது. அதாவது, "**நீங்கள் சிலுவையில் அறையும்படிக்குக் கூறிக்கொண்டிருக்கின்ற இம்மனுஷனைப் பாருங்கள்! யூதர்களே இம்மனுஷனைப் போன்ற ஒரு நபர் உங்கள் தேசத்தில் காணப்படுவதில்லை. இவருக்கு சமமான ஒரு மனுஷன் எங்குமே இருக்கமாட்டான் என நான் எண்ணுகின்றேன்!**" ஆனால் இவை அனைத்தும் வீணே! ஜனங்கள் பரவசமடைந்தவர்களாக நமது கர்த்தருடைய இரத்தத்திற்காக கூக்குரலிட்டுக் கொண்டிருந்தார்கள். R3366

**நீ எங்கேயிருந்து வந்தவன் என்றான். அதற்கு இயேசு மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை. அப்பொழுது பிலாத்து: நீ என்னோடே பேசுகிறதில்லையா? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலைபண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத் தெரியாதா என்றான்.**

**– யோவான் 19:9-10 –**

நினைவுகூருதலின் இராப்போஜனத்தைப் பின்தொடர்ந்ததான துக்கம் நிறைந்த வேளையுள்ள சம்பவங்களை கவனிக்கத்தக்கதாக, நாம் மீட்பரை கெத்செமனேக்குப் பின்தொடர்ந்துபோய், "அவர் தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லவரை நோக்கி பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம்

பண்ணுவதை” பார்க்கின்றோம். பிதாவின் திட்டத்தினை நிறைவேற்றுவதில், ஏதாகிலும் விஷயத்தில் தவறிப்போய் மற்றும் அதன் நிமித்தமாக உயிர்த்தெழுப்பப்படுவதற்குப் பாத்திரமற்றவராகக் கருதப்பட்டு விடுவாரோ என்று நமது ஆண்டவர் மரணபயத்தை வெளிப்படுத்துவதைப் பார்க்கின்றோம். நமது கர்த்தர் தமது அர்ப்பணிப்பின் உடன்படிக்கையை உண்மையாய்க் காத்துக்கொண்டுள்ளார் என்றும், வாக்களிக்கப்பட்டுள்ளது போல உயிர்த்தெழுதலை அடைவார் என்றுமுள்ள வாக்குறுதியினால் அவர் ஏதோ ஒரு விதத்தில் ஆறுதல்படுத்தப்பட்டதாக நாம் கவனிக்கின்றோம். இதற்குப் பிற்பாடு அவர் பிரதான ஆசாரியன் மற்றும் பிலாத்து மற்றும் ஏரோது மற்றும் மீண்டுமாக பிலாத்துவின் முன்னிலையில் எவ்வளவு அமைதியுடன் காணப்பட்டார் என்று நாம் கவனிக்கின்றோம். “தன்னை மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்திமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும் அவர் தற்காத்துக்கொள்வதற்கெனத் – தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்.” அவர் முடிவுபரியந்தம் உண்மையாயும், தைரியமாகவும் இருந்ததாகப் பார்க்கின்றோம்; தம்முடைய பாதுகாப்பிற்கெனத் தம்மால் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை பிதாவிடம் கேட்டிருக்கவும், பெற்றிருக்கவும் முடியும் என்றுமுள்ள அவரது நம்பிக்கையையும் நாம் பார்க்கின்றோம். ஆனால் தம்முடைய பலியிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு உதவி வேண்டி விண்ணப்பிப்பதற்கு பதிலாக, அவர் அவைகளை உண்மையாய் சகிப்பதற்கு வேண்டிய உதவியையே விண்ணப்பித்தார். இங்கு அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றும் பின்னடியார்களுக்கு எத்தகையதொரு படிப்பினைக் காணப்படுகின்றது! R5869

## பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது,

**– யோவான் 19:11 –**

யூத ஆலோசனை சங்கத்தினர் நமது கர்த்தர் இயேசு மீது சாற்றிட்டக் குற்றச்சாட்டுகளிலிருந்து முற்றிலும் மாறான குற்றச்சாட்டுகளானது, நமது கர்த்தருக்கு எதிராக பிலாத்துவின் முன்னிலையில் வைக்கப்பட்டது. அவை மூன்றாகும்:

(1) கலகவாதியாக இருந்து, கிளர்ச்சியை உண்டுபண்ணி ஜனங்களை, அதிகாரத்தை எதிர்ப்பதற்கு நேராக இயேசு வழிநடத்தியுள்ளார் என்றும்,

(2) ஜனங்கள் இராயனுக்கு வரி கொடுக்கக்கூடாது என இயேசு போதித்தார் என்றும்,

(3) தாம்தான் வரிகள் பெற்றுக்கொள்வதற்குப் பாத்திரமான இராஜாவாய் இருக்கின்றார் என இயேசு கூறியுள்ளார் என்றுமுள்ள குற்றச்சாட்டுகளேயாகும்.

குற்றச்சாட்டுகள் உண்மையற்றவைகளாக இருந்தபடியினால், பிலாத்து உடனடியாக, குற்றச்சாட்டுகளை தொகுத்திட்ட யூத அதிகாரிகளுடைய பகைமையை கிரகித்துக்கொண்டார். ரோம அரசாங்கத்தினுடைய அரசியல் அதிகாரத்திற்கு பதிலாக, யூத அதிகாரிகளுடைய மத அதிகாரமே அபாயத்தில் இருப்பதை பிலாத்து கண்டுகொண்டார். வாசலுக்கு வெளியே காணப்பட்ட ஜனக்கூட்டத்தினர், அவர்கள் மதபோதகர்களுடைய தூண்டுதலினால், கட்டுப்பாடற்ற விதத்தில் குற்றச்சாட்டுகளை கூக்குரலிட்டுக் கொண்டிருந்தனர். இயேசு எதுவும் கூறாமல் காணப்பட்டார்; ஆகவே இயேசு தமக்காக வாதிட திறமிக்கவர்போன்று வெளிப்படையாகத் தென்பட்ட போதிலும், அவர் அமைதலுடனும், மனதை/தம்மை அடக்கின நிலையிலும், எதிர்க்காமலும், பழியினின்று விடுவித்து தம்மை தற்காத்துக்கொள்ள முயலாமலும் இருப்பதைக்கண்டு, பிலாத்து ஆச்சரியமடைந்தார். இயேசுவை விடுவிப்பதற்கு அல்லது ஜனங்களுடைய விருப்பத்தின்படி அவரை தண்டிப்பதற்கு தன்னிடத்தில் அதிகாரம் இருக்கின்றது என்பதை இயேசு அறிந்திருக்கவில்லையா என்று கூட பிலாத்து இயேசுவிடம் வினவினார். நமது கர்த்தருடைய பதிலானது சாந்தமான ஒன்றாகும்; அதாவது பரம பிதாவினால் அனுமதிக்கப்பட்டால் ஒழிய, மற்றபடி பிலாத்துவுக்குத் தம்மேல் எவ்விதமான அதிகாரமும் இருப்பதில்லை என்று இயேசுவின் பதில் காணப்பட்டது. ஆ! இதுவே நமது கர்த்தருடைய மன அமைதிக்கான இரகசியமாகும். இயேசு

தம்முடைய ஜீவியத்தையும், தம்முடைய அனைத்தையும் ஒப்புக்கொடுத்துள்ளார்; தம்முடைய அனைத்து காரியங்களையும் அவர் பிதாவினிடத்திற்கு ஒப்புக்கொடுத்துள்ளார்; அவருக்கு பிதாவினுடைய அன்பிலும், ஞானத்திலும் நம்பிக்கை இருந்தது. ஆகையால் அவர் பிதா தமக்கு ஊற்றின பாத்திரத்தில் பானம்பண்ண விருப்பமுள்ளவராகவும், தம்மை அனுப்பினவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதிலும், அந்த வேலையை நிறைவேற்றுவதிலும் களிகூருகிறவராகவும் காணப்பட்டார். R3895

**அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை, அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்.**

**– ஏசாயா 53:7**


**அவனைச் சிலுவையில் அறையும் என்று மறுபடியும் சத்தமிட்டுச் சொன்னார்கள். அதற்குப் பிலாத்து: ஏன், என்ன பொல்லாப்புச் செய்தான் என்றான். அவர்களோ: அவனைச் சிலுவையில் அறையும் என்று பின்னும் அதிகமாய்க் கூக்குரலிட்டுச் சொன்னார்கள்.**

**– மாற்கு 15:13-14**

**கலகம் அதிகமாகிறதேயல்லாமல் தன் பிரயத்தனத்தினாலே பிரயோஜனமில்லையென்று பிலாத்து கண்டு, தண்ணீரை அள்ளி, ஜனங்களுக்கு முன்பாகக் கைகளைக் கழுவி: இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் என்றான்.**

**– மத்தேயு 27:24 –**

பிலாத்து தான் விசாரணை பண்ணின, சாந்தமும், தாழ்மையுமுள்ள அம்மனிதனிடமிருந்து ரோம சாம்ராஜ்யத்திற்கு எவ்விதமான ஆபத்தும் வராது என்று தன் மனதில் தெளிவாகப் புரிந்துகொண்டார். மேலும், இயேசு நிச்சயமாக ஆட்சிக்கு எதிராக குழப்பம் பண்ணுகிறவரல்ல என்றும், எவ்விதத்திலும் புரட்சியாளர் இல்லையென்றும் பிலாத்து அறிந்துகொண்டார். ஆகவே, "இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை" என்ற வார்த்தைகளைக் கூறினார் (லூக்கா 23:4). பிலாத்துவின் தீர்மானமே அவருடைய நாட்கள் முதல் இன்று வரையிலும் உலகம் முழுவதும் உள்ள அனைத்து மரியாதைக்குரிய, நியாயமான எண்ணம் கொண்டவர்களின் முடிவாகும். ஆசாரியர்கள் முதலானவர்கள் [எப்படியாயினும்], முயற்சிகளும், காரியங்களும் பயனற்றதாய் போகின்றன என உணர்ந்தனர், மேலும் அவர்கள் தங்களால் முடிந்த அளவுக்கு எல்லாவிதமான அழுத்தத்தை பிலாத்துவின் மேல் போட வேண்டியிருந்தது. ஆகவேதான் பிலாத்து, ஒருவேளை இயேசுவை சிலுவையில் அறைய ஒப்புக் கொடுக்கவில்லையெனில், பிலாத்து ரோம அதிகாரத்திற்கு எதிராய் உள்ள துரோகிக்கு நண்பனாக உள்ளார் என்றும், பிலாத்து சக்கரவர்த்திக்கு சத்துருவாகிவிட்டார் என்றும், ரோமிலுள்ள இராயனிடத்திற்கு சென்று பிலாத்துவைக் குறித்துப் புகார் செய்வோமெனத் தெரிவித்தார்கள். இது மிகவும் அபாயகரமான வாதமாகும். இதனை பிலாத்து உணர்ந்து கொண்டார். இப்படிப்பட்ட ஒரு குற்றச்சாட்டானது, யூதர்களின் பிரதானமான அதிகாரிகளால் கையெழுத்திட்டு ரோமுக்கு அனுப்பப்படுமாயின், அக்குற்ற பத்திரத்திற்கு நிச்சயமாக மதிப்பு/கவனம் கொடுக்கப்படும் என்றும், ரோமின் அதிகாரிகள் ஏன் யூதர்களின் பிரதான அதிகாரிகளை எதிர்த்தும், புரட்சியைக் கிளப்ப அனுமதித்தும், ஓர் ஏழையான, சாதாரணமான மனுஷனின் ஜீவன் பாதுகாக்கப்பட வேண்டும்? என யோசிப்பார்கள் என்றும் பிலாத்து உணர்ந்து கொண்டார். ஆகவே, யூதர்கள் போக்கிலேயே விட்டுக்கொடுத்து விடுவதுதான் நியாயமான மற்றும் சரியான ஒரே வழியாக இருக்குமென பிலாத்து தீர்மானித்தான், [மேலும் அவர்] இறுதியாக மக்களின் விருப்பம் செய்யப்பட வேண்டும்



என்று தீர்ப்பு வழங்கினார். பிலாத்து தனது மாறுபட்ட கருத்தைத் தெரிவிக்கும் வண்ணமாகவும், பொறுப்பாளியாகுவதிலிருந்து அனைவரின் பார்வைக்கு முன்பாகத் தன்னை விலக்கிக்கொள்ளும் வண்ணமாகவும், தண்ணீர் கொண்டுவரும்படிக்குக் கூறி, ஜனங்களின் முன்னிலையில் தண்ணீரினால் தனது கைகளைக் கழுவிக்கொண்டார். அவர்கள் (யூதர்கள்) தன்னைக் கட்டாயப்படுத்தி செய்விக்கக்கூறும் இந்த மரணத்தீர்ப்புக்கான கட்டளையில் தனக்கு ஒப்புதல் இல்லை என்பதை அடையாளமாகக் காட்டும் விதத்தில் இதை செய்தார். இப்படியாகத் தனது கைகளைக் கழுவிக்கொள்ளுவதின் மூலமாக, “இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்” என்பதை அடையாளத்தின் வாயிலாகவும், வார்த்தைகளின் வாயிலாகவும் தெரிவித்தார் (உபாகமம் 21:6–9). R2785, R3895 & R3366

**அப்பொழுது பிலாத்து ஜனங்களைப் பிரியப்படுத்த மனதுள்ளவனாய், பரபாசை அவர்களுக்கு விடுதலையாக்கி, இயேசுவையோ வாரினால் அடிப்பித்து, சிலுவையில் அறையும்படிக்கு ஒப்புக்கொடுத்தான்.**
**– மாற்கு 15:15**

**அப்பொழுது, தேசாதிபதியின் போர்ச்சேவகர் இயேசுவை தேசாதிபதியின் அரமனையிலே கொண்டுபோய், போர்ச்சேவகரின் கூட்டம் முழுவதையும் அவரிடத்தில் கூடிவரச்செய்து, அவர் வஸ்திரங்களைக் கழற்றி, சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி, முள்ளுகளால் ஒரு முடியைப்பின்னி, அவர் சிரசின்மேல் வைத்து, அவர் வலதுகையில் ஒரு கோலைக் கொடுத்து, அவர் முன்பாக முழங்காற்படியிட்டு: யூதருடைய ராஜாவே, வாழ்க என்று அவரைப் பரியாசம்பண்ணி, அவர்மேல் துப்பி, அந்தக் கோலை எடுத்து, அவரைச் சிரசில் அடித்தார்கள்.**
**– மத்தேயு 27:27–30**

**அவரைப் பரியாசம்பண்ணினபின்பு, அவருக்கு உடுத்தின மேலங்கியைக்கழற்றி, அவருடைய வஸ்திரங்களை அவருக்கு உடுத்தி, அவரைச் சிலுவையில் அறையும்படி கொண்டுபோனார்கள்.**

**– மத்தேயு 27:31 –**

இயேசுவை இப்பொழுது சிலுவையில் அறைவதற்கு ஆயத்தம் பண்ணும்படிக்கு பிலாத்துவின் சேவகர்களிடம் ஒப்படைக்கப்பட்டார். அவர்களோ இரக்கமற்ற விதத்திலும், கொடூரமாகவும் நடந்துகொண்டு போதகரின் துன்பமான சூழ்நிலைகளில் புகுந்து விளையாடினார்கள். அவருக்கு இராஜ வஸ்திரம் தரிப்பித்து, முள்ளினால் உண்டுபண்ணின கிரீடத்தை சிரசில் வைத்து, அவர் உண்மையில் யார் என்றோ? அவர் எப்படி பரிசுத்தமான சீயோன் மலையில் இராஜாவாக வீற்றிருக்கப்போகின்றார் என்றோ, எப்படி அவருடைய செங்கோலுக்கு முன்பாக சகல முழங்கால்களும் மண்டியிடும் என்றோ, எப்படி எல்லா நாவும் அவரை அறிக்கை பண்ணும் என்றோ கொஞ்சம் கூட யோசிக்காமல்/நினைத்துப்பார்க்காமல் அவர் தம்மை இராஜா என்று கூறின

காரியத்தினிமித்தம் அவரை இகழ்ந்தார்கள். இப்படியெல்லாம் இயேசுவுக்குச் செய்தவர்கள் ஒருநாளில் விழிக்கும்போது – அதாவது மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப் பட்டிருப்பதைக் காணும்போது - மேசியா தமது சத்துருக்களுக்கும் கூட இரக்கம் காட்டுகின்றார் என்றும், தங்களுக்கும் பூமியின் குடிகள் அனைவருக்கும் ஆசீர்வாதம் பெற்றுக்கொள்வதற்கான வழியை அவருடைய மரணமானது திறந்துவிட்டது என்றும், உணரும்போதும் - ஆச்சரியம் அடைவார்கள்! நமது அருமை மீட்பர் சீற்றத்தினாலும், பழிவாங்கும் எண்ணத்தினாலும் ஆட்கொள்ளப்படாமல், மாறாக பிதாவினுடைய சித்தம் மற்றும் வார்த்தைகளுக்கு ஏற்ப, சாந்தமாய் தம்மை சித்திரவதைப்படுத்துபவர்களின் பழித்தூற்றல்களைச் சகித்து, தமது சித்தத்தைப் பரம பிதாவுடைய சித்தம் மற்றும் திட்டத்திற்கெனத் தாழ்த்திவிட்டபடியால் நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாய் காணப்பட வேண்டும்.

**அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும், தாடைமயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக்கொடுத்தேன், அவமானத்துக்கும் உமிழ்நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை. கர்த்தராகிய ஆண்டவர் எனக்குத் துணைசெய்கிறார், ஆகையால் நான் வெட்கப்படேன், நான் வெட்கப்பட்டுப் போவதில்லையென்று அறிந்திருக்கிறேன், ஆதலால் என் முகத்தைக் கற்பாறையைப்போலாக்கினேன்.**

**– ஏசாயா 50:6–7 –**

சுயநலம் என்பது கிட்டத்தட்ட ஒவ்வொரு பாவத்திற்கும், ஒவ்வொரு குற்றத்திற்கும் அடிப்படையாக உள்ளதாகவும், அன்றும் இன்றும் அதன் தாக்கம் நிலைத்து இருப்பதாகவும் நாம் கவனிக்க வேண்டும். கர்த்தருடைய ஜனங்களாகிய நாம், பரம்பரையாக நமக்குக்குரியதாக இருந்து, அழிக்கப்பட வேண்டிய, மேலும் அழிக்கப்பட்டு அன்பினால் மாற்றப்பட வேண்டிய இந்த நயவஞ்சகமான தீமைக்கு எதிராக விசேஷமாக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மேலும், நம்முடைய இருதயங்களையும், ஜீவியங்களையும் ஆளும் சக்தியாக இப்பாவத்திற்குப் பதிலாக, அன்பு நிலைநாட்டப்பட வேண்டும்; அதாவது தீங்கு நினையாத, மேன்மை பாராட்டாத, மற்றவர்களின் நலனையும் தியாகம் செய்து ஆதாயம் தேடிக்கொள்ளாத அன்பை நிலை நாட்ட வேண்டும்.

தேவதூதர்கள் மற்றும் மனிதர்கள் இருவருக்குமான அவரது ஒருங்கிணைந்த நீதி மற்றும் அன்பின் வெளிப்பாடாக, சர்வவல்லமையுள்ளவரால் மேடையில் அமைக்கப்பட்ட இந்த மாபெரும் உண்மையான நாடகத்தை விட எந்த நாடகமும் மிகவும் நிகழ்வு நிறைந்த வாழ்க்கையை சித்தரிக்க முடியாது. நமது கர்த்தரால் பல அற்புதமான செயல்களைக் கண்டவர்களிடமும், பின்னர் நம் பாவங்களுக்காக அவர் செய்த தியாகத்தைக் கண்டும், இன்னும் கல்நெஞ்சத்துடனும் உணர்வற்ற நிலையில் கண்டுகொண்டிருந்தவர்களில் எவ்வளவாய் விழுந்துபோன மனித இயல்பின் சீரழிவு வியக்கத்தக்க வகையில் வெளிப்படுகிறது. R2785, R2315

# இயேசு - துக்கம் நிறைந்த மனுஷன்

**அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார், அவரைவிட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம், அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார், அவரை எண்ணாமற்போனோம். மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார், நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்.**

**– ஏசாயா 53:3–4 –**

இதற்கெல்லாம் என்ன அர்த்தம்? மகிமையின் ராஜா, தேவனால் அனுப்பப்பட்டவர், எல்லா வாக்குத்தத்தங்களின் சுதந்திரர், ஏன் இவ்வாறு துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்? ஆ! நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார், அவருடையதை அல்ல என்பதை நான் நிச்சயமாக உணர்கிறேன் என்று தீர்க்கதரிசி கூறுகிறார். நாமோ, அவர் தேவனால் அடிக்கப்பட்டாரென்றும், சர்வவல்லமையுள்ளவரால் சிறுமைப்படுத்தப்பட்டாரென்றும், அதனாலே அவர் தெய்வீக தயவின் கீழ் இல்லை என்பதற்கு இது ஒரு சான்று என்றும் நினைத்தோம். முழு விஷயத்தையும் நாம் தவறாக புரிந்து கொண்டோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார் என்பதையும், நமக்கு தேவனோடு சமாதானத்தை உண்டுபண்ணும் தெய்வீக சட்டத்தின் தழும்புகள், ஆக்கினை, தண்டனை அவர்மேல் வந்தது என்பதையும் இப்போது காண்கிறோம். அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் என்பதை நாம் உணர்கிறோம் –அதாவது நம்மை தேவனிடம் கொண்டு வருவதற்காக நமக்கான தண்டனை அல்லது தழும்புகள் அவர்மேல் போடப்பட்டன, நமக்கு எதிராக இருந்த மரண தண்டனையை அனுபவித்தார், அநீதிமான்களுக்காக நீதிமானாய் மரித்தார். R3589

**நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார், நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது, அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.**

**– ஏசாயா 53:5 –**

தெய்வீக நீதியின் தண்டனையை தனது ஆடுகளுக்காக மேய்ப்பனாலே சுமக்கப்பட்டது. யெகோவா தேவனே நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார் மற்றும் அவரும் அதை ஏற்றுக்கொண்டார். இந்த செய்தி எவ்வளவு கிருபை நிறைந்ததாக உள்ளது! பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்பட்டு அறிவொளி பெற்றிருந்த ஏசாயாவின் வார்த்தைகளை முதன்முதலில் பெற்றவர்கள் அவற்றை முழுமையாக உணர்ந்து பாராட்டாமல் இருந்திருக்கலாம், ஆயினும்கூட, ஓரளவிற்காவது அவைகளை உணர்ந்து பாராட்டியிருக்க வேண்டும் – அவைகளிடமிருந்து சில ஆசீர்வாதங்களையும் நம்பிக்கையையும் பெற்றிருக்க வேண்டும். ஆனால் இப்போது இந்த சுவிசேஷ யுகத்தில், மீட்பின் விலை கொடுக்கப்பட்ட பிறகு வாழும் நாம், யூதர்களுக்கு புரிந்துகொள்வதற்கு மிகவும் கடினமாகவும், புறஜாதியின் ஜென்ம சுபாவமான மனிதர்களுக்கு புரிந்துகொள்வதற்கு சாத்தியமற்ற விஷயங்களான இந்தக் காரியங்களை புரிந்தவர்களாய் மகிழ்ச்சியடைய முடியும். “தேவனுடைய ராஜ்யத்தின் இரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது”, மற்ற அனைவருக்கும், இவை “உவமைகளாகவும் மறைபொருளாகவும் சொல்லப்படுகிறது” என்று நமது ஆண்டவரின் வார்த்தைகள் உண்மையிலேயே புத்துணர்ச்சியூட்டி விளக்கமளிக்கின்றன – லூக்கா 8:10; மத் 13:10–15; மத் 13:35. R3589.

**நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம், கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்.**
**– ஏசாயா 53:6**

**அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை, அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்.**
**– ஏசாயா 53:7 –**

அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும், ஆனாலும் அவர் தம்முடைய வாயைத் திறக்கவில்லை. இதன் நிறைவை நாம் நம் ஆண்டவரின் விஷயத்தில் காண்கிறோம். தனது வழக்கை வாதிடவும், தன்னைத் தானே பாதுகாத்துக்கொள்ள அவர் வாயைத் திறந்திருந்தால், வேதபாரகர்கள், பரிசேயர்கள், பிரதான ஆசாரியர்கள், நியாய சாஸ்திரிகள், பிலாத்து, அவருடைய போர்சேவகர்கள் மற்றும் யூதர்களின் கூட்டத்தார் ஆகியோர், மனுஷரில் ஒருவனும் ஒருக்காலும் பேசாதது போல் பேசிய வல்லமை வாய்ந்த அவரின் பேச்சாற்றலுக்கு அடிபணிந்திருப்பார்கள் என்பதை நாம் நியாயமாகவே ஊகிக்கலாம். அவர் தனது சொந்த பாதுகாப்பில் ஒரு விரலை கூட அசைக்காமல் அல்லது தன்னிடம் உள்ள தெய்வீக சக்திகளில் எதையும் பயன்படுத்தாமல் அல்லது தனது ஜெபத்திற்கு பதிலளிக்க தயாராக இருக்கும் தேவதூதர்களின் லேகியோன்களை அழைக்காமலே, வார்த்தைகளால் (அ) நாவினால் மட்டுமே, நீதியுடன் தன்னை தற்காத்துக் கொள்ள முடியும். உண்மையில் பிரதான ஆசாரியரின் கேள்விக்கும், பிலாத்துவின் கேள்விக்கும் அவர் பதிலளித்தார், ஆனால் அவர் எந்த வேண்டுகோள் விடுப்பதிலும் அல்லது தவிர்க்க முடியாதது மற்றும் தந்தையால் அனுமதிக்கப்பட்டதுமான அந்த வரவிருக்கும் மரணத்திலிருந்து தன்னைக் காப்பாற்ற முயற்சிப்பதிலும் அமைதியாக (அ) ஊமையாக இருந்தார். R3591

**கர்த்தரோ அவரை நொறுக்கச்சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார், அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவாரணபலியாக ஒப்புக்கொடுக்கும்போது, அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்தநாளாயிருப்பார், கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்.**
**– ஏசாயா 53:10 –**

இந்த நிகழ்வுகள் அனைத்தும், மிகவும் அநியாயமாகவும், நியாயமற்றதாகவும், மனிதகுலம் எதிர்பார்த்த எதற்கும் முற்றிலும் முரணானதாகவும் தோன்றின, இருப்பினும் யெகோவா தேவன் இவைகளை அனுமதிப்பதில் பிரியமாயிருந்தார். நம்முடைய தண்டனையாக இயேசு துன்பப்படுவது அநீதியாக இருந்திருக்கும், மேலும் இது தேவனுக்கு சாத்தியமற்றதாக இருந்திருக்கும்; ஆயினும்கூட, மரணம் வரை சிலுவையின் மரணம் வரை அவருடைய ஒரேபேறான குமாரன் அவருடைய உண்மைத்தன்மையையும் விசுவாசத்தையும் வெளிப்படுத்த அனுமதிப்பது அவருக்கு பிரியமாக இருந்தது. இயேசுவுக்கும் மனிதகுலத்துக்கும் மகிமையான விளைவுகளை அவர் முன்னறிவித்ததால், குமாரன் தற்காலிகமாக துன்பத்தையும் துக்கத்தையும் அனுபவிக்க வேண்டும் என்பது அவருக்கு பிரியமாக இருந்தது. அவருடைய குமாரனுக்கு, தெய்வீகத் திட்டத்தின் எஞ்சியிருக்கும் அனைத்து அம்சங்களும் அவருடைய கைகளில் ஒப்படைக்கப்படும்போது, அவர் போதுமான கனம், மகிமை, கண்ணியம்/மேன்மை மற்றும் அதிகாரத்தை – ஆம், நித்திய ஜீவனைக் – கொடுப்பார். R3589

**அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார், என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார், அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார். அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன், பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார்.**

**– ஏசாயா 53:12**

**ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்.**

**– எபிரேயர் 12:3 –**

நமது அன்பான மீட்பரின் அவமானத்தின் விவரிப்பு, நமது சார்பாக பொறுமையுடன் சகித்தது கொண்டது, மிகவும் நெஞ்சை கவருகிறது/தொடுகிறது. ஒருவேளை அதை மறுபரிசீலனை செய்வதும் வாசிப்பதும் எல்லாவற்றையும் விட அதிகமான இருதயங்களை மனந்திரும்புவதற்கு வழிவகுத்திருக்கலாம். நம்முடைய கர்த்தரையும் அவருடைய இரத்தம் விளைவித்த மீட்பையும் ஏற்கனவே ஏற்றுக் கொண்டவர்களிடமும் அது தன் வல்லமையை இழந்து விடுவதில்லை ஒவ்வொரு முறையும் பாவிகளின் பெரும் எதிர்ப்பைத் தாங்கியவரைப் பற்றி சிந்திக்கும்போது, அது அவருக்கு தகுதியற்றது என்பதையும், அது நம் சார்பாக அவர் செய்த தியாகத்தின் ஒரு பகுதி என்பதையும் நாம் நினைவில் கொள்ளும்போதும், அது நம் இருதயத்தை இளகச் செய்கிறது (அ) மென்மையாக்குகிறது. அப்போஸ்தலன் தான் மிகவும் அழுத்தமாக வலியுறுத்தும் பாடங்களில் ஒன்றை இந்த விஷயத்துடன் சுட்டிக்காட்டுகிறார், அவருடைய அடிச்சுவடுகளில் நடக்க முற்படும்போது, மிகவும் இலகுவான துன்பங்களை சந்திக்கும் போது, நம் மனதில் சோர்வாகவோ அல்லது மயக்கமாகவோ இருக்கக்கூடாது என்பதற்காக, அநியாயமான சூழ்நிலைகளிலும் எல்லாவற்றையும் சகித்துக்கொள்ளும் கிறிஸ்துவின் சாந்தம், பொறுமை மற்றும் பாடுகளை கர்த்தரின் பின்னடியார்கள் அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்துகிறார். ஆம் உண்மையில், அவரையே நினைத்துக்கொண்டிருங்கள், “அவர் வையப்படும்போது பதில்வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்”. அவருடைய அடிச்சுவடுகளை நாம் பின்பற்ற வேண்டும் என்பதற்கு அவர் ஒரு முன்மாதிரியை நமக்கு விட்டுச் சென்றுள்ளார். R2313 & R1721

**இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள். ஏனெனில்,
கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய
அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப்
பின்வைத்துப்போனார். அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய
வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை. அவர் வையப்படும்போது பதில்
வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த்
தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்பவித்தார். நாம் பாவங்களுக்குச்
செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே
நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார். அவருடைய
தழும்புகளால் குணமானீர்கள்.**

**– 1 பேதுரு 2:21–24.**

BIBLE STUDENTS

Food for New Creature